
www.padippakam.com



# அரசு – குடும்பம் – பெண்ணியம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அரசு - குடும்பம் - பெண்ணியம்

தொகுப்பாசிரியர்கள் :

அ. மார்க்ஸ்— இ. ரவிக்குமார்—
பெ. வேலுசாமி

விடியல் பதிப்பகம்
கோவை—641 015

படிப்பகம்

www.padippakam.com

## நூலைப்பற்றி


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : அரசு-குடும்பம்-பெண்ணியம் |
| தொகுப்பாசிரியர்கள் | : அ. மார்க்ஸ், இ. ரவிக்குமார், பெ. வேலுசாமி |
| முதல் பதிப்பு | : டிசம்பர், 1994 |
| பக்கங்கள் | : 208+XII |
| அட்டைப்படம் | : ஏ. விஸ்வம் |
| வெளியீடு | : விடியல் பதிப்பகம் 3, மாரியம்மன் கோவில் வீதி உப்பிலிபாளையம் கோவை—641 015 |
| அச்சிட்டோர் | : அலைகள் அச்சகம் 36, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024. |
| **விலை** | : ரூ. *30–00* |


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

**''எனக்காக யாரும் எதுவும் செய்ய முடியாது''**

**—தோதா என்ற பெண் பாத்திரம்: ஹெலன் சிஸு எழுதிய PORTRAIT OF DORA என்ற நாடகத்தின் இறுதிக் காட்சியில்.[1]**

பெண்ணியம், தலித்தியம் ஆகிய சிந்தனா முறைகள் தமிழில் மற்றெல்லாவற்றையும் விட முக்கியத்துவம் பெற்று வருகிற காலம் இது. இவை புதிய சிந்தனைகளையும், அணுகுமுறைகளையும், புதிய அர்த்தங்களையும் ஆய்வு முறைகளையும் முன்வைக்கின்றன. ஏற்கெனவே இருந்துவரும் கருத்தாக்கங்களின் வெறும் நீட்சிகளென இவற்றைக் கூறிவிடமுடியாது. பழைய கருத்தாக்கங்களைப் புதிய பிரதேசங்களின் மேல் பிரயோகித்துப் பார்க்கிற முயற்சிகளெனவும் இவற்றைக் கூறிவிட முடியாது. ஏற்கெனவே பெண்களும், தலித்துகளும் இருந்து வந்திருக்கிறார்கள் என்ற போதிலும் அவர்களை விருப்பத்தோடோ, வெறுப்போடோ பார்த்த அணுகுமுறைகளும் இருந்துவந்திருக்கின்றன என்ற போதிலும் அந்த அணுகுமுறைகளை பெண்ணியமென்றோ தலித்தியமென்றோ நாம் வகைப்படுத்த முடியாது. ஏனென்றால் ''பெண்ணியம்'' ''தலித்தியம்'' ஆகிய சொற்கள் பெண்கள்/தலித்துகள் மீது காட்டப்படும் பரிவு/வெறுப்பு ஆகியவற்றோடோ அல்லது அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமெனக் கூறப்படும் சமூகநீதி என்பதனோடோ

IV

தொடர்பு கொண்டவை அல்ல. மாறாக இந்த சொற்கள் பெண்/தலித் என்னும் தன்னிலைகளாகத் தம்மை உணர்ந்து அதன் வழியே வெளிப்பாடு கொள்ளும் அத்தன்னிலைகளின் பார்வையைக் குறிப்பனவாக உள்ளன.

பெண்ணியம் என்கிற சொல் பொதுவாக எல்லாப் பெண்களாலும் ஆதரவான ஒன்றாக கருதப்படவேண்டும் ஏனென்றால் அது பெண்களுக்கு ஒரு புதிய தன்னிலைத் துவத்தை வழங்குகிறது. பெண்ணியத்துக்கு எதிராக ஆண்-இயம் என ஒன்று இல்லை என்ற போதிலும் பொதுவானதென முன்வைக்கப்படுகிற எல்லா அணுகுமுறைகளுமே ஆண் நோக்கிலான அணுகுமுறைகள்தான் என நாம் கூறலாம். ஆனால் பெண்ணியத்துக்கும் அது எதிர்கொள்கிற ஆண்நோக்குக்கும் இடையிலான மிக முக்கியமான வேறுபாடு ஒன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது பெண்ணியம் என்பது போல ஒருவர் நேர்ந்து கொள்கிற ஒன்றல்ல ஆண்நோக்கு. ஏனெனில் அது ஏற்கெனவே எங்கும் விரவியதாயிருக்கிறது.

ஒருவர் பிறப்பின் மூலமோ, சந்தர்ப்பவசத்தாலோ அல்லது பழக்கதோஷத்தாலோ பெண்ணிலை வாதியாகி விடமுடியாது. பால்வேறுபாடு என்பது ஏற்கெனவே சகஜமானதாக ஆக்கப்பட்டுள்ள இச்சமூகத்தில் இதற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்து அதன் வழி தனது அணுகுமுறையை அமைத்துக்கொள்ளும் ஒருவரைத்தான் நாம் பெண்ணிலைவாதி எனக் குறிப்பிட முடியும். (இதுவே தலித் என்கிற தன்னிலைக்கும் பொருந்தும்)

''Gender என்பதை பெண்ணிலை வாதிகள் உயிரியல் ரீதியான மெய்மை எனப்பார்ப்பதில்லை; மாறாக வர்க்கம், இனம் ஆகியன போன்று விமர்சனத்துக்கான வகையினமாக, சிக்கலான உறவுகளைப் புரிந்துகொள்வதற்கான உபகரணமாகவே பார்க்கிறார்கள்''[2] என்கிறார்

www.padippakam.com

V

ஹில்டே ஹெய்ன் என்ற பெண்ணிலைவாதி. பெண்ணியக் கோட்பாடுகள், பெண்ணியமல்லாத சிந்தனாமுறைகளும் கூட பால் வேறுபாடுகளால் நிர்ணயம் பெற்றுள்ளன என்பதை நிறுவுகின்றன. மனிதன் என்ற சொல்லும்கூட பால் வேறுபாட்டினைக் கடந்ததல்ல என்று அவை வாதிடுகின்றன.

''ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை, பெண்ணாக ஆக்கப்படுகிறார்'' என சிமோன்தெபோவா கூறியது பெண்ணியத்தின் அடிப்படை முழக்கம்போல அமைந்தது. 1968இல் ''மாணவர் புரட்சி'' எனக் குறிக்கப்படும் நிகழ்வுகள் ஐரோப்பாவில் உண்டாக்கிய மிகப்பெரும் கருத்தியல் மாற்றங்களைத் தொடர்ந்து பெண்ணியமானது ஒரு இயக்கமாக ஃப்ரான்ஸ் முதலான நாடுகளில் வலுப் பெற்றது என அறிகிறோம். பெண்ணியத்துக்கான கோட்பாட்டுருவாக்கத்தில் பங்களித்தவர்களென ஃப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண்ணிலைவாதிகளே கருதப்படுகின்றனர். அவர்கள் முன்வைத்த விமர்சனங்கள் அதுவரைப் பெண்ணியத்துக்கு ஆதரவானவை என நம்பப்பட்டிருந்த சிந்தனைகளையும்கூட அலசி அம்பலப் படுத்தின. ''நமது கலாச்சாரத்தால் பிரபஞ்ச உண்மைகளென முன்வைக்கப்படுகிற அனைத்து மதிப்பீடுகளையும், நம்மால் சாத்தியமான அனைத்து வழிகளிலும் எதிர் கொண்டாக வேண்டிய தருணம் வந்துவிட்டது''[3] என ஜூலியா க்றிஸ்தவா 1977இல் கூறினார். அவ்வாறு பெண்கள் எல்லாவற்றையுமே எதிர்கொண்டு ஆராய்ந்து வருவதை நிரூபணம் செய்கிறவிதமாகவே கடந்து போயிருக்கிறது காலம். ஆண்களால் உருவாக்கப்பட்ட மொழியும் இலக்கணமும் நிராகரிக்கப்படவேண்டும், பெண்களுக்கென தனித்த மொழி உருவாக்கப்படவேண்டும் என்கிற விதமாகவும் கூட தீவிரமான வாதங்கள் முன்வைக்கப் படுகின்றன.

இவையெல்லாம் தொடங்கி இருபது முப்பது ஆண்டுகள் கழித்து தற்போதுதான் நாம் பெண்ணியம் குறித்துப்

படிப்பகம்

www.padippakam.com



பேசத்தொடங்கியுள்ளோம். ஒருவிதத்தில் இது நமக்குச் சாதகமாக இருக்கிறது. ஏனென்றால் நமக்கு அறிமுகமாகிற இந்தக் கோட்பாடுகள் எண்ணற்ற விதங்களில் பிரயோகிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஏராளமான பிரதிகள் நமக்குக் கிடைக்கின்றன. இதுமட்டுமின்றி இந்தக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தி சேகரித்த அனுபவங்களும் நமக்கு முன்னே விரிந்திருக்கின்றன. எனவே நாம் பூஜ்யத்திலிருந்து தொடங்கவேண்டிய அவல நிலை இல்லை.

நிறப்பிரிகை சார்பில் பெண்ணியம் பற்றிய விவாதம் துவக்கப்பட்டதன் பின்னணியை இத் தொகுப்பிலுள்ள கட்டுரைகள் தெளிவுபடுத்தலாம். மார்க்சியத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து சென்றதில்தான் கோட்பாட்டளவில் பெண்ணியம் முதலான பிரச்சனைகளை விவாதிக்க வேண்டியதன் அவசியம் எங்களுக்குப் புரிந்தது. மார்க்சியத்தின் மீது எந்தெந்த திசைகளிலிருந்து விமர்சனங்கள் வைக்கப்பட்டன என்பதைத் தேடத்துவங்கிய நாங்கள் அடிப்படையான சில விமர்சனங்களைத் தொகுத்து விவாதத்துக்கான பிரதேசங்களைக் கண்டறிந்தோம். இப்படித்தான், சோசலிசக் கட்டுமானம், தேசிய இனப்பிரச்சனை, சாதிப்பிரச்சனை, பெண்ணியம், தகவல் தொடர்பு, பெரியாரியம், மாற்றுக்கலாச்சாரம் எனக் கூட்டுவிவாதங்கள் எங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு தொகுக்கப்படுகின்ளன. இந்த கூட்டுவிவாதங்களையும் கூட ஜனநாயகபூர்வமானவையாக அமைக்கவே முயன்று, செயல்படுத்திவருகிறோம் என்பதைப் பங்கெடுத்தவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

பெண்ணிய சிந்தனையில் மிகுந்த செல்வாக்கு செலுத்திவரும் ஃப்ரெஞ்ச் பெண்ணிலைவாதிகள் பலரும் உளப்பகுப்பாய்வு அணுகுமுறையைத் தமது கோட்பாடுகளுக்கு அடித்தளமாக அமைத்துக் கொண்டுள்ளனர்

www.padippakam.com



குறிப்பாக க்றிஸ்தவா, ஹெலன் சிஸீ, லூஸி எரிகாரே மூவரையும் குறிப்பிடலாம். எாக்கானுடைய சிந்தனை களை உள்வாங்கி வெவ்வேறு விதங்களில் இவர்கள் பிரயோகிக்கின்றனர். எல்லாவற்றையுமே எதிரும் புதிரு மாகப் பார்க்கின்ற இருபொருள்வாத (Dualism) அணுகு முறையை சிஸீ கடுமையாக விமர்சிக்கிறார். இத்தகைய போக்குக்கு எதிராக பெண்ணிய எழுத்து முறை ஒன்றை அவர் முன்வைக்கிறார். பெண்களின் நலனுக்குகந்ததாக இருபால் தன்மை கொண்டதாக அந்த எழுத்து முறை இருக்க வேண்டுமென்கிறார் அவர். தத்துவத்துறையில் ஆண்நோக்கு எவ்விதம் செயல்படுகிறது என வெளிப்படுத் திக் காட்டுவது லூஸி எரிகாரேவின் முக்கிய நோக்காக உள்ளது. (இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள அவரது புகழ்பெற்ற நூலின் சில பகுதிகள் அவரது அணுகுமுறை பற்றிய சிறிய அறிமுகத்தைத் தரலாம்) க்றிஸ்தவாவின் ஆர்வங்கள் மொழி, அன்பு, அறவியல் தொடர்பானவை' கலாச்சார மதிப்பீடுகளை முடிவற்ற ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென க்றிஸ்தவா கூறும்போது அதை ஒரு கோட்பாட்டுப் பிரச்சனையாக மட்டும் பார்ப்பதில்லை. அனைத்துக்கும் மேல் ஒரு அறவியல் பிரச்சனையாகவே அதை அவர் பார்க்கிறார்.

நிறப்பிரிகையைத் தொடங்கும்போது நாங்கள் அரசு பற்றிய ஆய்வுகளில் அதிகம் கவனம் செலுத்தி வந்தோம். அது தொடர்பாகக் கிடைத்த வில்ஹெம் ரெய்ஹின் நூலின் வாயிலாகவே குடும்பம்—பாலியல்— அதிகாரம் இவற்றின் உள்ளிணைப்புகள் புலப்பட்டன. அதிலிருந்து ஒரு பகுதியை மொழிபெயர்த்து நிறப்பிரிகை இரண்டா வது இதழில் வெளியிட்டதன் பின்பே தமிழக இடது சாரிகள்— குடும்பத்தை ஒரு அதிகார மையமாக அணுகத் தொடங்கினர் எனக் கூறலாம் இந்தக் கட்டுரை எழுத்தில் விவாதங்களை எழுப்பவில்லை என்றபோதிலும் பல்வேறு இடங்களில் தாக்கம் நிகழ்த்தியதை நாங்கள் அறிவோம்.

படிப்பகம்

www.padippakam.com



அடுத்த இதழில் பெண்ணியம் விவாதத்துக்கான அறிவிப்பும் அதற்கான தொகுப்பும் வெளியாயின. கூடவே பெண்விடுதலை பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் கருத்துக்களை விமர்சனமாகப் பார்க்கும் ஹால்த்ராபரின் கட்டுரை வெளியானது. சோசலிசத்துக்கும் குடும்பத்துக்குமான உறவுகளை ரஷ்ய அனுபவங்களை முன் வைத்து ஆராயும் கட்டுரையும் அதே இதழில் வெளியிடப்பட்டது. ஜூலை 91இல் பெண்ணியம் குறித்த கூட்டு விவாதம் பாண்டிச்சேரியில் நடத்தப்பட்டது.

இந்த விவாதம் தொகுக்கப்பட்டு நிறப்பிரிகை நான்காவது இழில் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து பெண்ணியம் தமிழ் அறிவுச் சூழலில் ஒரு புயலையே உண்டாக்கியது எனக் கூறலாம். துக்ளக், தினமணி போன்ற ஏடுகளிலும்கூட இந்த விவாதத்தைக் குறிப்பிட்டுக் கட்டுரைகள் வந்தன. எந்தவொரு எழுத்தாளரைப் பேட்டிகண்டாலும், பெண்ணியம் பற்றிய ஒரு கேள்வி இடம்பெறுவது அதன்பின் தவிர்க்க முடியாத ஒன்றாக ஆனது.

நிறப்பிரிகை சார்பிலான கருத்துக்கள் இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகள் மற்றும் விவாதங்களினூடே பதிவு செய்யப்பட்டுள்ளன. வேறு எந்த இதழும் செய்திராத அளவில் பெண்ணியம் பற்றிய விவாதங்களைத் தொடர்ச்சியாக நடத்திவருவதன் காரணம் இதுபற்றிய அக்கறையினால் மட்டுமின்றி, கோட்பாட்டளவில் பெண்ணியத்தை நாங்கள் ஆதரவாகப் பார்ப்பதாலும் தான்.

மேலை நாடுகளில் பெண்ணியச் சிந்தனைகள் பரவத் தொடங்கி பலகாலம் ஆனபின்பே பெண்களிலும் ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைகள் குறிப்பாக கறுப்பினப் பெண்கள், லெஸ்பியன்கள் போன்றோரின் உரிமைகள் தொடர்பான குரல்கள் எழுந்தன. ஆனால் இங்கோ பெண்ணியம் கூட்டு விவாதத்திலேயே இந்தக் குரல்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாக தலித் பெண்கள் பற்றி கவனம் ஈர்க்கப்பட்டது.

www.padippakam.com

# IX

இந்தக் கூட்டுவிவாதம் பற்றி விமர்சனமாக எழுதிய ஏடுகளும், அறிவாளிகளும் இதில் இடதுசாரி நோக்கில் எழுப்பப்பட்டிருந்த பிரச்சனைகள் பற்றி மௌனம் சாதித்துவிட்டு ஓரினப்புணர்ச்சி, கூட்டுப்புணர்ச்சி போன்றவற்றை மட்டும் தனியாக எடுத்து வைத்துக் கொண்டு மொத்த விவாதமும் அதுதான்என்பது போன்ற சித்ரிப்பை உண்டுபண்ண முற்பட்டனர். ஆனாலும்கூட ப்ரவாஹன் போன்று தீவிரமான கேள்விகளை எழுப்பிய வர்களும் இருக்கத்தான் செய்தார்கள்.

இங்கே தொகுத்துத் தரப்பட்டவை தவிரவும்கூட பல கட்டுரைகளில் பெண்ணியம் குறித்த விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற போதிலும் அரசு— குடும்பம்— பெண்ணியம் என்ற சட்டத்திற்குள் வருகின் றவை என்கிற விதத்திலேயே இத்தொகுப்பு செய்யப்பட் டுள்ளது. ஏறத்தாழ நூறுபேர்களின் கருத்துக்கள் அடங் கிய திரட்டாக இத்தொகுப்பு விளங்குகிறது. உலக அளவில் பெண்ணியம் குறித்து தற்சமயம் நடந்துவரும் விவாதப் போக்குகளை அறிமுகப்படுத்தி வைக்கிறது என்ற விதத்தில் மட்டுமின்றி, ஏராளமானவர்களின் சிந்தனைகளை ஒருங்கு திரட்டித் தருகிறது என்ற விதத்தி லும் இத்தொகுப்புக்கு ஈடாகத் தமிழல் வேறு ஒரு நூலும் இதுவரை வரவில்லை எனக்கூறுவது தற்புகழ்ச்சி ஆகாது.

பெண்ணிலைவாதிகளால் சில படைப்பிலக்கிய முயற் சிகள் மட்டுமே தமிழில் இதுகாறும் மேற்கொள்ளப்பட் டுள்ளன. மேலை நாடுகளில் நடந்து வருவது போன்ற விமர்சனச் செயல்பாடுகளும், கோட்பாட்டுருவாக்க முயற்சிகளும் நமது சூழலுக்கேற்ப நடைபெற்றாக வேண்டும். Portrait of Dora நாடகத்தில் அதன் கதாநாயகி கூறும் கடைசி வார்த்தைகளைப் போல ''எழுதுவதா?... அது என்னுடைய வேலையில்லை'' என இருந்துவிடாமல் பெண்ணிலைவாதிகள் எழுதவேண்டும். எல்லாவற்றுக்

படிப்பகம்

www.padippakam.com



குள்ளும் புதைந்திருக்கிற ஆண் நோக்கின் வன்முறையை வெளிப்படுத்திக் காட்டவேண்டும். அப்போது இந்த முன்னுரையையும்கூட அவர்கள் விட்டுவைக்க மாட்டார்களென நம்புகிறோம்.

ரவிக்குமார்

8-12-94 பொ. வேல்சாமி

அ. மார்க்ஸ்

குறிப்புகள் :

1. PORTRAIT OF DORA—Helene Cixous-Translated from french by Sarah Burd Diacritics/ Spring 1983
2. THE ROLE OF FEMINIST AESTHETICS IN FEMINIST THEORY — Hiede Hein

   —The Journal of Aesthetics and Art Criticism 48: 4 Fall 1990
3. TALKING ABOUT POLYLOGUE — An Interview With Julia Kristeva, In— French Femilnist Thought

   Ed. Toril Moll, Basil Blackwell-1989

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

கடந்த நான்கைந்து ஆண்டுகளில் தமிழ்ச் சிறு பத்திரிகைகளின் போக்கில் ஒரு சில வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதுகாறும் சிறு பத்திரிகைகள் நுழையாத களங்களாகிய சோசலிசக் கட்டுமானம், பார்ப்பனிய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, தலித்தியம், பெண்ணியம், பெரியாரியம்,தேசியம், மாற்றுக் கலாச்சாரம் போன்றவை இன்று விவாதப் பொருளாகியுள்ளன. இந்த மாற்றத்தை முன்னெடுத்த இதழ்களில் முதன்மையானதாக **நிறப்பிரிகை**யைக் குறிப்பிடலாம். மேற்கூறிய தலைப்புகளில் நிறப்பிரிகையில் முன்னெடுக்கப்பட்ட விவாதங்கள் தமிழ்ச் சூழலில் காத்திரமான பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை யாரும் ஒப்புக் கொள்வர். நிறப்பிரிகையில் முன்னெடுக்கப்பட்ட இவ்விவாதங்களைத் தொகுத்து தமிழ் மக்கள் மத்தியில் வைக்கும் பணியை **விடியல் பதிப்பகம்** மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த வரிசையில் ஒரு தொகுப்பாக இந்நூல் உங்கள் கரங்களில் வீற்றிருக்கிறது.

இந்தத் தொகுப்புகளின் ஒரு முக்கியமான சிறப்பு ஒற்றைக் கருத்தாக இவை முன் வைக்கப்படாமல், பன்முக நோக்கில் பன்முகப் பார்வைகள் சமயங்களில் நேரெதிரெதிரான பார்வைகளும்கூட அருகருகே வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வாசகனின் சுதந்திரத்தின் எல்லை விரிவாக்கப்படுகிறது; வாசிப்பில் சுவை கூடுகிறது.

இந்தத் தொகுப்போடு இந்தத் தலைப்பிலான விவாதங்கள் முற்றுப் பெற்றுவிட்டதாக விடியல் பதிப்பகம் கருதவில்லை. மேலும் விவாதங்கள் வரவேற்கப்படுகின்றன. தேவையாயின் அவற்றையும நூலாக்க விடியல் எப்போதும் தயாராக உள்ளது.

**—விடியல் பதிப்பகம்**

www.padippakam.com

# உள்ளே...

பக்கம்

1. பாலியல் ஒடுக்கு முறையின் சமூகச் செயல்பாடுகள் 1
—வில்ஹெம்ரெய்ச்

2. பெண் விடுதலை குறித்து மார்க்ஸ் எங்கல்ஸ் 18
—ஹால் த்ராபர்

3. சோசலிசமும் குடும்பமும்—ரசியாவை முன்வைத்து சில குறிப்புகள் 50
—ரவிக்குமார்

4. பெண்ணியம்: விவாதத்துக்கான தொகுப்பு 64

5. பெண்ணியம்: கூட்டு விவாதம் 68

6. அமெரிக்க அரசை விமர்ச்சித்த மூன்று லெஸ்பியன் கைதிகளின் பேட்டி 113

7. குடும்பமும் கம்யூன் வாழ்க்கையும் 134
— கோ. ராஜாராம்

8. குடும்பம், பெண்ணியம் 138
— ராஜ்கௌதமன்

9. எங்கெல்சும் பெண் விடுதலையும் 160
—ப்ரவாஹன்

10. பெண்ணியம்: அரசியல் செயல்பாட்டின் அவசியம் 169
—'பாரதி சுட்டும் விழிச்சுடர்'

11. பெரியார்—பூலே வழியில் பெண்ணுரிமை 182
—விஜி

12. நமது உதடுகள் ஒன்றாகப் பேசும்போது 192
—லூஸி எரிகாரே

படிப்பகம்

www.padippakam.com

# 1

# பாலியல் ஒடுக்குமுறையின் சமூகச் செயல்பாடுகள்

*—வில்ஹெம் ரெய்ச்*

மார்க்சியப் பாரம்பரியத்தில் இருட்பகுதிக்குள் மறைந்து கிடக்கும் ஏராளமான பெயர்களில் வில்ஹம் ரெய்ச் என்பதும் ஒன்று. இவர் தலைமையிலான கட்சி எந்த நாட்டிலும் புரட்சியை வெற்றி பெற வைக்காதது இதற்குக் காரணமாக இருக்கலாம். லெனின், ஃப்ராய்டு ஆகியோரது சமகாலத்தவரான ரெய்ச் முதன் முதலாக மார்க்சிய நோக்கில் உளப்பகுப்பாய்வை மேற்கொண்டவர். ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வையும், கொச்சை மார்க்சியர்களையும் ஒருசேர விமர்சித்தவர். தீவிரமான விஞ்ஞான ஆய்வுகள் மூலமாக மதத்தை மிகக் கடுமையாகத் தாக்கியவர். பகுத்தறிவு, இயற்கை விஞ்ஞானம் இவை

படிப்பகம்

www.padippakam.com



மட்டுமே உண்மையைக் காண்பதற்கான வழிகள் எனத் தன் வாழ்நாள் முழுவதும் நம்பியவர். தனது ஆய்வுகள் மற்றும் நடைமுறைகளின் காரணமாகக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும், உளப்பகுப்பாய்வுக் கழகத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டவர். சமூக விடுதலையைப் பாலியல் கோணத்திலிருந்து ஆய்வு செய்த ரெய்ச் தான் சார்ந்திருந்த ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி வெகுமக்கள் உளவியலைப் புரிந்துகொள்ளாததால் அவர்களிடமிருந்து விலகி நிற்கிறது என்பதைக் கண்டறிந்தார். தனது ஆய்வினூடாக, பால் வழிப்பொருளுறவு நோக்கை (Sex Economy) உருவாக்கிய ரெய்ச் இதனைச் செயல்படுத்த கட்சிக்குள்ளாகவே செக்ஸ்போல் (Sexpol) என்ற குழுவை அமைத்துத் தொழிலாளர்களதும், கட்சி உறுப்பினர்களதும் வீடு மற்றும் கருத்தடைப் பிரச்சனைகள் பற்றி பல பிரசுரங்களை வெளியிட்டார். இதுவே அவர் கட்சியை விட்டு வெளியேற்றப்படக் காரணமாகியது. அவர் எழுதிய ஏராளமான நூல்களில் தற்போது ஆங்கிலத்தில் கிடைப்பவற்றுள் சில:

The Function of the orgasm (Panther Books 1970), The Sexual Revolution (Vision Press 1969), Character analysis (Vision Press 1969), The Mass Psychology of Fascism (Pelican Books 1975). ரெய்ச் பற்றி அறிந்துகொள்ள சார்லஸ் ரிக் ரோப்ஃட் எழுதிய Reich (Fontana/Collins 1971) மற்றும் ரெய்முட் ரெய்ச் எழுதிய Sexuality and Class Struggle (New Left Books 1970) என்பவை உதவும்.

படிப்பகம்

www.padippakam.com



லெனின் கூடப் புரட்சியின் போதும் அதற்கு முன்பும் மக்கள் திரளிடையே தென்படும் ஒருவிதப் பிரத்யேகமான, முரண்பாடான நடத்தை குறித்துக் குறிப்பிடுவார். 1905 இல் ரஷ்யாவில் நடந்த சிப்பாய்களின் கலகம் பற்றி அவர் எழுதுவார்:

"விவசாயிகளின் நலன் குறித்துச்சிப்பாய்கள் பெரிய அளவில் அனுதாபம் கொண்டிருந்தனர்; நிலத்தைப் பற்றிச் சாதாரணமாகக் குறிப்பிட்டாலே போதும் மிகுந்த ஆர்வத்தினால் அவர்களது கண்கள் ஒளிரும். ராணுவ அதிகாரம் பலமுறை சிப்பாய்களின் கைகளுக்கு வந்துள்ளது. எனினும் இந்த அதிகாரம் ஒரு போதும் உறுதியான முறையில் உபயோகப்படுத்தப் பட்டதில்லை. சிப்பாய்கள் எப்போதும் நிலையற்ற மனம் கொண்டவர்கள். மிகவும் வெறுக்கப்பட்ட தங்களின் மேலதிகாரி சொன்னதைச் செய்த சில மணி நேரங்களுக்குள்ளாகவே, அவர்கள் மற்றவர்களை விடுவித்தார்கள். அதிகாரத்தில் இருப்பவர்களோடு பேச்சுவார்த்தைக்குச் சென்றார்கள். தங்களைத் தாங்களே சுட்டுக்கொண்டார்கள், தடிகளுக்குக் கீழ்ப் பணிந்தார்கள், நுகத்தடிகளுக்குள் மீண்டும் தாங்களே சென்று மாட்டிக் கொண்டார்கள்."

எந்தவொரு மர்மவாதியும் இத்தகைய நடத்தையை, மனிதனின் முழு முதலான ஒழுக்க இயல்பு என்ற அடிப்படையில் புனித முறைமைக்கும், அரசு அதிகாரத்துக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் எதிரான கலகத்தைத் தடை செய்வது எனக் கூறுவான். கொச்சை மார்க்சியர்கள், இவை தூய பொருளாதார நோக்கிலிருந்து விளக்கப்பட வில்லை என்ற காரணத்தால் இவற்றை நம்பமாட்டார்கள் அவர்களுக்கு இதுபற்றிய அறிவோ, விளக்கமோ கிடையாது. இத்தகைய பிரச்சனையைத் தந்தை எனும்

www.padippakam.com



பிம்பம்பற்றிய குழந்தைப்பருவக் குற்ற உணர்வின் விளைவு என அங்கீகரிப்பதன் மூலம் ஃப்ராய்டிய அணுகு முறை குறிப்பிட்ட அளவு இந்தப் பிரச்சனையின் உண்மைக் காரணங்களுக்கு சற்று நெருங்கி வருகிறது. இருந்தபோதிலும், இத்தகைய நடத்தையின் சமூக ரீதியான தோற்றம் மற்றும் செயல்பாடுகள் குறித்து எவ்வித அகநோக்கையும், அதன் விளைவாக நடைமுறை ரீதியான தீர்வுகளுக்கும் ஃப்ராய்டிய அணுகுமுறை இட்டுச் செல்லவில்லை. மேலும், பரந்துபட்ட பாலியல் வாழ்வு சிதைக்கப்படுவதற்கும் ஒடுக்கப்படுவதற்கும், இத்தகைய நடத்தைக்கும் உள்ள தொடர்பையும் அது புறக்கணிக்கிறது.

இத்தகைய பிற்போக்கான வெகுமக்கள் உளவியல் காரணங்களைப்பற்றி ஆய்வு செய்யும் முறைகுறித்த நமது அணுகுமுறைபற்றி விளங்கிக் கொள்ள மேம்லாட்டமாக வேனும் பால்வழிப்பொருளுறவு நோக்கு (Sex Economy) ஆய்வு முறை குறித்து அறிந்து கொள்வது அவசியம்.

பால்வழிப் பொருளுறவு நோக்கு (Sex Economy) என்பது பல வருடங்களுக்கு முன்பாக, மானுட பாலியல் வாழ்க்கை குறித்த சமூகவியல் ஆய்வுகளிலிருந்து வளர்ந்த ஒரு ஆய்வுத் துறையாகும். இது செயல்பாட்டியலை (Functionalism) இநதத் தளத்தில் பிரயோகித்துப் பல அகநோக்குகளைப் பெற்றது. கீழ்க்கண்ட எடுகோள் களிலிருந்து இது மேலே செல்கிறது.

பொருளியல் உற்பத்திக்கான நிலைமைகளும் வரலாற் றின் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் அந்த நிலைமைகளால் விளையும் வர்க்க மோதல்களுமே சமூக வாழ்க்கையை ஆளுகின்றன என்பதை மார்க்ஸ் கண்டுபிடித்தார். சமூகத் தின் உற்பத்தி சக்திகளது உரிமையாளர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் மீது மேலாண்மை செய்ய அபூர்வமாகத்தான் ராணுவக் கொடுங்கோன்மையைக் கையாள்கிறார்கள்.

www.padippakam.com



அவர்களது பிரதானமான ஆயுதம் ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான அவர்களது கருத்தியல் ஆதிக்கம் ஆகும். இந்தக் கருத்தியலே அரசுயந்திரத்தின் ஆதாரமாக விளங்கு கிறது. நாம் முன்பே குறிப்பிட்டது போல, மார்க்ஸைப் பொறுத்தவரையில் வாழ்கிற, மனோவியல் ரீதியிலும், உடலியல் ரீதியாலும் இயக்கமுள்ள மனிதனே வரலாறு மற்றும் அரசியலின் எடுகோளாக இருக்கிறான். மார்ஸின் அர்த்தத்தில் 'வரலாற்றின் தன்வயக் காரணி' என அறியப் படுகிற இயக்கமுள்ள மனிதனின் பண்பமைப்பு ஆய்வு செய்யப்படாமலேயே இருந்தது. காரணம், மார்க்ஸ் ஒரு சமூக வியலாளரே தவிர மனோவியலாளரல்ல. ஏனெனில் அந்தச் சமயத்தில் விஞ்ஞானப்பூர்வமான உளவியலே தோன்றவில்லை. மனிதன், தான் சுரண்டப்படுவதற்கும் கேவலப்படுத்தப்படுவதற்கும் ஏன் அனுமதித்தான்? சுருங்கச் சொன்னால் ஆயிரக்கணக்கான வருடங்களாக அடிமைத்தனத்தை அவன் ஏன் ஏற்றுக் கொண்டான்? என்ற கேள்விகள் விடையளிக்கப் படாமலேயே உள்ளன. இப்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்னவெனில், சமூகத்தின் பொருளாதாரப் போக்குகள் மற்றும் பொரு ளாதாரச் சுரண்டலின் வழிமுறைகள் ஆகியவை மட்டுமே ஆகும்.

சுமார் அரை நூற்றாண்டுக்குப் பிறகு, உளப்பகுப் பாய்வு (Psycho analysis) என்று அவரால் அழைக்கப் பட்ட ஒரு விசேஷமுறையை உபயோகித்து ஃப்ராய்டு உளவியல் வாழ்க்கையை ஆளுகின்ற விதிமுறைகளைக் கண்டறிந்தார். அதுவரையிலான கருத்துகளின் மீது மிகத் தீவிரமான, புரட்சிகரமான தாக்கங்களை உண்டு பண்ணிய அவரது முக்கியமான கண்டுபிடிப்புகள் கீழ் வருபவை:

மனோவாழ்வில் பிரக்ஞை என்பது மிகச்சிறிய பங்கு தான் வகிக்கிறது; பிரக்ஞையும்கூட நனவிலி நிலையில்

www.padippakam.com



நிகழும் மனோவியல் உருவாக்கத்தினால் பிரக்ஞைபூர்வமாகக் கட்டுப்படுத்த இயலாததாக உள்ளது. ஒரு கனவைப் போன்ற, ஒரு பயனற்ற வினையையொத்த, மனோரீதியாக நோய்வாய்ப்பட்ட புத்திபிழன்றவர்களின் அபத்தமான உளறல்கள் போன்ற எந்தவொரு உளரீதியான அனுபவமும் (அது எவ்வளவு அர்த்தமற்றதாகத் தோன்றினாலும் கூட) அதன் மூலவேரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் வெற்றி காண்கிற ஒருவரால் புரிந்து கொள்ளத்தக்க அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது, இவ்வாறு, வெறுமனே மூளைபற்றிய பௌதீகக் கோட்பாடாக (மூளைகுறித்த மர்மவியல்) அல்லது மர்மம் சூழ்ந்த அறிவுணர்வியக்க ஆற்றல்பற்றிய கோட்பாடாகக் கீழ்மையுற்றுக் கொண்டிருந்த மனோதத்துவம் இயற்கை விஞ்ஞானத்தின் உலகத்துக்குள் நுழைந்தது.

ஃப்ராய்டின் மகத்தான இரண்டாவது கண்டுபிடிப்பு சிறு குழந்தைகூட உயிர்ப்பான பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்பதாகும்; ஆனால் இதற்கும், இனப்பெருக்கத்துக்கும் தொடர்பு இல்லை. இது போன்றே பாலியல் மற்றும் இனப்பெருக்கம், பாலுணர்வு மற்றும் உறுப்புணர்வு இவையாவும் ஒன்றல்ல. உளவியல் உருவாக்கம் பற்றிய பகுப்பாய்வானது மேலும், பாலுணர்வு இன்னும் சரியாகச் சொன்னால் அதன் சக்தி அதாவது உடலின் பாலியல் மையம் (Libido) என்பதே உளவியல் வாழ்வை முன்செலுத்துகிற விசையாக உள்ளது என்பதையும், இதனால் உயிரியல் எடுகோள்களும், வாழ்வின் சமூகக் காரணிகளும் மனத்தைக் கவிந்துள்ளன என்பதையும் நிரூபணம் செய்தது.

குழந்தைக்கும் பெற்றோருக்குமான உறவில் (ஈடிபஸ் காம்ப்ளெக்ஸ்) முக்கியமான ஒரு பகுதியாக உள்ள சிறுபிராய பாலியலானது, பாலியல் ரீதியான செயல்கள் மற்றும் சிந்தனைகளுக்கான தண்டனைகள் பற்றிய

www.padippakam.com



அச்சத்தின் காரணமாக வழக்கமாக ஒடுக்குதலுக்குள்ளா கிறது; குழந்தையின் பாலியல் வினையானது ஞாபகத்தி லிருந்து மறைக்கப்பட்டு முற்றாகத் துடைத்தெறியப்படு கிறது. சிறு பிராயப் பாலியல் மீதான ஒடுக்கு முறை இவ்விதமாகப் பிரக்ஞையிலிருந்து நீக்கப்பட்டாலும் அதன் வேகம் குறைவதில்லை. மாறாக அந்த ஒடுக்குத லானது இவ்வித உணர்வுகளைத் தீவிரப்படுத்தி மனத்தின் பல்வேறு வகையான நோய்க்கூறுமிக்க பிரச்சனைகளின் போதுவெளிப்படும்படியாகச் செய்கிறது. நாகரீக மனிதர் களிடையே இதில் விதிவிலக்கே இல்லை என்பதால் மனித சமூகம் முழுவதுமே தனது சிகிச்சைக்குரியதுதான் என ஃபிராய்டு கூறினார். இதுவே பிராஃய்டின் மூன்றாவது கண்டுபிடிப்பாகும்.

மனிதனின் ஒழுக்க நியதிகள் புனிதமாக உதித்தவை அல்ல. மாறாகப் பெற்றோர்களும் அவர்களைச் சுற்றி யுள்ளவர்களும் கையாண்ட கல்விமுறைகளிலிருந்தே உருக்கொண்டவை. இது ஃபிராய்டின் முக்கியமான நான் காவது கண்டுபிடிப்பாகும். அடிப்படையில் சிறு பிராய பாலியலை எதிர்க்கிற கல்வி முறைகள் மிகவும் சக்திவாய்ந் தவை. தொடக்கத்தில், குழந்தையின் விருப்பத்துக்கும் அதை ஒடுக்குகின்ற பெற்றோரின் செயலுக்கும் இடையி லான முரண்பாடே பிற்காலத்தில் ஒரே நபருக்குள் இயல் பூக்கத்துக்கும் (Instinet) ஒடுக்கத்துக்கும் இடையிலான முரண்பா! ாக மாற்றம் கொள்கிறது. பெரியவர் களிடத்தில் தானே நனவிலி நிலையில் இருக்கிற இந்த ஒழுக்க விதிகள் பாலியல் விதிகளைப் பற்றிய புரிதலுக்கு எதிராக இயங்குகிறது; இது பாலியல் ஒடுக்குமுறையை ஆதரித்துச் சிறு பிராய பாலியல் பற்றிய புரிதலுக்கு எதிரான பரந்துபட்ட எதிர்ப்பை ஆதரிக்கிறது.

முழுமுதலான ஒழுக்க மதிப்புகளை உயர்த்திப் பிடிக்கிற, உலகைப் புறவயமான சக்தி ஒன்றின்

www.padippakam.com



ஆளுகைக்கு உட்பட்டது என அர்த்தப்படுத்திக் கொள்கிற, சிறு பிராய பாலியலை மறுதலிக்கிற, பாலியலை இனப்பெருக்கத்தோடு வரையறை செய்கிற பிற்போக்கான அறிவியலுக்கும் அதிலும் குறிப்பாக மத வகைப்பட்ட அபௌதீகக் கோட்பாட்டுக்கும் மேற்சொன்ன ஒவ்வொரு கண்டுபிடிப்புமே பலத்த அடி கொடுப்பதாக அமைந்தது. (நாம் நமது பேசுபொருளுக்குத் தேவையான முக்கியமான சில கண்டுபிடிப்புகளைப் பற்றி மட்டுமே குறித்துள்ளோம்) இருந்தபோதிலும் இந்தக் கண்டுபிடிப்புகள் குறிக்கத்தக்கத் தாக்கம் எதையும் நிகழ்த்தவில்லை. ஏனெனில் உளப்பகுப்பாய்வு சமூகவியலானது முற்போக்கான, புரட்சிகரமான உத்வேகம் என்கிற வகையில் தந்தவை யாவும் குறைபாடுடையனவாகவே இருந்தன. இதனை நிருபணம் செய்ய ஏற்ற இடம் இதுவல்ல. உளப்பகுப்பாய்வு சமூகவியலானது தனி மனிதனை ஆய்வு செய்வது போலவேதான் சமூகத்தையும் ஆய்வு செய்ய முயன்றது. அது, பாலியல் நிறைவுக்கும் நாகரீக உருவாக்கத்துக்கும் இடையில் முழுமுதலான முரண்பாட்டை வைத்தது; அழிவு சார்ந்த இயல்பூக்கங்களே (Destructivc Instincts) என்றும் மனித விதியை ஆளுகிற அடிப்படை உயிரியல் உண்மைகள் என்பதாக அர்த்தப்படுத்திக் கொண்டது; பண்டைக் காலத்தில், தாய்வழிச் சமூகக்காலம் ஒன்று இருந்ததையே நிராகரித்தது; இறுதியில் தனது கண்டுபிடிப்புகளின் சிக்கலில் தானே சிக்கிக்கொண்டு ஐயவாதத்தில் முடமாகி முடிந்துபோனது. இந்தக் கண்டுபிடிப்புகளிலிருந்து மேலே செல்ல முயன்ற யத்தனிப்புகள் பலகாலமாகவே எதிர்க்கப்பட்டன. இந்த உளப்பகுப்பாய்வு சமூகவியலின் பிரதிநிதிகள் இநத எதிர்ப்பில் ஒருபோதும் வழுவியதில்லை. இவை யாவுமே ஃப்ராய்டின் மகத்தான கண்டுபிடிப்புகள் மீதான தாக்குதல்களை எதிர்த்து அதனை ஆதரிக்கிற தமது உறுதிப்பாட்டின் மீது ஒரு சிறிய பாதிப்பையும் கூட உண்டாக்கிவிடவில்லை, அந்தத் தாக்குதல்

www.padippakam.com



களின் துவக்கமும், அடிப்படையும் எதுவாக இருந்த போதிலும்.

அந்தக் கண்டுபிடிப்புகளை ஆதாரமாகக் கொண்ட, பால்வழிப் பொருளுறவு நோக்கின் (Sex Economy) ஆய்வு முறையானது மார்க்ஸை ஃப்ராய்டுடனோ, அல்லது ஃப்ராய்டை மார்க்சுடனோ, போட்டுக் குழப்புகிற ஒன்றல்ல; ஒன்றுக்கு மற்றதைப் பதிலீடாக்குகிற வழக்கமான முயற்சிகளில் ஒன்றும் அல்ல. இதற்கு முந்தைய பக்கங்களில் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் எந்தப் பகுதியில்... அதன் வரலாற்று அடிப்படை அல்ல, சமூக பொருளாதாரத்தால் நிறைவு செய்ய முடியாத அதாவது கருத்தியலின் ஆற்றலையும் அமைப்பாக்கத்தையும் புரிந்து கொள்ள முடியாத பகுதியில்— உளப்பகுப்பாய்வு விஞ்ஞானப் பூர்வமாக இயங்க முடியும் என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். உளப்பகுப்பாய்வு வழங்கிய அகநோக்குகளைப் பயன்படுத்தியதன் மூலம் சமூகவியலானது உயர்ந்த தளங்களுக்குச் சென்று யதார்த்தத்தைப் புரிந்துகொள்வதில் இன்னும் சிறந்ததொரு நிலையை அடைந்தது. இறுதியாக மனித அமைப்பின் தன்மைகள் புரிந்து கொள்ளப்பட்டன. பண்பாய்வு அமைப்பாக்க உளவியல் (Character analytic structure Psychology) உடனடியான நடைமுறை ரீதியான ஆலோசனைகளை வழங்கவில்லையென்று குறுகிய புத்தி கொண்ட அரசியல்வாதி மட்டுமே குறைசொல்வான். இது வாழ்க்கை குறித்த பழைமை விரும்பும் பார்வையைச் சிதைக்கிறது என்று குற்றம்சாட்டி, இதனை உதவவே உதவாது என மிகமோசமான அரசியல்வாதி மட்டுமே கூறுவான். ஆனால், ஒரு சமூகவியலாளனோ; சிறுபிராயப் பாலியல் பற்றிய உளப்பகுப்பாய்வின் கண்டுபிடிப்புகளை மிகவும் குறிப்பிடத்தகுந்த புரட்சிகர செயலென்று பாராட்டுவான்.

மார்க்ஸின் சமூகவியல் அடிப்படைகளையும், ஃப்ராய்டின் மனோதத்துவ அடிப்படைகளையும் கொண்டு

www.padippakam.com



உருவாக்கப்பட்ட பால்வழிப் பொருளுறவு நோக்கு (Sex economy) என்னும் விஞ்ஞான அணுகுமுறை இதற்குப் பின்பு வந்ததாகும். இது சாராம்சத்தில் வெகு மக்கள் உளவியலாகவும், பால்வழிச் சமூகவியல் விஞ்ஞானமாகவும் ஒரே சமயத்தில் செயல்படுகிறது. ஃப்ராயடின் நாகரீகம் பற்றிய தத்துவத்தை நிராகரிக்கிற இது, மருத்துவ உளவியல் ஆய்வு விட்ட இடத்திலிருந்து தொடங்கி மேலே செல்கிறது.

உளப்பகுப்பாய்வானது தனி மனிதனிடத்தில் பாலியல் ஒடுக்குமுறையின் காரணமாக ஏற்படும் பாதிப்புகள் மற்றும் விளைவுகளைப் பற்றிய இயங்குவிதிகளை வெளிப்படுத்தியது. பால்வழிப் பொருளுறவு சமூகவியல் (Sex economic sociology) மேலே சென்று 'எந்தவிதமான சமூகவியல் காரணங்களுக்காகப் பாலியல், சமூகத்தினாலும் தனி மனிதனாலும் ஒடுக்கப்படுகிறது' என்ற கேள்வியை எழுப்புகிறது இறப்புக்குப் பிந்திய ரட்சிப்புக்காக என்று கிறித்தவ சமயம் பதில் சொல்லும்; மர்மவாத ஒழுக்கத் தத்துவம், இது மனிதனின் முழுமுதலான அறவியல் மற்றும் ஒழுக்க இயல்புகளின் நேரடி விளைவு' என்றும் கூறும்; ஃப்ராய்டின் நாகரிகம் பற்றிய தத்துவம் 'இது கலாச்சாரத்தின் நலனுக்காக நிகழ்கிறது' என்று வலியுறுத்தும். கொஞ்சம் சந்தேகிக்கிற ஒருவர், எரிபொருள் நிலையத்தைக் கட்டுவதற்கும், விமானங்களை உற்பத்தி செய்வதற்கும், சிறு குழந்தைகளின் சுய மைதுனமோ, வயது வந்தவாகளின் பாலியல் ரீதியான உடலுறவோ எப்படித் தடையாக இருக்க முடியும்? எனக் கேட்கலாம். கலாச்சார செயல்பாடுகளல்ல இன்றிருக்கிற அமைப்புதான் இத்தகைய பாலியல் ஒடுக்குமுறைக்குக் காரணம். எனவே, ஒருவர் இந்த அமைப்புகளைத் துறக்கத் தயாராகிவிட்டால் குழந்தைகள், பெரியவர்கள், அனைவரதும் மீதான மிகப்பயங்கரமான இந்தச் சாபக்கேட்டை இல்லாது ஒழித்து விடலாம். ஆகவே, பிரச்சனை

www.padippakam.com



கலாச்சாரம் பற்றியது அல்ல. இந்த சமூக அமைப்பு பற்றியதே ஆகும். ஒருவர், பாலியல் ஒடுக்குமுறையின் வரலாறு பற்றியும் அதன் தோற்றம் பற்றியும், அறிய முனைந்தால் அது கலாச்சார வளர்ச்சியின் தொடக்க கட்டத்தில் காணப்படவில்லை என்பதையும், அடக்கு முறையும் ஒடுக்குமுறையும் கலாச்சார வளர்ச்சியின் எடுகோள்களில்லை என்பதையும் காண முடியும். தந்தை வழிச் சமூகமும், வர்க்கப் பிரிவினைகளும் தோன்று கின்ற வரையிலும் இப்படியான பாலியல் ஒடுக்குமுறை தோற்றம் கொள்ளவில்லை. இந்தக் காலகட்டத்தில் தான் பொதுவான பாலியல் நலனானது சிறுபான்மை யினரின் பொருள்வகைப்பட்ட லாபத்துக்கும் அவர் களது நலனுக்குமாக சேவை செய்யத் தொடங்கியது. தந்தைவழி மணமுறை மற்றும் குடும்பத்தில்தான் இந்த வகையான விவகாரங்கள் ஒரு திடமான ஒழுங்கமைக்கப் பட்ட வடிவத்தை எடுத்தன. பாலியல் கட்டுப்படுத்தப் பட்டு, ஒடுக்கப்பட்டதோடு இயற்கையான மனித உணர் வுகளில் மாற்றம் ஏற்பட்டது; பாலியலை மறுதலிக்கிற மதம் உருவாகி அது தனக்கான பால்வழி அரசியல் (Sex political) அமைப்பை - மனிதனின் பாலியல் விருப்பங் களைத் துடைத்தெறிவதன் மூலம் பூமியிலிருக்கும் கொஞ்ச நஞ்சம் சந்தோஷத்தையும் ஒழித்துக் கட்டுவ தையே நோக்கமாகக் கொண்ட திருச்சபை என்னும் அமைப்பை உண்டாக்கியது. இவற்றுக்கான காரணங் களை இப்போது மிகப் பெருமளவில் நடத்தப்படும் மனித உழைப்புச் சுரண்டல் என்னும் நிலையிலிருந்து பார்த்தால் அறிந்து கொள்ளமுடியும்.

பாலியல் ஒடுக்குமுறைக்கும், மனித சுரண்டலுக்கும் இடையிலான உறவைப் புரிந்து கொள்ள, தந்தைவழி அதிகாரத்துவ சமூகத்தின் பொருளாதார, பால்வழிப் பொருளுறவு சூழல் பின்னிப்பிணைந்துள்ள அடிப்படை யான சமூக அமைப்பு பற்றிய நுண்ணறிவு அவசியம். இதன் துணையின்றி, தந்தைவழி சமூகத்தின் கருத்தியல்

www.padippakam.com



செயல் முறைகள் பற்றியும் அதன் பால்வழிப் பொருளியல் சூழல் பற்றியும் அறிந்து கொள்ள முடியாது. எல்லா நாடுகளையும் சேர்ந்த, வயதையும் சேர்ந்த, சமூகத்தையும் சேர்ந்த, ஆண்கள் பெண்களைப்பற்றிய உளப்பகுப்பாய்வானது, சமூகப் பொருளியல் கட்டமைப்பு சமூகத்தின் பாலியல் கட்டமைப்புடன் பின்னிப்பிணைந்துள்ளதையும், அதிகாரத்துவக் குடும்பத்தில் மனிதனின் முதல் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளிலேயே சமூகக் கட்டமைப்பின் மறு உற்பத்தி நடைபெறுகிறது என்பதையும் தெளிவாக்கியது. திருச்சபை இந்தச் செயல்பாட்டைப் பிற்பாடுதான் தொடர்கிறது. இவ்விதமாக அதிகாரத்துவ அரசானது, அதிகாரத்துவக் குடும்ப அமைப்பிலிருந்து ஏராளமாகப் பயனடைகிறது. குடும்பமானது, அரசின் கட்டமைப்பும், கருத்தியலும் வடிவமைக்கப்படுகிற ஒரு தொழிற்சாலையாகச் செயல்படுகிறது.

அதிகாரத்துவ அமைப்பின் பாலியல் மற்றும் பொருளியல் நலன்களின் குவிமையமாயிருக்கிற சமூக நிறுவனத்தை நாம் புரிந்து கொண்டோம். இப்போது, எவ்வாறு இது குவிமையமாகிறது எவ்வாறு இது செயல்படுகிறது என்ற கேள்வியை எழுப்புவோம். ஒரு பிற்போக்கான மனிதனின் (பாட்டாளிகளையும் உள்ளடக்கி) வழக்கமான பண்பமைப்பை ஆய்வு செய்வதானது இத்தகைய கேள்வி எழுப்பப்படாமல் எவ்வித விடையையும் தராது என்பதைக் கூறத் தேவையில்லை. குழந்தையின் உறுப்பு சார்ந்த பாலியலைச் (genital sexuality) சேதப்படுத்துவதில் கடைசிக் கட்டமாக இருக்கிற குழந்தைகளின் இயல்பான பாலியலைத் தடை செய்கிற ஒழுக்க நெறிகள் குழந்தைகளைப் பயங்கொள்ளவும், வெட்கப்படவும், அதிகாரத்தைப் பற்றி அச்சப்படவும் செய்து, அதிகாரத்தின் அர்த்தத்தில் சொன்னால் கீழ்ப்படிதலுள்ளவர்களாக, நல்லவர்களாக, எளிதில் இணங்கி விடுகிற இயல்பு கொண்டவர்களாக அவர்களை மாற்றியமைக்கிறது. அது

www.padippakam.com



மனிதனின் எதிர்ப்புச்சக்தியை முடமாக்குகிறது. ஏனெனில் ஒவ்வொரு முக்கியமான உயிர் உறை மனத்தூண்டலும் (Life impulse) இப்போது மிகுந்த அச்சத்தினால் அழுத்தப்படுகிறது; பாலியல் என்பது விலக்கப்பட்ட ஒரு பொருளாக ஆக்கப்பட்டதிலிருந்து பொதுவான சிந்தனையும், மனிதனின் விமர்சனப்பூர்வமான குணமும் கூடத் தடைகளுக்குள்ளாயின. சுருங்கக் கூறினால், எவ்வித எதிர்ப்புமற்று இணங்கிச் செல்கிற; அதிருப்திக்கும், அவமதிப்புக்குமிடையிலும்கூட அதிகாரத்தின் ஒழுங்கமைவுக்குப் பொருந்திச்செல்கிற தன்னிலைகளை (Subjects) உருவாக்குவதுதான் ஒழுக்கவியலின் குறிக்கோளாகும். இவ்விதமாய் குடும்பம் என்பது அதிகாரத்துவ அரசின் நுண்ணமைவாக; குழந்தையானது பிற்பாடு பொதுச் சமூக அமைப்புக்குள் பொருந்திச் செல்வதற்கு ஏற்றபடி தயாரிப்பு செய்து கொள்கிற வகையில் இப்போதே பொருந்திச் செல்லப்பழகிக் கொள்கிற இடமாக இருக்கிறது. மனிதனின் அதிகாரத்துவ கட்டமைப்பானது பாலியல் உணர்வுத் தூண்டலுக்கான உயிர்மங்களில் பாலியல் தடையுணர்வையும், அச்சத்தையும் பதிவுறுத்துவதன் மூலமே உற்பத்தி செய்யப்படுகிறது.

பழைமை விரும்பும் சாதாரணமான ஒரு தொழிலாளியின் மனைவியின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டோமானால் நாம் மிக எளிதாக, அதிகாரத்துவச் சமூக அமைப்பை மறுஉற்பத்தி செய்வதற்கான முக்கியமான ஆதாரமான அமைப்பென்று குடும்பத்தைப் பால்வழிப் பொருளுறவு நோக்கு (Sex economy) ஏன் கருதுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஒரு சுதந்திரமான பெண் தொழிலாளியைப் போலத்தான் அவளும் பொருளாதார ரீதியில் அதிருப்தி கொண்டிருக்கிறாள். அதைப் போலவேயான பொருளாதாரச் சூழலைக் கொண்டிருக்கிறாள். ஆனால், அவள் ஃபாசிஸ்ட் கட்சிக்கே வாக்களிக்கிறாள்.

www.padippakam.com



சுதந்திரமான சாதாரணப் பெண்ணொருத்தியின் பாலியல் கருத்து நிலைக்கும், சாதாரணமாக உள்ள ஒரு பிற்போக்கான பெண்ணின் பாலியல் கருத்து நிலைக்கும் இடையிலுள்ள மெய்யான வேறுபாட்டை விளங்கிக் கொண்டால், நாம் பாலியல் கட்டமைப்பின் தீர்மான கரமான முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும். பழைமை விரும்பும் அந்தப் பெண்ணின் பாலியலுக்கு எதிரான, ஒழுக்கவியல் தடைகள் அவளது சமூகச் சூழல் குறித்த பிரக்ஞையை அடைவதிலிருந்து அவளைத் தடுக்கிறது; அவளைத் திருச்சபையுடன் நன்றாகப் பிணைத்து அவர்கள் அவளைப் 'பாலியல் புரட்சியைப்' பற்றிப் பயமுறுத்தி வைக்க ஏதுவாக்குகிறது. கோட்பாட்டு ரீதியாகக் கூறினால் நிலைமை இவ்வாறு உள்ளது; கொச்சை மார்க்சியர்கள் தங்களது யந்திரகதியான பார்வையினால், பாலியல் அதிருப்தியும் பொருளியல் அதிருப்தியும் ஒன்றிணைகிற நிலையில்தான் சமூகச் சூழலானது ஒரு உச்சமான கொதி நிலைக்கு வருகிறது என நினைக்கிறார்கள். இந்த அனுமானமானது உண்மையாக இருக்கும் பட்சத்தில் ஆண்களை விடவும் பெருமளவில் பெண்களும் இளைஞர்களும்தான் கலகக்காரர்களாயிருக்க வேண்டும். யதார்த்தமோ இதற்கு முற்றிலும் நேர் எதிரானதொரு நிலையை வெளிப்படுத்துகிறது. ஒரு பொருளாதாரவாதி இந்த நிலையை எவ்விதம் எதிர் கொள்வதெனத் தெரியாது விழிக்கிறார். அந்தப் பிற்போக்கான பெண், அவரது பொருளாதாரத் திட்டத்தைக் கேட்க கொஞ்சம்கூட ஆர்வம் காட்டாதது அவருக்குப் புதிராக இருக்கிறது. விளக்கம் இதுதான்; ஒருவரது தொன்மையான பொருளியல் தேவைகள் மீதான ஒடுக்குமுறையானது வெளிப்படுத்தும் விளைவுகள், ஒருவரது பாலியல் தேவைகள் மீதான ஒடுக்குமுறை ஏற்படுத்தும் விளைவுகளிலிருந்து வேறுபட்டவை. முந்தையது ஒரு கலகத்தைத் தூண்டுகிறது, ஆனால் பிந்தையதோ எந்த அளவுக்குப் பாலியல் தேவைகள் ஒடுக்குதலுக்குள்ளா

www.padippakam.com



கிறதோ அந்த அளவுக்கு அவற்றை பிரக்ஞையிலிருந்து நீக்கி, அதையே ஒரு ஒழுக்க அரணாக மாற்றி இரண்டு விதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான கலகத்தைத் தடுத்து நிறுத்திவிடுகிறது. உண்மையில் இத்தகைய கலகம் பற்றிய மனத்தடையுணர்வும்கூட நனவிலி மனத்தைச் சார்ந்ததேயாகும். சாதாரணமான அரசியல் சார்பற்ற ஒரு மனிதனின் பிரக்ஞையிலோ இதன் தடயங்களும் கூடத் தென்படுவதில்லை.

இதன் முடிவு என்னவென்றால், பழைமை வாதம்; சுதந்திரம் குறித்த அச்சம்; சுருங்கச் சொன்னால் 'பிற்போக்குச் சிந்தனை'.

இவ்வகையான செயல்முறைகளினால் பாலியல் ஒடுக்குமுறையானது, அரசியல் பிற்போக்குத் தனத்தை யும் மக்கள் திரளில் உள்ள தனி மனிதனை அரசியல் சார்பற்றவனாகவும், அடிபணிந்து செல்பவனாகவும் மாற்றுவதை மட்டும் செய்யவில்லை, அது, மனிதனின் கட்டமைப்புக்குள் ஒரு துணை சக்தியை—அதிகாரத்துவ ஒழுங்கமைவை ஆதரிக்கிற ஒரு செயற்கையான ஆர்வத் தையும்கூட உண்டாக்கி விடுகிறது. இயல்பான நிறைவை அடைவதிலிருந்து பாலுணர்வானது தடுக்கப்படும்போது அது பல்வேறு விதமான மாற்றுகளைத் தேடுவது நடக் கிறது.

இவ்வாறுதான், இயல்பான தன்முனைப்பானது குரூரமான வதைத்தவித உணர்வாக (Sadism) சிதைக்கப் படுகிறது. இதுவே மிகச் சில நபர்களால் தூண்டிவிடப் படுகிற ஏகாதிபத்திய யுத்தங்களின் அடிப்படையாக விளங்குகிற வெகுமக்கள் உளவியலின் (Mass psychology) முக்கிய பகுதியாக விளங்குகிறது. வெகுமக்கள் உளவிய லின் நோக்கிலிருநது பார்த்தால் பாலியல் மைய (Libido) இயக்கத்தின் அடிப்படையிலேயே யுத்த மனப்பான்மை யின் தாக்கம் அமைந்துள்ளது. ராணுவச் சீருடையின்

www.padippakam.com



பாலியல், தாக்கம், லயத்துடன் கூடிய காமத் தூண்டுதல் மிக்க அணிவகுப்பு நடையின் தாக்கம், காட்சியுறுத்துத லித (Exhibitionistic) தன்மைமிக்க ராணுவ நியதிகள் ஆகியவை அறிவாழம் மிக்க நம் அரசியல்வாதிகளை விடவும் ஒரு விற்பனைப் பெண்ணாலோ, அல்லது ஒரு சாதாரணக் குமாஸ்தாவாலோ எளிதில் இயைபுறுத்திக் கொள்ளக் கூடியனவாக உள்ளன. இன்னொரு விதத்தில் அரசியல் பிற்போக்குத் தனமே; இந்தப் பாலியல் விருப் பங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள் கிறது. அது, கவர்ச்சிகரமான சீருடைகளை ஆண்களுக்கு வடிவமைப்பது மட்டுமின்றி, அவர்களை ராணுவத்தில் சேர்க்கிற பொறுப்புகளில் அழகிய பெண்களை நியமித் துள்ளது. இறுதியாக, நாம், யுத்தவெறி பிடித்த அரசு களின் ராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் சுவரொட்டிகளை நினைவுபடுத்திக்கொள்வோம். அவை கிட்டத்தட்ட இப்படியான வாசகங்களைத்தான் கொண்டுள்ளன: ''வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யுங்கள்—ராயல் நேவியில் சேருங்கள்.'' வெளிநாடுகள் என்பவை கவர்ச்சி கரமான பெண்களைக் கொண்டு உருவகப்படுத்தப் படுகின்றன. ஏன் இந்த சுவரொட்டிகள் தாக்கம் மிக்கவை யாக உள்ளன? ஏனெனில் நமது இளைஞர்கள் பாலியல் ஒடுக்குமுறையின் காரணமாகப் பாலுணர்வுப் பசியினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திரத்துக்கான விருப்பத்தைத் தடை செய்கிற பாலியல் ஒழுக்க நியதிகளும், அதிகாரத்தின் நலன்களுக்கு இயைபாயிருக்கிற சக்திகளும் தங்களுக்கான பலத்தை ஒடுக்குதலுக்குள்ளான பாலியலில் இருந்தே பெறுகின்றன. பொருளியல் அடிப்படைமீது கருத்தியலின் எதிர்விளை வுகள் நிகழ்கிற செயல்முறையின் முக்கியமான பகுதிபற்றி இப்போது நாம் சற்றுத் தெளிவான புரிதலுக்கு வந்திருக் கிறோம்; பாலியல் தடைகள் பொருளியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட மனிதனின் கட்டமைப்பை மாற்றி, அவன்,

www.padippakam.com



தனது பொருளியல் நலனுக்கே எதிரானபடிச் செயல்படவும், உணரவும், சிந்திக்கவும் செய்துவிடுகிறது. இவ்விதமாக 'வெகுமக்கள் உளவியல்' லெனினுடைய அவதானிப்புகளை நாம் வியாக்யானப்படுத்தவும் நிருபணம் செய்யவும் சாத்தியப்படுத்தியுள்ளது. 1905ஆம் வருடத்திய சிப்பாய்கள் நனவிலி மனத்தில் தங்களது அதிகாரிகளை தங்களது குழந்தைப் பருவத்தின் போதிருந்த, தங்களது பாலியலை மறுதலித்த; ஆனபோதிலும் தங்களால் கொலை செய்யபபடாத, தங்களது மகிழ்ச்சியான வாழ்க்கையைச் சிதைத்த போதிலும் தங்களால் வெறுக்கப்படாத தங்களது தந்தையரைப் போலவே அர்த்தப்படுத்திக் கொண்டனர் (கடவுள் பற்றிய சுருக்கமான கருத்தாக்கத்தில்). அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் அவர்களிடமிருந்த கழிவிரக்கமும், உறுதியின்மையும், அதற்கெதிரானவற்றின் வெளிப்பாடுகளே. வெறுப்பு செயல்படுத்த முடியாத இரக்கமாக மாறிவிட்டது.

ஆக, வெகுமக்கள் உளவியலின் நடைமுறைச் சிக்கல், அடிபணிந்து கிடக்கிற; அரசியல் பிற்போக்குத் தனத்தின் வெற்றிக்கு எப்போதும் துணையாக இருக்கிற பெரும்பான்மை மக்களைத் தூண்டிவிடுவதும்; சமூகப் பொருளாதாரச் சூழலின் காரணமாகப் பிறந்த சுதந்திரத்துக்கான மன உறுதிக்கு எதிராக உள்ள தடைகளை நீக்கிவிடுவதும் தான் அதன் தளைகளிலிருந்து நீக்கப்பட்டபின், விடுதலை இயக்கத்தின் நீரோட்டத்தில் அதன் இலக்கை நோக்கிச் செலுத்தப்பட்டபின்; கால்பந்து விளையாட்டைப் பார்த்துச் சந்தோஷம் கொள்கிற, மட்டரகமான மனிதர்களின் உளவியல சக்தியை அதிகக் காலத்துக்குத் தளையிட முடியாது. இதனைத் தொடர்ந்து வரும் பால்வழிப் பொருளுறவு நோக்கு ஆய்வுகள் இந்தப் பார்வையிலிருநதே செயல்படுத்தப்படுகின்றன.

---

**வில்ஹெம் ரெய்ச்சின் Mass psychology of Fascism என்னும் நூலில் The Social Functions of Sexual Repression என்னும் அத்தியாயத்தின் தமிழ் ஆக்கம்: ரவிக்குமார்.**

அ—2.

படிப்பகம்

www.padippakam.com

# 2

# பெண் விடுதலை குறித்து மார்க்ஸ், எங்கல்ஸ்

*—ஹால் த்ராபர்*

கம்யூனிசத் தத்துவத்தில் பெண்களின் பங்கு, ஒரு தாரமணம், சமூகத்தில் குடும்பத்தின் பாத்திரம் ஆகியவை முக்கியமான பகுதிகளாக உள்ளன. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்றோர் பெண்களின் பிரச்சனைகள்குறித்து ஏராளமாக எழுதியுள்ளனர். ஒரு குறிப்பிட்ட பொருளாதார அமைப்பானது பெண்களின் விடுதலைக்கு முன்நிபந்தனையாக உள்ளது என்ற அவர்களது வாதம்தான், இன்று தங்களை சோசலிஸ்டுகளாகவும் கருதிக் கொள்கிற பெண்ணிலைவாதிகளின் கருத்தமைவினது அடிப்படையாக அமைந்துள்ளது. ஹால் த்ராபரின் இந்தக்கட்டுரை மார்க்சியப் பெண்ணிலைவாதிகளின் தத்துவத்தி

www.padippakam.com



னுடைய வளர்ச்சியை சோசலிசத்துக்கு முந்திய படைப்புகளிலிருந்து எங்கெல்சின் குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் வரை ஆராய்கிறது. **ரொபர்ட்டா சாப்பர்** தொகுத்துள்ள Female Liberation-History and Current Politics (Alfred. A Knopf, Newyork 1972) என்ற நூலிலிருந்து **இக்கட்டுரையை சுருக்கித் தமிழில் தருபவர்: ரவிக்குமார்.**

□

'பெண்களின் முழுமையான விடுதலைக்கும் ஆண்களுடன் அவர்களது உண்மையான சமத்துவத்துக்கும், சமூகப் பொருளாதாரத்தை நிர்மாணிப்பதும், பொதுவான உற்பத்தி உழைப்பில் அவர்கள் ஈடுபடுவதும் அவசியமாகும்.

**—வி. இ. லெனின்**

பெண்களைப் பற்றிய லெனினின் எழுத்துக்களுடைய தொடக்கமென்று முக்கியமாக, இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தைக் குறிக்கலாம். இன்றைய நோக்கிலிருந்து பார்க்கும்போது மிகவும் ஆர்வத்துக்குரியதாக இருப்பது அவர் செர்மானிய சோசலிஸ்டு தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவருமாயிருந்த க்ளாரா ஜெட்கினுக்கு அளித்த பேட்டியாகும்.

"...க்ளாரா, உழைக்கும் மகளிருக்காக ஏற்பாடு செய்யப்படும் மாலை நேர கலந்துரையாடல்களிலும், வாசிப்பு நிகழ்ச்சிகளிலும் பாலியல், திருமணம் ஆகியவை பற்றிய பிரச்சனைகளே முதலில் வருகின்றன என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவையே உங்களது அரசியல் கல்வி போதனைகளில் முக்கியமானவையாக உள்ளன என்றும் கூறுகிறார்கள். இவற்றைக் கேட்கும்போது என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. ஒரு இந்தியத் துறவி சதாகாலமும் தனது தொப்புளிலேயே

படிப்பகம்

www.padippakam.com



லயித்திருப்பதுபோல எப்போதும் பாலியல் பிரச்சனை களில் ஆழ்ந்திருப்போரை நான் நம்புவதில்லை. பெரும் பாலும் யூகங்களாகவும், அனுமானங்களாகவும் உள்ள ஏராளமான பாலியல் கோட்பாடுகள்[1] சுயதேவையில் இருந்தே எழுகின்றன. பூர்ஷ்வா ஒழுக்கத்தின் முன்னி லையில் ஒருவர் தன்னுடைய அளவற்ற அசாதாரணமான பாலியல் வேட்கையைக் கூறி அதனைச் சகித்துக் கொள் ளும்படி வேண்டுகின்ற விருப்பத்திலிருந்துதான் இது தோற்றம் கொள்கிறது.'' இவ்வாறாக லெனின் பாலிய லிலும், திருமணத்திலும் உள்ள தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியான ஒடுக்குமுறை குறித்துப்பெண்கள் தங்களது பிரச் சனைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டியதன் தேவையை அலட்சியப்படுத்தி விட்டார். பின்னர், ''சுதந்திரமான காதல்'' பற்றிய மார்க்சியக் கோட்பாட்டை அவர் இவ்விதமாகத் தெளிவுபடுத்துவார்: 'கம்யூனிச சமூகத்தில், பாலியல் விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்வது என்பது 'ஒரு டம்பளரில் இருக்கும் நீரைக்குடிப்பதுபோல' எளிதான சாதாரணமான விஷயமாயிருக்கும் என்கிற புகழ் பெற்ற கோட்பாட்டை நீங்களும் அறிந்திருப்பீர்கள் என்பதில் சநதேகமில்லை. நம்முடைய இளைஞர்களில்ஒரு பகுதியினர் இதனால் பைத்தியம் பிடித்துத் திரிகின்றனர். இது பல இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் கேடாக முடிந்திருக்கிறது. இந்தக் கோட்பாட்டின் பக்தர்கள் இதை ஒரு மார்க்சியக் கோட்பாடு என்கின்ற னர். சமூகத்தின் கருத்தியல் மேற்கட்டுமானத்தில் நிகழ்கிற எல்லா விஷயங்களும் மாற்றங்களும் அதன் சமூக அடித் தளத்திலிருந்தே நேரடியாக வருகிறது என கொச்சையாக யூகித்துக் கொள்கிற வகைப்பட்ட மார்க்சியத்தின் எந்த ஒரு பகுதியையும் நான் விரும்பவில்லை, பிரச்சினைகள்

---

1. லெனின் இங்கே ஃப்ராய்டைப் பற்றித்தான் முக்கியமாகக் குறிப்பிடுகிறார்.

www.padippakam.com



நமக்குத் தெரிவது போல அவ்வளவு எளிதானவையாக இல்லை.''

தங்களைத் தீவிரமான அரசியல் புரட்சியாளர்கள் என எண்ணிக்கொள்வோரைப் பற்றி இறுதியாக லெனின் குறிப்பிடுவது முக்கியமானதாகும். அதிலும் பெண் விடுதலையின் விளைவுகள் பற்றி நிலவும் பொதுவான குழப்பத்தின் பின்னணியில் பார்க்க அது மிகவும் முக்கியமானதாகிறது: ''உங்களுக்கு நம் இளந்தோழர் பற்றி தெரியுமா? அவர் ஒரு உன்னதமான இளைஞர். இருப்பினும் அவர் எதற்கும் உதவ மாட்டாரென நான் அஞ்சுகிறேன். அவருக்கோ ஒன்று மாற்றி ஒன்றாக காதல் உறவுகள். இது அரசியல் போராட்டத்துக்கோ புரட்சிக்கோ ஏற்றதல்ல. அரசியலோடு பின்னிப்பிணைக்கப் பட்டுள்ள காதல் உறவு கொண்டிருக்கும் பெண்களையோ பார்க்கிற பாவாடை பின்பெல்லாம் அலைகிற, எல்லா இளம் பெண்களின் பின்பும் சுற்றுகிற ஆண்களையோ நான் நம்புவதில்லை. நோ...நோ... அது புரட்சிக்குக் கொஞ்சமும் உடன்பாடாயிருக்காது.'' ஆண்களின் புரட்சி பற்றிய விவாதம் யாவுமே பெண்ணிலிருந்து தொடங்குவதென்பது புதிரான ஒன்றல்ல.

இறுதியில் சமூகத்தில் உழைப்புப் பிரிவினையை இல்லாதொழிக்கிற, அதன் மூலம் அது மனித உறவுகளுக்கிடையே சுமத்தியுள்ள குளறுபடிகளை நிர்மூலமாக்குகிற ஒரு பார்வையானது மார்க்சும், எங்கெல்சும் குறித்தது போல சமூகத்தின் உழைப்புப் பிரிவினையின் தோற்றுவாயாயிருக்கிற அதாவது ஆண் பெண் இரு பாலருக்குமிடையேயான உழைப்புப் பிரிவினை என்னுமிடத்துக்குக் கொண்டு போய் நிறுத்தும் இது, குடும்பம், திருமண வடிவங்கள், பாலியல் உறவுகள் இன்னபிற, யாவற்றின் கடந்த காலம் மற்றும் எதிர்காலம் பற்றியஅனைத்துக் கேள்விகளையும் அதாவது 'பெண்கள்

www.padippakam.com



பிரச்சனை' என அறியப்படுவதோடு தொடர்புடைய அத்தனை கேள்விகளையும் கிளப்பிவிடும்.

இந்தக் கேள்விகளை வெறுமனே சமூக உளவியல் அல்லது ஆணாதிக்கம் போன்றவற்றோடு மட்டுமே தொடர்பு கொண்டவை எனப் பார்க்காமல் இவை, 'ஆதி உழைப்பு பிரிவினை' என்கிற நோக்கிலிருந்து அணுகப்படுமானால், மார்க்சைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சனையின் வேர்கள் முதலாளித்துவத்தை விட, அரசைவிட, அல்லது நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விட இன்னும் சொல்லப் போனால் தனிச்சொத்துரிமையை விடவும் மனிதனின் பழைய காலத்துக்குள் ஆழச்செல்பவை என்பது தெளிவாகி விடும். இந்த உழைப்புப் பிரிவினையால் உண்டான சமூகப் மனப்பான்மைகளே இதனை ஒழிப்பதற்கான முக்கியமான தடைகளாக உள்ளன என்பதையும் இதே நேரத்தில் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

## மார்க்சின் தொடக்ககாலக் கருத்துகள் (1842–46):

மார்க்ஸ தானொரு சோசலிஸ்டாக ஆகும் முன்பு திருமணம், குடும்பம் மற்றும் இவை தொடர்பான விஷயங்களைப் பற்றி மரபு ரீதியான பார்வையையே கொண்டிருந்தது தெரிகிறது. இது, அவர் 1842 இல் 'ரெயினிஸ் ஜெய்துங்' பத்திரிக்கைக்காக எழுதிய இரண்டு கட்டுரைகளிலிருந்து தெரிய வருகிறது. திருமணம் என்கிற நிறுவனம் பற்றிய சார்பியல் ரீதியான அணுகுமுறையைக் கொண்டுள்ளார் என்று குஸ்தோவ் ஹீகோவைத் தனது Historical School of Law எனும் விமர்சனக் கட்டுரையின் போதுதான் மார்க்ஸ் தாக்கினார். ஃப்ரான்சைச் சேர்ந்த தாராளவாதி பெஞ்சமின் கான்ஸ்டடன்ட் என்பவர் எழுதிய

www.padippakam.com



திலிருந்து ஒரு சுருக்கமான பகுதியைக் குறிப்பிடுகிற மார்க்ஸ் இறுதியில் 'நமது மிருக குணமானது திருமண உறவுக்கு வெளியில் பாலியல் வேட்கையை தணித்துக் கொள்வதை அனுமதிக்காத வழக்கத்துக்கு எதிரானது'' என்கிற ஹயூகோவின் கருத்துக்களை மறுத்துரைக்கிறார். ஆனால் ஆய்வு செய்கிற முயற்சி எதுவும் அங்கே தென்படவில்லை.

## விவாகரத்து பற்றிய கட்டுரை:

1892 இன் இறுதிப் பகுதியில் வெளியான 'வரவிருக்கும் விவாகரத்து சட்டம் பற்றி'' என்னும் கட்டுரை சோசலிசத்துக்கு முந்திய அவரது கருத்துக்கள் பற்றி மேலும் தெளிவுபடுத்துகின்றன. சட்டம் பற்றிய தத்துவத்துக்கு இயைபாக மண உறவு அதன் விளைவுகள் பற்றிய கோட்பாட்டைத் தான் வளர்த்தெடுக்க விருப்பதாகவும் ஆனால் அதை இந்தச் சிறு கட்டுரை அதிகம் விளக்கிவிடமுடியாது என்றும் மார்க்ஸ் குறிப்பிடுகிறார். இந்தப் பிரச்சனையைப்பற்றிய ஒரு சார்பற்ற சரியான நிலையை ஆதரிப்பது தான் அவரது பிரதான நோக்கமாக இருக்கிறது என்பது உண்மைதான், மண உறவின் சாரம் என்பது ஆன்மீக ரீதியான புனிதத்துவம் இல்லை; மாறாக மனிதார்த்த அறமே ஆகும். மண உறவு என்பது மேலிருந்து முடிவு செய்யப்படுவதில்லை மாறாக அது சுயமாக நிர்ணயிக்கப்படுவதாகும். சட்டம் என்பது மக்களின் பிரக்ஞைபூர்வமான விருப்பத்தின் வெளிப்பாடாக, அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாக இருந்தால் மட்டுமே மனிதார்த்த அறவியல் அடிப்படையிலான விவாகரத்துச் சட்டம் நிலைத்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். அவரது தொடக்கப்புள்ளி புரட்சிகர சனநாயகம் என்பதுதான்.

ஆனால், அவரது பார்வை இன்னமும் ஹெகலிய கருத்து முதல்வாத வார்த்தைகளையே தாங்கியிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பாகக் கூறினால் 'மண உறவின் உள்ளார்ந்த விருப்பம்' ''இந்த உறவின் அறிவியல் ரீதியான அடிப்படை' இன்னபிற. அவர், இன்னமும் மணஉறவு என்பதை ஒரு வரலாற்று ரீதியான சமூகநிறுவனம் எனப் பார்க்கவில்லை மாறாக அதை மனித இயற்கையிலிருந்து பெறப்பட்ட ஒரு அறவியல் ஒழுங்கின் திரட்சி என்பதாகவே எண்ணினார். இது, பிரஷ்ய சட்டத்திலுள்ள விவாகரத்துக்கான எண்ணற்ற அற்பமான காரணங்களை விமர்சிக்கும் நிலைக்கு அவரை இட்டுச் சென்று சகிப்புத் தன்மை பற்றி சந்தேகிக்கும் நிலைக்கு அவரை ஆளாக்கியது. தங்களது விருப்பத்துக்கு எதிராக மணமுடிக்கப்பட்ட தம்பதிகளின் துயரங்களைப் பற்றி எப்போதும் பேசிக் கொண்டிருக்கிறவர்களைக் கடிந்து மார்க்ஸ் கூறிய கீழ்க்கண்ட வாசகங்கள் அவரது அணுகு முறையின் மையத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன: ''அவர்கள் இரண்டு தனி நபர்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள். குடும்பத்தை மறந்து விடுகிறார்கள். ஒரு மண உறவைக் கலைப்பதென்பது ஒரு குடும்பத்தையே கலைப்பதற்கு ஒப்பானதாகும் என்பதையும் அவர்கள் மறந்து விடுகின்றனர்.'' சட்டத்தின் அடிப்படையில் பார்த்தாலும் அவர்களைச் சேர்ந்த குழந்தைகளும் இன்னபிறவும் வெறும் உத்தேசமான திடீர் எண்ணங்களைச் சார்ந்திருக்க முடியாது என்பதையும் அவர்கள் நினைப்பதில்லை. மணஉறவு என்பது ஒரு வேளை குடும்பத்தின் அடிப்படையாக இல்லாதிருக்குமானால் அது நட்பைப் போன்று சட்டத்துக்குக் கட்டுப்படாத ஒன்றாகவே இருக்கும். ''இப்படிப்பட்ட சோசலிசத்துக்கு முந்திய மார்க்ஸின் அணுகுமுறை 1845இல் அவரால் கைவிடப்பட்டது.

## முதல் சோசலிச அபிப்ராயங்கள்:

இரு தனி நபர்களது பாலியல் உறவுகள் மற்றும் சமூகத்தில் பெண்களின் இடம் ஆகியவை குறித்த

www.padippakam.com



மார்க்சின் பார்வை மீதான தாக்கம் அவர் 1843-44 கால வாக்கில் படித்த சோசலிச, கம்யூனிச நூல்களினால் ஏற்பட்டது. (1843இல் தான் மார்க்சும்கூட மண உறவு என்னும் நிறுவனத்துக்குள் நுழைந்தார் என்பதும் இங்கே நினைவு கொள்ளத்தக்கது)

ஃப்யூரியரின் தாக்கம் தொடக்கக் காலத்தில் மார்க்சிடம் காணப்படுகிறது. '1844ஆம் வருடத்திய பாரீஸ் கையெழுத்துப் படிகளை'ப் பார்க்கையில் இதை நாம் அறியலாம். மனிதனின் முன்னேற்றத்தின் மொத்த அளவும் சமூகத்தில் ஆண்பெண் உறவின் மூலமாகவே அளவிடப்படுகிறது என்னும் கருத்தை அவர் ஆர்வமுடன் ஏற்றுக்கொண்டார். கொச்சைக் கம்யூனிசத்துக்கு எதிரான அவரது முதல் விமர்சனம் அது 'பெண்களின் ராச்சியத்துக்கு' வக்காலத்து வாங்குவது பற்றியதுதான்

மனிதர்களுக்கிடையில் நேரடியான இயற்கையான அவசியமான உறவு என்பது ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான உறவு என்பதுதான். இருபாலருக்கிடையிலான இந்த இயற்கையான உறவில் மனிதன் இயற்கையுடனான உறவு என்பது அவன் இன்னொரு மனிதனோடு கொள்ளும் உறவுதான்... இந்த உறவிலிருந்து மனிதனின் மொத்த வளர்ச்சியையும் ஒருவன் அறிந்து கொண்டுவிட முடியும்... எனவே அது எப்படி மனிதனின் இயற்கையான குணம் என்பது மனிதாயகுணமாக மாறியது என்பதையும்... அவன் ஒரு தனித்த இருப்பாக இருக்கும் அதே வேளை ஒரு சமூக ஜீவியாக எவ்விதம் இருக்கிறான் என்பதையும் புலப்படுத்துகிறது.

இந்த உறவே மனிதர்களுக்கிடையிலான அனைத்து உறவுகளின் மனிதத் தன்மையை அளக்கும் ஒரு சோதனை முறையாக முன்வைக்கப்படுகிறது. அந்த ஆண்டில் எழுதப்பட்ட 'புனிதக் குடும்பம்' நூலில் ஃப்யூரியரின் கருத்துகள் எடுத்தாளப்படுகின்றன. முப்பத்து நான்கு

www.padippakam.com



ஆண்டுகளுக்குப் பின் 'டூரிங்குக்கு மறுப்பு' நூலில் எங்கெல்ஸ், இத்தகைய கருத்துக்களை முதன் முதலில் வெளிப்படுத்தியமைக்காக ஃப்யூரியருக்கு மீண்டும் மரியாதை செலுத்துகிறார். இருபத்து நான்கு ஆண்டுகள் கழித்து அதன் தோற்றுவாயைப்பற்றிக் கவலைப்படாமல் மார்க்ஸ் அந்தக் கருத்துக்களை எதிரொலிக்கிறார்.

''...அமெரிக்க தொழிலாளர் சங்கத்தின் சென்ற மாநாட்டில் பெரிய அளவிலான முன்னேற்றம் தென் பட்டது, மற்ற எல்லாவற்றைவிட அது உழைக்கும் மகளிரை முழுமையான சமத்துவத்துடன் நடத்தியது. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை ஆங்கிலேயரும், ஃப்ரெஞ்சுக்காரர்களும் தங்களது குறுகிய புத்தியை சுமந்து கொண்டு அவதிப்படுகின்றனர். வரலாறு தெரிந்த ஒவ்வொருவரும் பெண்களது பங்கேற்பு இல்லாமல் எந்த ஒரு பெரிய சமூக மாற்றமும் நடந்திருக்க முடியாது என்பதை அறிவார்கள். Social Progress can be Measured Exactly by the Social Position of Fair sex (The ugly ones included).''

ஃப்யூரியரை மேற்கோள் காட்டுமிடங்களில் இன்னமும் பெண்ணென்றால் பலகீனம், ஆண் என்றால் பலம் என்கிற கருத்தை ஆதரிக்கிற ஒரு போக்கு தென்படுகிறது. இந்தப் பிரச்சனை பற்றி மார்க்சும் எங்கெல்சும் பின்னர் எழுதியவை இத்தகைய கருத்துக்களை முற்றிலும் நிர்மூலமாக்கின. 1844இல் எங்கெல்ஸ் எழுதிய 'இங்கிலாந்தில் உழைக்கும் வர்க்கம்' என்ற நூலில் தான் முதலில் குடும்பம் பற்றிய ஒரு புதிய அணுகுமுறைக்கான குறிப்பு தென்படுகிறது. பெண்களும் குழந்தைகளும் பெருமளவில் வேலைக்குப் போனதன் விளைவே உழைக்கும் வர்க்கத்தின் குடும்பங்களுடைய இந்த நிலைக்குக் காரணமென்ற நிலைப்பாட்டுக்கு உண்மைகள் அவரை இட்டுச்சென்றன. வீட்டிலிருந்து ஆலைக்கும் சுரங்கத்துக்கும் பெண் மாற்றப்

www.padippakam.com



பட்டதால் குடும்பம் சிதைந்தது. அவள் குழந்தை களையோ வீட்டையோ பற்றிக் கவலைப்படுவது சாத்திய மில்லாமல் போனது. அது தடையற்ற பாலியல் உறவு களுக்கும் (இது விபச்சாரம் என்னும் நிலையை நெருங்கா விடினும் கூட) முறையற்ற குழந்தை பிறப்புகளுக்கும் காரணமாகியது. குடும்பம் எப்படிச் சிதைந்து மறை கிறது என்பதை விடவும் வேலைக்குச் செல்லும் பெண் என்பவள் சம்பாதித்துக்கொண்டு வருபவளாகவும், வேலை கிடைக்காத கணவன் என்பவன் வீட்டு வேலை களைக் கவனித்துக் கொள்பவனாகவும் ஆகிக் குடும்பம் என்பது இவ்விதம் தலைகீழாக மாற்றப்பட்டது என்பதே முக்கியம்.

இத்தகைய நிலையை, 'விஷயம் பைத்தியக்கார'த் தனமாகிவிட்டது' என்றும் ஆணை நபும்சகனாக்கி பெண்ணிடமிருந்து அவளது பெண் தன்மை அனைத்தை யும் இது அகற்றிவிடுகிறது என்றும் இதன் மூலம் அது இருபாலரையும் அவமானப்படுத்தி அதன்மூலம் மனித குலத்தையே அவமானப்படுத்தி விடுகிறது என்றும் எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். ஆனால் இத்தகைய விஷயங் களை "வரலாற்றால் நிர்ணயிக்கப்பட்ட போக்குகளில் சமூகமயமாக்கப்பட்ட விளைவுகள்" எனத் தான் கருது வதாக எங்கெல்ஸ் குறிப்பிடுகிற இடத்தில்தான் அந்தப் புதிய குறிப்புத் தென்படுகிறது.

செர்மானியக் கருத்தியல் (1845-46) எழுதப்படும்வரை மார்க்சும், எங்கெல்சும் ஒரு தனித்துவமான ஆய்வுக்கான அடிப்படை எதையும் போடத்துவங்கவில்லை. இந்த நூலிலிருந்து தான் வரலாறு பற்றிய பொருளுறவு நோக்கு நன்கு வளரத் தொடங்கியது. இந்த இடத்தில்கூட மார்க்ஸ், எப்போதும் ஏதேனும் ஒரு வகையான குடும்பம் இருந்து வருமென மேலோட்டமாக நம்பினார், ஆனால் எப்படியாயினும் குடும்பம் என்பதை மாறிவரும்

www.padippakam.com



பொருண்மை நிலைகளில் வரலாற்று ரீதியாக மாறிவரும் விளைவுஎன்பதாகத் தெளிவாக இங்கே பார்க்கப்பட்டது. குடும்பம் என்பது நிலவுகிற அடிப்படையான விவரங்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட வேண்டுமேயன்றி செர்மானிய வழக்கத்திலிருப்பது போல குடும்பம் என்பது பற்றிய கோட்பாட்டினடிப்படையில் அல்ல என்று மார்க்ஸ் எழுதினார். இது 1842இல் அவர் எழுதியதை நேரடியாகத் தாக்குகிற விஷயமாகும். குடும்பம் என்பது தான் சமூகஉறவின் முதல் வடிவமாக, உண்மையிலிருக்கிற ஒரே சமூக உறவு என்பதாக எடுத்துக்கொள்ளப்பட்டது. உழைப்புப் பிரிவினை என்பது தந்தை வழி அதிகாரத்துவ மிக்கத் தலைவனால் தலைமை தாங்கப்படும் குடும்பத்தில் தான் தொடங்குகிறது. குடும்பத்தில் உள்ளார்ந்து இருக்கிற அடிமைத்தனம் மெல்ல மெல்ல வளரத் தொடங்குகிறது. தனிச் சொத்துரிமைக்கான அடிப்படையாக குடும்பம் என்பதே அமைகிறது. கருவடிவிலான சொத்து வடிவம் என்பது முதன் முதலில், மனைவியும் குழந்தைகளும் கணவன் என்பவனுக்கு அடிமையாக உள்ள குடும்பத்தில் காணப்படுகிறது. இவ்விதம் குடும்பத்தில் உள்ளார்ந்து காணப்படும் அடிமைத்தனமே முதல் சொத்து என்பதாக உள்ளது.

## குடும்பத்தை சிதைத்தல்:

செர்மானியக் கருத்தியல் என்ற நூலில் குடும்பம் என்பது பின்னர் எங்கெல்ஸ் விவரித்தது போல தனிச் சொத்துரிமை பொருளாதாரத்துடன் இணைத்து விரிவாகப் பேசப்படா விட்டாலும் கூட மார்க்ஸ், இப்படி தனிச்சொத்துரிமையுடனான உறவென்பது அடிப்படையான சில விவரங்களைத் தேவையாக்குகிறது என்பதிலோ தனிச் சொத்துரிமையின் அழிவுடன் கூட குடும்பத்தின் அழிவும் பிணைந்துள்ளது என்ற முடிவுக்கு வருவதிலோ சந்தேகம் கொள்ளவேயில்லை என்று தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



மேலும், இதன் மூலம் மணஉறவு என்பதும் கூட அழிந்து போய் விடும் என்பதும் நமக்கு வெட்ட வெளிச்சமாகி விடுகிறது. என்ன விதமான உறவுகள் இத்தகைய நிறுவனங்களுக்குப் பதிலீடாக அமையும் என்பது பற்றித் தெளிவான வரையறுப்புகளோ, குறிப்புகளோ இல்லா விட்டாலும் கூட ஃப்யூரியரின் கற்பனைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என மார்க்ஸ் குறிப்பிடுகிறார். செர்மானியக் கருத்தியல் நூலுக்கு முன்பாக மார்க்ஸால் எழுதப்பட்ட ஃபாயர்பாக் மீதான ஆய்வுரைகளில் நான்காவது ஆய்வுரை ''குடும்பம் என்பது தத்துவரீதியிலும் நடைமுறைரீதியிலும் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும்'' என்று அறிவிக்கிறது.[2]

குடும்பத்தின் அழிவு பற்றிய மார்க்சின் தீவிரம் இதில் தெரிகிறது. பூர்ஷ்வா குடும்பம் சிதைந்து விட்டதெனவும், உண்மையில் அது சொத்து உறவுகளில் மட்டுமே இப்போது தங்கி நிற்கிறதெனவும் அவர் அறிவித்தார். பூர்சுவா குடும்பத்தின்சிதைவு என்பதன் மூலம் 'ஒழுக்கங்கெட்ட பூர்சுவாக்கள்' மணஉறவிலிருந்து நழுவி ரகசியமாகக் கள்ள உறவுகளில் ஈடுபடுவது போன்றவற்றைத் தான் மார்க்ஸ் அர்த்தப்படுத்திக் கொண்டுள்ளாரெனத் தோன்றுகிறது. இது ஒரு திருப்திகரமான விளக்கமாகப் படவில்லை. பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை

---

2. நான்காவது கருத்துரையாக மார்க்ஸ் முதலில் எழுதியது இதுதான். 1888இல் எங்கெல்ஸ் திருத்திப் டதிப்பித்த தொகுப்பில் இந்தக் கருத்துரையின் தொனி சற்று மென்மையாக்கப் பட்டது. ''குடும்பம் என்பது தத்துவரீதியில் விமர்சிக்கப்பட்டு, நடைமுறை ரீதியில் புரட்சிகரமானதாக்கப்பட வேண்டும்'' என்று இதை எங்கெல்ஸ் மாற்றியமைத்தார்.

www.padippakam.com



குடும்பம் என்பது உண்மையிலேயே அழிந்து விட்டது; அங்கே குடும்பம் என்கிற கருத்தாக்கமே காணப்படவில்லை என மார்க்ஸ் அழுத்தமாகக் கூறுகிறார். இதற்கான அடிப்படை விவரங்கள் எதையும் அவர் தரவில்லை. எங்கெல்ஸின் இங்கிலாந்தைப் பற்றிய புத்தகம் இங்கே ஆதாரமாகக் காட்டப்படவோ அல்லது இந்தப் பிரச்சனை பெண்களின் வேலை என்பதோடு இணைக்கப்படவோ இல்லை. எப்படியாயினும் ''பாட்டாளி வர்க்கத்தினரிடையே குடும்பம் பற்றிய கருத்தாக்கமே காணப்படவில்லை'' என்ற முடிவுக்கு எங்கெல்ஸின் நூல் எவ்வித அடிப்படையையும் வழங்கவில்லை. உண்மையில் அதற்கு மாறான விவரங்களையே அது தருகிறது.

பொருளுறவு தவிர பிற அனைத்து அடிப்படைகளிலும் குடும்பம் என்பது இல்லாதொழிந்து விட்டது என்கிற இந்த அறிவிப்பு வெறும் ஆரவாரமாகவே நிற்கிறது. தனிச் சொத்துரிமை ஒழிக்கப்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே உள்ள முதலாளித்துவ காலகட்டத்தில் மட்டுமின்றி முதலாளிததுவம் வளர்ச்சியுறாத குறைவளர்ச்சி காலகட்டத்திலும் கூடக் குடும்பத்தின் இருப்பு ஏன் நொய்ந்து போய்க் காணப்படுகிறது என்பது பற்றிய அடிப்படை விளக்கங்கள் எதுவும் இங்கே காணப்படவில்லை. ஃப்ரெஞ்ச் மற்றும் ஆங்கிலேய சோசலிஸ்டுகள் இதன் அழிவு பற்றிய எப்போதோ அறிவித்துவிட்டபோதிலும் கூட குடும்பம் என்பது இன்னமும் இருக்கிறது என மார்க்ஸ் எழுதும்போது அவர் அந்தக் காலத்தின் சோசலிசத்தைத்தான் திரும்பவும் எதிரொலிக்கிறாரேயன்றி தானாக ஒன்றை அவர் இன்னமும் உருவாக்கவில்லை.

இந்தக் காலகட்டம் முழுமையையும் பார்க்கையில் செர்மானிய கருத்தியல் நூலை எழுதிக் கொண்டிருந்தபோது மார்க்ஸ் எழுதிய அதகம் வெளியில் பிரபலமாகாத

www.padippakam.com



கூர்மையான "தற்கொலை பற்றி ப்யூஷெட்" என்ற கட்டுரை தென்படுகிறது. இதில் ஃப்ரான்சில் தற்கொலைகள் அதிகரிப்பதற்கான சமூகவியல் காரணம் பற்றி ப்யூஷெட்டின் முடிவுகளை மார்க்ஸ் பொழிப்பாக்கித் தருகிறார். மிகவும் உணர்ச்சி வசப்படும் நபர்களைத் தற்கொலைக்கு இட்டுச் செல்லும் அவர்களின் மனமுறிவுக்கு அடிப்படையாக உள்ள காரணங்களில் கடுகடுப்புமிக்க பெற்றோர்கள் மற்றும் பெரியவர்கள் அவர்களுக்கு இழைத்த அநீதிகள், தண்டனைகள், கேவலப் படுத்திய விதங்கள் ஆகியவையே முக்கியமானவையென நான் (ப்யூஷெட்) கண்டறிந்தேன். புரட்சியானது எல்லா வகைத் துயரங்களையும் நீக்கிவிடவில்லை, சர்வாதிகார ஆதிக்கத்தின் காரணமாக உட்செரிக்கப்பட்ட தீமைகள் குடும்பத்தில் இன்னமும் நிலவவே செய்கின்றன; மிகப் பெரும் சிக்கல்களுக்கும் இங்கே அவையே காரணமாகின்றன.

விருப்பங்களுக்கும் உணர்வுகளுக்குமிடையிலான தொடர்புகள் தனி நபர்களுக்கிடையிலான உண்மையான உறவுகள் என்றேனும் ஒரு நாள் நம்மிடையே உருவாக்கப் படும், தற்கொலை என்பது பொதுவாக நடந்து கொண்டிருக்கும் சமூகப் போராட்டத்தின் ஆயிரத்தொரு அறிகுறிகளில் ஒன்றே ஒன்று மட்டும்தான்.

மார்க்சும், எங்கெல்சும் தங்களது வரலாற்றுரீதியான தத்துவத்தை முதிர்ந்த நிலைக்கு வளர்த்தெடுத்த போது 1842-46க் கிடையிலான இந்த ஆய்வுகளின் கூறுகளில் சில எஞ்சியிருந்தன; சில மாற்றம் பெற்றன; சில விடுபட்டன. வரலாற்றுப் பொருளுறவு நோக்கிலான அணுகுமுறையானது, இப்போதுள்ள குடும்ப வடிவம் என்பது பிற சமூக நிறுவனங்கள் எதை விடவும் இயற்கையானதில்லை என்பதையும், இதுவும் மற்றவற்றைப் போலவே பொருளியல் உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்

www.padippakam.com



களுக்கொப்ப மாறி வந்ததுதான் என்பதையும் நமக்கு வெளிப்படுத்தியது; இதிலிருந்து எதிர்காலத்தில் எல்லா வித சமூகநிறுவனங்களையும் மாற்றியமைக்கிற சமூகத்தில் குடும்ப நிறுவனமும் மாற்றம் பெறும் என்ற முடிவுக்கு வரலாம். என்னவிதமான மாற்றம் என்பதுதான் கேள்வி.

## குடும்பம் பற்றிய பரிணாமவாதப் பார்வை:

முதலாளித்துவத்தின் மறைவோடு பூர்சுவா குடும்பமும் மறைந்து போய் விடுமென்று கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை அறிவித்தது. 1845 காலகட்ட கருத்துக்களில் இன்னும் பல எதிரொலிகளையும் கூட நாம் அதில் கேட்க முடிகிறது. இந்த அறிக்கைக்காக எங்கெல்ஸ் தயாரித்த நகல் குறிப்பிடப்பட வேண்டியது. ''கம்யூனிச சமூகமானது இருபாலருக்கிடையிலான உறவை முற்றிலுமொரு தனிப்பட்ட விஷயமாக அதில் தொடர்புடைய நபர்கள் மட்டுமே சம்பந்தப்பட்டதொரு விஷயமாக, சமூகம் தலையிடுவதற்கு எவ்வித வாய்ப்பும் அற்றதொரு விஷயமாக மாற்றி விடுகிறது. தனிச் சொத்துரிமையை ஒழிப்பதன் மூலமும், குழந்தைகளைச் சமூக அளவில் வளர்த்துக் கல்வியூட்டுவதன் மூலமும் மரபு ரீதியான மண உறவின் இரண்டு அடிப்படைகளை அதாவது பெண் ஆணைச் சார்ந்து நிற்க வேண்டியிருந்ததன் பொருளியல் அடிப்படையையும், குழந்தைகள் பெற்றோரைச் சார்ந்து இருக்க வேண்டியதன் அடிப்படையையும் அது இல்லாததாக்குவதன் மூலம் இந்த நிலையை அது சாதிக்கும்'' இவ்வாறாக கம்யூனிசம் பூர்சுவாக்கள் வளர்த்து விட்ட விபச்சாரம என்பதையும் இல்லாமலாக்கிவிடும் என மேலும் அவர் கூறுவார்.

நவீன பூர்சுவா குடும்பத்தை அதன் முழுவடிவத்தையும் மாற்றாமல் அதன் பொருளியல் அடிப்படைகளில்

www.padippakam.com



இருந்து பிய்த்தெடுத்து விட முடியாது என 1878இல் எங்கெல்ஸ் எழுதினார். ஆனால் இந்தக் கருத்தின் தீவிர மான வெளிப்பாட்டை அவரது, 'குடும்பம் தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலில்தான் காணமுடிகிறது. மார்க்ஸ் இறந்ததற்குப் பின்னர் இந் நூலை எங்கெல்ஸ் எழுதினாலும் கூட இது மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரது கூட்டு உழைப்பின் வெளிப்பா டென்றே சொல்லலாம். இந்நூலில், குடும்பம் என்கிற அத்தியாயம் மானுடவியலறிஞர் லூயிஸ் மார்கனுடைய வார்த்தைகளைக் கொண்டு முடிகிறது. அவை: ''குடும்பம் சமூக அமைப்பின் விளைவுதான். அது சமூகத்தின் கலாச் சாரத்தைப் பிரதிபலிக்கிறது. ஒருதாரமண உறவுக் குடும்பம் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யாது போனால்...அதைத் தொடர்ந்து வரும் அமைப்பின் தன் மைகள் எப்படியிருக்குமென அனுமானிப்பது இயலாது.'' ஆக, குடும்பமும், பாலியல் உறவுகளும் மாறியே தீரும். ஆனால் எதிலிருந்து எதாக என்பதுதான் கேள்வி.

## பெண்ணின் வீழ்ச்சி

குடும்பம் தனிச்சொத்து... நூலில் புராதனகாலக் குடும்பத்தில் பெண்ணின் ஆதிக்கம் இருந்தது என்பதை அந்தக் காலகட்ட நிலைகளை அடிப்படையாகக் கொண்டு வலியுறுத்துவார். குடும்பத்தில் தந்தையின் ஆதிக்கம் எவ்விதம் வந்தது என்பதைக் குடும்பத்தின் பிரதானமான சொத்து வடிவத்தில் நிகழ்ந்த மாற்றத்தின் அடிப்படை யில் (விவசாயத்திலிருந்து கால்நடை வளர்ப்புக்கு) எங்கெல்ஸ் காண்கிறார். குடும்பம் என்ற அமைப்புக்குள் வந்த இந்த உழைப்புப் பிரிவினை என்னும் அதிகார மாற்றம் ஒரு புரட்சியாகும். மனித குலத்தின் அனுபவங் களிலேயே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது



படிப்பகம்

www.padippakam.com



பெண்ணின் உலகளாவிய வீழ்ச்சியாகும். பெண்ணானவள் கீழ்மைப்படுத்தப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டு வெறும் குழந்தை பெறும் எந்திரமாக மாற்றப்பட்டாள். இந்த கீழ்மைப்படுத்தப்பட்ட பெண்களின் நிலை சற்றே லேசான வடிவங்களால் மூடிமறைக்கப்பட்டாலும், முற்றிலுமாக அழிக்கப்படவில்லை, அல்லது மார்க்சின் வார்த்தைகளில் சொல்லப் போனால் அடிமை முறையை மட்டுமின்றி பண்ணையடிமை முறையையும் கரு அளவில் நவீன காலக் குடும்பம் தன்னுள் வைத்துக்கொண்டிருக்கிறது; ஏனெனில் ஆரம்பத்திலிருந்து அது விவசாய வேலைகளுடன் தொடர்பு கொண்டுள்ளது; சமூகத்துக்குள்ளும் அதன் அரசுக்குள்ளும் பின்னர், விரிந்த அளவில் வளர்ச்சி கண்ட எல்லாவித முரண்களையும் அது தன்னுள்ளே நுண் வடிவில் வைத்துக்கொண்டிருக்கிறது!!

ஒருதார மணம் என்னும் வடிவம் தனிச் சொத்துரிமை மற்றும் வர்க்கப் பிரிவினை ஆகியவற்றோடு கூட உருவானதுதான்; ''அது ஆணின் மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; அதன் தெளிவான நோக்கம் விவாதத்திற்கிடமில்லாமல் தந்தை முறையுள்ள குழந்தைகளைப் பெறுவதுதான்; காலாகாலத்தில் இந்தக் குழந்தைகள் தமது தந்தையின் இயற்கையான வாரிசுகள் என்ற முறையில் அவனது சொத்தைச் சுவீகரிக்கலாம் என்பதற்குத்தான் இந்தத் தந்தைமுறை தேவையாயிருக்கிறது! சட்டப்படி ஆண்தான் ஒரு திருமணத்தை ரத்து செய்ய முடியும். நடைமுறையிலோ ஒரு தார மணத்தின் கட்டுப்பாடுகள் பெண்ணை மட்டுமே கட்டுப்படுத்தும், ஆக உண்மையான ஒருதார மணமாகவும் இது இல்லை.

''ஒருதார மணம் என்பது தனிப்பட்ட காமத்தின் விளைவாய் ஏற்பட்டதல்ல. அததுடன் அதற்கு எவ்விதத் தொடர்பும் கிடையவே கிடையாது. ஏனெனில் முன்போலவே திருமணங்கள் என்பவை சௌகரியத்துக்காகச்

www.padippakam.com



செய்து கொண்ட திருமணங்களாகவேதான் இருந்தன. இயற்கையான நிலைமைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் பொருளியல் நிலைமைகளை, அதாவது ஆதிகால இயற்கையாக வளர்ந்த பொதுச் சொத்தின் மீது தனியுடைமை வெற்றி பெற்றிருந்த நிலைமைகளை — அடிப்படையாகக் கொண்டு எழுந்த முதல் குடும்ப வடிவம் அது...''

''ஆக, ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்பட்ட ஒரு சமரசமாக ஒருதார மணமுறை வரலாற்றில் தோற்றம் பெறவில்லை. அப்படிப்பட்ட சமரசத்தின் உச்சவடிவம் அது என்பது போகட்டும். அதற்குமாறாக ஒரு பால் மற்றொரு பாலை அடிமைப்படுத்துவதாக அது தோற்றமெடுக்கிறது. ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய காலங்களில் அறவே அறிந்திராத இருபால் சச்சரவு குறித்து விடுத்த பிரகடனமாகவே அது தோற்றமெடுக்கிறது.'' பின்னர், எங்கெல்ஸ் இவற்றைத் தொகுத்தளிக்கிறார். வரலாற்றில் தோன்றிய முதல் வர்க்கப்பகைமை ஒருதார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பகைமை தோன்றுவதுடன் ஒன்றுபடுகிறது. முதல் வர்க்க ஒடுக்குமுறை என்பதோ பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்கு முறையுடன் ஒன்றுபடுகிறது. ஒருதாரமணமுறை மகத்தான வரலாற்று ரீதியான ஒரு முன்னேற்றமாகும். ஆனால் அதே சமயத்தில் அடிமை முறையுடனும் தனிச் சொத்துடனும் சேர்ந்தாற்போலவே அது ஒரு சகாப்தத்தைத் துவக்கி வைத்தது. அந்தச் சகாப்தத்தில் ஒவ்வொரு முன்னேற்றமும் அதே போல இணையான ஒரு பின்னடைவாகவும் இருக்கிறது — அதிலொரு குழுவினை ஒடுக்கி அந்தத் துன்பத்தின் மூலமே இன்னொரு குழுவின் நலமும் வளர்ச்சியும் பெறப்படுகின்றன. அந்தச் சகாப்தம் இன்று வரை நீடிக்கிறது. அதுவே நாகரிகச் சமூகத்தின் மூலக்கூறு வடிவமாகும். அவ்வடிவத்தின் மூலமாக அந்தச் சமுதாயத்தில் இறுதியில் வளர்ச்சியுறப்போகிற பகைமைகள்'

படிப்பகம்

www.padippakam.com



முரண்பாடுகள் ஆகியவற்றின் தன்மையை நாம் ஏற்கனவே ஆராய்ந்தோம்!

சமூகப் போராட்டத்தின் இந்த மூலக்கூறு வடிவமானது தனக்கெதிரான பல நிறுவனங்களை — மனைவியின் கள்ளக் காதலையும், இன்னொரு புறம் பலவகையான விபச்சாரத்தையும் — உருவாக்கிவிட்டது. ஆண்களின் இரட்டை அளவுகோலுக்கு எதிரான ஒடுக்கப்பட்ட பாலின் பழிவாங்கல் என்பதையும், பெண்களைக் காட்டிலும் ஆண்களுக்கு அதிகம் மனச்சிதைவையும் உண்டு பண்ணியது.

ஆக, தனிப்பட்ட குடும்பத்தில் அதன் வரலாற்று ரீதியான தோற்றத்தை உண்மையாகப் பிரதிபலிக்கிற சமயங்களிலும், ஆணின் தனியாதிக்கத்தின் விளைவாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் சச்சரவைத் தெளிவாக வெளிப்படுத்தும் சமயங்களிலும் நமக்கு நுண்ணியதொரு சித்திரம் புலப்படுகிறது. அதில் சமுதாயத்திலுள்ள பகைமைகளும் முரண்பாடுகளும் தெரிகின்றன. நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து வர்க்கங்களாகப் பிரிந்த சமுதாயம் அந்த விரோதங்களிலும், முரண்பாடுகளிலும் இயங்கிவருகிறது. அவற்றை அதனால் தீர்க்கவும் முடியவில்லை தோற்கடிக்கவும் முடியவில்லை.

## காதலும் சமத்துவமும்

ரோமானிய உலகின் சிதைவுக்குப் பின்னால், 'ஒவ்வொரு முன்னேற்றமும் ஒரு பின்னடைவாகவும்' இருக்கிற இந்த நிலையிலிருந்து ஒரு புதிய தடம் தோன்றியது. ''முதன் முறையாக மிகப்பெரிய தார்மீக முன்னேற்றத்துக்கு வேண்டிய சாத்தியப்பாட்டை இது உருவாக்கியது; இதை ஒருதார மணத்திலிருந்து தான் நாம் பெறுகிறோம். அதற்கு நாம் ஒருதார மணத்திற்குத்தான் கடமைப்பட்டுள்

www.padippakam.com



ளோம். அந்தந்த சந்தர்ப்பத்தைப் பொறுத்து அந்த மண முறைக்குள்ளேயோ அல்லது அதற்கு இணையாகவோ அல்லது அதற்கு எதிராகவோ எவ்விதமாகவோ இந்த முன்னேற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கலாம். இந்த முன் னேற்றம் தான் நவீன காலத்திய தனி நபர்களின் காதல் என்பதாகும். இது இதற்குமுன் உலகு அறியாத ஒன்றாகும்.''

பூர்சுவா திருமண முறைக்கு அப்பால் தான் தனிப் பட்ட காதலின் முன்னேற்றம் நிகழ்ந்துவருகிறதென்பதை இலக்கிய வரலாறு நமக்குக் காட்டுகிறது. சொத்து எதுவு மற்ற உழைக்கும் வர்க்கத்தினரிடையே தனிப்பட்ட காதல் என்பது எளிதில் உருவாக முடியும் என்று எங்கெல்ஸ் மிகவும் உறுதிபடக் கூறினார். இங்கேதான் உழைக்கும் பெண் தனது பொருளாதாரச் சுதந்திரத்தின் முதல் கட்டத்தை எட்டுவதும் நடக்கிறது. தன்னைத் தானே பொருளாதார ரீதியாகக் காப்பாற்றிக் கொள்ள முடிகிற காரணத்தால் பிரிந்து போவதற்கான உரிமையை மீட்டுக் கொண்டுவிட்ட ஒரு பெண்ணுடனான திருமணம் என்பது ''அந்த வார்த்தையின் அர்த்தத்தில் ஒருதார மணம் என்பதாக இருக்கலாம்; ஆனால் வரலாற்று ரீதியான அர்த்தத்தில் அதன் பொருள் அதுவல்ல.''

இன்னமும் இது சட்டபூர்வமான நிலைமையை மாற்றிவிடவில்லை என்பது உண்மைதான். சட்டத்துக்கு முன் இருவருக்குமிடையிலான முந்திய சமூகத்தின் நிலை மைகளின் தொடர்ச்சியாகக் காணப்படும் இந்தச் சமத் துவமின்மை என்பது பெண்களின் மீதான ஒடுக்கு முறைக் கான 'காரணமில்லை'. மாறாக, அதன் 'விளைவுதான்'. மனைவி என்பவள் வீட்டின் முதல் அடிமை. சமூக உற்பத்தியிலிருந்து விலக்கப்பட்டவள். இன்று (1844) பெரும்பாலும் ஆண்தான் சம்பாதித்து வருபவன், குடும் பத்தின் உணவுக்கு வழி செய்பவன். இது உடைமை

www.padippakam.com



வர்க்கத்தைப் பொறுத்த அளவிலாவது உண்மையாக உள்ளது இது சட்ட சலுகைகள் எதுவும் தேவையில்லாமலேயே ஒரு ஆதிக்க நிலையை ஆணுக்கு வழங்குகிறது. குடும்பத்தைப் பொறுத்தவரை ஆண் என்பவன் பூர்சுவா, பெண் என்பவள் பாட்டாளிவர்க்கத்தின் பிரதிநிதி!

நவீன காலத் தொழிற்சாலையானது தொழில் நுட்ப ரீதியாக முதலாளித்துவத்தைச் சிதைப்பதுபோலக் குடும்பத்தையும் சிதைக்கிறது. ஆனால் இருபாலருக்கிடையில் சட்டப்பூர்வமாக வழங்கப்பட்டுள்ள சமத்துவம் என்பது இன்னமும் உண்மையில் உறுதிப்படவில்லை. எங்கெல்ஸ் கூறியபடி ''பூர்சுவா ஜனநாயகம் என்பது வர்க்கப் போராட்டம் நடத்துவதற்கான களனை மட்டுமே அமைத்துத் தருகிறது.''

''நவீன குடும்பத்தில் பெண்மீது ஆணுக்குள்ள ஆதிக்கத்தின் விசேஷத்தன்மையும் அவர்களிடையே உண்மையான சமூகச் சமத்துவம் நிறுவுவதற்கான அவசியமும் வழிமுறையும் அவ்விருவரும் சட்டத்தின் முன் முழுமையான சம நிலையில் இருக்கும் போதுதான் முழுவடிவில் வெளிப்படும். பெண்ணினம் முழுவதையும் பொதுத் தொழில் துறையில் மீண்டும் புகுத்துவதுதான் பெண்களின் விடுதலைக்குரிய முதல் நிபந்தனை என்பது அப்பொழுதுதான் தெளிவாகும். இது தனிப்பட்ட குடும்பம் சமூகத்தின் பொருளியல் மூலக்கூறு என்ற தன்மையைப் பெற்றிருக்கிறதே, அதை ஒழித்தே ஆக வேண்டும் எனக்கோருவதும் புலனாகும்!

இதன் மூலம் வெளிப்படுவது குடும்பத்தை ஒழித்துக் கட்டுவது என்பதல்ல. மாறாகப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்கை மாற்றியமைப்பதன் மூலம் குடும்பத்தைச் சமூகத்தின் பொருளியல் மூலக்கூறு என்பதிலிருந்து ஒழித்துக் கட்டுவது என்பதுதான் என்ற விசயத்தை நாம்

www.padippakam.com



கவனத்தில் கொள்வோம். பெண்களின் விடுதலைக்கான பாதை என்பது முன்பு பார்த்தபடி பிறகும் அதே தளத்தில்—அதாவது உலக வரலாற்றில் தோல்வி, உற்பத்தி நடைமுறைகள் அதனுடன் பெண்கள் கொண்டுள்ள உறவு—என்ற தளத்தில் தான் ஓடுகிறது. அதன் அடிப் படையானது உளவியல் உட்பட எந்த ஒரு கருத்தியல் அறிவுரைகளாலும் எளிதில் மாற்றப்படக் கூடியதல்ல.

## குடும்பத்தின் எதிர்காலம்

சோசலிச மாற்றத்தின் தாக்கத்தினால் ஒரு தார மணத்திற்கும் குடும்பத்திற்கும் என்ன விளைவு ஏற்படும்? ஒருதார மணம் எப்போதும் நிலைத்திருக்காது என்ற உண்மை இங்கே ஒரு ஐயத்தை, எழுப்புகிறது—ஆனால் அதைத் தீர்த்து வைக்கவில்லை—அதாவது ஒருதார மணம் என்பது எதிர்காலத்திலும் தொடருமா? [3] எங்கெல்ஸ் இருவித சாத்தியக் கூறுகளைக் கூறுகிறார். நெருங்கிக் கொண்டிருக்கும் சமூகப் புரட்சியானது ஒருதார மணத் தின் அடிப்படையாக விளங்குகிற தற்போதுள்ள பொரு ளியல் அடிப்படைகளைத் தீர்த்துக் கட்டிவிடுவதோடு அதனுடைய இணையாக உள்ள விபச்சாரத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்துவிடும். வாரிசுரிமை பற்றிய பூர்சுவாக்களின் எதிர்பார்ப்புகளும் இல்லாதுபோய் விடும். ''பொருளாதாரக் காரணங்களால் உருவான ஒரு தார மணம் அந்தக் காரணங்கள் மறைந்து போனால் தானும் மறைந்து போய் விடுமா? இதற்கான பதில்: "போகலாம்'.

---

3. ஒருதார மணம் என்றும் நீடித்திருக்காது என்பது பற்றி எங்கெல்ஸ் கொண்டிருந்த கருத்துகளுக்கு அவர் காவுட்ஸ்கிக்குப் பிப்ரவரி 10, மார்ச் 2, 1883இல் எழுதிய இரு கடிதங்கள் உதாரணங்க ளாக உள்ளன.

www.padippakam.com



உற்பத்திச் சாதனங்கள் பொதுச் சொத்தாக மாறிவிட தனிப்பட்ட குடும்பம் சமூகத்தின் பொருளியல் மூலக்கூறாக இருந்து வருவதும் நின்று போகிறது. தனிப்பட்ட வீட்டு நிர்வாகம் சமூகத்தின் தொழிலாக மாற்றப் படுகிறது. குழந்தைப் பராமரிப்பு, கல்வி ஆகியவை பொது விவகாரங்களாகிவிடுகின்றன. எல்லாக் குழந்தைகளையும் சமூகம் சமமாகக் கவனித்துக் கொள்கிறது—அவர்கள் மண உறவில் பிறந்தவர்களாயினும் சரி அதற்கு வெளியில் பிறந்தவர்களாயினும் சரி. எனவே, ஒரு பெண் தான் நேசிக்கிற ஒருவனுக்குத் தன்னைத் தந்துவிடுவதற்கு இன்று முக்கியமான தடையாக இருக்கும் தார்மீக மற்றும் பொருளியல் விளைவுகளைப் பற்றிய கவலை மறைந்து போகும். தங்கு தடையற்ற புணர்ச்சி மேலும் மேலும் அதிகரிப்பதற்கு இது காரணமாகாதா? அத்துடன் கூட பெண்களின் கற்பைப் பற்றியும் பெண்மையின் நாணத்தைப் பற்றியும் முன்னைவிட அதிகக் கட்டுப்பாடுகளற்ற வெகுமக்கள் கருத்து மேலோங்கக் காரணமாகாதா?—விபச்சாரம் தன்னுடன் கூட ஒரு தார மணத்தையும் சாவுக்குழிக்குள் கொண்டு போகாமல் மறைந்துவிடுமா? அப்போது ஆண் பெண் உறவின் அடிப்படையில் ஒரு மாற்றம் வரும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த மாற்றமென்பது ஒருதாரமணம் எந்த வடிவிலும் தொடர முடியாதபடி செய்திடுமா?

உதாரணத்துக்குப் பார்ப்போம். நவீன சனநாயகம் என்பது பூர்சுவாக்களின் தோற்றத்துடன் தான் தோன்றியது. ஆனால் முதலாளித்துவத்தை ஒழிப்பது என்பது ஜனநாயகத்தை ஒழிப்பது என்பதாக அர்த்தமாகாது; மாறாக நாம் முன்னர் பார்த்தபடி மார்க்சியர்களைப் பொறுத்தவரையில் அது முழுமையான உண்மையான, புதியவகைப்பட்ட சனநாயகமாக மலரும். எங்கெல்ஸ் ஒரு தார மணம் பற்றிக் கூறியது இதை ஒத்ததுதான். ஒரு விஷயம், ஒருதாரமணம் என்பது வீழ்ச்சியுறுவதற்குப்

www.padippakam.com



பதிலாக இறுதியில் ஆண்களுக்கும்கூட ஒரு யதார்த்தமாக மாறிவிடுகிறது. எல்லாவற்றுக்கும் முதலில் ஆண்கள் கடைபிடித்து வந்த இரட்டை அளவுகோல் ஒழிந்து விடுகிறது.

நமது ஒப்பிடு முழுமையான உண்மையான புதிய வகைப்பட்ட சனநாயக்தோடு தான், இங்கே சனநாயகம் என்பதற்கு தனிப்பட்ட காதல் என்பதை பதிலீடு செய்து கொள்வோம். இதுவே எங்கெல்ஸின் அணுகு முறை. 4 இரண்டு விசயத்திலுமே பூர்சுவா சிந்தனையில் மிகச் சிறந்த சிந்தனையானது வாத்தியக் கச்சேரியை நடத்தி முடித்து விடுகிறது. மனிதாய நகரத்தின் வாசல் கதவுகளை திறந்துவிட சமூகத்தில் ஒரு சோசலிச மாற்றம் நிகழவேண்டியது மட்டுமே பாக்கி.

ஆக, திருமணத்தில் முழு சுதந்திரம் என்பது முதலாளித்துவ உற்பத்தியையும், அது உருவாக்கும் சொத்து உறவுகளையும் ஒழிப்பதன் வாயிலாக இன்னும் இவ்வளவு பலமான செல்வாக்கைச் செலுத்தி வருகிற கூடுதலான பொருளியல் காரணங்களை விலக்கிய பிறகுதான் பொது

---

4. வரலாற்றின் மிக உயர்ந்த மணஉறவு வடிவமாக ஒருதாரமணத்தை வைப்பதை எங்கெல்ஸ் கடுமையாக் விமர்சித்தார். "கடுமையான ஒருதார மணமே நன்னெறியின் உச்சமெனக் கருதுவதெனில் நாடாப் புழுவுக்குத்தான் நாம் முதல் பரிசு தரவேண்டும். அதன் உடல் ஐம்பது முதல் இருநூறு வரையிலான பகுதிகளாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் ஆணுறுப்பும். பெண்ணுறுப்பும் உள்ளன. இந்த ஒவ்வொரு பகுதியிலும் தனக்குள்ளாகவே புணர்ச்சி செய்தபடி அது தன் ஆயுள் முழுவதையும் கழிக்கிறது."

www.padippakam.com



வாகச் செயல்படமுடியும். அப்போதுதான் பரஸ்பர அன்பைத் தவிர வேறு எந்த நோக்கமும் எஞ்சியிருக்காது.

காதல் என்பது ஒருவர் மீது மட்டும் செலுத்துவது என்பதால்- இப்போதோ இது பெண்களால் மட்டுமே பின்பற்றப்படுகிறது-காதலை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட மணஉறவு என்பதும் அதன் இயல்பிலேயே ஒருதார மணமாகத்தான் உள்ளது. எங்கெல்ஸின் இந்த எதிர்பார்ப்புக்கு மையமாக இருப்பது தனிப்பட்ட காதலின் சிறப்புத் தன்மைதான். சந்தேகத்திற்கிடமின்றி இது ஒரு மிகவும் விவாதத்துக்குரிய இடம்தான்; மேலும் எங்கெல்ஸ் இதுவே மார்க்சியத் தத்துவப்படி கிடைக்கும் முழுமையான, தவிர்க்க இயலாத முடிவு என்று எங்கும் கூறிக்கொள்ளவுமில்லை. இது அவரது அபிப்ராயம் இது மார்க்சியமும் காதலும் பற்றி இன்னும் சில விளக்கங் களைக் கோருகிறது.

## மார்க்சியமும் காதலும்

பொருளியல் சூத்திரங்களிலோ இன்னும் சொன்னால் சமூகவியல் பகுப்பாய்வுகளிலோ உட்படாத மனத்தின் 'காதல்' எனும் விசயத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் தருவதும் அதை அடிப்படைக்கூறு என்பதான சித்தரிப்பு செய்வதும் மார்க்சியமற்ற செயலில்லையா? இதற்கான பதில், 'இல்லை' என்பது தான். முற்றிலும் மாற்றியமைக் கப்பட்ட ஒரு சமூகத்தில் பொருளியல் சமூகக் காரணி களை எல்லாம் பின் தள்ளிவிட்டு விடுபட்ட மனித ஜீவி முதன் முறையாக வரலாற்றை வடிவமைப்பதாக வருவ தென்பது அவசியத்திலிருந்து சுதந்திரத்துக்கு செல்வதற் கான மேல் நோக்கிய பயணமாகும் ஆனபோதிலும் எந்த ஒரு சகாப்தத்திலும் மனித ஆன்மா என்பது பொருண்மையான மிக நீண்ட பரிணாமத்தின் விளைவு தான் என்பதை இப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

www.padippakam.com



ஆனால், இன்றைக்கும் கூட சமூக மாற்றங்கள் இத்தனை தூரம் முன்னேற்ற படைநத்துள்ள நிலையிலும் மனித ஆன்மாவின் இந்தக் கூறானது ஒரு சமூக நிர்ணயிப்புக் காரணியாக இல்லாமல் தடுக்கப்பட்டிருப்பதென்பது தனி மனிதர்களிடத்தில் இது ஒரு செயல்பாடு மிக்க விசயமாக இல்லையென்று அர்த்தமாகிவிடாது. முக்கியமாக காதல் என்பது, ''கடந்த 800 ஆண்டுகளில் ஒரு வளர்ச்சிக்குட்பட்டு தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. இது இந்தக் காலகட்டத்தின் அனைத்துக் கவிதைகளின் உட்பொருளாகவும் அதை மாற்றிவிட்டது'' என்பார் எங்கெல்ஸ்.

எங்கெல்ஸை விடவும் மார்க்சுக்கு இது விசயத்தில் எவ்வித சந்தேகமும் உண்டானதில்லை. அவர் தன் மனைவி மீதான காதலை ஒரு, குட்டி முதலாளித்துவ பிறழ்வு என்று கருதியதில்லை. மாறாக பாலியல் தேவையை விடவும் முக்கியமாக உணர்வுபூர்வமான தேவையை மனித ஆன்மாவின் முழுமையினுடைய ஒரு பகுதியாகப் பார்த்தார். 1842இல் முதன் முறையாகப் பிரசுரமான தனது கட்டுரையில் அவர் எழுதினார்:''நான் அதன் இருப்பு முக்கியமானதென உணர்கிறேன் அது எனக்குத் தேவைப்படுகிறவற்றுள் ஒன்று. அதில்லாமல் எனது வாழ்க்கை திருப்திகரமானதாக, முழுமையுற்றதாக இருக்கமுடியாது.''

தான் ஒரு சோசலிஸ்டாக மாறும் முன்பே வகுத்துக் கொண்ட மார்க்சின் இந்த அகநோக்கு மிகவும் விரிவான விதத்தில் புனிதக் குடும்பம் நூலில் எழுதப்பட்டது. பாயர் சகோதரிகளில் ஒருவர், ''காதல் என்று சொல்லப்படுவது ஒரு சிறுபிள்ளைத் தனமான சமாச்சாரம்'' எனக் கேலி செய்தபோது, காதல் என்பது தேவதையோ அல்லது பிசாசோ அல்ல, மனிதனது உடல் அமைப்பைப் போலவே அவனிடமிருந்து பிரித்தெடுக்க முடியாத ஒரு பகுதியாகும்.

www.padippakam.com



மனிதன் தனக்குப் புறத்தே உள்ள உலகில் நம்பிக்கைக் கொள்ளும்படி முதன் முதலாகப் போதித்ததும் அதுதான் என்று மார்க்ஸ் பதிலளித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை போல காதல் பற்றிய அறிக்கை எதையும் மார்க்ஸ் எழுத வில்லையென்ற போதிலும்கூட அவர் இது பற்றிய தனது கருத்துக்களை பின்னரும்கூட மாற்றிக் கொள்ளவில்லை. மணமாகி 13 வருடங்கள் கழித்து ஜென்னிக்கு எழுதிய கடிதமொன்றில் தனது பழைய கருத்துக்களை அவர் எதிரொலிக்கிறார்.

## ஒருதாரமணத்தைப் புரட்சிகரமாக மாற்றுதல்

தனிப்பட்ட காதல் ஒருதார மணத்தை ஏதேனும் ஒரு வடிவில் கொண்டிருக்குமானாலும் அது இன்று இருப்பது போன்ற நிலையில் இருக்காது. எங்கெல்ஸ் கவனித்த சில விளைவுகளைப் பற்றிக் கீழே காண்போம்: 'ஒருதார மணத்திலிருந்து மிக நிச்சயமாக மறையப்போகிறவை சொத்து உறவுகளிலிருந்து தோன்றியதன் விளைவாக அதன் மீது முத்திரை குத்தப்பட்டுள்ள எல்லா குணாம்சங்களுமே தான். அவை, (a) ஆணின் ஆதிக்கம் (b) மண உறவை ரத்து செய்ய முடியாத தன்மை. மணவாழ்வில் ஆண் ஆதிக்கம் செலுத்துவது வெறுமனே அவனது பொருளியல் ஆதிக்கத்தின் விளைவேயாகும். பொருளியல் ஆதிக்கம் போகும்போது இதுவும் போய்விடும் மண உறவை ரத்து செய்ய முடியாமை என்பது ஓரளவுக்கு ஒருதாரமணம் தோன்றியெழுந்ததற்குரிய பொருளியல் நிலைமைகளுடையவும்; ஓரளவுக்கு இந்தப் பொருளியல் நிலைமைகளுக்கும் ஒருதார மணத்துக்கும் உள்ளதொடர்பு இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளப் படாமலும் மதத்தினால் மிகைபடக் கூறப்பட்டும் வந்த நாளிலிருந்து தொடர்ந்து கொண்டிருக்கிற ஒரு சம்பிரதாயத்தினுடைய விளைவேயாகும். இன்று அது ஆயிரம் மடங்கு

www.padippakam.com



உடைசல் கண்டிருக்கிறது காதல் திருமணங்கள் மட்டுமே ஒழுக்கமானவையென்றால் காதல் நீடித்திருக்கும் திருமணங்கள் மட்டுமே ஒழுக்கமானவை. தனிப்பட்ட காதல் நிலவும் காலம் நபருக்கு நபர் மிகவும் வேறுபடுகிறது—குறிப்பாக ஆண்களிடத்தில். காதல் திடமாக அற்றுப்போவது அல்லது இன்னொரு நபர் மீது கொள்ளும் புதியகாதல், பிரிந்து போவதை அந்தத் தம்பதிகளுக்கும் சமூகத்துக்கும் ஒரு வரப் பிரசாதமாகச் செய்கின்றன. விவாகரத்துக்கான நடைமுறைகள் என்னும் வீண்சகதியில் இறங்கி உழல்கிற அனுபவம் மக்களுக்கு நேராமல் போகிறது.''

மணஉறவு ரத்துக்கான நடவடிக்கைகளை ஒதுக்கித் தள்ளுவதன் மூலம், எங்கெல்ஸ், திருமணத்தை சாதாரணமாகப் பதிவு செய்வது, ரத்து செய்வது என்பது போல எடுத்துக்கொள்வதாகத் தெரிகிறது. மற்றபடி 1847இல் எங்கெல்ஸ எழுதிய பொது விதி சரியென்றுபடுகிறது. ''இருபாலருக்கிடையிலான உறவென்பது அந்த இருநபர்களுககு மட்டுமே தொடர்புடைய ஒரு தனிப்பட்ட விசயமாகும், இதில் தலையிட சமூகத்துக்கு ஒருவித வழியும் கிடையாது. அரசால் கட்டுப்படுத்தப்பட்ட தனிப்பட்ட காதல் - அதாவது மணஉறவு விதிகள் என்பவை யாவும் காதல் மற்றும் நட்பு பற்றிய நடைமுறைகளில் எவ்வித மாற்றத்தையும் உண்டாக்காமல் நாளை மறைந்து போய் விடும்,'' என்கிறார் எங்கெல்ஸ். பாலியல் ஒழுக்கங்கள், மணஉறவு வடிவங்கள், சமூகத்தில் பெண்களுக்கான இடம் ஆகியன பற்றி எங்கெல்ஸ் கொண்டிருந்த கருத்துக்கள் போன்றே செர்மானியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஆகஸ்டுபேபெல்லின் கருத்துக்களும் உள்ளன. எதிர்கால ச்மூகம் பற்றிய கேள்விக்கான தீர்வைத் தம்மைவிடவும், அதிகம் தகுதியான அதாவது வரவிருக்கும சமூகத்தின் ஆண்கள் பெண்கள் ஆகியோரது பொறுப்பில் எங்கெல்ஸ் விட்டுவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



ஆக, முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு வந்து கொண்டிருக்கும் அழிவுக்குப் பிறகு பால் உறவுகளைச் சீர்படுத்துவது பற்றி நாம் உத்தேசமாகக் கூறக் கூடியது எது நடக்காது, எது இருக்காது என்ற வகையில் தான் பெரும்பாலும் இருக்கிறது. ஆனால், கூடுதலாக என்ன இருக்கும்? ஒரு புதிய தலைமுறை வந்தபிறகு அது முடிவு கட்டப்படும். அந்தத் தலைமுறையைச் சேர்ந்த ஆண் களுக்கும் பணத்தைக் கொண்டோ அல்லது இதர அதிகார சாதனங்களைக் கொண்டோ ஒரு பெண்ணைத் தமக்கு இணங்கச் செய்வதற்குத் தம் வாழ்க்கையில் என்றைக்குமே வாய்ப்பிருக்காது; பெண்கள் உண்மையான காதலுக்காக மட்டுமின்றி வேறெந்த நோக்கத்துக்காகவும் எந்த ஆணுக் கும் என்றைக்குமே இணங்கக் கடமைப் பட்டிருக்க மாட்டார்கள். பொருளியல் விளைவுகளைப் பற்றிய பயத் தினால் காதலனுக்குத் தம்மை ஒப்புக் கொடுக்கத் தயங்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படாது. அப்படிப் பட்ட மக்கள் தோன்றியவுடனேயே நாம் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக் கிறோமோ அதைக் கடுகளவும் சட்டை செய்ய மாட்டார் கள். தனித் தனி நபர்களின் நடைமுறையையொட்டித் தமது சொந்த நடைமுறையையும் அதற்குப் பொருத்த மான தமது சொந்த வெகு மக்கள் அபிப்ராயத்தையும் அவர்கள் நிலைநிறுத்துவார்கள். அதுவே அந்த விசயத் தின் முடிவாக இருக்கும்.''

## பெண் விடுதலைக்கான பிரச்சனைகள்

மங்கலாகத் தெரியும் எதிர்காலத்தைச் சற்று நெருங் கிச் சென்று கவனித்து, சமூகத்தின் முன்பு சட்ட பூர்வ மான சமத்துவமென்பது பெண்களின் முழுமையான விடுதலைக்கு ஒரு அவசியமான முன் நிபந்தனையாகும் என்றும் ஆனால் அதுவே போதுமானதல்ல என்றும் நாம்

www.padippakam.com



குறிப்பிட்டோம். அது முக்கியமாக வாக்களிக்க மற்றும் ஆட்சி செய்வதற்கான உரிமையை உள்ளடக்கியதாகும். இத்தகைய விடுதலைக்கான கோரிக்கை, பூர்சுவா ஒழுக்க விதிகளினடிப்படையிலான எல்லாவிதமான பாரபட்சங்களையும் எதிர்ப்பதையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இதற்கான பொருத்தமான உதாரணம் 1871இல் உழைக்கும் பெண்கள் புரட்சிகரமான பங்களிப்பு செய்த பாரீஸ் கம்யூனில் நிகழ்ந்தது.

## துவக்கம் வீட்டிலிருந்து

சோசலிசப் பெண் போராளிகள் எப்போதுமே, சமதுவமென்பது சோசலிச இயக்கத்திலிருந்தே துவங்கி விடுகிறது எனக் கூறி வந்துள்ளனர். ஆண்களைப் போலவே பெண்களும் முதல் அகிலத்தில் சேரலாம் என மார்க்ஸ் குறிப்பிட்டார். இருபாலரும் அங்கம் வகிக்கும் கிளைகளுக்கு இடையூறு இல்லாமல் பாட்டாளி வர்க்கத்தினரிடையே உழைக்கும் மகளிருக்கான கிளைகளை உருவாக்கும்படி பின்னாளில் மார்க்ஸ், பொதுக் கவுன்சிலுக்குள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். 1771இல் நடந்த அகிலத்தின் மாநாட்டில் பொதுக்கவுன்சிலின் சார்பில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மார்க்ஸ் எந்த நாடுகளின் தொழிற்சாலைகளில் பெண்கள் அதிகம் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்களோ அந்த நாடுகளில் பெண்களுக்கான பிரிவுகளைத் துவக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சோசலிசப் பெண்கள் இயக்கம் எங்கெல்ஸ் தந்த உற்சாகத்தாலும் குறிப்பாக பேபெல் தந்த நம்பிக்கையாலும் தனக்கான தலைமையையும், பத்திரிக்கையையும் கொண்டு மலர்ந்தது. செர்மனியில் க்ளாராஜெட்கின் நடத்திய க்ளெய்ஷெய்த் (GLEKHHEIT) எனும் பத்திரிக்கை ஒரு லட்சம் பிரதிகளுக்கும் அதிகமாக விநியோகமானது.

www.padippakam.com



செர்மனியில் லாசெல்லின் பிரிவைச் சார்ந்தவர்கள்தான் பெண் விடுதலைக்கும் பெண்கள் பெருமளவில் தொழிற் சாலைகளில் சேர்க்கப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித் தனர். 1875இல் லாசெல்லின் ஆதரவாளர்களுக்கும் அரை மார்க்சியர்களுக்கும் இடையில் நடந்த ஒற்றுமை மாநாட்டில் கட்சியானது எழுத்துப்பூர்வமாக பெண் களின் சமத்துவத்தை ஆதரிக்க வேண்டுமென்று பேபெல் கொணர்ந்த தீர்மானம், பெண்கள் இன்னும் தயார் நிலைக்கு வரவில்லை எனக் காரணம் காட்டப்பட்டு நிராகரிக்கப்பட்டது. 1891இல் நடந்த எர்புர்ட் மாநாட் டின்போதுதான் இறுதியில் ஒரு மார்க்சியவேலைத்திட்டம் ஏற்கப்பட்டது. அப்போதுதான் பெரும்பான்மை உறுப் பினர்கள் பெண்களின் சமத்துவத்துக்கு குறைநத பட்சம் சட்டபூர்வமான சமத்துவத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். அதே ஆண்டில்கூட இரண்டாவது சர்வதேச மாநாட்டில் இந்த மார்க்சிய நிலைப்பாடானது சமூக ஜனநாயக சீர்திருத்தவாதிகளால் எதிர்க்கப்பட்டது.

"முதலாளித்துவ உற்பத்தி முறையின் இறுதிக்கால மான இப்போது இருபாலருக்கு மிடையிலான முழுமுத லான வெறும் சமத்துவத்தைக் காட்டிலும் எதிர்வரும் சந்ததியினரின் உடல் நலம் குறித்து நான் அதிகம் ஆர்வம் காட்டுகிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இருபால ருக்கிடையிலான உண்மையான சமத்துவமென்பது இரு பாலரையும் சுரண்டும் முதலாளித்துவத்தின் அழிவோடும் வீட்டு வேலையென்பது ஒரு பொதுப்பணியாக மாற்றப் படும் போதுதான் வரமுடியுமென்பது எனது நம்பிக்கை" என எங்கெல்ஸ் கூறுவார். பெண்களின் பாதுகாப்புக்கான சட்டங்கள் காலப்போக்கில் முதலாளித்துவ வர்க்கத்தின ரால் மட்டுமின்றி இன்னும் பல்வேறுபட்ட பகுதியின ராலும் எதிர்க்கப்படலாம். ஒவ்வொரு ஆளும்வர்க்கமும் தன்னால் பயனடைபவர்களை மட்டுமின்றி தன்னால் பலி கொள்ளப் படுபவர்களையும் திரட்டிவைத்துள்ளது

படிப்பகம்

www.padippakam.com



'மூலதனம்' நூலில் குழந்தைகளின் உழைப்பைச் சுரண்டும் பெற்றோர்களைப் பற்றிக்குறிப்பிடுவதன் கூடவே, ஏழ்மை மிக்க உழைக்கும் வர்க்கப் பெண்கள் வேலை நேரம் குறைக்கப்படுவதால் தங்களுக்குக் கிடைக்கும் கொஞ்ச நஞ்சம் கூலியும் குறைந்து போகுமோ என்ற அச்சத்தில் அதற்கான சட்டத்தை எதிர்ப்பார்கள் என்று மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளதை இங்கு நாம் நினைவு கூறலாம்.

அனைத்திலும் பிரதானமானது என்னவெனில் சமூகப் புரட்சிக்கான இயக்கம் தானேயொழிய சமூகச் சீரழிவின் அறிகுறிகளை மட்டுமே எதிர்த்த சீர்திருத்த இயக்கங்க ளல்ல, பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுவதை விட்டு சோசலிசத்துக்காகப் போராட வேண்டுமென இதற்கு அர்த்தமாகாது. மாறாக, இரண்டுக்குமிடையே யான உறவையே இது விளக்குகிறது. பொருளியலில், அரசியலில் தேவைப்படுவது போல இந்தத் தளத்திலும் சீர்திருத்தங்கள் அவசியப்படுகிறது. சோசலிஸ்டுகள் இதே உத்வேகத்துடன் இத்தகைய கோரிக்கைகளுக்காகவும் போராடவேண்டும். ஆனால் இறுதி ஆய்வில், இரு பால ருக்குமிடையிலான வரலாற்று ரீதியான உழைப்புப் பிரிவினை வடிவங்களை களைந்தெறிவதென்பது எங்கெல்ஸ் எழுதியதுபோல்,தொடக்கத்தில் பெண்பாலின் வரலாற்றுத்தோல்வி என்பது புகுத்தப்பட்டபோது எம் மாதிரியான பிரளயத்தை உண்டு பண்ணியதோ அது போன்ற ஒரு பிரளயமாக இருக்கும். □



படிப்பகம்

www.padippakam.com

# 3

# சோசலிசமும் குடும்பமும்- ரசியாவை முன்வைத்து சில குறிப்புகள்

**—ரவிக்குமார்**

*குடும்பம் பற்றிய ஆய்வு ஒவ்வொன்றும் மறுநிலையில் அரசு பற்றிய ஆய்வாக அமைந்திருப்பதை நாம் அறிவோம். சமூகத்திலிருந்து உதித்ததென்றாலும் சமூகத்திற்கு மேலானதாய்த் தன்னை அமர்த்திக்கொண்டு மென்மேலும் சமூகத்திலிருந்து தன்னை விலக்கிவைத்துக் கொண்டிருக்கும் சக்தியான 'அரசு', தவிர்க்க முடியாதபடி மறைந்தொழியும் என்பதுபோலவே அந்த அரசின் நுண்ணமைவாக விளங்கும் அதிகாரத்துவ குடும்பமும் இல்லாதொழிந்துவிடும் என்பது வெளிப்படை. சமூகத்தில் ஒடுக்குகிற, ஒடுக்கப்படுகிற உயிரிகளுக்கிடையிலான மோதலைத் தணித்து ஒரு 'ஒழுங்கின்' வரம்புகளுக்குள் அவற்றை உட்படுத்துகிற சக்தியாக அரசு இருக்கிறது.*

www.padippakam.com



இந்த 'ஒழுங்கு' என்பதே ஒடுக்குமுறையை வெளித்தெரியாமல் மறைத்துக் கொண்டிருப்பது; இதுவே, ஒடுக்குதலுக்குள்ளாவோரிடமிருந்து அவர்களது போராட்ட சாதனங்களையும், போராட்ட முறைகளையும் சரியாகக் கூறினால், போராட்டத்துக்கான சக்தியையும் பறித்தெடுப்பது, அவர்களை எல்லாவகையான ஒடுக்குமுறைக்கும் இணங்கிச் செல்கிற மனோநிலை உடையவர்களாக மாற்றியமைக்கும் பணியை இந்த 'ஒழுங்கு' விதிகளே செயல்படுத்துகின்றன.

இயற்கையின் ஆளுகை விதிகளுடன் தமது இயல்பூக்கங்கள் இயைந்துபோக மிருகங்கள் என்பவை இயற்கையின் பகுதிகளாய் சமைந்துள்ளன. இந்த ஒழுங்கிலிருந்து தவறுவது என்பது அவற்றின் இருப்பை மிரட்டுதலுக்குள்ளாக்கும். இயற்கையுடன் தம்மை இயைபுப்படுத்திக் கொள்ள மறுத்தபோதே மிருகங்களினது மூளைப்பகுதி வளர்ச்சியுற்றதென்பதை அதிலிருந்தே பரிணாமத்தில் மனிதனின் தோற்றம் நிகழ்ந்ததென்பதே அறிவியல் நமக்குப் புலப்படுத்துகிறது. இவ்விதம் ஒழுங்கிலிருந்து குலைவு என்பதில் தோற்றம் கொண்ட மனிதஉயிரியானது மீண்டும் 'ஒழுங்கமைவுக்குட்படுதல்' மூலமே தனது இருப்பைக் காத்துக்கொள்ள முடியும் என்ற கருத்தாக்கத்தைப் பெற்று தன்னை ஒடுக்குகின்ற 'அரசு' என்னும் நிறுவனத்தையே தனக்கு இதமென எண்ணிக் கொள்ளும் நிலையில் மீண்டும் விலங்கின் நிலைக்கு முழுமையாகத் தள்ளப் படுகிறது. இதுவே அதிகாரப் பகுதியின் பரவலுக்கும் இருத்தலுக்கும் காரணமாகவும் அமைந்து விடுகிறது.

தனது இருப்பு என்பது எப்போதுமே சிதைந்து விடக்கூடியதுதான் என்று உணர்கிற மனித உயிரியானது உயிர்ச்சிதைவு அச்சத்திலிருந்து தப்பித்துக்கொள்ள கருத்தாக்க நிலையில் பல புனைவுகளை வடிவமைத்துக்கொள்கிறது. அவற்றுள் முக்கியமானது அது தனது உயிரியல் மறுஉற்பத்தி என்பதை தனது இருப்பைத்தொடரக்கூடிய

www.padippakam.com



ஒரு வினையாகக் கற்பிதம் செய்து கொண்டிருப்பதாகும். உயிரியல் மறுஉற்பத்தியோடு தொடர்புகொண்ட பாலியல் வினை என்பது அதன் உயிர்ச்சிதை அச்சத்தைத் தவிர்த்து இதத்தை அளிப்பதாக உள்ளது. இந்நிலையில் உயிர் நிலைப்பென்பது நேரடியாக பாலியல்வினைகளோடு தொடர்புறுத்தப்படுவதால் உயிர்சிதை அச்சத்தை அடிப் படையாகக் கொண்டே உனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிற அதிகாரப் பகுதியானது பிற உயிரிகளின் பாலியல் வினைகளையும் ஒழுங்கமைவுக்குட் படுத்துகிறது. இதற்கென அதிகாரத்தால் நிர்ணயிக்கப் படும் விதிகளும் வரையறைகளும் பாலியல் வினை என் பதை பாவம் என்பதாகவும் குற்றம் என்பதாகவும் குறித்து வைத்துள்ளன. இதனால் தமது பாலியல் வினைகள் குறித்து ஒவ்வொரு மனித உயிரியும் அச்சப்படுவதும், வெட்கப்படுவதும் நேர்கிறது. இவ்விதம் தனது பாலியல் உணர்வுகளை ஒடுக்கிக்கொண்டு அதி காரத்தின் ஒழுங்கமைவுக்கு உட்படுகிற ஒரு உயிரியானது அதிகாரத்தின் மறு உற்பத்திக்கு ஆதாரமாக அமைவதை நாம் உணர முடியும். இவ்விதமான ஒழுங்கமைவுகளுக்கு உட்படுத்தவும், தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்திக் கொள்ளத் தேவையான போர்வீரர்களைப் பெற்றுக் கொள்ளவுமான ஒரு நிறுவனமாக ‘குடும்பம்’ செயல் படுவதை நாம் எளிதில் விளங்கிக் கொள்ளலாம். விலங்கு களைப் போல புணர்ச்சி காலம் என்பது ஒரு குறிப்பிட்ட பருவ நிலையோடு (Season) வரையறுக்கப்படாததாலும், பிறஉயிரிகளின் வன்முறையிலிருந்தும், மிரட்டலிலிருந்தும் தப்பித்துப் பதுங்கிக் கொள்வதற்கான ஒரு புகலிடமாக குடும்பம் என்கிற வெளி அமைவதாலும் அது ஒரு நிறுவ னமாக இறுகுவது எளிதில் நிகழ்ந்திருக்கக்கூடும்.

பாலியல் விருப்பங்கள் இயல்பாகவே ஒரு மனித உயிரியை பிற உயிரிகளுடன் நெருக்கமாக உறவு கொள் ளும்படித் தூண்டுகின்றன. அவை தடை செய்யப்படும்

www.padippakam.com



போது அதிகாரத்துவ குடும்ப அமைப்புக்குள் குறுக்கிக் கொள்ள நேர்கிறது. பாலியல் உணர்வுகளைத் தடைசெய் வதன் மூலமே அதிகாரத்துவ குடும்பம் எனும் நிறுவனத் துடன் ஒரு மனித உயிரி பிணைக்கப்படுகிறது. இத்தகைய தடையுணர்வே தனி மனிதப்பிரக்ஞையை வடிவமைப்ப தாயும் உள்ளது. குழந்தைக்கும் தாய்க்கும் இடையிலான உயிரியல் ரீதியான பிணைப்பானது பாலியல் யதார்த்தத் தைத் தடை செய்து மாற்ற முடியாத பாலியல் நிர்ணயங் களுக்குக் காரணமாகிறது. இதுவே வேறுவகை உறவு களில் ஈடுபடமுடியாத நிலைக்கு வழிவகுக்கிறது. தாயுட னான பிணைப்பே குடும்பத்தின் அனைத்துவகை பிணைப்புகளுக்கும் அடிப்படையாகும். உணர்வுத் தளத் தில் தாய் மற்றும் குடும்பம் ஆகியவற்றின் இணையங்க ளாக தாய் நாடு, தேசம் ஆகியவை செயல்படுவதை நாம் அவதானிக்கலாம்.

இவ்விதம் ஒழுங்கமைவுக்குட்படுத்தப்பட்டு ஒடுக்கப் படுகிற உயிரிகளது விடுதலை என்பது அரசு அதிகாரப் பொறியமைவை அழிப்பதால் மட்டும் கிடைத்து விடுவ தில்லை. வரலாற்று ரீதியில் இந்த அரசு என்னும் பொறி யமைவின் தோற்றத்துக்குக் காரணமாக இருந்ததும், அதைத் தொடர்ந்து மறு உற்பத்தி செய்து கொண்டிருப் பதுமான குடும்பம் என்னும் அதிகாரத்துவ நிறுவனத்தை யும், அதிகாரம் நிர்ணயித்துள்ள அனைத்து ஒழுங்கு களையும் குலைப்பது என்பது இதற்கான முதல் தேவை யாக உள்ளது. ஆக, நிலவுகிற சமூக அமைப்பைத் தகர்த் தெறிந்து ஒரு சோசலிச சமூகததை உருவாக்குதல் என்னும் நடவடிக்கையானது, நிலவுகிற அத்தனை அதிகாரத்துவ நிறுவனங்களையும், ஒழுங்குகளையும், மதிப்பீடுகளையும் அப்படியே தொடர அனுமதிக்காது என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும். உலகில் முதன் முதலாக சோசலிச கட்டமைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட ரசியாவில், குடும்பம் என்னும் நிறுவனம் குறித்து

படிப்பகம்

www.padippakam.com



எவ்விதமான அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டது எனப் பார்ப்பது இன்று உலகெங்கும் சோசலிச நிர்மாணம் பற்றி நிகழ்ந்து வரும் விவாதங்களின் ஒரு சிறு பகுதியாக அமையும் என்பதைக் கூறத் தேவையில்லை.

நவீனப்புரட்சிகர இயக்கத்தின் முதல் அறிக்கை என அறியப்படுவதும், 1862இல் வெளியிடப்பட்டதுமான 'இளம் ரசிய அறிக்கை,' மிகவும் ஒழுக்கக் கேடான விசயமெனக் கூறி திருமணம் என்கிற வடிவத்தை ஒழித்துக் கட்டக் கோரியது செர்மானிய சோசலிஸ்டான பேபெல் எழுதிய 'சோசலிசமும் பெண்களும்' என்ற நூல் 1918இல் அலெக்சாந்த்ரா கொலந்தாயால் மொழிபெயர்க்கப்பட்டு ரசியாவில் வெளியிடப்பட்டது. ''மற்ற இயற்கையான உணர்வுத் தூண்டல்களைத் தணித்துக் கொள்வது போல பாலியல் உணர்வுத் தூண்டலைத் தணித்துக் கொள்வ தென்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விசயம்'' என பேபெல் இந்நூலில் குறிப்பிடுகிறார். பொதுவுடைமை சமூகத்தில் பாலியல் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்வதென்பது ஒரு டம்ளரில் இருக்கும் நீரைக் குடிப்பது போல எளிதான, சாதாரணமான விசய மாய் இருக்கும் என்று கொலந்தாய் கூறியது பிரபலமான வாசகமாய் விளங்கியது. குடும்பம், திருமணம் பற்றி பல்வேறு முன் அனுமானங்கள் நிலவிய போதிலும்கூட சமூக ஜனநாயகத்தின் தலைவர்களிடையே இக்கருத்துக்கள் எவ்விதமான பாதிப்பையும் உண்டு பண்ணவில்லை. 1903இல் வெளியிடப்பட்ட கட்சித் திட்டத்தில் இக்கருத்துக்கள் முற்றிலுமாகப்புறக்கணிக்கப் பட்டன. அதற்குப் பின்பு நடந்த எந்தவொரு விவாதத் திலும்கூட இவைபற்றிப் பேசப்படவில்லை. 1915இல் வெளியிடப்பட்ட 'பெண்களின் கோரிக்கைகள்' எனும் பிரசுரத்தில் **இனெஸ்ஸா அர்மாண்ட்** என்ற பெண் போல்செவிக் 'சுதந்திரமான காதல்' என்பதையும் ஒரு கோரிக்கையாகச் சேர்த்திருந்தார். இதை லெனின் மிகவும்

www.padippakam.com



கண்டித்தார். இது ஒரு பூர்சுவா கோரிக்கையே தவிர ஒரு பாட்டாளி வர்க்க கோரிக்கை அல்ல என்று அவர் கண்டித்தார்.

சோவியத் அரசு தொடக்கத்தில் குடும்பம், திருமணம் ஆகியவை பற்றி கொண்டுவந்த சட்டங்கள் குறிப்பான சோசலிச குணாம்சங்களைப் பெற்றிருந்ததாகத் தெரிய வில்லை. ''பாட்டாளிவர்க்கக் குடும்பம் என்பது அதன் கறாரான அர்த்தத்தில் ஒருதார மண வகைப்பட்டதல்ல. அது அதிதீவிரக் காதலைக் கொண்டிருந்தாலும், பரஸ்பர தாம்பத்திய விசுவாசம் இருந்தாலும் சரி; எல்லா மத அல்லது லௌகீக ஆசிகள் பெற்றிருந்தாலும் சரி'' எனக் குறிப்பிடுகிற எங்கெல்ஸ் சோசலிச சமூகத்தில் குடும்பத் தின் நிலைபற்றி இறுதிபடுத்திக் கூறாமல் அந்தச்சமூகத்தில் வரும் தலைமுறையினர் ''தமது சொந்த நடைமுறையை யும் அதற்குப் பொருத்தமான தமது சொந்தப் பொது மக்கள் அபிப்ராயத்தையும் அவர்கள் நிலை நிறுத்துவார் கள்'' எனக் கூறியதை நாம் அறிவோம். சோவியத் அரசு தொடக்கத்தில் எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கியது. இருவரில் எவரேனும் ஒருவர் விரும்பினால்கூட மண உறவை ரத்துசெய்துகொள்ளலாம் என்ற சட்டம் பின்னர் பிறப்பிக்கப்பட்டது. 1918இல் கொண்டுவரப்பட்ட சட்டம் 'முறையான' மற்றும் 'முறையற்ற' குழந்தைகள் இரண்டுக்குமே சம உரிமை என அறிவித்தது. 1919இல் புதிய மாதிரியான நிறுவனங்களைக் கட்டியமைக்க வேண்டும் என கூறிய லெனின் சாப்பிடுமிடம், குழந்தை கள் காப்பகம் யாவுமே பெண்களை அவர்களது வீட்டு வேலைகளிலிருந்து விடுவிக்கும் வகையில் புதிய மாதிரியில் அமைக்கப்பட வேண்டுமெனவிரும்பினார். 1920இல் வெளி யான கம்ஸமோல் திட்டத்தில், ''விவசாய இளைஞர் களது மோசமான சூழலுக்குக் காரணம் அவர்களது பெற்றோர்களின் பழமைவாதப் பார்வையும், குலாக்கு

www.padippakam.com



களும், பூசாரிகளும் அவர்கள்மீது ஆளுகை செலுத்தி வருவதும்தான்'' எனக் குறிக்கப்பட்டிருந்தது. ''பழைய அரசாங்கத்தின் பழமைவாதக் குப்பைக் கூளங்களின் நம்பிக்கைக்குகந்த இடமாக குடும்பமே இருக்கிறது'' என புகாரின் எழுதினார்.

''பொருளியல் உறவுகளை அடிப்படையாகக் கொண்டே பூர்சுவா சமூகத்தில் நிலையான திருமண உறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. உழைக்கும் வர்க்கத் தினரிடமோ அதன் இறுதி இலக்குக்கு இயைபாக, இரு பாலினருக்கும் இடையிலான உறவு என்பது உறுதி குறை வாகவும், எளிதில் மாற்றிக் கொள்ளக்கூடிய இயல்புடைய தாகவும் காணப்படும்'' என கொலந்தாய் குறிப்பிட்டார். உள்நாட்டு யுத்த காலத்தில் பரவலாக வினியோகிக்கப் பட்ட பிரசுரம் ஒன்றில் கீழ்க்கண்டவாறு கொலந்தாய் எழுதினார் :

''குடும்பம் அவசியமில்லாமல் ஆகிவிட்டது. அது அரசுக்குத் தேவையில்லாமல் ஆகிவிட்டது. ஏனெனில் வீட்டுப் பொருளாதாரம் இப்போது அரசுக்குச் சாதக மானதாக இல்லை. அது பெண்களை மேலும் உபயோக கரமான வேலைகளைச் செய்வதிலிருந்து தேவையின்றி திசைதிருப்பிவிடுகிறது. குடும்பம் என்பது அதன் உறுப் பினர்களுக்கே அவசியமில்லாமல் ஆகிவிட்டது. ஏனெனில் குடும்பத்தின் இன்னொரு நோக்கமான குழந்தை வளர்ப் பென்பது கொஞ்சம்கொஞ்சமாக சமூகத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டுவிடும்; இறுதியில், சமூகப் பிரக்ஞை கொண்ட ஒரு உழைக்கும் வர்க்க தாய் என்பவள் உனது எனது என்று குழந்தைகளைப் பிரித்துப் பார்க்காது, யாவும் நமது குழந்தைகள்தான் என்று நினைக்கும் நிலைக்கு உயர்ந்து விடுவாள்'' என்று கொலந்தாய் எதிர் பார்த்தார். இத்தகைய கருத்துக்களை புகாரின் ஆதரித் தார். ஆனால் லெனினுக்கோ இவை கொஞ்சமும்

படிப்பகம்

www.padippakam.com



பிடித்தமாயில்லை. (இதுகுறித்து லெனின் க்ளாரா ஜெட்கினுடன் பேசியதை குடும்பம் பற்றி மார்க்ஸ் எங்கெல்ஸ் கட்டுரையில் காண்க).

உள்நாட்டு யுத்த காலத்திலும் கொலந்தாயின் இத்தகைய கருத்துக்கள் கட்சி வட்டாரத்தில் மிகவும் பிரசித்தம் பெற்றிருந்தன.

புரட்சிக்குப்பின் உள்நாட்டு யுத்த முடிவு வரையில் கட்சியிலும், அரசிலும் ஒழுக்க வரையறைகள் பற்றிய சட்டங்கள் அவ்வளவு கடுமையாகக் கடைபிடிக்கப்படாமல் இருந்தன. கட்சிக்குள்ளும் கொலந்தாய் போன்றோரது கருத்துக்களின் செல்வாக்கும், பாலியல் சுதந்திரம் குறித்த பல்வேறு கருத்துக்களும் விரிவாகப் பேசப்பட்டு வந்ததும் இந்த இடைப்பட்ட காலத்தில் தான். உள்நாட்டு யுத்தத்தின் போது எதிர் வர்க்கத்துக்கு எதிரான தாக்குதலில் நட்பு சக்திகள் எதையும் இழந்து விடாமல் இருக்க வேண்டும் என்கிற நடைமுறைத் தந்திர ரீதியிலும், முழுக் கவனமும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது என்பதிலேயே குவிக்கப்பட்டிருந்த நிலையிலும் இப்படியொரு கடுமையற்ற போக்கு கடைப்பிடிக்கப் பட்டிருக்கக்கூடும். உள்நாட்டு யுத்த முடிவும் புதிய பொருளாதாரக் கொள்கையின் (NEP) அறிமுகமும் இத்தகைய கருத்துக்கள் குறித்த எதிர்விதமான பார்வைகளை முன் வைத்தன. கட்சியின் பத்தாவது காங்கிரசில் கடுமையாகத் தாக்கப்பட்ட (Workers opposition) குழுவில் கொலந்தாய் இருந்ததால் அவரது செல்வாக்கு கட்சி மட்டத்திலும், அரசியல் மட்டத்திலும் சரிந்தது. இது அவர், குடும்பம் பெண்—விடுதலை போன்றவை குறித்துக்கொண்டிருந்த கருத்துக்களின் செல்வாக்கையும் சரிவுக்குட்படுத்தியது. 1922 இல் கம்ஸமோலின் புகாரின் இவற்றைத் தாக்கினார். இந்தக் கருத்துக்களைக் கண்டித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

www.padippakam.com



1923இல் ட்ராட்ஸ்கி ஒழுங்கமைத்த கட்சிக் கருத்தரங்கு ஒன்றில் கொலந்தாயின் கருத்துக்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. 'குழந்தைகள் பற்றி தந்தையும் தாயும் கொண்டிருக்க வேண்டிய கடமைகளை நிராகரிக்கிறது' எனக் குற்றம் சாட்டப்பட்டது. மாஸ்கோவில் வளர்ந்து வரும் பெருங்கேடான 'குழந்தைகளைக் கைவிடுதல்' என்னும் 'கொடுஞ் செயலுக்கு' இத்தகைய கருத்துக்களே காரணம் என தாக்கப்பட்டது. 'சுதந்திரமான காதல்' என்ற கருத்தாக்கத்துக்கு நாம் தவறுதலாக முக்கியத்துவம் தந்துவிட்டோம். கட்சி உறுப்பினர்கள் தங்கள் குழந்தைகளைக் கவனிக்காமல் உள்நாட்டுயுத்தத்தின் போது அவர்களைக் கைவிட்டுச் சென்றுவிட்டனர். தொழிலாளிகளோ கட்சியின் போதனைகளால் உந்துதல் பெற்று தங்களது மனைவிகளை லிவாகரத்து செய்துவிட்டனர். பெண் கம்யூனிஸ்டுகளோ கட்சி வேலையைக் கவனித்துக் கொண்டு, மனைவியாகவும், தாயாகவும் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத்தவறி விட்டனர்'' என அந்தக் கருத்தரங்கில் விமர்சிக்கப்பட்டது. குடும்பம், பெண்விடுதலை குறித்த கொலந்தாய் போன்றோரது கருத்துக்கள் மட்டுமின்றி எங்கெல்ஸின் கருத்துக்களும் கூட நடைமுறையில் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிடப்பட்டன. குடும்பத்தின் தலைகள் பற்றியும் வீட்டுழைப்பின் ஒடுக்குதலிலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டிய அவசியம் பற்றியும் எங்கெல்ஸ் குறிப்பிட்டதற்கும் ரசியாவில் பின்பற்றப்பட்ட நடைமுறைக்கும் மிகுந்த இடைவெளி விழுந்தது. சோவியத் குடும்பம் தன் மரபான வழியிலேயே தொடர்ந்தது. 1924இல் கருச்சிதைவு செய்து கொள்வது சட்டபூர்வமாகப்பட்டது கடும் விமர்சனத்துக்குள்ளானது. 1925இல் பிரசுரிக்கப்பட்ட நலத்துறைக்கான மக்கள் கமிசாரின் கட்டுரை ஒன்று குடும்பம் மற்றும் பாலியல் உறவுகள் குறித்த மரபு ரீதியான பார்வையின் அடிப்படையில் அவற்றை ஒழுங்கமைக்க முனைந்தது.

www.padippakam.com



''பாலியல் உறவுகளின் அனைத்து விளைவுகளையும் (குழந்தை வளர்ப்பு உட்பட) அரசே ஒழுங்கமைப்ப தென்பதும், அரசே அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்வதும் உன்னதமான விசயங்கள் தான் ஆனால் இது நடைமுறை சாத்தியமானது அல்ல. எனவே அவர் பாலியல் உணர்வுத் தூண்டல்களை சமூக உழைப் பில் 'பதிலீடு' செய்து கொள்ளும்படி யோசனை கூறி னார். (Sublimation என்ற வார்த்தை அடைப்புக் குறிக் குள் குறிக்கப்பட்டு ஃப்ராய்டு இதைப் பற்றிக் கூறியவை கேலி செய்யப்பட்டது) மக்கள் கமிசாரான செமஷ்கோ பாலியல் உறவுகள் உடல் நலத்துக்கு அவசியமென்பதை யும், அதைத் தடுத்து வைத்திருப்பது கெடுதலானது என் பதையும் மறுத்தார். அவர் கூறினார் : ''உங்களது பாலியல் சக்தியை பொது வேலைகளில் பயன்படுத்துங் கள், உங்களது பாலியல் பிரச்சனையைத் தீர்க்க வேண்டு மெனில் ஒரு பொது நல ஊழியராயிருங்கள், ஒரு தோழ ராயிருங்கள், மாறாக ஒரு பொலி காளையாக அலையா தீர்கள்.'' 1925 டிசம்பரில், 14வது காங்கிரசில், ''Down with Innocence', ''Down with shame'' என்ற பெயர் களில் செயல்பட்ட இளைஞர் குழுக்களை அழிவுவாதக் குழுக்கள் என்று புகாரின் தாக்கினார். கம்ஸமோல் பத்திரிக்கை கொலந்தாயின் கருத்துக்களைத் தாக்கி விரிவான கட்டுரைகளை வெளியிட்டது.

உள்நாட்டு யுத்தத்தின் காரணமாகவும், புரட்சியின் காரணமாகவும் வீடற்றவர்களாகி விட்ட குழந்தைகள் தங்களது வாழ்க்கைக்கு வேறு வழியின்றி பல்வேறு சிறு குற்றங்களில் ஈடுபட்டனர். இந்தப் பிரச்சனையைத் தீர்ப் பதற்கென லெனின் இறந்த சமயத்தில் 'லெனின் நிதி' என்ற ஒரு நிதியமைப்பு அரசாங்கத்தால் உருவாக்கப் பட்டது. 1924இல் பட்ஜெட்டிலிருந்து 50மிலியன் ரூபிள்கள் இதற்கென ஒதுக்கப்பட்டது. இன்னுமொரு 50 மிலியன் ரூபிள்கள் நன்கொடைகள் மூலமும் 'லெவி' மூலமும்

படிப்பகம்

www.padippakam.com



வசூலிக்கப்பட்டது. இந்தத்தொகை வீடற்ற குழந்தை களுக்கான இல்லங்கள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டன. இந்த இல்லங்களோ நெரிசல் மிக்கவையாகவும், போது மான வசதிகள் இல்லாமலும், பற்றாக் குறையாகவும் இருந்தன. அரசு அதிகாரிகள் இந்த இல்லங்கள் அவர் களது நிதி ஒதுக்கீட்டில் பாதிக்கும் மேல் விழுங்கி விட்டன எனப் புகார் செய்தார்கள் 1924 ஆகஸ்டில் அறுவடையில் ஏற்பட்ட பாதிப்பு இன்னும் பல குழந்தைகள் இப்படிக் கைவிடப் படுவார்களோ என்ற அச்சத்தைக் கிளப்பி விட்டது. கட்சியின் மத்தியக்கமிட்டிக் கூட்டத்தில் ரிகோவ் அரசின் இந்தக் கொள்கை முழுவதையும் கடுமையாகத் தாக்கினார்: ''குழந்தைகள் இல்லங்களில் நாம் சோம்பேறி களையும், வேலை செய்யத் தெரியாதவர்களையும் வளர்த் துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் அரசுக்கு மிகப் பெரும் சுமையாக இவர்கள் இருக்கப் போகிறார்கள். இதைத் தடுக்க வேண்டுமென்றால் இந்தக் குழந்தைகளை உற்பத்தி வேலைகளிலிருந்து விலக்கி வைத்திருப்பதைத் தடுத்தாக வேண்டும். இவர்களின் எண்ணிக்கை அதிகரிப் பதைத் தடுக்க வேண்டுமென்றால் அறுவடை பாதிக்கப் பட்ட பகுதிகளில் குடும்பங்களிலிருந்து குழந்தைகளை இப்படி இல்லங்களுக்குக் கொண்டு வந்து விடும் போக் கைத் தடை செய்ய வேண்டும் ஒரு வேளை அந்தக் குடும் பத்தினரால் அந்தக் குழந்தைக்கு உணவூட்ட முடியாத பட்சத்தில் அதை இல்லத்தில் வைத்து உணவு வழங்க லாம்'' என்று ரிகோவ் கூறினார். ரிகோவ் இப்படிப்பேசி இரண்டு மாதங்கள் கழித்து லூனாசார்ஸ்கி ''குழந்தை களை மக்களிடம்சேர்ப்பது'' என அறிவித்தார். இதன்படி வீடற்ற குழந்தைகள் தேவைப்படும் விவசாயக் குடும்பங் களில் விடப்பட்டனர். 1918 குடும்ப விதிகளின் பிரிவு 183இன் படி குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வது தடை செய்யப் பட்டிருந்தது. ஏனெனில், (1) விவசா யக் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டாம் என்று அரசு எண்ணியது. (2) இப்படி அதிக

படிப்பகம்

www.padippakam.com



ரிப்பது நிலங்களை மறு விநியோகம் செய்யும் போது பெரிய குடும்பங்கள் அதிகப் பங்கு கோரக் காரணமாகி விடும். (3) இது மட்டுமின்றி குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வது விவசாயக் குடும்பங்களில் 'குழந்தை உழைப்பை' மறைக்க ஒரு திரையாக மாறிவிடக் கூடும். ஆனாலும் லூனாசார்ஸ்கியின் அறிவிப்பு இதை மீறியது. இந்த அறிவிப்பின்படி நகரங்களிலிருந்து ஏராளமான வீடற்ற குழந்தைகள் விவசாயக் குடும்பங்களில் தங்க வைக்கப்பட்டனர். 1924இல் இதன் எண்ணிக்கை 55ஆயிரம். இது 1925இல் 75 ஆயிரமாக மாறியது. 1926இல் இது 85ஆயிரமாக அதிகரித்தது. 1926 ஏப்ரலில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, ஒரு வீடற்ற குழந்தையை தத்து எடுத்துக் கொண்டால் மூன்று வருடங்களுக்கு வரி இல்லாமல் ஒரு நிலத்தைப் பெறலாம் என அறிவிக்கப் பட்டு தத்து எடுத்துக் கொள்வது ஊக்குவிக்கப்பட்டது.

வீடற்ற குழந்தைகளின் பிரச்சனை சில நாட்களில் வேலையற்ற இளைஞர்களின் பிரச்சனையாக மாறி விட்டது. வீடற்ற குழந்தைகளை வளர்ப்பதற்கென நாடு முழுவதும், குழந்தை வளர்ப்பு இல்லங்களை உருவாக்கிய செயல் 1926இல் கடுமையாக விமர்சிக்கப்பட்டு ''நமது பொருளாதார நிலையில் இது முழுக்க முழுக்க வெற்றுக் கற்பனைதான்'' எனத் தாக்கப்பட்டது.

குடும்பம் பற்றிய புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டிருந்தோர் பெரும்பாலும் நகர்ப்புற புத்திஜீவி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். இத்தகைய கருத்துக்கள் விவசாயிகளால் கடுமையாக எதிர்க்கப் பட்டன. ''திருமணத்தைப் பதிவு செய்து கொள்வது கட்டாயமாக்கப்படவேண்டுமென்றும், ஒரு திருமணத்தை ரத்துசெய்வதற்கான அதிகாரம் நீதி மன்றத்துக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும்'' என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

www.padippakam.com



பொருளாதார தளத்தில் கொண்டுவரப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை என்பது நகரத்துக்கு எதிரான கிராமப்புற மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே இருந்தது. இதே காலகட்டத்தில் கலாச்சாரத் தளத்திலும் நகர்ப்புறத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியதாக அமைந்த கருத்துக்களுக்கும் பின்னடைவு ஏற்பட்டது. திருமணங்களை பதிவுசெய்து கொள்ளத் தேவையில்லை என்னும் கருத்து நகர்ப்புறங்களிலும் கூட பெண்களால் மட்டுமே ஆதரிக்கப்பட்டது. அதை எதிர்த்தோரில் பெரும்பான்மையோர் ஆண்கள். கிராமப் புறங்களில் இது முழுதுமாக எதிர்க்கப்பட்டது. கட்சி இதனை ஆதரித்தபோதிலும் இது நடைமுறை சாத்தியமற்றதெனக் கருதியது.

1936இல் கருக்கலைப்பு தடைசெய்யப்பட்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. இது பற்றி 1920இல் கொண்டுவரப்பட்ட சட்டம் கருக்கலைப்பு என்பதே தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தீமை என்ற அளவில்தான் அங்கீகரித்திருந்தது என அப்போது வாதிடப்பட்டது. கருக்கலைப்பை 1913 ஆம் ஆண்டிலேயே லெனின் எதிர்த்தார். சோசலிச சமூகத்திலும் குழந்தைகளைக் காப்பாற்றுவது கடினம் என்கிற நவீன மால்தூஸிய கருத்துக்களின் விளைவே கருக்கலைப்பை ஆதரிப்பது என அவர் கூறினார் இனெஸ்ஸா அர்பாண்டுக்கு அவர் எழுதிய கடிதத்தில் ''சுதந்திரமான காதல் என்பதை சோரம் போவதற்கான சுதந்திரம் என்றும் குழந்தை பெற்றுக் கொள்வதிலிருந்து சுதந்திரம் என்றும் எடுத்துக் கொள்ளக் கூடாது'' எனக் குறிப்பிட்டார். குழந்தை பெற்றுக் கொள்வதென்பது பெண்களின் சுயநிர்ணய உரிமை என்பதோடு தொடர்புடைய விசயமாக ரசியாவில் கருதப்படவில்லை. மாறாக அது சமூகத்தால் தீர்மானிக்கப்பட வேண்டியது என்ற கருத்தே நிலவியது. ரசியாவில் புரட்சிக்குப்பின்னர், குடும்பம் பற்றிய அணுகுமுறையிலும், ஒழுக்கம் பற்றிய வரையறைகளிலும் நிகழ்ந்து வந்திருக்கும் மாற்றங்களை

படிப்பகம்

www.padippakam.com



நோக்கும்போது அங்கே அரசு என்னும் நிறுவனம் கொஞ்சம் கொஞ்சமாகப் பலமடைந்து வந்திருப்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். எவ்வகையான ஒழுங்குகளை சிதைத்து புரட்சியானது நிலவிவந்த அரசமைப்பைத் தகர்த்ததோ அதேவிதமான ஒழுங்குகளை மீண்டும் கொண்டுவந்ததன் மூலம் மீண்டும் ஒரு அரசு அங்கே பலப்படுத்தப்பட்டது.

''ஒடுக்குதலுக்குள்ளாகும் மக்கள் திரளை ஒடுக்குமுறை நிலைமைகளில் பலவந்தமாய் இருத்தி வைப்பதற்காக இந்த சமூகத்துக்கு தேவைப்பட்ட அரசு என்னும் ஒடுக்குமுறைக் கருவி'' ஒரு பொதுவுடைமை சமூகத்தில் ''சமூகம் முழுவதற்கும் மெய்யான பிரதிநிதியாக மாறி தன்னைத் தேவையற்றதாக்கிக் கொள்ளும்'' எனக் கூறப்பட்ட போதிலும், அரசு உலர்ந்து உதிர்ந்துவிடும் சமூகத்தை நோக்கி நகரவேண்டிய சோசலிச சமூகங்கள் மிகமோசமான அதிகாரத்துவ அரசுகளாகச் சீரழிந்துள்ளதே யதார்த்தமாகியுள்ளது. இதற்கான காரணங்களைத் தேடி நாம் புறப்படுவோமெனில் குடும்பம் மட்டுமின்றி அதிகாரம் தன்னை மறுஉற்பத்தி செய்து கொள்ளும் இன்னும் பல நுண் பகுதிகள் குறித்தும் நாம் அறிந்து கொள்வது சாத்தியமாகலாம். □

www.padippakam.com

# 4

# பெண்ணியம் : விவாதத்துக்கான தொகுப்பு

உடலியல் அடிப்படைகளின்படி நோக்கினால் ஆண்களுக்கான க்ரோமோசோம்களைக் காட்டி லும் பெண்களுக்கான க்ரோமோசோம்களின் அளவு பெரியதாயிருப்பதால் ஆண்களைவிடவும் பெண்கள் அதிக காலம் உயிர்வாழும் சாத்திய முள்ளது என்பதை நாம் அறியலாம். அப்படி யிருந்தும் இந்தியாவில் ஆண் பெண் விகிதம் 1901ஆம் ஆண்டில் 1000க்கு 972ஆக இருந்தது. 1991இல் 1000க்கு 929 என மிக மோசமாகக் குறைந்துள்ளது. இந்தியாவைப் போன்றே மூன்றாம் உலகநாடுகளெனக் குறிக்கப்படும் லத்தீன் அமெரிக்கா நாடுகளில் இது 1000க்கு 1000 என உள்ளது, வட ஆப்ரிக்காவில் 1000க்கு 984 என உள்ளது, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 1000க்கு 1010, ஐரோப்பிய நாடுகளிலோ இது

படிப்பகம்

www.padippakam.com



1000க்கு 1050. பெண்களின் உரிமைகள் அதிக அளவில் பறிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் இஸ்லாமிய சட்டம் அமலில் உள்ள ஈரானில்கூட நம் நாட்டைவிட அதிகமான விகிதத்தில் பெண்கள் (1000க்கு 942) உள்ளனர். இந்தியா வில் கடந்த பல பத்தாண்டுகளிலும் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்துள்ளதையும், பெண்களின் உயிர் வாழ்வுக் காலம் ஒப்பீட்டளவில் அதிகரித்து வந்துள்ள தையும் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. அப்படியிருந் தும் ஆண்பெண் விகிதத்தில் ஏன் இத்தனைச் சரிவு என நோக்கும்போது நகர்ப்புறங்களில் பரவிவரும் 'அம்னியோசிந்தஸிஸ்' சோதனைகள்மூலம் பிறக்க விருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா எனக் கண்டு கொண்டு பெண்குழந்தைகளைக் கருவிலேயே கொன்று விடும் வழக்கமும்; கிராமப்புறங்களில் பெண் சிசுக்களைக் கொன்று விடும் வழக்கமும் முக்கியமான காரணங் களாகத் தோன்றுகின்றன. இவற்றுக்கான காரணங் களை இங்கு நிலவும் பொருளியல், அரசியல், கருத்தியல் சூழலிலிருந்து விலக்கிப் பார்த்து விடமுடியாது. இந்நிலை யில் 'பெண்ணியம்' 'பெண்விடுதலை' குறித்து அதிகம் பேசப்படாத தமிழ்ச்சூழலில் இவைபற்றிய புரிதலுக்காக வும், சாத்தியமான செயல்பாடுகள் எவையெனக் கண்டு கொள்வதற்காகவும் இந்தக் கூட்டு விவாதம் ஏற்பாடு செய்யப்படுகிறது. விவாதத்திற்கென கீழ்க்கண்ட மையப் புள்ளிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

1. பால் ஒடுக்கு முறையின் பிரதானமான களங்களென எவற்றைக் கருதுகிறோம் அல்லது பெண்களின் மீதான ஒடுக்கு முறைகள் என எவற்றைக் குறிப்பிட லாம்?

2. பெண் ஆண் என்கிற நிர்ணயிப்புக்கான காரணி களென எவற்றைக் கொள்ளலாம்?

அ—5

படிப்பகம்

www.padippakam.com



3. பெண் மீதான ஒடுக்குமுறையில் பொருளியல்-அரசியல்- கருத்தியல் ஆகியவற்றின் பங்கு என்ன? இவற்றுள் எதைக் குலைப்பது பெண்விடுதலைக்கான முதல் நிபந்தனையாக உள்ளது?

4. சமூக ஒடுக்குமுறையின் அடிப்படை அலகெனக் குறிக்கப்படும் குடும்பம் என்பது பெண்மீதான ஒடுக்குமுறையில் என்ன பங்கு வகிக்கிறது. இன்றைய சூழலில் குடும்பத்தை சிதைப்பதென்பதை நாம் உடனடி நிபந்தனையாகக் கொள்ள முடியுமா? அப்படியெனில் மனிதர்களுக்கிடையேயான உறவுகளின் மாற்று வடிவங்களாக எவற்றை கூறமுடியும்?

5. ஒடுக்குமுறைக்குள்ளாகும் பகுதியிலும் ஒடுக்கப்படும் கிற பகுதியாக பெண் இருப்பதால் ஒடுக்குமுறைகளை எதிர்த்த விடுதலைக்கான பார்வையாக பெண் நோக்கிலிருந்து வைக்கப்படும் கருத்துக்கள்தான் அமைய முடியும் என்பது சரியா?

6. எந்த ஒரு பொருளைப் பற்றியும் பெறப்படுகிற அறிவே அதன் மீதான அதிகாரமாக அமைகிறபோது பெண் எப்போதுமே தனக்கான அறிவை ஆணின் நோக்கிலிருந்தே பெற்றுக்கொள்கிற இந்த சமூகச் சூழலில் பெண் தனக்கான அறிவுருவாக்கத்தில் ஈடுபட வேண்டுமென்பதே அவளுக்கான விடுதலை அடிப்படையாக அமைகிறது என்பதை எப்படிப் பார்க்கலாம்?

7. பெண்மை என்று குறிக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மீறுவதிலிருந்து பெண் விடுதலை சாத்தியப்படுகிறதா? அல்லது பெண்மைக்கான வரையறைகளை ஏற்றுக் கொண்டு இந்த சமூகம் பிரச்சனைகளென

www.padippakam.com



முன்வைப்பவற்றை தீர்ப்பதில் பெண் விடுதலை சாத்தியப்படுகிறதா?

8. அரசின் செயல்பாடுகளிலிருந்து பெண்கள் ஒப்பீட்டளவில் சற்றுவிலகி இருப்பதென்பதை அதிகார மறு உற்பத்தியில் அவர்கள் பங்கேற்காமல் உள்ளனர் என்று சாதகமாகப் பார்க்க முடியுமா? இன்னும் பல பிரச்சனைகள் உங்களுக்குத் தென்படலாம். அவற்றைத் தொகுத்து வாருங்கள். □

www.padippakam.com

5

# பெண்ணியம்: கூட்டு விவாதம்

**நாள்** : 07.07.91. ஞாயிறு காலை 11.30 மணி.

**இடம்** : வணிக அவை, பாண்டிச்சேரி.

**பங்கு பெற்றோர் :** பா.ம.க திடீரென மேற்கொண்ட சாலை மறியல் போராட்டத்தின் காரணமாக கோவை, மதுரை, நெய்வேலி, மன்னார்குடி பகுதிகளி லிருந்து வருவதாகக் கடிதம் எழுதி யிருந்த பலர் கலந்துகொள்ள இயல வில்லை. எனினும் 64 பேர் கலந்து கொண்டனர்; இதில் 18பேர் பெண் கள். விவாதமும் தாமதமாகவே தொடங்கியது.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களைப் புதுவைப் பல்கலைக்கழகப் பேரா சிரியர் டாக்டர் அ. ராமசாமி அவர்கள் தொகுத்தார். கட்டுரையாக்கம்: **நிறப்பிரிகை.**

www.padippakam.com



**சிறப்பிரிகை:** தந்தை வழிச் சமூக அமைப்பின் உருவாக்கத்தோடு பெண் மீதான சமூக ஒடுக்குமுறை தொடங்குகிறது. இந்த ஒடுக்குமுறையானது பொருளியல், கருத்தியல், அரசியல் எனச் சகல தளங்களிலும் செயல்படுகிறது. தந்தை வழிச் சமூக அமைப்பில் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் குடும்பம், மதம், கல்வி, கலை இலக்கியம் எனச் சகல நிறுவனங்களும் இந்த ஒடுக்குமுறை நிறைவேற்றப்படும் களங்களாக அமைகின்றன. இத்தகைய நிறுவனங்களில் பெண் பொருளியல் ரீதியில் சுரண்டப்படுவதோடு இந்த ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் கருத்தியல்களும் உற்பத்திச் செய்யப்படுகின்றன. பாலியல் ஒடுக்குமுறைக்குரிய புனைவுகள் உருவாக்கப்பட்டு, அந்தப் புனைவுகள் போர்த்தப்பட்டதாகவே எதார்த்தங்கள் சமூக உறுப்பினர்களுக்குக் கையளிக்கப்படுகின்றன. இந்தப் புனைவுகளினடியாகவே இங்கு 'ஆண்மை', 'பெண்மை' போன்ற கருத்தாக்கங்கள் உருவாகின்றன. இந்தக் கருத்தாக்கங்கள் ஒவ்வொரு சமூக உயிரின் தன்னிலை உருவாக்கத்திலும் முக்கியப்பங்கு வகிக்கின்றன. தன்னை அழகானவளாக, மென்மையானவளாக, நளினங்கள் மிகுந்தவளாக, தாய்மையும், கருணையும், பொறுமையும் மிக்கவளாக, குழந்தையைப் பெற்றுச் சீராட்டி வளர்ப்பவளாக, ஆளுமை மிக்க ஆடவன் ஒருவனின் பாதுகாப்பில் முழுமை பெறுபவளாக, குடும்ப விளக்காகப் பெண் உணர்கிறாள். இவை நிறைவேற்றப்படும்போதே தான் முழுமையடைந்தவளாக உணர்கிறாள். மறு உற்பத்திக்காகத் தொடர்ச்சியாகக் கிளர்ச்சியூட்டப்பட்ட உடலைக் கொண்டவளாக ஆகிறாள். இத்தகைய பாலியல் உணர்வுகளாலேயே அவளது உடல் கட்டமைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்படுகிறது. இந்த உணர்வுகளை மீட்டி, அவளை முழுமையடையச் செய்து, சுகத்தை அளித்துப் பாதுகாக்கும் பொறுப்பும் அறிவும் 'ஆண்மை' யாகிறது. 'காம சூத்திரம்' நூல்கள் அனைத்தும் இத்தகைய அறிவை ஆண்களுக்குப் போதிப்பவையாகவே உள்ளன. இவ்வாறு

படிப்பகம்

www.padippakam.com



'அறிவு- அதிகாரம்-சுகம்' ஆகியவற்றிற்கிடையேயான ஒருங்கிணைவு நிகழ்கிறது. 'சந்திரோதயம்' போன்ற எம்.ஜி.ஆர். சினிமாக்களிலும் இன்றைய ராமராஜன் படங்களிலும் இதனை வெளிப்படையாகக் காணலாம். குழந்தைத்தனமான நாயகி கதாநாயகனின் தொடுகையில் முழுமையடைந்து அவனது பாதுகாப்பில் அடைக்கலம் புகுவதை நினைவுபடுத்திப் பார்க்கலாம். பெண்களால் அதிகம் விரும்பிப் படிக்கப்படும் பாலகுமாரன் போன் றோரின் நாவல்களிலும் கூட இதனைக் காணலாம். இத்தகைய படைப்புக்களை வாசிக்கும் பெண்களைக் கிளர்ச்சியூட்டித் தூண்டியபோதும், இறுதியில் ஒரு ஆடவனில் அல்லது குடும்பம் போன்ற நிறுவனத்தில் பாதுகாப்படைவதே இலட்சியம் என்கிற நோக்கில் இவை கட்டமைக்கப் படுவதைக் காணலாம். ஜெயகாந்தன், ஜனாகிராமன் போன்றோர் வரையறுக்கப்பட்ட நியதிகளை மீறுவதை முன்னிலைப்படுத்திய அளவிற்குக்கூடப் பாலியல் கிளர்ச்சியூட்டும் இப்படைப்புகள் நியதி மீறல்களை ஊக்குவிப் பதில்லை என்பது கவனிக்கத்தக்கது.

பெண்ணின் தன்னிலைக்கு நேர் எதிர் நிலையில் ஆணின் தன்னிலை கட்டமைக்கப்படுகிறது. பாலாதிக்கச் சமூகத்தால் புனைந்துருவாக்கப்படுகிற இத் தன்னிலை வேறுபாடுகள் இதர உயிரியல் வேறுபாடுகள் தவிர பெண்-ஆண் என வேறுபடுத்தும் காரணிகளே இல்லை. பாலாதிக்கத்திற்குக் காரணமாகிறது என்ற வகையில் இந்தத் தன்னிலைகளின் உருவாக்கத்தைத் தகர்த்தெறிந்தாக வேண்டியிருக்கிறது. இதன் முதற்படியாகப் பெண்மை ஆண்மை பற்றிய புனைவுகள் தகர்த்தெறியப்பட வேண்டும். ஆணாதிக்க நிறுவனங்கள் மூலமாகவே இங்கு அறிவு என்பது உருவாக்கப்பட்டு வினியோகிக்கப்படுவதன் விளைவாகப் பெண் தனக்கான அறிவை உற்பத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. பாலாதிக்கச் சமூகத்தால் நிர்ணயிக்கப்பட்ட பெண்மை குறித்த வரை

www.padippakam.com



யறைகளை மீறி வரவேண்டியதாகிறது. இதன் பொருள், இன்றைய சூழலில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளுக் கெதிரான நடவடிக்கைகளிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு வரையறைகளை மீறுவது போதும் என்கிற நிலைபாட்டை எடுப்பதல்ல. இதுபோலவே ஒட்டு மொத்தமாய் அதிகாரத்தைத் தகர்த்தெறிதல் என்கிற இறுதிக் குறிக்கோளையும் இன்றைய அதிகார அமைப்பில் பெண்களுக்குச் சம உரிமை கோருதலையும் விலக்கிப் பார்க்க வேண்டியதில்லை.

இன்றைய சமூக நோக்கு என்பது ஆண் நிலைப்பட்ட தாக உள்ளது. நமது இறுதிக் குறிக்கோள் ஆண்/பெண் என்ற பாலியல் வேறுபாடற்ற பாலிலி நோக்கொன்றை உருவாக்குவதே எனினும் இன்றைய ஆணாதிக்கப் பாலொடுக்குமுறைச் சூழலில் இதற்கு நேரெதிரான பெண்நிலை நோக்கிலான பார்வைகளையும் விமர்சனங் களையும் முன் வைப்பது தவிர்க்க இயலாததாகிறது. எனினும் இது தற்காலிகமானதே என்கிற புரிதல் தேவை.

பெண்ணியம் என்றால் வரதட்சிணைக் கொடுமை/ சிசுக் கொலை/ஆபாச எதிர்ப்பு மட்டுமே என்றில்லாமல் மேலும் ஆழமாக இப்பிரச்னையின் வேர்களைத் தொட இவ்விவாத அரங்கு வழிவகுக்க வேண்டும்.

**அஸ்வகோஷ் :** 1. பால் ஒடுக்கு முறையின் பிரதான மான களம் தற்போதுள்ள குடும்ப அமைப்பே. இதற்கு அப்பால் சடங்கு வழிபட்ட வழிபாடுகளையும் சேர்த்துக் கொள்ளலாம். பெண்கள் மீதான ஒடுக்குமுறையில் மிகப் பிரதானமானது பாலுறவு ஒடுக்குமுறையே. பாலுறவு விடுதலை இல்லாமல் பெண் விடுதலை இல்லை.

2. பெண்-ஆண் என்கிற நிர்ணயிப்பிற்கான காரணி களாக இயற்கையான உயிரியல் கட்டமைப்பு வேறுபாடு களை மட்டுமே கொள்ள வேண்டும். வரலாற்றுப் பூர்வ

www.padippakam.com



மாக ஏற்றிவைக்கப்பட்ட 'ஆண்மை பெண்மை' கருத்தாக்கங்களைக் காரணிகளாகக் கொள்வதற்கு அறிவியல் அடிப்படை இல்லை.

3. பெண்கள் மீதான ஒடுக்குமுறையில் பொருளியல், அரசியல, கருத்தியல் எனப்பிரிப்பது ஒரு வசதி குறித்துத்தான். கருத்தியலின் பாங்கே பிரதானமானது. இதனைக் குலைப்பதே பெண விடுதலையின் முதல் நிபந்தனை. இப்படிச் சொல்வது கருத்து முதலியமல்ல. தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெண்கள் எல்லாம் பெரும்பாலும் விடுதலை பெற்றவர்களாக இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

4. குடும்பமே பெண்கள் மீது சகல ஒடுக்குமுறைக்குமான சமூக வடிவமாய் இருந்து வருகிறது. இன்றைய சூழலில் குடும்பத்தைச் சிதைப்பதை உடனடி நிபந்தனையாகக் கொள்ள முடியாது. அது சாத்தியமும் இல்லை. எனில் குடும்ப உறவுகளைச் சிதைக்க முடியும் பெற்றோர் பிள்ளைகள்; மாமன், மைத்துனன் போன்ற ரத்த உறவு அடிப்படையிலான உறவுகளையும் இவற்றினடிப்படையிலான கருத்தாக்கங்களையும் சிதைக்க முடியும், மாற்று வடிவமாகத் தோழமை உறவுகள் இருக்க முடியும். காதல் உறவு உட்பட இது பொருந்தும்.

5. பாதிக்கப்பட்டவர்களின் பார்வையிலேயே பிரச்சினைகளை அணுக வேண்டும் என்கிற கருத்து சமீப காலமாகப் பேசப்பட்டு வருகிறது. இக்கருத்தை நான் முழுமையாக நிராகரிக்கிறேன். அப்படிப் பார்ப்பது பிரச்சினையின் ஆழத்தை வேண்டுமானால் புரிந்து கொள்ள உதவலாம். ஆனால் அதுவே தீர்வாகிவிட முடியாது. ஒட்டுமொத்தமான கருத்தியலின் அடிப்படையிலேயே தீர்வு அமைய முடியும். பெண் விடுதலைக்கும் இது பொருந்தும். மாறாகப் பெண் நோக்கிலிருந்து வைக்கப்படும் கருத்துக்கள் பிரச்சினையின் மறுபகுதி பற்றிய முழுமையான

ஆய்வுகளுக்குத் தடையாக இருக்கும் பெண் நோக்கிலிருந்து வைக்கப்படும் கருத்துக்களும் சரியாக இருக்கலாம்; ஆனால் எல்லாமே சரியான கருத்தியலுக்குட்பட்டிருக்கும் எனச் சொல்ல முடியாது.

6. 'எந்த ஒரு பொருளைப் பற்றியும் பெறப்படுகிற அறிவே அதன் மீதான அதிகாரமாக அமைகிறது' என்கிற கருத்தாக்கத்தை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எந்த ஒரு பொருளைப்பற்றியும் பெறப்படுகிற அறிவே அப்பொருளின் மீதான விடுதலைக்கு வழி வகுக்கும் என்றே நான் கருதி வந்திருக்கிறேன். இப்போது யோசிக்கும் போது 'பெறப்படுகிற அறிவு' என்பதை வெறும் அறிதல் மட்டத்திலேயே வரையறுக்க முற்படுவோமானால் அது விடுதலைக்கும் அதிகாரத்துக்கும் வழி வகுக்கும் என்றே தோன்றுகிறது. இதுவும் அது எவ்வாறு அறியப்படுகிறது என்பதைச் சார்ந்தே அமைகிறது. எனவே, ''பெண் தனக்கான அறிவுருவாக்கத்தில் ஈடுபடுவதே அவளுக்கான விடுதலைக்கு அடிப்படையாக இருக்க முடியும்'' என்பது பொருத்தமாக இருக்கும். ஒட்டு மொத்தக் கருத்தியலின் அடிப்படையிலேயே பார்க்க வேண்டும்; ஆண் நோக்கு, பெண் நோக்கு என்றல்ல.

7. 'பெண்மை' எனக் குறிக்கப்பட்டிருக்கும் வரையறைகளை மீறுவதே பெண் விடுதலையைச் சாத்தியப்படுத்தும். இந்த மீறல் மாற்றுக் கருத்தியலின் அடிப்படையிலிருக்க வேண்டும். வரையறைகளை ஏற்றுக்கொண்டு அதற்குள் சமூகம் பிரச்சினைகளாக முன் வைப்பவற்றைத் தீர்க்க முயல்வது, கட்டமைப்பைக் குலைக்காமல் சரி செய்வது கொண்டு வாழ்வதாகவே முடியும்.

8. அரசின் செயல்பாடுகளிலிருந்து பெண் ஒதுங்கியிருப்பதைச் சாதகமாகப் பார்க்க முடியாது. பெண்களின் எண்ணிக்கை மட்டுமே அதிகார மறு உற்பத்தியில் அவர்-

www.padippakam.com



களின் பங்கைத் தீர்மானிப்பதில்லை; அவர்களது கருத்தியலை வைத்தே இதைத் தீர்மானிக்க வேண்டும். ஒட்டுமொத்தக் கட்டமைப்பின் பகுதியாகவே அவர்களின் பங்கு அமைகிறது.

மேலும் இரண்டு விஷயங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். அவை :

1. எங்கல்ஸ் குறிப்பிடும் 'தூயகாதலை'-நிரந்தரமான அமரத்துவம் பெற்ற காதல் என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மாறுதலுக்குட்பட்டதாகவே இதனைக் காண வேண்டும். உலக வரலாற்றில் அறியப்பட்ட காதலர்கள் அனைவருமே திருமணமாகிக் குடும்பம் நடத்தாதவர்கள்தான். திருமணம் நடந்திருந்தால் அவர்களில் எத்தனை பேர் அமரக் காதலர்களாகியிருப்பார்கள்? அதேபோலக் காம இச்சையற்ற தூயக்காதல் என்பதையும் நிராகரிக்கிறேன். காமம்-காதல் என்கிற வேறுபாடு ஒரு ஜால வித்தையே. ஒரு ஆண் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களைக் காதலிக்க முடியும் என்றால் ஒரு பெண்ணும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களைக் காதலிக்க முடியும்.

2. தற்போதுள்ள குடும்ப அமைப்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் சிறையே. சொரணையுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இதிலிருந்து விடுதலை பெறவே விரும்புகின்றனர். சொந்த வாழ்க்கைத் தோல்வியே இத்தகைய கருத்திற்குக் காரணம் எனப் புரிந்து கொள்வது கொச்சைத்தனம். குடும்ப வாழ்க்கை வெற்றிகரமானாலும் அது சிறைதான். சமூகத்திற்கு மட்டுமல்ல, தனிமனிதனின் படைப்புத் திறனையும் விலங்கிட்டுச் சிறையிடுகிறது. தனித்தனியான குடும்ப உறுப்பினர்கள் அன்புக்குரியவர்கள்தான். ஆனால் குடும்பம் என்கிற அமைப்பாகும்போது அது ஆபத்தானது;சிறையிடுவது. ஆணானாலும் பெண்ணானாலும் சமூகக் கூச்சத்தை உதறிப் பேச வைத்தால் குடும்பத்தை உதறத் தயாரானவர்களாகவே

www.padippakam.com



இருப்பதைப் புரியலாம். சுருங்கச் சொன்னால் உற்பத்தியில் பங்கேற்பது முன் நிபந்தனையானாலும் அதுவே போதாது; முழுமையான பாலுறவுச் சுதந்திரமும் அதற்கான சமூக அங்கீகாரமுமே பெண் விடுதலையைச் சாத்தியப்படுத்தும்.

**சாரு நிவேதிதா :** 1965ஆம் ஆண்டு 'சேட்' (SADE) எழுதிய 'Philosophy in the Bedroom' என்ற நாவலை பெண் விடுதலைக்கான முதல் அறிக்கையாகக் கருதுகிறேன். 'குடும்பம், தனிச் சொத்து...' நூலில் அரை குறையாக விடப்பட்டுள்ள பிரச்சினைகள் கூட இதில் முழுமையாக ஆராயப்பட்டுள்ளன. மதம், அரசு முதலிய சமூகம் மீதான ஆதிக்கத்தை நிறுவும் முகமாகவே பெண் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வரையறைகளை உதறித்தள்ளி விடுபடுவதே பெண் விடுதலையின் தொடக்கப்புள்ளி.

பாலுறவு என்பது யோனி மைய வாதத்தை அடிப்படையாகக்கொண்டு தவறான புள்ளியிலிருந்து தொடங்குகிறது இதனால்தான் தீர்க்கதரிசிகள் யோனியைத் தவிர்த்து பெண்ணின் மற்ற உறுப்புக்களிலிருந்து தோன்றியதாக மதம் கட்டுக்கதைகளை உருவாக்கியிருக்கிறது. இது பெண் மீது மதம் வைத்த மிகப் பெரிய crime.

யோனி மைய வாதம் ஒதுக்கப்பட்டுப் புட்ட உறவு, வாய் உறவு எனப் பாலுறவின் ஏனைய கூறுகள் முக்கியத்துவம் பெற வேண்டும். புட்டம், வாய் போன்றவற்றிற்குச் சமமான முக்கியத்துவமே யோனிக்குத் தரப்பட வேண்டும்.

பாலுறவு என்றால் ஒரு ஆணும் பெண்ணும் சேர்வது தான் என்கிற கருத்தாக்கம் மனித உறவுகளின் மீது வைக்கப்பட்ட மிகக் கடுமையானதொரு வன்முறையே. பாலுறவு என்பது கூட்டுச் செயல்பாடு. முழுக்க முழுக்க

www.padippakam.com



ஆண்களால் அல்லது பெண்களால் அல்லது இருபாலரும் கலந்து பாலுறவு பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். யோனிமைய வாதம் ஒதுக்கித் தள்ளப்பட்டால் ஒரு ஆண் மற்றொரு ஆண் அல்லது ஆண்களுடன், ஒரு பெண் மற்றொரு பெண் அல்லது பெண்களுடன் பாலுறவு கொள்வதுஇயல்பானதாக எதிர்கொள்ளப்படும். தவிரவும் புட்ட, வாய் உறவுகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டால் உளவியல் ரீதியில் ஒரு ஆண் ஒரே சமயத்தில் தன்னை ஒரு ஆணாகவும் பெண்ணாகவும் பாவித்துக் கொள்வதை நடைமுறைப்படுத்த முடியும். பெண்ணே ஆணாகவும், ஆணே பெண்ணாகவும் உணர்கிறபோது ஆண்-பெண் உளவியல் வேறுபாடுகள் மறைந்து போகின்றன. பிரேதா வின் பாத்திரங்கள் இதற்கு உதாரணங்கள்.

இக் கருத்தின் மீது குழந்தை பிறப்பு, எய்ட்ஸ் ஆகிய வற்றினடிப்படையில் விமர்சனங்கள் வைக்கப்படலாம். பாலுறவு கூட்டுச்செயல்பாடாக மாறும்போது குழந்தை உருவாக்கமும் கூட்டுருவாக்கமாகும். தகப்பன் பெயர் தெரியாமல் பிறந்த குழந்தைகள் முறையானவர்களாக அங்கீகரிக்கப்படுவர். கூட்டுக் கலவி, ஓரினப் புணர்ச்சி ஆகியவைதான் எய்ட்சுக்குக் காரணம் என்பது அமெரிக்க ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளின் மீது கட்ட விழ்த்து விடும் பொய்ப் பிரச்சாரங்களில் ஒன்று. மேலும் சில குறிப்புகள்:

1. ஆண்-பெண் இருபாலரின் ஓரினப் புணர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப் படல் வேண்டும். (உ.ம்.) க்யூபா.
2. பெண் விடுதலைக்கு மிக அடிப்படையான முன் நிபந் தனை குடும்பம் என்ற அமைப்பு தகர்க்கப்படுவது. சோசலிச உருவாக்கத்தில் வெற்றியடைந்துள்ள சீனாவில் குடும்பம் சிதறி பெண்கள் ஒடுக்குதலுக்குள்ளாகியிருப் பதும் ஸ்வீடன் போன்ற முதலாளித்துவ நாடுகளில் குடும்பக் கட்டுத் தளர்ந்து பெண் விடுதலை பெருமளவில்

படிப்பகம்

www.padippakam.com



சாத்தியமாகி உள்ளதையும் ஒப்புநோக்க வேண்டும். 3. மூன்றாம் உலக நாடுகளில் பெண் விடுதலை எனப் பேசப்படுவது ஆணாதிக்கத்திலிருந்தான விடுதலை என அர்த்தப்பட முடியாது. இருபாலருமே இங்குக் கடும் ஒடுக்குதலுக்குள்ளாகியுள்ளார்கள். எனவே பெண் விடுதலை என்பது அரசு மற்றும் மதம் போன்ற ஆதிக்கச் சக்திகளின் தளைகளிலிருந்து விடுதலையடைவது என்றே அர்த்தப்பட முடியும்.

இன்றைய அரைக்காலனிய அரை நிலப் பிரபுத்துவச் சமூக அமைப்பில் பெண் விடுதலைக்கான செயல் திட்டங்கள்: (அ) எல்லா வகையான அறிவு நிலைகளையும் கையகப்படுத்துவது. (ஆ) தங்களின் அடையாளங்களாகச் சுமத்தப்பட்டுள்ள அழகியல் ஒழுக்கவியல் மதிப்பீடுகள் அனைத்தையும் மறுதலித்தல். (இ) எல்லாவித அதிகார நிறுவனங்களின் செயல்பாடுகளில் பங்களிப்பதிலிருந்தும் விலகி அவைகளைச் செயலிழக்கச் செய்தல். (ஈ) பாலியல் செயல்பாடுகளின் ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து மாறி மேலாதிக்க நிலையில் செயல்படல். (உ) ஆபாசச் சுவரொட்டிகளில் வெள்ளைக் காகிதம் ஒட்டி உறுப்புகளை மறைக்கும் கோமாளித்தனம் பெண் விடுதலைக் காரர்களால் மேற்கொள்ளப்படுகிறது. ஆபாசம் என்றால் என்னவென்று பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டும்.

இறுதியாக : யோனி என்பது இனப்பெருக்க மையமாக அமைந்து பெண்ணின் கர்ப்பம் குறித்த பயத்திற்கும் அடிப்படையாக உள்ளது. இந்த பயத்தின் அடிப்படையிலேயே ஆண் பெண் உறவு கட்டமைக்கப்பட்டுக் குடும்ப வரையறை என்னும் அதிகாரத்திற்குள் ஒடுக்கப்படுகிறது. இங்கு ஜெர்மென் க்ரேர் என்பவரின் 'The Mad Women's Undercloths' என்கிற நூல் பற்றிக் குறிப்பிடலாம். இந்நூலில் 'Lady Love your cunt' என்றொரு கட்டுரை

www.padippakam.com



யுள்ளது. நுகர்வுக் கலாச்சாரத்தைச் சேர்ந்த 'Screw' போன்ற பத்திரிகைகளுக்கு எதிராக 'Suck' என்ற பத்திரிகை நடத்தப்பட்டது. இந்தப் பத்திரிகையில் பெண்கள் தம் யோனியின் சிறப்பைப் புரிந்து கொள்ளும் நோக்கில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது, (ஆங்கிலத்தில் இதனை சாரு படித்தார்.)

**மாலதி** : தனக்குத் தேவையான எதிர்பாலைப் பெற அமைப்பிடம் கையேந்தும்போது அவன்/அவள் அமைப்பதிகாரச் செயற்பாட்டிற்குக் கீழ்ப்படிய நேர்கிறது. இதன் விளைவாக இரண்டு உடல்கள் இணைதல் என்பதைக் குற்றமாகவும் பாவமாகவும் ஏற்கும் மனோநிலை உருவாக்கப்பட்டு மனித உயிரியைக் காயடித்து உலக ஒழுங்கமைவு உருவாக்கப்படுகிறது. இந்த ஒழுங்கமைவை உருவாக்கும் மையங்களாகப் பெண்களும் கிளைகளாக ஆண்களும் செயல்படுகிறார்கள். ஆண்டாண்டுக்காலத்து அறியாமையின் விளைவாக பெண்ணின் மனோநிலை தன் இருத்தலை நீட்டிக்க அமைப்பாதிக்க மனோநிலையுடன் இணைத்துக் கொள்கிறது. ஆணுக்குப் பெண் தேவையாகும்போது ஆதிக்கக் கருத்தியலை ஏற்பவனுக்கு மட்டுமே வாழ உரிமை உள்ளது. எனவே சமூக முழுமையுமே கீழ்ப்படிதல் என்ற பண்பின் செயல் வடிவமாய் உள்ளது. ஆதிக்க மனநிலைப் பிறழ்வு என்பது பாலியல் பலாத்காரமாக்கப்படுகிறது. தன் உயிர் வாழ்தலை நீட்டித்துக்கொள்ள வேண்டி ஆண், பெண்ணின் தொல் மனோநிலை சிதைந்து போகாமல் காக்கும் அரணாகிறான். பெண்ணியம் விரல் தொடும் இடத்தில் ஆண் உள்ளதால் ஆண், பெண்ணியத்தின் முதல் எதிரியாக்கப்படுகிறான். பாலற்ற நிலைதான் விடுதலையின் உச்சம் என்றாகும்போது ஓரினப் பால் புணர்வு இங்கு அதிகாரத்திற்கெதிரான செயல்பாடாக மாறும் போது உடல்களின் மீதான ஆதிக்கம் விலகும். எனவே பெண்,

www.padippakam.com



(1) திருமணம் மற்றும் குடும்ப அமைப்பிலிருந்து தன்னை முற்றாக விடுவித்துக் கொள்ளவேண்டும். (2) ஆணிடமிருந்து சுகத்தைப் பெறுதல் என்ற நிலையை ஒழித்து அவரவராகவே தமது தேவையைப் பூர்த்தி செய்தல் என்கிற நிலைக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ள வேண்டும். (3)நேரடி உற்பத்தி உறவில் ஈடுபடவேண்டும். (4) இனப்பெருக்கத்திற்கான தேவை ஏற்படும்போது மட்டுமே யோனி வழியிலான உடலுறவை மேற்கொள்ள வேண்டும் (5) ஓரினப் புணர்ச்சி, யோனி தவிர்த்த கூட்டுப் புணர்ச்சி, சல்லாபம் மேற்கொள்ளப்பட வேண்டும். (6) ஒழுக்கவியல் கருத்தாக்கங்களை மறுதலித்து மீற வேண்டும். (7) மரபு வழியான உணவு முறையைத் தவிர்த்து எளிய தயாரிப்புள்ள உணவுகளை மேற்கொள்வதோடு உணவுத் தயாரிப்பை இரு பாலருக்குமான செயலாக்க வேண்டும். (8) காலத்தைப் பற்றிய பயத்திலிருந்து பெண் விடுதலை பெற வேண்டும். இது கருப்பை தொடர்பான விஷயமென்பதால் யோனி வழிப் புணர்ச்சியைப் பெண்கள் தவிர்க்க வேண்டும் அல்லது கருத்தடைச் சாதனங்களை உபயோகிக்க வேண்டும். (9) கருக்கலைப்பைச் சாதாரணச் சமூக நிகழ்வாக்க வேண்டும். (10) ஆதிக்க நிறுவனங்களுடனான அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்துக் கொள்ள வேண்டும்.

**சிவக்குமார் & அருணா :** பெண் விடுதலையை முன் வைத்து அனைவருக்குமான விடுதலையைப் பேசலாம். இந்நோக்கில்,

(1) பால் ஒடுக்கு முறையின் பிரதானக் களங்கள் : (அ) 'உடல்' என்பதை உடம்பாக முன் வைக்கும் கருத்துருவங்கள் (ஆ) உடல்களின் மீதான கண்காணிப்பு (இ) உடல்களின் இணைவும் உற்பத்தியும் அதிகாரத்தால் கட்டுப்படுத்தப்படல். இவற்றின் பிரதானக் களம் குடும்பமே.

www.padippakam.com



2) பெண்—ஆண் என்கிற நிர்ணயிப்பிற்கான காரணிகள் : (அ) பாலுறுப்புகள் (யோனி+முலை) (ஆ) கர்ப்பப்பை தொடர்பான கூறுகள்.

3) பெண் மீதான ஒடுக்குமுறையில் பொருளியல் காரணிகளின் பங்கு: உபரி மதிப்பாகப் பெண்ணின் குடும்ப வேலை இருக்கிறது. முதலாளித்துவ அமைப்பின் மூலாதாரமாக இது இருக்கிறது. அரசியல், கருத்தியல் போன்ற அரசு கருவிகள் பெண்ணின் துணை நிலையை உறுதி செய்து மறு உற்பத்தி செய்கின்றன. இவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. தனியாக எதையும் குலைக்க முடியாது.

4) குடும்பம் பெண்மீது மட்டுமல்ல ஆண் மீதும் ஒடுக்குமுறையைச் சுமத்துகிறது.

5) பாட்டாளிகளுக்குள்ளும் பெண்ணே ஒடுக்கப் படுகிறாள். எனவே ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலைக் கான பார்வையாகப் பெண் நோக்கிலிருந்து வைக்கப் படும் கருத்துக்கள்தான் அமையமுடியும். அதிகாரத்திற் கெதிரான போராட்டத்தில் பெண்கள் இணையும்போது அங்குப் பாலற்ற பொதுக் கருத்தியல் தேவை.

6) பெண் தனக்கான மொழி, பார்வை, வாசிப்பு, எழுத்து, பாலியல் ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.

7) பெண்மை குறித்த வரையறைகளை மீறுவதி லிருந்தே பெண் விடுதலை சாத்தியமாகும். எனினும் முழு விடுதலை நோக்கிய முதல் கட்டச் செயல்பாடே இது.

8) அரசின் செயல்பாடுகளிலிருந்து பெண் ஒதுங்கி யிருப்பதைச் சாதகமாகப் பார்க்க முடியாது.

பெண் விடுதலை நோக்கிய தொடக்கநிலைச் செயல் களாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கலாம்: (1) உடலைப்

www.padippakam.com



பற்றிய மாயைகளை நீக்கி விஞ்ஞானப்பூர்வமான செய்திகளைப் பரப்பல். (2) ஆண்×பெண் என்ற உயிரியல் எதிர்வுமேல் கட்டமைக்கப்படும் அனைத்து ஆண்மை× பெண்மை கருத்துருவங்களையும் சிதைத்தல்; இக்கருத்துருவங்களை வலுப்படுத்தும் நிறுவனங்களை எதிர்த்துக் குலைத்தல், (3) இந்நிறுவனங்களின் அடிப்படையாக இருக்கும் 'மொழி'யே Gender Based ஆக இருக்கிறது; அதிகாரம் மொழி வழியும் மொழியாகவும் செயல்படுகிறது; எனவே மொழியைச் சிதைத்தல். (4) குடும்பத்தைச் சிதைத்தல்; கொம்யூன் வாழ்க்கையை முன் வைத்தல். (5) எதிர்பால் உடல் மூலமாகத்தான் பாலியல் இன்பம் என்பதை மறுத்துச் சுயபால் இன்பத்தை ஊக்குவித்தல்; இது உயிரினத்தின் Survival ஐப் பாதிக்குமென்றாலும் வேறு வழியில்லை.

**விஜி:** பெட்டி ஃப்ரைடன் கூறியது போலப் பெண்களைப் பாதித்துள்ள உண்மையான பிரச்சினை ஒன்று இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினை ஒரு பெயரில்லாத பிரச்சினை. ஏனெனில் பெயரிடுகிற உரிமை ஆண்கள் வசமே உள்ளது. இந்தச் சமூகத்தின் பொது அறிவாக நியாயப்படுத்தப்பட்டிருப்பது ஆணின் அறிவுதான். அவர்களின் நலன்களினடிப் படையிலானதுதான். நாங்கள் எங்களுக்கான அறிவுருவாக்கத்தில் எடுபடுவது இன்றைய உடனடித் தேவை. பெண்கள் தங்களுக்கான அறிவுருவாக்கத்தில் ஈடுபட்டுத்தான் இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பாரம்பரியங்களின் தொடர்ச்சிகளை ஆணாதிக்க நிறுவனங்கள் அறுத்தெறிந்திருக்கின்றன. ஆணாதிக்க நிறுவனங்கள் உருவாக்கியுள்ள மதிப்பீடுகள், வரையறைகளிலிருந்து நாங்கள் மீறித்தான் ஆகவேண்டும். வரலாற்றில் நாங்கள் அப்படி மீறிய போதெல்லாம் பைத்தியம், வக்கிரம், வித்தியாசமானவள், ஒழுக்கக் கேடானவள், ஆணின் தொடுகைக்கு,

அ—6

படிப்பகம்

www.padippakam.com



அலைபவள் எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறோம். இத்தகைய பெயரிடுதல்களை எதிர்த்து நிற்கும் திராணியுடையவளாகப் பெண் உருவாக வேண்டும்.

எங்களது உடலும் மனமும் ஆணாதிக்கச் சமூகத்தால் காலனியப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஒடுக்குமுறையிலிருந்து விடுபட வேண்டுமெனில் ஆண்களால் கட்டுப்படுத்தப்பட்ட வளங்களை நாங்கள் கைப்பற்ற வேண்டும். ஆண்கள் தங்களின் வளத்தைச் சேகரித்துக் கொள்ளும் கருவியாகச் செயல்படுவதிலிருந்து விலகவேண்டும். இதற்குச் சமூக ஒடுக்குமுறையின் அடிப்படை அலகாகிய குடும்பக் கட்டுகள் உடைக்கப்படவேண்டும். இது உடனடியாகச் சாத்தியமில்லாதபோது படிப்படியாகச் செய்ய வேண்டும். முதற்படியாகப் பொருளாதார ரீதியாக ஆணைச் சார்ந்திருத்தலை ஒழிக்க வேண்டும். ஆணின் ஊதியம் என்பது குடும்பத்தில் பெண் செய்யும் ஊதியத்திற்கும் சேர்த்துத்தான். சொத்துரிமை தவிர இந்த ஊதியத்திலான பங்கையும், மறுஉற்பத்தியில் எங்களின் பங்கிற்கான ஊதியத்தையும் எங்களுக்கு நேரடியாக வழங்கவேண்டும். பெண்களுக்கான பிரத்தியேக வேலைகள் நீக்கப்பட வேண்டும். குழந்தை வளர்ப்பில் 'கிரஷ்' களின் பங்கை அதிகப்படுத்தலாம். குழந்தைகளைக் கட்டாயமாக விடுதிகளில் தங்கிப் படிக்க வைக்கலாம். தாலி, சடை, உடை போன்றகுறியீடுகளைத் தகர்த்தெறியலாம். வரையறைக்குள் முடங்குவதெனப் பார்க்காமல் இதற்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வீட்டைப் பாதுகாத்தல், அன்பு செய்தல், திருமணம், குழந்தைகள் பெறுதல், தனது சுயத்தை மறுத்துக் கொள்ளுதல் ஆகியவையே மகிழ்ச்சி என எங்களுக்குத் தொட்டில் பருவம் முதல் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த அறிவுரைகள் எல்லாம் எங்களால் சரியாகக்

www.padippakam.com



கடைபிடிக்கப்பட்டு வந்தபோதிலும் எங்களில் யாரும் இதில் மகிழ்ச்சியடைந்ததில்லை. திருப்தியடைந்த தில்லை. பெண்கள் தங்களுக்குள் சிந்தித்துக் கொள்வது, சகப் பெண்களுடன் பேசுவது போன்றவற்றைக் கவனித்தால் இந்த உண்மை விளங்கும். ஆனால் இவற்றில் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்துவந்து விட்ட தாகப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளோம். பெண் அன்பு செய்பவள். பலகீனமானவள், மென்மையானவள் என்ப தற்கெல்லாம் அறிவியல் அடிப்படையில்லை. வரலாற் றுக்கு முந்திய காலகட்ட மண்டை ஓடுகளிலிருந்தும் குரோமோசோம்களிலிருந்தும் ஆணைக் காட்டிலும் பெண் சிந்தனை செயல்பாட்டிலோ பௌதிக ஆற்ற லிலோ குறைந்தவள் இல்லை என்பது வெளிப்படை.

பொருளியல், இன, சாதிய சமத்துவங்களெல்லாம் உருவாகாமல் ஆண்-பெண் சமத்துவம் மட்டும் உருவாகி விடப் போவதில்லை. சகலவிதமான விடுதலைக்கும் பொருளியல் விடுதலை அவசியமாகிறது. ஆனால், அதுவே போதுமான நிபந்தனை அல்ல. ரஷ்யா போன்ற நாடுகள் இதற்கு நல்ல உதாரணம்.

மொத்தத்தில் சைமன் டி போவே சொல்வதுபோல் "பெண் பிறப்பதில்லை. அவள் இந்தச் சமூகத்தால் உருவாக்கப்படுகிறாள்." இந்த உருவாக்கலில கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. கல்வித் துறையில் ஆணா திக்கம் ஒழிக்கப்படவேண்டும்.

தாய்மை, குழந்தை வளர்ப்பு போன்றவற்றைப் பெண்களின் இயற்கை என நான் கருதவில்லை.

**டாக்டர் தி.சு. சத்தியம்:** ஆணும் பெண்ணும் சமமாக இருந்தால் தான் சமூகம் சரியாய் இயங்கமுடியும். அரசு, சமயம், பொருளாதாரம் எனச் சகல துறைகள் மூலமாக வும் ஆண் ஒடுக்குமுறையைச் செலுத்துகிறான். ஒவ் வொரு ஆணும் பெண்ணும் நனவிலி மனத்தில் இந்த

படிப்பகம்

www.padippakam.com



ஒடுக்குமுறைக்குப் பழக்கப்பட்டுப் போயிருக்கிறார்கள். படித்த பெண்களும், இங்கே விடுதலை பேசுகிற ஆண்களும்கூட இதற்கு விதிவிலக்கல்ல. எனவே இங்கு ஆண்கள் முன்வைக்கும் கருத்துக்களை அப்படியே எடுத்துக் கொள்ள முடியாது. குடும்பம் சிறைப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதனை எப்படி உடைப்பது? ஏன் உடைப்பது? மனைவி. குழந்தை என்கிற சுமைகளிலிருந்து விடுபடும் நோக்கிலிருந்து நம்மையறியாமலேயே இக்கருத்து முன் வைக்கப்பட்டால் இது சரியான பாதையாக அமையாது. அரசு, அதிகாரம், பொருளாதாரம் எனச் சகலத்திலிருந்தும் விடுதலை வேண்டும் எனச் சொல்கிறோம். உலக வரலாற்றில் தனி மனிதம் முக்கியத்துவம் பெறும் போதுதான் பெண் விடுதலை என்கிற கருத்து உருவாகிறது. ஒட்டு மொத்தமான அறிவு வளர்ச்சி மனித சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இதனை எப்படிப் பயன் படுத்துகிறோம்? எந்த அளவிற்கு இது நன்மை அளித்திருக்கிறது? குழந்தைப் பராமரிப்பு என்கிற பொறுப்பிலிருந்து விலகுவது சரியா? குழந்தை தாயிடம் வளர்கிறபோதுதான் சரியாக வளர்கிறது. ஒரு குறிப்பிட்ட வயது வரை தாயின் அரவணைப்பு தேவை எனவே சில கடமைகளும் கட்டுப்பாடுகளும் தேவையாகத்தான் இருக்கின்றன. நடைமுறையிலிருந்து விலகி நின்று பெறும் யூகங்களின் அடிப்படையில் பேச முடியாது. வாழ்வின் அர்த்தம், மனித சமூக வளர்ச்சி முதலியவை கேள்விக்குரியதாக ஆகிவிடக் கூடாது.

**வழக்கறிஞர் ராமதாஸ்:** குடும்பத்தைச் சிதைப்பதா? அப்படியே வைத்திருப்பதா? சிதைப்பது என்கிற முடிவு இங்கே முன் வைக்கப்படுகிறது. ஆரம்பத்தில் குடும்பம் இல்லை, ரூசோ சொல்வது போல எப்போது 'இது என்னுடையது' என்கிற உணர்வு தோன்றத் தொடங்கியதோ அப்போது குடும்பம் தோன்றியது. நாளடைவில் இது ஆணாதிக்க நிறுவனமாக மாறியது. அதைத் தவிர்க்க

www.padippakam.com



வேண்டுமெனில் மாற்று என்ன? ரசியா, சீனாவில் நிலைமை என்ன? சீனாவில் குடும்பம் இறுக்கமாக இருக்கிறதே. ஆணும் பெண்ணும் உடலுறவில் பிறப்பதை அப்படியே தூக்கிப் போட்டு விட்டுப் போய்விட முடியுமா? மனிதக் குழந்தையைப் பொறுத்த மட்டில் குறிப்பிட்ட காலம் வரை பராமரித்து வளர்க்க வேண்டியிருக்கிறதே. பத்துவயதுக் குழந்தையைக் கூட நம்மால் தனியே அனுப்ப முடியவில்லை என்பதுதானே எதார்த்தம். சிதைந்த குடும்பங்களின் குழந்தைகள் முக்கால்வாசி தவறிழைப்பதாகச் சொல்கின்றனர். சமூகத்தின் அடிப்படை அலகுகுடும்பம். இதைச் சிதைத்தால் மாற்று என்ன? உங்கள் கட்டுரைகளில் இவை இல்லையே? ஆணுக்கும் பெண்ணுக்கும் உயிரியல் வேறுபாடு இருக்கத்தானே செய்கிறது? இது மாறுவதற்கு இன்னும் பல கோடி ஆண்டுகள் ஆகலாம், பெண்கள் சம்பாதித்து வருவதை ஆண்கள் பிடுங்கிக்கொள்கின்றனர். எனவே வெறும் பொருளாதார விடுதலை போதாது. மாற்று ஒரு கேள்விக் குறிதான் அதே சமயம் ஆணாதிக்கத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதா? தனியாக இருந்தால் பாதுகாப்பு இல்லாமல் போவதைப் பார்க்கிறோம். கம்யூனிச நாடுகள் ஏன் தோற்றன? எங்கேயோ ஒரு கோளாறு இருக்கத்தான் செய்கிறது. எல்லோரும் பிரம்மச்சாரிகள் ஆகிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமா? கன்னியர்கள் மனநிலையில் ஏதோ இழந்துபோனது 'வெளிப்படுமே. 35ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் இதையெல்லாம் பேசி இருக்கிறார்.

**கடலூர் இரா. நடராசன்:** நிறப்பிரிகை முன்வைத்துள்ள 3,4,5ஆவது கேள்விகளுக்கான பதில்களில் நான் அஸ்வகோஷுடன் உடன் படுகிறேன். ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் உடல் ரீதியில் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. குடும்பத்தைக் காப்பதில் மதம் முக்கியப் பங்கு வகிக்கிறது. பெண் தன் உடல் முழுவதும் மதத்தைச் சுமக்கிறாள். மதம் மட்டுமல்ல, மொழி ரீதியாகவும் ஒடுக்குமுறை இருக்கிறது, இதனையும் ஆராய வேண்டும்.

www.padippakam.com



**டாக்டர் பத்மா(மங்கை):** குடும்பம் பற்றி நிறையப்பேசு கிறீர்கள். இதை ஒரு Fear Complex ஆகப் பார்க்கிறேன். நடைமுறையிலுள்ள பிரச்சினைகள் வேறு; இது பற்றிய புரிதல் வேறு. பெண்மை— குறிக்கப்பட்டிருக்கும் வரை யறைகளே அதன் மீறலையும் அடக்கியுள்ளதாக அமை கிறது. எனவே இவ்வரையறைகளை மீறுவதற்கான கட்ட மைப்பும் மாற்று வகைப் பிம்பமாக நம்முன் உள்வாங்கப் பட்டிருக்கிறது. எனவே அத்தகைய மீறல் இந்த வரை யறைகளை மீட்டுருவாக்கம் செய்யவே பயன்படும். எனவே 'பெண்மை' என்பதைக் கருத்தியலாக மட்டுமே ஏற்றுக்கொண்டு ஆண்-பெண் பால் வேறுபாட்டை அதில் புகுத்தாமல் இருப்பதே நலமாக இருக்கும்.

நான் பெண் என்ற புரிதலும் எனது தனித்துவம் பற்றிய புரிதலும் உருவாவது ஒரு Process. அதனை ஆழமாக உணர்வதே Feminity என நான் கருதுகிறேன். அதையே பலமாகவும் கொள்கிறேன். அதை Exhibit செய்வது தேவையென்று இப்போது கருதவில்லை. குடும்பம் Economic Unit என்ற அளவில் இன்று இல்லை. As a Socialising agency it still has its validity. அது சமூக அடக்குமுறை அலகு என்னும் போது ஆண், பெண் இரு பாலருக்குமே பொருந்தும். இந்தச் சூழலில் இந்நிறுவனம் வழங்கும் சட்டகம் அவசியமாகக் கொள்ளப்படுகிறது குடும்பத்தைச் சிதைப்பது என்பது பாதுகாப்பை இழப்ப தாகி விடுகிறது. இதற்கு மாற்றீடு எது என்கிற கேள்வி இருபாலாரையுமே குலுக்கி விடுகிறது. சிதைக்கப்பட வேண்டும் என்பவர்கள் முன் குடும்பம் முழு வீரியத்தோடு பிசாசாய் நிற்கிறது. சிதைப்பதையே புரட்சியாய் நினைப்போருக்கு அது பாலியல் புரட்சிக் கான குறியீடாகிறது. இங்கே கருத்தியலடிப்படையில் இதனை நியாயமான போராட்டமாக அங்கீகரிக்க வேண்டியசூழல் நிலவுகிறது. ஆனால் உடனடி நிபந்தனை யெனக் கொள்ள வேண்டியதில்லை. கருதுகோள் அளவில்

www.padippakam.com



குடும்பக்கட்டுமானத்தின் செயற்கைத் தன்மையை ஏற்றுக் கொண்ட பின்னர் நடைமுறைச் சிக்கல் அவ்வப்போது Negotiate செய்யப்பட வேண்டியவை.

பெண்பால் ஓரினப் புணர்ச்சியைப் போர்க் கருவியாகக் கருதுபவர்கள் ஆண் பெண் உறவிலான உள்ளார்ந்த முரண்பாட்டை — இருவருமே Objects of desire ஆகவும் எதிர்க்க வேண்டியவர்களாகவும் உள்ளதை —உணர வேண்டும்.

பெண்ணியம் ஒரு அரசியல் சக்தியாக வளர்ந்து வரும் நிலையைப் பற்றிய பரிசீலனையை மேற்கொள்ள வேண்டும்.

**தி.சு. சத்தியம்:** குடும்பத்தைச் சிதைப்பது மையமாக இருக்கிறது. அரசு மற்றும் இதர சமூக நிறுவனங்கள் மாற்றத்துக்குள்ளாகி உதிரும்போது குடும்பம் உதிரும். பெண் விடுதலையை வெறும் ஆணிடமிருந்தான் விடுதலையாகப் பார்க்கமுடியாது. எல்லாக் கட்டுக்களுமில்லாத சமூக விடுதலையாக அது இருக்கும். ஒட்டு மொத்தமான விடுதலையாகப் பார்க்காமல் குடும்பத்தை மட்டும் சிதைப்பது எப்படி?

**செ. ச. செந்தில்நாதன் (த. ம. இ.) :** இங்கு மொழிகூட ஆணாதிக்கக் கருவியாகவே உள்ளது. மனுஷியை அது கவனித்ததேஇல்லை எஸ்.என்.நாகராசன்கூட 'மாந்தனின்' விடுதலையைத்தான் பேசுகிறார். அறிவியல் கண்டுபிடிப்புக்களைத் தமிழ்ப்படுத்தும்போது 'உமிழ்ப்பான்', 'ஏற்பான்', 'கணிப்பான்' என்று தொழில் நுட்பத்தைக் கூட ஆண் சார்ந்ததாகப் பார்க்கும் போக்குள்ளது. மார்க்சிய இயக்கங்கள் கூட நூறு சதம் ஆண் தலைமையில் தானே உள்ளன. ரோசா ஒரு விதிவிலக்கு. பெயருக்கு முன் அம்மா பெயரைத் தலை எழுத்தாகப்போட எத்தனை பேர் முன் வந்துள்ளனர்?

www.padippakam.com



**ராஜன் குறை :** குடும்பம் பற்றிய நிறப்பிரிகையின் நிலைப்பாடு என்ன?

**அ. மா :** குடும்பம் என்பது சிறிய வடிவிலான அரசாக விளங்குகிறது என்கிற மார்க்சியக் கருத்தாக்கத்தையும் பாலியல் பொருளியல் ஒடுக்குமுறைகளின் களனாக அது செயல்படுவதையும் இத்தகைய ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலை பெற குடும்பக் கட்டுகள் சிதைக்கப்பட வேண்டும் என்பதையும் ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தில் அரசு போலவே குடும்பமும் உதிர்ந்து போய்விடும் என்பதையும், அத்தகைய உதிர்வை நோக்கிய செயற்பாடுகளை இப்போதிலிருந்தே தொடங்க வேண்டும் என்பதையும் நிறப்பிரிகை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. தவிரவும் குடும்பம் என்பது மனித உயிரிகளின் மனித நேயத்தை வரம்புக்குட்படுத்தி விடுகிறது. தன் மகன், தன் பெற்றோர் எனப் பார்வைகள் குறுக்கப்படுகின்றன. குடும்ப வரம்பிற்கு அப்பாற்பட்ட அனைவரும் 'மற்றவர்களாக'— தங்களது இருப்பை அச்சுறுத்துபவர்களாக— எதிர்கொள்ளப்படுவதால் சமூகப் பொறுப்பற்ற சுய நலமிக்கவர்களாகக் குடும்ப உறுப்பினர்கள் மாற்றப்படுகின்றனர். ஆனால் இக்குடும்ப நிறுவனம் என்பது இதர சமூக நிறுவனங்களுடனும் உறவுகளுடனும் கட்டுண்டு கிடக்கிறது. எனவே குடும்பத்தைச் சிதைப்பதற்கான முயற்சிகள் இதர ஒடுக்குமுறை நிறுவனங்களைச் சிதைப்பதற்கான முயற்சிகளுடன் இணைய வேண்டும். ''குடும்பத்தைச் சிதைத்தால் எல்லாம் சரியாகி விடும்'' என்கிற குரலைப் புரட்சிகரமாக ஒலிப்பதென்பது இதர ஒடுக்குமுறைகளுக்கெதிரான நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கு வாய்ப்பாகி விடக்கூடாது.

**வேல்சாமி :** கிராமங்களில் குடும்ப உறவின் நீட்சியாகவே சாதிய உறவுகள் உள்ளன. சாதிகளுக்குள் இன்றும் கூட இனக்குழுப் பண்புகள் செயல்படுகின்றன. தமிழ்க் கலாச்சாரமாக இங்கே முன் வைக்கப்படுவது

www.padippakam.com



ஒட்டுமொத்தமான கலாச்சாரம் இல்லை; அடித்தட்டு மக்களின் கலாச்சாரத்தை இது உள்ளடக்கியதில்லை. எத்தனையோ சாதிகளில் அய்யர் இல்லாமல், தாலி இல்லாமல் திருமணம் நடைபெறுகின்றன. அறுத்துக் கட்டுவது மட்டுமில்லை, 'கற்பு' என்கிற கருத்தாக்கமே கூடப் பல சாதிகளுக்குள் இறுக்கமாகக் கடைபிடிக்கப்படுவது கிடையாது. சாதி தாண்டிய பாலியல் மீறல்கள் மட்டுமே தீவிரமாக எதிர்கொள்ளப்படுகின்றன. மற்றவை அனுசரித்துக் கொள்ளப்படுகின்றன. குடும்பத்தைச் சிதைப்பது என்ப'வற்றையெல்லாம் விவாதிக்கும் போது இந்த நடைமுறை உண்மைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அந்த அடிப்படையில் செயல் வடிவங்களை முன் வைப்பது அவசியம்.

**பழமலய்** : பால் ஒடுக்குமுறையின் பிரதான களங்களில் ஒன்று சொத்துரிமையின்மை. பெண் மீதான ஒடுக்குமுறைகளில் ஒன்று பாலுறவுச் சுதந்திர மறுப்பு. பெண்-ஆண் என்கிற நிர்ணயிப்பிற்கான காரணிகளாக எதுவும் இருக்கக் கூடாது. பெண்மீதான ஒடுக்குமுறையில் பொருளியலின் பங்கே முதன்மையானது. இதனைக் குலைப்பதற்குக் கருத்தியலைச் சிதைப்பது முன் நிபந்தனையாகிறது. பெண் மீதான ஒடுக்கு முறையில் குடும்பத்தின் பங்கு அதிகம். இன்றைய சூழலில் இதன் சிதைப்பைக் கருத்தியல் தளத்தில் தொடங்கி இதர தளங்களுக்கு விரிவாக்க வேண்டும். உடனடியான மாற்று வடிவங்களாகச் சுயமரியாதைத் திருமணம், சரிபாதி இட ஒதுக்கீடு முதலியவை அமைய வேண்டும். ஒடுக்குமுறைகளுக்கெதிரான விடுதலைப் பார்வையாக ஒடுக்கப்பட்டவர்களின் நோக்கிலிருந்து வருவதே சரியாக இருக்க முடியும். பெண் தனக்கான அறிவுருவாக்கத்தில் ஈடுபட்டுத்தான் ஆகவேண்டும். பெண்மை வரையறைகளை மீறுவதிலிருந்தே பெண் விடுதலை தொடங்குகிறது. போர்த்தந்திரத்தோடு அதனை மேற்கொள்ள வேண்டும். சமூகப் பிரச்சினை

www.padippakam.com



களுக்கான போராட்டங்களோடு இம்மீறல்கள் இணைக்கப்பட வேண்டும். அரசியல் பங்கேற்பில் பெண்கள் ஊக்குவிக்கப்படுதலே சரியாக இருக்கும். இவ்விவாதங்கள் பெண்கள் மத்தியிலும் கிராமங்களிலும் நடத்தப்பட வேண்டும். ஆண்கள் ஆலோசனைகள் வழங்கலாம்; முடிவெடுப்பது பெண்களாகவே இருக்க வேண்டும்.

வேல்சாமி சொன்னது எனக்கு முக்கியமாகப் படுகிறது. திரெளபதி ஆறாவதாகக் கர்ணன் மீது ஆசை கொள்கிறாள். ராமாயணத்தில் ஏக பத்தினி விரதம் வலியுறுத்தப்படுகிறது. பெரிய பையனுக்குச் சொத்து என்கிற உடைமைவர்க்கச் சிந்தனையோடு ராமாயணத்தை இணைத்துப் பார்க்க வேண்டும். திரெளபதி இயற்கை; ஏகபத்தினி செயற்கை. கூட்டுக் குடும்பங்களில் பிரச்சினை அதிகமில்லை. நகரங்களில்தான் குடும்பம் பிரச்சினையாக இருக்கிறது. மேட்டிமைத்தன்மை மிக்கதாய் இருக்கிறது இந்தியச் சமுதாயத்தில் பெரிய மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்து விடவில்லை.

**சாரு :** கிராமம் சரி, கூட்டுக்குடும்பம் பரவாயில்லை என்பதெல்லாம் ரொம்பவும் ஆபத்தான போக்குகள். கூட்டுக் குடும்பம் மேலும் அடிமைத்தனமானது. கணவனுக்கு மட்டுமல்ல, குடும்பத்திலுள்ள மூத்தவர்கள் அனைவருக்குமே அங்குப் பெண் அடிமையாகிறாள்.

**மதியழகன் :** கிராமங்களிலுள்ள நிலைமை குறித்து வேல்சாமி சொன்னது சரிதான். குடும்ப உறவினர்களுக்குள் உடைமை உடையாமல் காப்பதற்காகவே ஒருதார மணம் கூட வற்புறுத்தப்படுகிறது.

**சிவக்குமார் :** குடும்பம் என்றால் என்னவென்று வரையறுத்துக் கொள்வது நல்லது எனப்படுகிறது. இப்படிச் சொல்லலாமா? தேர்ந்தெடுப்பதில் பெண்களுக்கு உரிமை இல்லை. கண்காணிப்பும் கட்டுப்பாடும் மேற்கொள்ளப்படுவது.

படிப்பகம்

www.padippakam.com



**சரண்யா (சென்னை) :** செயல்பாட்டு அடிப்படை, கோட்பாட்டு அடிப்படை எனக் குடும்பத்தை இரண்டாக வரையறுக்க வேண்டும். குழந்தைப் பிறப்பு, வளர்ப்பு, இதர வீட்டுப் பணிகள் என்பன செயல்பாடுகள். குடும்பத் தலைமை, சொத்துரிமை, தந்தைவழி அமைப்பு, உள்ளார்ந்த ஆணாதிக்கம் என்பன கோட்பாட்டளவில் செயல்படுகின்றன.

**அ. மா. :** பாலியல் ஒடுக்குமுறை, உடல் அரசியல் எனச் சொல்கிறார்களே இவற்றையும் வரையறையில் உள்ளடக்க வேண்டாமா?

**டாக்டர் பஞ்சு :** நாம் யாரும் மூல ஆண்/பெண் அல்ல. இரண்டாயிரமாண்டுக் காலச் சிந்தனைச் சுமையோடுதான் ஆண் பெண் என்றெல்லாம் பேசுகிறோம். எனவே நமது சிந்தனைகள் வரம்புக்குட்பட்டவைதான். ஆண் என்பது யார்? உடல் ரீதியான வேறுபாடுகளைத் தாண்டி ஆண் பெண் எனப் பிரித்தது அதிகாரம்தான், குடும்பம் உடையும் போது அதிகாரத்தை இழக்கிறான். அதிகாரத்தை இழந்து இவன் என்ன ஆவான்? தாயுரிமைச் சமுதாயத்தில் எல்லாம் பெண்ணே என்றிருந்தது. எந்தச் சூழலில் இது முடிவுக்கு வந்தது? ஆண் எங்கே முளைக்கிறான்? உளவியல், பொருளியல் காரணிகள் முக்கியம். எங்கே அதிகார உணர்வு இல்லை? தோழமை உணர்வில் இல்லையா? அங்கும் Ego வருகிறது. இந்த அதிகார உணர்வை ஆண் வர்க்கம் பயன்படுத்திவருகிறது. இந்த அதிகார வெறியை நம் ஒவ்வொருவருக்குள்ளிருந்தும் தூக்கி எறிவது எப்படி? அதிகாரம் என்பது மனித சாராம்ச இயற்கை- (Essential Human nature). மனித குழந்தை விசயத்தில் ஒரு குறிப்பிட்ட காலம்வரை பராமரிப்பு அவசியமாக இருக்கிறது. குஞ்சைத் தூக்கவரும் பருந்தை விரட்டத் தாய்க்கோழிதானே முன் வருகிறது. சேவல் இல்லையே! எனவே தாய்மை அடிப்படையில்

www.padippakam.com



வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. குடும்பம் அதன் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. குடும்பத்தைச் சிதைப்பதென்பது அதிலுள்ள நல்ல அம்சங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை.

## உணவு இடைவேளைக்குப் பின் விவாதம் தொடர்கிறது

**அ. மா. :** மிருகங்களிலிருந்து மனிதன் வேறுபடுகிற அம்சங்களில் உழைப்பின் பங்கைப் பற்றிய மார்க்சியக் கருத்தாக்கங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் ''மனித சாரம்'' என அதிகாரத்துவச் சமூகம் வரையறுத்த கருத்தாக்கங்களுள் சிக்கி நாம் சாராம்ச வாதத்தில் வீழ்ந்துவிடக் கூடாது. தாய்மை, பெண்மை என்பதும் அதிகாரம்,மனித இயற்கை என்பதும் அதிகாரத்துவச் சமூகத்தின் புனைவுகளேயன்றி இயற்கையல்ல. இந்தப் புனைவுகளைச் சுமந்தே வாழ்கிறோம். கோச்சடை வீட்டிலிருந்து இரண்டு முயல் குட்டிகளைக் கொண்டு வந்து வளர்த்தேன். ஆண் முயலின் துடுக்குத் தனம், கூடுதலாய்ச் சாப்பிடுவது, வீடு தாண்டி ஓட முயலும் தன்மை போன்றவற்றையும் பெண் முயலின் மென்மை, குறைவாகச் சாப்பிடுதல், ஆணின் காதைச் சொறிந்தும் தூங்க வைக்கும் பணிவிடை பற்றியும் தினந்தோறும் என் குழந்தைகள் என்னிடம் சொல்வார்கள். ஆறு மாதங்களாகியும் அவை குட்டிகள் போடாததை ஆராய்ந்தபோதுதான் அவை இரண்டுமே ஆண் முயல்கள் என்பது தெரியவந்தது. குழந்தைகள் மனத்தில் கூட இப் புனைவுகளை எப்படிச் சுமத்தியுள்ளோம் பாருங்கள். விஞ்ஞான வளர்ச்சியில் உடலியல் ரீதியான வேறுபாடுகள் கூட எதிர்காலத்தில் மறையலாம். பெண்கள் வேலைக்குப் போவது அதிகரித்துத் தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம் குறைந்தவுடன் மார்பகங்களின் அளவு குறைந்து வருவதை நாம் பார்க்கவில்லையா? மார்பகம் பெரிதாக இருப்பதுதான் இயற்கை, அழகு

படிப்பகம்

www.padippakam.com



என்றெல்லாம் முன் வைப்பதில் இன்றைய நுகர் பொருள் பண்பாட்டின் நலன்கள் ஊடாடி இருப்பதை நாம் மறந்து விடக் கூடாது.

குடும்பம் பாதுகாப்பை அளிக்கிறது என்கிற வாதமும் ஆபத்தானதுதான். எல்லா ஒடுக்குமுறைகளும் 'பினாமி' காரணங்களை முன் வைத்தே செயற்படுகின்றன. ரயில்கள் நேரத்திற்கு வருகின்றன என்று சொல்லித்தான் நெருக்கடி நிலை புகுத்தப்பட்டது. வேல்சாமி பத்தாயிரம் கோழிகளை நோய் நொடியில்லாமல், சரிவிகித உணவு கொடுத்துப் பாதுகாப்பது முட்டைகளுக்குத்தான். முட்டை இடுவது குறைந்தவுடன் அவை கறிக்கடைக்குப் போய்விடும். குடும்பம் தரும் பாதுகாப்பும் ஒடுக்குமுறையின் திரைதான்.

**சிவக்குமார்:** சான்பிரான்சிஸ்கோவில் ஒரு சோதனை நடத்தினார்கள். ஒரே குழந்தைகளுக்கு ஆண் உடையும் பெண் உடையும் ஒரு குறிப்பிட்ட காலங்களுக்கு அணிவிக்கப்பட்டு வளர்க்கப்பட்டபோது குழந்தைகளின் நடவடிக்கைகள் வேறு வேறாக அமைந்தன.

**விஜி :** சிங்கப்பூரில் குழந்தைகளுக்கு மூன்று நாட்கள் மட்டுமே தாய்ப்பால் கொடுக்கப்படுகிறது. அப்புறம் புட்டிப்பால்தான்.

**பழமலய் :** எல்லாவற்றையும் மறுதலித்துக் கொண்டே போகக்கூடாது. பால் ஊறும்போது கொடுத்தால் என்ன?

**சாரு :** பாலை மட்டுமா கொடுக்கிறீர்கள். பாலோடு நிலப்பிரபுத்துவ மதிப்பையும் சேர்த்தல்லவா புகட்டுகிறீர்கள். அதனால்தான்.

**கோமதி :** தாய்ப்பால் தான் தூய்மையானது என்கிற வாதத்திலும் பொருளில்லை. சமீபத்திய ஆய்வுகளின்படி தாய்ப்பாலிலும் டி டி. போன்ற கொடிய விஷங்கள்

www.padippakam.com



குழந்தை தாங்குமளவைக் காட்டிலும் அதிகமாக இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடைசி இணை குரோமோசோம்களில் மட்டுமே பால் வேறுபாடு இருக்கிறது. அதிலும் ஒரு குரோமோசோம் ஒரே மாதிரியாகவும் கடைசி ஒரு குரோமோசோம் மட்டுமே வேறுபட்டும் இருக்கிறது. கடைசி குரோமோசோமில் ஆணுக்கு இல்லாத நிறைய ஜீன்களைப் பெண் கொண்டுள்ளாள். நிறக்குருடு Haemophilia போன்ற நோய்கள் பெண்ணுக்கு வரும் வாய்ப்பு குறைவு.

பால் சுரப்பிகளால் ஆணுக்குத் தனிப்பட்ட இன்பம் எதுவும் இல்லாதபோதும் பால்சுரப்பிகளின் அளவை வைத்து அழகை நிர்ணயிப்பதெல்லாம் அதிகாரத்தால் உருவாக்கப்பட்ட கருத்துக்களே. மனிதன் மற்றும் இதர பாலூட்டிகளைக் காட்டிலும் பசுவின் பால்சுரப்பிகளை இப்போது பயன்படுத்துகிற அளவிற்குக் கூடப் பயன்படுத்தாமல் இருந்தால் மற்ற விலங்குகளைப்போலவே சிறிதாகிவிடும். மார்பு பெரிதாக ஆவதற்காகச் சில புத்தகங்களில் குறிப்புகள் கூடக் கொடுக்கப்படுகின்றன. இதை என்ன சொல்வது!

**ராமதாஸ் :** பெண்கள் பிள்ளை பெறுவது இயற்கை. பெண்ணடிமைத்தனத்தைப் போக்க இயற்கையான அனைத்தையும் விட்டு விடுவோம் என்பது சரியல்ல.

**ராஜன் குறை :** யோனி மையப் புணர்ச்சியைத் தவிர்த்து ஏனைய புணர்ச்சி வகைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்றார் சாரு. பிள்ளை பெறுவது, வளர்ப்பது போன்ற வேலைகள் மகிழ்ச்சி அளிப்பதாய்ச் சமூகத்தில் கற்பிக்கப்படுகிறது. ஆனால் அது உண்மையானதல்ல என்றார் விஜி. பிரபஞ்சம் தரும் அச்ச உணர்விலிருந்து தப்ப குடும்பம் தரும் பாதுகாப்புணர்வு தேவை என்றார் பஞ்சு.

www.padippakam.com



மனிதனது இயல்பான உந்துதல்களைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஒரு பெண் உடலுடனான உறவு நாம் தவிர்க்க நினைத்தாலும்கூட அதை மீறி யோனிப் புணர்ச்சிக்கு இட்டுச் செல்வது அனுபவத்தில் நிகழ்வது. பிள்ளை பெறுவது போன்ற விஷயங்களில் மகிழ்ச்சி இயல்பானதாகவே கூட அமையலாம். இப்படிக் கூறுவது அதைப் பாராட்டுவது என்பதில்லை. மனிதனுக்கு மிக எதிர்மறையான விசயங்களும்கூட மகிழ்ச்சியளிக்கின்றன. உடம்பில் ஒரு புண் ஏற்பட்டால், காயங்கள் ஆறாமல் இருந்தால் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதைப் போன்ற Masouchism கூறுகள் மகிழ்ச்சியளிக்கின்றன. மற்றவர்களைத் துன்புறுத்துவதும்கூட மகிழ்ச்சியளிக்கிறது. குடும்ப உறவுகள் தரும் பாதுகாப்பு உணர்வுகள் இயல்பானவை என்பதால் அவற்றை நியாயப்படுத்த முடியாது. இத்தகைய மன உந்துதல்களைப் பிரித்தறிய வேண்டும்.

**அ.மா :** உயிரியல் தூண்டலையும் (Biological instirts) கலாச்சாரத் தூண்டலையும் (Cultural instirts) குழப்பிக் கொள்ளக்கூடாது. வரலாற்று ரீதியாகக் கட்டமைக்கப்பட்டுச் சமூகம் உருவாக்கிய தூண்டல்களை இயற்கை எனச் சொல்லக் கூடாது. உடல் உறவையும் குழந்தை பிறப்பையும் கட்டாயமாக இணைத்துப் பார்க்க வேண்டியதில்லை. உடல் உறவில்லாமலேயே குழந்தை பிறப்பை விஞ்ஞானம் சாதித்துவிடவில்லையா?

**முத்துகிருஷ்ணன்:** குழந்தை பிறப்பு தற்செயலானது—Biological Accident—தவிர்க்க விரும்பினால் தவிர்க்கக் கூடியது தானே.

**ராஜன் குறை :** அ.மா. பொருத்தமான பதங்களை உபயோகித்தார். நான் கூற விரும்பியது—சில உந்துதல்கள் இயற்கையானவையாக இருந்த போதும்கூட அவற்றை ஏற்றுக் கொண்டுவிட முடியாது என்பதுதான். உந்துதல்களைப் பகுத்தறிவது என்பது வேறு. எத்தகைய

www.padippakam.com



உந்துதல்கள் வரவேற்கப்பட வேண்டியவை என யோசிப்பது வேறு. குழந்தைகள் பிறப்பது தவிர்க்க முடியாதது என்பது போன்ற தோற்றத்தைத் தகர்க்கவேண்டும். மனித மறு உற்பத்தியில் ஈடுபடுவது அவசியமா என அனைவரும் சிந்திக்க வேண்டும்.

நான் சொல்ல விரும்புவது இதுதான். Masochism போன்றவை இயல்பாகவே மகிழ்ச்சி தருவதாக இருந்தாலும் சரியானதாக இருக்க முடியாது. மாறாக இயல்பான உந்துதல்களையும் எதிர்த்து நின்று அறிவு சார்ந்த மதிப்பீடுகளை உருவாக்கும் திண்மையை மனித உயிரி பெற வேண்டும். குழந்தை வளர்ப்பு போன்றவற்றிலுள்ள இன்பம் இயல்பானதல்ல; சமூகத்தால் மிகைப்படுத்தப் படுவது என்று கூறுவதால் மட்டும் அதைக் குறைத்து மதிப்பிடுமாறு யாரையும் தயாரித்துவிட முடியாது. வேறு அறிவுசார்ந்த மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே சில உந்துதல்களையும் மகிழ்ச்சியையும் துறக்கவும் வேறு சில வற்றை வளர்க்கவும் இயலும். குடும்ப உறவுகளின் பாதுகாப்பு, கதகதப்பு இன்னபிறவற்றை அருவருத்து விலக்கவும் யோனிப் புணர்ச்சி போன்ற உந்துதல்களைக் கடந்து செல்லவும் இத்தகைய மதிப்பீடுகள் அவசியம்.

**டாக்டர் கே. ஏ. குணசேகரன்:** கலாச்சார ரீதியில் கட்டுப்படுத்தப்படுதல் நடக்கத்தான் செய்கிறது. கிராமத்தில் தை மாதத்தைக் கணக்கு வைத்துத் திருமணம் தள்ளிப்போகும் போது, தன் ஆசையை வெளிப்படுத்த முடியாத பெண் பேயாடுகிறாள். சிறு குழந்தைகளும், வயதான பெண்களும் பேயாடுவதில்லை.

**பலமலய்:** வயசுக்கு வந்த பெண்பேயாடுவதற்குத்தேவை இருக்கிறது. தேவை காரணமாகவே ஆண்-பெண் வித்தியாசம் தோன்றியிருக்கிறது. பெண்ணை அடக்காதவனாக மாற வேண்டுமேயொழிய முற்று முழுதாக எல்லாவற்றையும் நிராகரிப்பது தேவையா?

www.padippakam.com



**அருணன் :** ஒடுக்குகிற அதிகாரத்தின் முன் ஆண்-பெண் இருவருமே அடிமைகள்தான். ஒரு ஆணின்மீதோ, பெண்ணின் மீதோ அதிகாரம் தொடுக்கும் வன்முறைத் தாக்குதல்களை-கருத்தியல் தளத்திலும் உடலியல் தளத்திலும் சமமாகவே பார்க்கவேண்டும் போலீசால் ஒருபெண் உடலியல் வன்முறைக்குள்ளாகும் வலிக்கும் ஒரு ஆண் பிறப்புறுப்பில் அடிபடும்போது அனுபவிக்கும் வலிக்கும் வேறுபாடு இல்லை.

பெண்ணானவள் ஆண் மற்றும் அதிகாரம் ஆகிய இரண்டின் வன்முறைக்கும் ஆளாகிறாள் எனக் கூறும் பெண்ணியலாளர்கள், பெண்ணுக்கான விடுதலையை ஆணிடமிருந்து பெற வேண்டுமென்கின்றனர்.

அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது, அதன் கருவியாய்ச் செயல்படும்போது ஜெயலலிதாவும் கருணாநிதியும் ஒன்றுதான். இதில் ஆணிடமிருந்து பெண்ணுக்கு விடுதலை என்பது சமூகத்தை என்றென்றைக்கும் இரு பெரும் பிளவுகளாகப் பிரித்து வைத்து அதன் மூலம் தம் அதிகாரத்தைத் தக்க வைக்க முயலும் ஆதிக்கப் பகுதியினருக்கே சாதகமாய் அமையும். இத்தகைய பிரிவினையை உருவாக்குவதற்கு அதிகாரம் பல்வேறு அழகியல் பண்பாட்டுப் புனைவுகளை உருவாக்குகிறது. உ—ம், பாக்யராஜ், சிவசங்கரி, ராஜேஷ்குமார், மாலைமலர் ...இத்தகைய புனைவுகளால் பெண் ஒடுக்கப்படுகிறாள்.

உடலியல் ரீதியில் ஆண்-பெண் வேறுபாடு என்பது பிறப்புறுப்பு, பால் சுரப்பிகள் ஆகியவற்றில் மட்டுமே உள்ளன. எனில் ஆணுக்கும் பெண்ணுக்குமான வித்தியாசம் முற்றிலும் மனோவியல் ரீதியிலும் கருத்தியல் ரீதியிலும் சமூகத் தளத்தில் அதிகாரத்தால் புனையப்படுகிறது.

www.padippakam.com



மனிதகுல விடுதலை பற்றிப் பேசும் மார்க்சியவாதிகள் இவை குறித்தும், குடும்பம் பற்றியும் சரியான கருத்தாக்கங்களையும் மாற்றுக்களையும் சமூகப் புரட்சியோடு இணைக்கவில்லை. சோவியத்திலும் கியூபாவிலும் ஆண்-பெண் உறவுகளைச் சுதந்திரமானதாக மாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடரவில்லை.

எனவே அழகியல், பொருளியல், சமூக, பாலுறவு ஒடுக்குமுறைகளிலிருந்து ஆண் அடிமையையும் பெண் அடிமையையும் விடுதலை செய்ய ஆண்-பெண் சார்பற்ற மொழியையும், வாழ்முறையையும் நாம் கண்டாக வேண்டியிருக்கிறது.

**செல்வி** (கடலூர்): ஆணாதிக்கத்தை எதிர்க்கக் குடும்பத்தையும் சிதைக்காமல், தனக்குரிய வரைமுறைகளையும் மீறாமல் தனது மீறல் மற்றவர்களையும் பாதிக்காமல் மெல்ல முன்னேறும்போது செயலளவில் செய்ய வேண்டிய முதல் காரியம், குழந்தைகளின் பெயருக்கு முன்னால் தந்தை பெயரின் முதல் எழுத்தோடு தாய்ப் பெயரின் முதல் எழுத்தையும் வைக்க வேண்டும்.

இது பெண்ணியம் பற்றிப் பேசவந்த கூட்டமாகப் படவில்லை. Sexism பற்றித்தான் பேச்சு நடக்கிறது. பெண்ணில் ஆணை, ஆணில் பெண்ணை எப்படிக் காண்பது என்பதல்ல பிரச்சினை. பெண் எப்படி சமூக, அரசியல், மத ரீதியில் பாதிக்கப்படுகிறாள், மற்றவர்களைப் பாதிக்காமல் இந்தப் பாதிப்புக்களைக் களைவதெப்படி, தன்மீது அழுத்தப்பட்ட ஆணின் பாதச் சுவட்டை அவனுக்கு வலிக்காமல் எடுப்பது எப்படி என்றே பார்க்க வேண்டும்.

**மாரியம்மாள் (புதுவை)**: Sex வேறுபாடு உண்டு; ஆனால் Gender வேறுபாடு இல்லை. Gender வேறுபாட்டை உடைக்க வேண்டும். ஆண்-பெண் இருவரையும்

படிப்பகம்

www.padippakam.com



ஒரு மனித உயிரி என்றளவில் பார்க்கவேண்டும். தாய்மை பொறுப்பு தேவையில்லை. குழந்தை பெறுவதும் பெறாததும் அவரவர் விருப்பம். அவரவர் Individuality யே முக்கியம்.

**க. சுப்பையா (புதுவை)** : அடிமைகளிலும் அடிமையாகத் தலித் பெண்கள் இருக்கிறார்கள். தலித் பெண்ணை உயர் சாதிப் பெண்ணே அடிமைப்படுத்துகின்றாள். ஈனமான காரியங்களுக்கெல்லாம் தலித் பெண்கள் பயன் படுத்தப்படுகின்றனர். குடும்பக் கட்டுகள் தலித் பெண்களிடம் கிடையாது.

**வில்லியனூர் ரமேஷ்** : அதிகாரம், மனிதசாரம் (Essential Human Nature) பற்றி மேலும் ஆழமான விவாதங்கள் தேவை.

**இன்பவல்லி (ஆசிரியை)** : சங்க காலப் பெண்கள் வீரமிக்கவர்களாக இருந்திருக்கின்றார்கள்; அறிவு சான்ற புலவர்களும் இருந்திருக்கின்றனர். பொறுமை, சகிப்புத் தன்மை முதலியவற்றை இயற்கையாகப் பெற்ற பெண்கள் முன்னேற வழிவகைகள் விஜி எழுதிய 'பெண் கல்வி' நூலில் உள்ளன. பெண்களுக்கான உரிமைகள் கேட்டுப் பெறுவதல்ல கிளாரா செட்கின் சொன்னதுபோல அதை அவர்களே எடுத்துக் கொள்ள வேண்டும். சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் பலர் களத்தில் குதித்தனர். எனினும் சுதந்திரம் கிடைத்த பின்னும் பெண்கள் நிலை உயரவில்லை. நாடு சிறக்க நங்கை நல்லார் உயர வேண்டும். ஆனால் தகுதியற்ற ஆடவர்கூட பெண்கள் மேல் அதிகாரம் செலுத்தும் அவலம்தான் நடைமுறை. பெண்களைத் தட்டி எழுப்பி அவர்கள் தம் நிலை உணரச் செய்வது நம் கடமை. சின்ன வயதில் படித்த கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு பெண்ணுடன் பளபளக்கும் பொன் முட்டை ஒன்றும் பிறக்கும். உயிரே போனாலும்

படிப்பகம்

www.padippakam.com



முட்டையைப் பாதுகாக்க மறக்காதே என அவளுக்குச் சொல்லி வைப்பார்கள். அவளும் அப்படியே மிகுந்த துன்பங்களுக்கிடையில் அதைக் காத்திருப்பாள். ஒரு நாள் அது உடைந்து விடும். சீழும் இரத்தமுமாய் அருவருப்பாக அது வெளிப்படும். கற்பைப் பாதுகாக்கச் சொல்வதைக் கேலி செய்யப் பிறந்த கதையாகத்தான் இது இருக்க வேண்டும். தோழிகளே! பெண் விடுதலைக்காகச் சிந்தியுங்கள்; தோழர்களே! உங்கள் வீட்டு அடிமைப் பெண்களுக்குச் சுதந்திரம் கொடுங்கள்.

**டாக்டர் அ. ராமசாமி :** உயிரியல் ரீதியான பால் வேறுபாடுகள் உடலியல் ரீதியிலும் வெளிப்படுகின்றன. குழந்தை பெறுவதில் ஆணைக் காட்டிலும் பெண்ணுக்குச் சிரமம் அதிகம். எனினும் நடைமுறையில் அதனைத் தீர்மானிக்கும் சக்தியாகப் பெண் இல்லை. தனது சொத்து, அதிகாரம், கருத்து ஆகியவற்றை நிலை நிறுத்தும் ஆணின் நோக்கமே அதைத் தீர்மானிக்கிறது. இத்தகைய நோக்கின் ஆட்சிப் பிரதேசமான குடும்பமே பெண் மீதான ஒடுக்கு முறையின் பிரதான களம். இதன் வழியேதான் பொருளியல், அரசியல், கருத்தியல் ஆகியன செயலாற்றுகின்றன. இந்த அடிப்படைகள் தகர்க்கப்பட வேண்டும்; கருத்தியல் தகர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

மாற்று எதையும் முன் வைக்காமல் குடும்பத்தைச் சிதைத்தலை முன்வைப்பது சரியான திசையிலான போராட்டமாக அமையாது. இந்த மாற்று பெண் விடுதலையை மட்டும் சார்ந்திராமல் ஒட்டுமொத்த விடுதலையையும் சார்ந்திருக்க வேண்டும். இந்த மாற்றில் குடும்பம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமின்றி எல்லை விரிந்திருக்கும். அவற்றைச் செயல்படுத்துவதற்கான நபர்களின் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கும். இந்த மாற்று உடனடிச் சாத்தியமில்லை என்பதால் இன்றைய குடும்ப உறுப்பினர்களுக்குச் சரியான கருத்தியல்கள் தரப்

www.padippakam.com



படவேண்டும். இது பொருளியல், அரசியல் மாற்றங்களுக்கும் வழி வகுக்கும். அவை பெண்மை குறித்த இன்றைய வரையறைகளையும் மாற்றும்.

**தேநீர் இடைவேளைக்குப் பின்னர் டாக்டர் அ இராமசாமி கூட்டுக் கருத்துக்களைத் தொகுத்து வாசித்தார். ஒப்புதல் பெறப்பட்டவை கீழே தரப்படுகின்றன.**

## கூட்டுக்குரல்

1. பொருளியல், கருத்தியல், உடலியல், அரசியல் களங்களில் பெண் மீதான ஒடுக்குமுறை மேற்கொள்ளப் படுகிறது. குடும்பம், மதம், கல்வி போன்ற நிறுவனங்கள் வழியாக இது செயற்படுத்தப்படுகிறது. இவற்றில் குடும்பத்தின் பங்கு மிக முக்கியமாகிறது.

2. உயிரியல் சார்ந்த காரணங்கள் தவிர ஆண்-பெண் எனப் பிரித்துப் பார்க்க வேறெந்தக் காரணிகளும் இல்லை. மனிதத் தன்னிலையில் ஆண், பெண் எனப் படிந்துள்ள வேறுபாடுகள் பாலாதிக்கச் சமூகத்தால் வரலாற்று ரீதியில் கட்டமைக்கப்பட்ட— தகர்க்கப்பட வேண்டிய— ஒரு புனைவே.

3. பெண் மீதான ஒடுக்குமுறையில் அரசியல், பொருளியல், கருத்தியல் எனத் தனித்தனியே பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. பொருளியல் காரணிகளுக்குத் தீர்மானகரமான பங்கிருந்த போதிலும் வெறும் பொருளியல் விடுதலை பெண் மீதான ஒடுக்குமுறையை நிறுத்தி விடாது. ஒடுக்குமுறைக்கெதிரான நடவடிக்கைகளில் மனிதர்கள் ஈடுபடுவதற்கு நிலவும் கருத்தியல் பிடியிலிருந்து விடுதலை பெறுவது அவசியம். எனவே கருத்தியல் ஒடுக்குமுறையைக் குலைப்பதற்குக் கொடுக்க வேண்டிய முன்னுரிமையையும் முக்கியத்துவத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம்.

www.padippakam.com



4. சகலவிதமான ஒடுக்குமுறைக்கும் ஆட்படக்கூடிய மனநிலையையும் அதற்கேற்ற சுயத்தையும் படைக்கும் களனாகக் குடும்பம் செயல்படுகிறது. உடல்களின் மீதான கண்காணிப்பிற்கும் பாலியல் ஒடுக்குமுறைக்குமான பிரதான கருவியாகவும் இது செயல்படுகிறது. அரசியல் விழிப்புணர்வு அற்றவர்களாகவும், அதிகாரத்திற்கும் இன்றைய அமைப்பிற்கும் எதிராகப் போராடாதவர்களாகவும், தனது உறுப்பினர்களை அது பயிற்றுவிக்கிறது. குடும்பத்துடன் இணைந்த பிற ஆதிக்க அமைப்புக்களைச் சிதைக்காமல் குடும்பத்தை மட்டும் சிதைத்து விடமுடியாது. எனினும் இன்றைய சூழ்நிலையில்கூட ரத்த உறவினடிப்படையிலான குடும்ப உறவுகளை நாம் சிதைக்க முடியும். சாத்தியமுள்ள இடங்களில் தோழமை அடிப்படையிலான 'கம்யூன்' வாழ்க்கை முறையை ஊக்குவிக்கலாம். இங்கே சமையல், துணி துவைப்பு, குழந்தை வளர்ப்பு போன்ற குடும்பப் பணிகளைச் சமூகமயப்படுத்தலாம்.

5. இன்றைய அறிவு உற்பத்தி, பரப்பல் முதலியன ஆணாதிக்கச் சமூக நிறுவனங்களாலேயே கட்டமைக்கப்பட்டு சமிக்ஞையாக்கப் பட்டுள்ளன. இதற்கு எதிராக இந்த ஒடுக்கு முறைகள் குறித்து ஆய்வு செய்வதும், பாலாதிக்கத்திற்கெதிரான புதிய அறிவு, மொழி, சொல்லாடல் முதலியவற்றைக் கட்டமைப்பதும் இன்றைய உடனடித் தேவை. இந்த அறிவுருவாக்கத்தில் பெண்கள் முன்னிலை வகிப்பதும் பால் ஒடுக்குமுறையை எதிர்த்த கருத்துருவாக்கங்கள் பெண்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவதும் பெண் விடுதலைக்கு அடிப்படையாக அமைகிறது.

6. பெண்மை குறித்தான வரையறைகள் அனைத்தும் பெண்ணை ஒடுக்குவதற்காகப் பாலாதிக்கச் சமூகம் காலங்காலமாக உருவாக்கி வைத்தவைகளேயாகும். எனவே இந்த வரையறைகள் எதனையும் ஏற்றுக்கொள்ள

www.padippakam.com



முடியாது. இவற்றை மீறியே ஆகவேண்டும். இந்த வரையறைகளை மீறுவதென்பதையும் இந்த வரையறையினடிப்படையில் பெண்கள் மீது நிலவுகிற ஒடுக்குமுறைகளை எதிர்ப்பது என்பதையும் ஒன்றிலிருந்து ஒன்று விலக்கிப் பார்க்க வேண்டியதில்லை. அதே சமயத்தில் இன்றைய வரையறைகளின் அடிப்படையிலான ஒடுக்குமுறைகளை எதிர்ப்பது மட்டுமே (உ.ம்: வரதட்சிணை எதிர்ப்பு முதலியன) பெண் விடுதலைக்கும் போதுமென்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாகவும் இவை அமைந்து விடக் கூடாது.

7. அரசின் செயல்பாடுகளிலிருந்து பெண்கள் ஒப்பீட்டளவில் விலகி இருந்தபோதும் அரசின் கருத்தியல் செயல்பாட்டில் பெண்கள் விலகியிருக்கவில்லை. எனவே அரசியல் செயல்பாடுகளிலிருந்து மட்டும் விலகியிருப்பதென்பது கூடுதலாக அவர்களுக்குள்ள ஒரு உரிமையை இழப்பதே.

**தொடர்ந்த விவாதம்** : ஒடுக்கப்படுபவர்களிலும் ஒடுக்கப்படுவர்களாகப் பெண்கள் இருப்பதால் பெண் நோக்கிலிருந்து வைக்கப்படும் கருத்துக்களே அமையமுடியும். பெண் விடுதலைக்கான போராட்டத்தில் பெண்களே தலைமை ஏற்க வேண்டும் என்கிற கருத்தில் ஒருமித்த பார்வை ஏற்படவில்லை. ராமதாஸ், திண்டிவனம் ராதா, பழமலய், ராமசாமி ஆகியோர் மேற்குறித்த கருத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டனர். இதற்கு எதிராக அஸ்வகோஷின் கருத்தோடு தான் உடன்படுவதாகக் கூறினார் பத்மா. கருத்தியல், தலைமை எனத் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்றார் பஞ்சு. "பெண்கள் எத்தகைய மதிப்புகள் வைத்துள்ளார்கள் என்பதை வைத்துத்தான் தலைமையைத் தீர்மானிக்க முடியும். தலித் தலித்தாக இருந்தால்தான், நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளுடனிருந்தால்...?'' என வினவினார் சாரு; பெண்

www.padippakam.com



விடுதலை ஆணிடமிருந்தல்ல—சமூகத்திடமிருந்து. எனவே ஆண்களின் பங்கும் முக்கியம் என்றார் சத்யம். அதிகாரத்துவ நோக்கிலிருந்தே தலைமை என்கிற கருத்தாக்கமே தகர்க்கப்பட வேண்டும் என்றார் அருணன். சரியான நோக்குடைய யாரும் தலைமை தாங்கலாம் என்றார் மாரியம்மாள்.

**அருணன்** : மனித விடுதலை ஒரே குரலுக்குள் அடங்காது. பல குரல்கள் சேர்ந்தே இருக்கும் பாட்டாளி வர்க்கப் பார்வை என்பதையும் கேள்விக்குள்ளாக்க வேண்டும்.

**பஞ்சு:** பாட்டாளி, பாட்டாளியைவிட விவசாயி, விவசாயியைவிட அவன் மனைவி, மனைவியிலும் தலித் விவசாயியின் மனைவி சாருவின் பார்வையில் விபச்சாரி, அதிலும் தலித் விபச்சாரி... (இடைமறித்து சாரு: ''விபச்சாரிக்குச் சாதி ஏது?'') இந்த வரிசையில் ஒடுக்கப்படுபவரின் பார்வை என்றா பார்ப்பது? கூட்டு முயற்சியாகவே விடுதலைப் பார்வை அமையவேண்டும்.

**ராஜன் குறை** : சரியான கருத்தியலை வளர்த்தெடுக்க யாரும் உதவமுடியும். அதைப் பெண்கள்தான் செய்தாக வேண்டுமென்று கூறமுடியாது. ஆனால் பெண்கள் முன்னின்று செய்யவேண்டிய முக்கியமான வேலை பெண்கள் குறித்த புனைவுகளைத் தகர்ப்பதே. பெண்கள் தங்களைப் பற்றிய விவரங்களை எழுத வேண்டும். அவர்களது பாலுறவு நாட்டங்கள், வேட்கைகள் முதலியவை ரகசியமாக்கப்படக்கூடாது. Erica Jongin எழுத்துக்கள்போல் தமிழில் எழுதப்படவேண்டும்.

**பத்மா** : எங்களுக்கு வேறு முக்கிய வேலைகள் இருக்கின்றன.

**ராஜன் குறை** : இதை ஏற்க முடியாது. அவசியம் செய்யப்படவேண்டிய முக்கியமான வேலை இது. வேறு

படிப்பகம்

www.padippakam.com



எத்தனையோ வேலைகள் இருந்தாலும் கொஞ்சமாவது இந்த வேலையைச் செய்யலாமே.

**பழமலய் :** இன்னொன்று, மார்க்ஸ் எங்கல்ஸ பற்றிய இந்த நி. பி. இதழ்க் கட்டுரையில் மார்க்ஸ் காதலைப் போற்றுவது வெளிப்படுகிறது. ஆண்-பெண் வேறுபாடுகள் கருதப்படக்கூடாது என்றால் மார்க்ஸ்-ஜென்னியுடனான உறவை இப்படி Personalise பண்ணியது சரியாக இருக்குமா?

**ரவிக்குமார்:** ஹால் த்ராபர் மார்க்சின் எழுத்துக்களை இரண்டாகப் பிரித்துக் கொள்வதைக் கவனிக்க வேண்டும். இந்தக் கட்டத்தில் மார்க்ஸ் மிகவும் Emotional being ஆக இருந்திருக்கிறார். மார்க்சின் எல்லாக் கருத்துக்களையுமே சரி எனப்பார்க்க வேண்டியதில்லை.

**ராஜன் குறை :** ட்ராட்ஸ்கி இறக்கும்போது மனைவியின் பெயரை உச்சரித்தாராம். மார்க்ஸ் இந்த மேற்கோளில் ஆன்மாவுக்குக் காதல் தேவை என்கிறார். ரோசா லக்சம்பர்க் இயக்க வேலைகளின் காரணமாகத் தன் தந்தை இறக்கும்போது தான் அருகில் இருக்க முடியாமற் போனதை மிகுந்த வருத்தப்பட்டுக் கவித்துவத்துடன் எழுதியுள்ளார். இவ்விதமாகக் காதல், பாசம் போன்ற உணர்வுகளை யார், எவ்வளவு அழுத்தமாகப் புகழ்ந்து எழுதினாலும் நாம் அதனைக் கடந்து பார்த்தாக வேண்டும். என்னைப் பொறுத்தவரை இதுபோன்ற உறவுகள் தேவையில்லை. இன்று இந்தக் கூட்டத்திலுள்ள நண்பர்களை நேசிக்கிறேன்; காதலிக்கிறேன். நாளை வேறொரு ஊரில் வேறு நண்பர்களை நேசித்தபடி இருப்பேன். ஒருவனுடனான பிணைக்கப்பட்ட உறவு என்பது முற்றிலும் ஒதுக்கப்பட வேண்டியதும், ஒதுக்கப்படக்கூடியதுமாகும்.

**பூபாலன் (வளவனூர்):** பெண் விடுதலை என்பதே ஒரு மத்தியதர வர்க்கப் பிரச்சினைதான். எனினும் நாம்

படிப்பகம்

www.padippakam.com



இங்கே எடுத்தமுடிவுகள் பாட்டாளி மக்களையும் ஒடுக்கப் பட்டவர்களையும் சென்றடைய வேண்டும். கதை' கட்டுரை போன்றவற்றால் இது சாத்தியமில்லை. நாடகம், குறும்படங்கள், முதலியவற்றை இதற்குப் பயன்படுத் தலாம்.

**ராஜன் குறை:** கூட்டுக் குரலை நாம் இங்கே உருவாக்கி யிருக்கிறோம். ''இப்போதைக்கு உடனடியாகக் குடும்பத் தைச் சிதைப்பது சாததியமில்லை'' என்ற கருத்தை எதிர்த்து அவ்வாறு செய்வதற்காக நாம் குரல் கொடுக்க வேண்டும். குடும்ப அமைப்பில் ஆதிக்கத்திற்குட்படாதத் தனி நபர்களை நாம் தொகுக்க வேண்டும். சாத்திய முள்ளவர்கள் உடனே குடும்பத்திற்கு வெளியே வந்து நிற்க வேண்டும். நாம் அதைத் தூண்டுவதும், ஊக்கப் படுத்துவதும் வரவேற்பதும் அவசியம். அத்தகைய ஒரு அழைப்போடு இந்த விவாதம் முடிவடைய வேண்டும்.

**அ. ம.:** இன்று சங்க கால மகளிர் பெருமையைச் சிலாகிப்பவர்கள் முதல், தாய்மை இயற்கை என்போர், குடும்பம் பாதுகாப்பு என உணர்வோர், குடும்பம்/ திருமணம் ஆசியவற்றைத் தகர்க்க வேண்டும் என்போர், யோனிப் புணர்ச்சியைத் தவிர்க்க வேண்டும் என்போர் வரை பல்வேறுபட்ட கருத்து மட்டங்களிலிருந்து இந்த விவாத அரங்கில் பங்கு பெற்றுள்ளனர். இதில் பலர் தங்கள் கருத்துக்களை முன் வைக்கக்கூட இல்லை. எனவே நீங்கள் சொல்வதுபோன்ற ஒரு அழைப்பை முன்வைப்பது சராசரி மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துமா?

**ராஜன் குறை:** தங்களது கருத்துக்களுக்காக வாதிடக் கூட முன்வராதவர்களின் கருத்துக்களையும் கணக்கி லெடுத்துக்கொண்டு சராசரிக் கருத்தை முன்வைக்க வேண்டும் என எப்படிச் சொல்கிறீர்கள்?

**அ. மா.:** நீங்கள் சொல்வது சரிதான். பெண் விடுதலை என்றால் ஆபாசச் சுவரொட்டிகளைக் கிழிப்

www.padippakam.com



பது, வரதட்சிணையை எதிர்த்து ஊர்வலம் போவது என்பது மட்டுமே என்கிற நிலையிலிருந்து பிரச்சினையின் ஆழத்தைத் தொடுகிற அளவிற்கு விவாதத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதில் வெற்றி பெற்றிருக்கிறோம். இத்தகைய கருத்துக்களை நாம் பரவலாக்க வேண்டும்; ஒரு பௌதிக சக்தியாக மாற்றவேண்டும். அ நன்பின் இத்தகைய அறைகூவல்களை எழுப்புவதென்பதே விரும்புகிற விளைவுகளை ஏற்படுத்தும். இப்போது இதனை வற்புறுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

விவாதம் இரவு ஏழு மணிக்கு முடிந்தது. விவாதம் முடிந்த அடுத்தடுத்த நாட்களில் பெண்ணியம் தொடர்பான தங்களது சிந்தனைகளைக் கோவையிலிருந்து ஞானியும் பெங்களூரிலிருந்து தமிழவனும் அனுப்பியிருந்தனர். அவை கொஞ்சம் சுருக்கப்பட்டுக் கீழே தரப்படுகின்றன.

**ஞானி :** உலக அளவில் ஏகாதிபத்தியம் வலுப்பெற்றும் சோசலிசத்திற்கான இயக்கம் சிதைந்தும் வருகிற இக்கால நிலைமைகளில் ஏகாதிபத்தியம் எங்கெல்லாம் எத்தகைய வடிவங்களில் நுழைந்து தன் அதிகாரத்தை இறுக்கி வருகிறது என்பது பற்றியும், சோசலிசத்திற்கான இயக்கங்கள் அதன் குறைகளை நீக்கி எத்தகைய முறைகளில் புதுப்பிக்க வேண்டும் என்பதையும் ஆழமாக ஆராயவேண்டியுள்ளது.

ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளின் மீது சகல துறைகளிலும் படை எடுப்பை நிகழ்த்துகிறது. இங்குள்ள அரசு நிருவாகங்களும் கட்சிகளும் ஏகாதிபத்திய நலன்களை உள்வாங்கிச் செயல்படுகின்றன. அரசதிகாரத்திற்கெதிரான இயக்கங்களை நோக்கி மக்கள் செல்வதைத் தடுக்க வணிகக் கலாச்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் கூட்டு மனப்பாங்கு, கூட்டு செய்திறன், இலட்சிய உணர்வு, அறவேட்கை ஆகியவை அழிக்கப்பட்டு உடலியல் ரீதியான காமத்திற்குள் மக்கள் அமிழ்த்தப்படுகின்

படிப்பகம்

www.padippakam.com



றனர். இந்தச் சூழலில்தான் திருமணம் தவிர பெண்ணுக்கு வேறு கதியில்லை என்பதும், ஆண் தன் போகத்திற்காகப் பெண்ணை எப்படிப் பயன்படுத்தினாலும் தவறில்லை என்பதும் 'குழந்தை வேண்டாம் கருவைக் கலைத்துவிடு' என்ற முறையில் பலமுறை கருக் கலைப்பின் விளைவாகப் பெண்கள் கடுமையான நோய்க்குள்ளாவதும் தொடர் கிறது. பெண்கள் தம்மை அழகுபடுத்திக் கொள்ளவும் கற்பிக்கப்படுகின்றனர். பெண் தன் உடலை வைத்து ஆணை வசப்படுத்துவதும் இந்தச்சூழலில்தான் நேர்கிறது. குடும்பத்திற்கு வெளியே நிறுவனங்களில் ஆளுமையை அடக்கி நேர்மை கெட்டு வீரமழிந்து வரும் ஆண்கள் குடும்பத்திற்குள் மனைவிமார்களை அடிமைப்படுத்து வதும் இந்தச் சூழலில்தான். குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அன்பு இல்லை, சமத்துவம் இல்லை. பணம், அதிகாரம் போன்றவைகளே குறிக் கோளாகிவிட்ட சமூகச் சூழலில் குழந்தை வளர்ப்பிற்கு மேல் லட்சியங்கள் செயல்படுவதில்லை. பெரும்பாலான மத்தியதர வர்க்க நிலை இது. பெண்கள் வேலைக்குச் செல்வது இச்சூழலை மாற்றவில்லை. குடும்பத்தைவிட்டு வெளியேறினாலும் திரும்பத் திரும்ப இச் சீர்கெட்ட முதலாளியச் சூழலில் சுற்றி வருவதைத் தவிர வேறு வழி யில்லை. சமத்துவத்திற்கான பெண்களின் கோரிக்கை முதலாளியச் சூழலைத் தகர்ப்பதற்காக அல்ல. குடும்ப வேலையை கணவன்-மனைவி சம அளவில் பகிர்ந்து கொண்டாலும் இவற்றால் ஏகாதிபத்தியத்தை வலுப் படுத்தும் சமூகச் சூழலில் உடைவு ஏதும் நேர்ந்துவிடப் போவதில்லை. குழந்தை வளர்ப்பில அதிகப் பொறுப் புள்ள பெண்கள் வாழ்க்கைப் பற்றிய எதார்த்த நோக்கை இறுக்கமாகக் கொண்டுள்ளார்கள். வெளி வாழ்க்கையில் அதிகம் பங்குபெறும் ஆண்கள் எதார்த்த உணர்வில் குறைந்திருக்கிறார்கள். பெண்கள் மத/பழமைப் பிடிப் புடையவர்களாக அரசியலார்வம் குறைந்து இருப்பதற்கு இது காரணம். ஆண்களின் அரசியல் ஈடுபாட்டை

www.padippakam.com



பெண்கள் குரூரமாய்த் தாக்குவதும் அதனால் ஆண்களில் பலர் வலிமையழிந்து போவதும் இன்றுள்ள எதார்த்தம். ஒன்றோடொன்று சிக்கியுள்ள இப்பிரச்சினைகளை எங்கு தொடங்கி அறுப்பது?

ஆண்-பெண் என நாம் வேறுபடுத்திப் பேசுவது உடலியல் அடிப்படையில்தான். இதற்கு அதிகப் பொருளழுத்தமில்லை. ஆண்-பெண் வேலைப் பிரிவினையைத் தொடர்ந்து ஏற்பட்ட வேறுபாடுகள், ஆதிக்கம், அடிமைத் தனம் ஆகியவை வரலாற்றில் வைத்துப் பொருள் படுத்த வேண்டிய அம்சங்கள். வரலாற்றில் துல்லியமான விளக்கங்கள் கிடைப்பது இல்லை. இன்றைய தேவைகளை வைத்து முன்னைய வரலாற்றைப் பொருள்படுத்துகிறோம். வரலாற்றில் குடும்பம் முதலியவை எவ்வாறு தோன்றின என்றெல்லாம் ஆராய்வதிலுள்ள வரையறைகளின் தவறுகள் பற்றி நாம் மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டும். ஒருதார மணம்தான் இலட்சியம் அல்லது இலட்சியமில்லை எனப் பேசும்போதும் இத்தகைய கவனம் தேவை. மார்க்ஸ்-எங்கல்ஸ் கூற்றுக்கள் நமக்கு வேதமாக இருக்க முடியாது. அங்குமிங்கும் சில வெளிச்சங்கள் கிடைக்கலாம். இதுவும் தீவிரமான தேடலிலேயே கிட்டும். பெண்ணியம் பற்றிய பிரச்சினையை வரலாற்றாய்வு பற்றிய பிரச்சினையாக மாற்றிப் பயனில்லை. இதனை முழுமையான கூற்று என்று எடுத்துக் கொள்ள வேண்டியதுமில்லை.

ஆண்-பெண் என்பவை ஆழ்ந்த அர்த்தத்தில் பொருள்படக் கூடிய சொற்கள். உற்பத்திச் சக்திகளை ஆண் இயல்புடையவை என்றும் உற்பத்தி உறவுகளைப் பெண் இயல்புடையவை என்று கூறுவதும் இப்படித்தான். ஆணுக்குள் பெண்ணும், பெண்ணுக்குள் ஆணும் கலந்திருப்பதாகச் சொல்வதும் சிவன், சக்தி, அர்த்தநாரீசுவரர், யிங்யாங் என்றெல்லாம் முரணிகளின் இயக்கங்கள்

www.padippakam.com



பற்றிச் சொல்வதும் இப்படித்தான். ஆண்-பெண் கவர்ச்சி முற்றிலும் பாலியல் அடிப்படையிலானதுதானா, மேலும் ஆழமான அர்த்தங்கள் உண்டா என்பது புரிய வில்லை. இனப்பெருக்கத்திற்கு ஆண்-பெண் சேர்க்கை அவசியம் என யாரும் தத்துவம் பேச வேண்டியதில்லை. இனப்பெருக்கம் அவசியம் என்றால் அதன்பின் குழந்தைப் பேறு, கல்வி, வளர்ப்பு, பாதுகாப்பு, முதலாளியம், இறுதி யில் ஏகாதிபத்தியம் அவசியம்தான் என்றாகும். உடல் தினவு தீர்க்க சேர்க்கை அவசியமெனப் பேசுவது மனிதத் தரத்திலிருந்து கீழிறங்குவதில் முடியலாம். பாலியல் கட்டுப்பாடுகள் மூலம் மதமும் அரசும் தன்னைக் காத்துக் கொள்கின்றன என்பது ஒற்றைப் பரிமாண வாதம். பாலியல் உணர்வுகளை விடுதலை செய்வதன் மூலம் புரட்சி வந்துவிடும் என்பது மாயை.

இன்றைய நிலையில் என்ன செய்யலாம்? ஆடம்பரப் பொருள் வேட்கைக்கு இடம் தேவையில்லை. இன்றைய கல்வி முறை மூலம் சிறுவர்களைச் சமூக உணர்வற்றவர்க ளாக மாற்றுவதைத் தவிர்க்கும் முயற்சி தேவை. உடல் உறவுக்காகத் திருமணம் என்ற கட்டுப்பாட்டை மதிக்கத் தேவையில்லை. நிறுவனங்களில் உத்தியோக உயர்வுக் காக மாட்டிக் கொள்ள வேண்டியதில்லை. அதிகாரங் களை எந்த இடத்திலும் கேள்விக்குள்ளாக்க வேண்டும். பெண் தன்னை அலங்காரத்திற்கு அடிமையாக்கிக் கொள் வதை விட்டொழித்து ஆணைப் போல உடுக்கலாம், பழகலாம், கராத்தே கற்றுக் கொள்ளலாம், ஆயுதந்தரிக்க லாம். இயக்கங்கள் தம் உறுப்பினர்களுக்கு விதவைத் திருமணம், கலப்புத் திருமணம் ஆகியவற்றின் முக்கியத் துவத்தை உணர்த்தலாம். புரட்சி இயக்கத்திலுள்ளவர் களுக்குத் திருமணம் தேவையில்லை. குழந்தைகள் அறவே கூடாது. காதல் பற்றிய மயக்க உணர்வுகள் தேவை யில்லை. குடும்பம் என்கிற அமைப்பைத் திட்டமிட்டு உடைக்கவேண்டியதில்லை. அவை தானாகவே கலகலத்து

படிப்பகம்

www.padippakam.com



வருவதைக் கண்டு கொள்ளலாம். சோசலிசம் இந்த நூற்றாண்டில் இல்லை. அடுத்த நூற்றாண்டில் சாத்தியமா? தெரியவில்லை. எனினும் சோசலிச நெறி நமக்குள் வாழ்க்கை நெறியாகத் தொடர்ந்துதான் ஆக வேண்டும். குடும்பத்திற்கு மாற்று சோசலிசம் தான். இடையில் குடும்பத்திற்கு உள்ளும் வெளியும் கலவரங்களோடுதான் நாம் வாழ்ந்தாக வேண்டும். கலவரம், விபத்து, சாவு என்பதெல்லாம் நம் காலத்தில் இயல்பாகி வருகின்றன. சாவு சுகமல்ல. அர்த்தத்தோடு சாவது சுகம். மரியாதை.

**தமிழவன் :** பெண்ணியம் மேல்நாட்டுச் சிந்தனை. கீழைச் சிந்தனையிலிருந்து இது வரவில்லை. நமக்கு இரண்டும் வேண்டும். பெண்ணியத்தில் பல வகை உண்டு. மார்க்சீயப் பெண்ணியமே நமக்குப் பொருந்தும். ஆனால் பெண்ணியத்தை நம் சூழலில் புரிந்து கொள்ள நம் கண்ணகி, காரைக்காலம்மையார் என்றுதான் தேட வேண்டும். பெண்ணடிமைக்குக் கண்ணகிதான் உச்ச உதாரணம். கண்ணகி சிலையை உடைக்க தமிழ்ப் பெருமை அனுமதிக்குமா? தமிழ்ப் பெருமை என்பது தமிழர்களின் பெருமை என்பதைத் தாண்டி தமிழ் ஒலி என்ற கற்பிதத்தின் பெருமையாய் மாறிவிட்டது. ஆங்கிலச் சொற்களைப் போட வேண்டும் எனவும், தமிழ்ப் பெயரே வைக்க வேண்டும் என்பதில் கற்பிதத்தை நம்பும் மூட நம்பிக்கை உள்ளது. கற்பிதத்தை உண்மையாக மனத்தில் பதிந்திருக்கும் ஆதிக்க உணர்வு எது? இது ஒரு 'சென்சார்ஷிப்' மனோநிலை. பெண்/ஆண், தீண்டத் தக்கவன்/தகாதவன், தனித் தமிழ்/கலப்படத்தமிழ், கற்பு/பரத்தமை எனப் பிரிக்கும் மனோநிலை. தலித்தைக் கொடுமை செய்பவன், பெண்ணை உடலாய் விலங்காய்ப் பார்ப்பவன், ஒலியைத் தமிழ் ஒலி/வேற்று ஒலி எனப் பிரிப்பவன் எல்லோரும் அடிப்படையில் ஆதிக்க வெறியர்கள் நம்மிடையே எத்தனை வெறியர்கள்? ஒரு வெறி கண்ணில் பட்டால் இன்னொரு வெறி படமாட்டே

www.padippakam.com



னென்கிறது. வர்க்க வேறுபாடுகள் பற்றிப் பேசுபவன் லம்பாடிகளை, நாயுடுகளை விரட்ட வேண்டுமென்கிறான்.

தலித் பிரச்சினையும் பெண்ணியப் பிரச்சினையும் பின்னிப் பிணைந்தவை. ஒதுக்கிவைக்கப்பட்ட இரு பிரிவினரின் நிலை பற்றிய பிரச்சினைகள். இவர்கள் எழுத்து என்னும் கலாச்சாரத்திற்குள் உள்ள அதிகாரத்தால் தண்டிக்கப்பட்டவர்கள். ஆவணங்கள் எழுதப்பட்ட 18 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் ஆதிவாசிகளின் நிலம் பறிக்கப்பட்டது. அதுபோல பெண்ணும் எழுத்துக்களிலெல்லாம் தாயாய், அழகுப் பொருளாய், பூஜிக்கத் தக்கவளாய் ஸ்டீரியோ டைப் ஆக்கப்படுகிறாள்.

அல்துஸ்ஸரின் மறு உற்பத்தி என்ற புரட்சிகரமான கருத்தியல் (கருத்தியல் வேறு, கருத்துருவம் வேறு) பெண்ணின் வீட்டு வேலையை உழைப்பாளியின் தொழிற்சாலை வேலையுடன் இணைக்கிறது. தொடர்ந்து இவ்வழியே சிந்தித்தால் பல பிரச்சினைகள் தெளிவு பெறும். □

www.padippakam.com

# 6

# அமெரிக்க அரசை விமர்சித்த மூன்று லெஸ்பியன் கைதிகளின் பேட்டி

அமெரிக்கா என்றால் எப்படியிருக்கும்? ''கலாச் சாரச் சீரழிவுடன், ஜனநாயகத்துடன், பின்பற்ற தக்க சந்தைப் பொருளாதார அமைப்புடன் இருக்கும் 'முன்னேறிய நாடு' என்று **தினமணி** பதிலளிக்கலாம். இந்த தமாஷ்களை விட்டுவிட்டுப் பார்த்தால் அமெரிக்காவை அடையாளம் காண இந்த மொழி பெயர்ப்பு ஒருவேளை உதவலாம். அரசியல் கைதிகளுக்கான பிரத்தியேகமான லெக்ஸிங்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள **சூஸன் தோஸன்பர்க், லிண்டா இவான்ஸ், லாரா வைட் ஹார்ன்** என்ற மூன்று லெஸ்பியன்களின் பேட்டி. பேட்டி எடுத்தவர் யாரென்று தெரிய வில்லை.

அ—8

படிப்பகம்

www.padippakam.com



1988-ஆம் ஆண்டிலிருந்து சிறையில் இந்த மூவரும் உள்ளனர். 'அமெரிக்க அரசாங்கத்தின்கொள்கைகளைஎதிர்த்து, விமர்சித்து, மாற்ற முயன்றதற்காக' இவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். மேலும் 1983-85 காலகட்டத்தில் நடந்த அமெரிக்க இராணுவ தளவாட நிலையங்கள் மீதான தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்ற தலைமறைவு அமைப்புகளுடன் 'இவர்களுக்குத் தொடர்புண்டு' என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த மூவருடன் **ஆலன் பெர்க்மன், மரிலின் பக், டிம் ப்ளாக்** ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டரை வருட சிறைவாசத்துக்குப் பின்பு அமெரிக்க அரசாங்கம் இவர்கள் மீது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளது. சூஸன் தோஸன் பர்க், டிம் ப்ளங்க், ஆலன் பெர்க்மன் மீதான குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டு விட்டன. 1985-ஆம் ஆண்டு கிரனடா மீது அமெரிக்க இராணுவம் படையெடுத்ததைக் கண்டிக்கும் வகையில் அமெரிக்கத் தலைமைச் செயலகம் அருகில் வெடிகுண்டு வைத்த குற்றத்தை லாரா, லிண்டா, மரிலின் ஆகியோர் ஒப்புக்கொண்டுவிட்டனர். இதனால், ஏற்கெனவே 70 வருட சிறைத்தண்டனை பெற்ற மரிலினுக்கு இன்னும் பத்துவருடம் கடுங்காவல்; இன்னும் ஐந்து வருடம் கடுங்காவலைச் சேர்த்து லிண்டாவுக்கு 40 வருடம் தண்டனை; லாராவுக்கு 20 வருடம் கடுங்காவல்! சூஸன், டிம் ப்ளங்க் இருவருக்கும் வெடிகுண்டுகள், போலி அடையாள அட்டைகள், ஆயுதங்களை வைத்திருந்த குற்றத்துக்காக ஏற்கெனவே 58 வருட தண்டனை. ஆலன் பெர்க்மன் மட்டும் அடுத்த ஜூனில் விடுதலை செய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது.

சூஸன், லிண்டா, லாரா பற்றிய சில குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்தக் குறிப்பும் மொழி பெயர்ப்பும் நாகர்ஜூனன். நுண்-அரசியல் பற்றிய ஆய்வுகள் உள்பட அமெரிக்காவிலுள்ள பெண்|அரசியல் கைதிகள்

www.padippakam.com



பற்றி அதிக விவரம் பெற விரும்புபவர்கள் எழுதுக. Women in Supprort of Political Prisoners, Box 565, Madison, WI 53701. USA

## குறிப்புகள்

**லிண்டா :** 1947-இல் பிறந்தவர். 1967 முதல் அமெரிக்க ஏகாதிபத்திய-எதிர்ப்பு இயக்கங்களில் ஈடுபாடு கொண்டுள்ளவர். அமெரிக்கா வியட்நாமில் செய்த யுத்தத்தை எதிர்ப்பதில் முன் நின்ற மாணவி. 1969 இல் வியட்நாமுக்குப் போய் போர்க் கைதிகள் பரிமாற்றத்தின் போது பார்வையாளராக இருந்தவர். தெரு நாடக இயக்கம், பெண்களுக்கேயான இசைக்கும் இயக்கம் ஆகியவற்றில் பங்கெடுத்தவர். பெண்கள் உரிமை இயக்கத்திலும் லெஸ்பியன் குழுக்களின் விவாதங்களிலும் பங்கெடுப்பவர். குக்ளக்ஸ் க்ளான் போன்ற வெள்ளை நிறவெறி அமைப்புகளை எதிர்த்து கறுப்பு இன, சிகானோ/மெக்ஸிகானோ இன அமைப்புகளை ஒருங்கிணைப்பதில் ஈடுபட்டவர். சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளுக்காகவும் அரசியல்-கைதிகளின் மனித உரிமைகளுக்காகவும் போராடுபவர். 1985 மே 11 அன்று இவர் கைது செய்யப்பட்டார். தேடப்பட்டு வந்த ஒருவரைப் பாதுகாத்துப் புகலிடம் தந்ததற்காகவும் நான்கு துப்பாக்கிகளை போலி அடையாள அட்டை கொண்டு வாங்கியதற்காகவும் தண்டிக்கப்பட்டார்.

**லாரா :** ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிகரச் செயல்பாடுகளில் கடந்த இருபது வருடங்களாக ஈடுபட்டு வருபவர் கருப்பின மக்களின் உரிமைகளுக்காகவும் ப்யூர்டோ ரிக்கோவின் சுயநிர்ணய உரிமைக்காகவும் பெண்கள், தன்புணர்ச்சியாளர்கள் ஆகியோரின் போராட்டங்களிலும் களத்தில் நின்று வந்தவர். பாஸ்டன் நகரத்தில் கறுப்பின மக்கள் மீது நடத்தப்பட்ட வெள்ளை நிறவெறி அட்டகாசங்களை எதிர்ப்பதில்

படிப்பகம்

www.padippakam.com



துணை நின்றவர். அமெரிக்க உள்நாட்டு உளவு-நிறுவனமான FBI-யின் ரகசிய நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியவர். 1975-இல் வியட்நாமுக்குச் சென்று வந்தவர். 1985-இல் கைது செய்யப்பட்ட இவர், தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

**சூஸன் :** 1955-ஆம் வருடம் நியூயார்க்கில் பிறந்த இவர், பள்ளி நாட்களில் Black Panther கட்சியில் ஈடுபாடு காட்டிவந்தார். பின்பு வியட்நாமில் யுத்த எதிர்ப்பு மற்றும் பெண்கள் இயக்கங்களில் ஈடுபாடு காட்டினார். 1976-இல் கியூபாவுக்குப் போய் அங்கே சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டார். சீன மருத்துவ முறையான அங்குபங்ச்சரை முறையாகக் கற்று மாற்று மருத்துவராகப் பணிபுரிந்தார். 1985-இல் கைது செய்யப்பட்டார்.

## பேட்டி

**கேள்வி :** நானும் களச்செயலில் ஈடுபடும் ஒருபெண் தான். ஆனால் இதுவரை உங்களில் யாரைப்பற்றியும் கேள்விப்பட்டதே இல்லையே!

**லிண்டா :** 'அமெரிக்காவில் அரசியல் கைதிகள் கிடையாது'' என்று அரசாங்கம் அடிக்கடி கூறிவருகிறது. எங்கள் செயல்பாடுகளுக்கான அரசியல் நோக்கங்களை இந்த அரசாங்கம் அங்கீகரிப்பதில்லை. மேலும் நாங்கள் சார்ந்துள்ள இயக்கங்கள், அமைப்புகளுக்கான அரசியல்-சமுதாய அடிப்படைகளையே இந்த அரசாங்கம் மறுத்து வந்துள்ளது என்பதை உங்களைப் போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, இந்த சிறையின் கட்டமைப்பைப் பாருங்கள்: இங்கேயுள்ள அரசியல் கைதிகளைச் சந்திக்க அவர்களுடைய உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ

www.padippakam.com



அனுமதி கிடையாது. அரசியல்-கைதிகளின் அறைகள் அடிக்கடி மாற்றப்படும்; கடிதங்கள் தணிக்கை செய்யப் படும். எல்லாவற்றுக்கும் மேலாக தனிமைச் சிறையிலும் நாங்கள் அடைக்கப்படுகிறோம். இந்தச் சூழ்நிலையில் வாழ்கிற எங்களைப் பற்றி நீங்கள் தெரிந்திராதது ஆச்சரி யமல்ல. அதே சமயத்தில் நமது இயக்கங்கள் அரசியல் கைதிகள் பற்றிக் கவலைப்பட்டதில்லை என்பதையும் இங்கே கூறியாக வேண்டும். இதற்க் காரணம் நிறவெறி என்றுதான் கூறுவேன். அமெரிக்காவின் பெரும்பான்மை யான அரசியல் கைதிகள், போர்க் கைதிகள் எப்போதுமே கறுப்பு இனத்தவராகவோ ப்யுர்ட்டோ ரிக்கோ இனத்த வராகவோ இருந்து வந்துள்ளனர். பத்துப் பதினைந்து வருடங்களாக அடைத்துவைக்கப் பட்டுள்ள இவர்களைப் பற்றி யாருமே கவலைப்படுவதில்லை என்றால் அதற்கு நிறவெறிதானே காரணம்? வெள்ளை இனத்தவர்களில் முற்போக்காளர்களாக இருப்பவர்கள் கறுப்பின மக்களின் ப்யுர்ட்டோ ரிக்கோ இனமக்களின் சுயநிர்ணய உரிமை களை அங்கீகரித்ததில்லை. இது வருந்தத்தக்க விஷயம்.

அரசியல் கைதிகளுக்குத் தாங்கள் வழங்கிவந்த ஆதரவைப் பலர் வாபஸ் பெற்றுக்கொண்டு விடுகிற சூழல் இப்போதிருக்கிறது. இதற்குக் காரணம் செயல் பாடுகள் குறித்து நம்மிடையே இருக்கிற வித்தியாசங்கள் தான். இப்படி ஆதரவு வாபஸ் பெறப்படுவதால் தமக் கிடையே பொய்யான முரண்பாடுகள் தோற்றுவிக்கப் பட்டு அதனால் அரசியல் கைதிகள் தனிமைப் படுத்தப் பட்டு விடுகின்றனர் நாம் அனைவரும் சமுதாய மாற்றத் துக்காகவும் வெகுஜன நீதிக்காகவும் போராடுகிறோம் என்கிற பட்சத்தில், நமக்கிடையிலான வித்தியாசங்கள் தந்திரோபாய ரீதியானவை (Tactical) மட்டுமே என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

**லாரா :** **நாட்டின் சிறைகளில் யார், யார் எதற்காக இருக்கிறார்கள் என்பது பற்றி இடது சாரி மற்றும்**

www.padippakam.com



முற்போக்கு இயக்கங்கள் வெகுகாலமாகவே கவலைப் பட்டதில்லை. இப்படிக் கவனிக்கப்படாமல் போயிருப் பவர்களில் அரசியல் கைதிகளும் போர்க்கைதிகளும் அடக்கம்.

உதாரணமாக, எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்ச்சி இயக் கத்தில் ஈடுபட்டிருக்கும் உங்களில் ஒருவருக்கு எய்ட்ஸ் கைதிகள் பற்றி ஏதாவது தெரிய வாய்ப்பிருக்கிறதா? கிடையாது. சிறையின் சுகாதார நிலைமைகள்பற்றி ஏதாவது தெரியுமா? கிடையாது. Gay Community News பத்திரிகையின் மைக் ரீகில் ஒருவரைத்தவிர எத்தனை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் சிறைப் பக்கம் வந்து இங்குள்ள கைதிகளின் தன்புணர்ச்சியாளர்கள் படுகிற கொடுமைகளை எழுதியிருக்கிறார்கள்?

இந்த நாடே அடைக்கப்பட்டிருக்கிற கைதிகளை மறக்க முயற்சித்து வருகிறது என்பேன். அரசியல் கைதி களைப் பற்றிய மறதியோ இன்னும் பன்மடங்காக இருக் கிறது! இதற்கெல்லாம் காரணம், எங்களைப் போன்ற வர்கள் இந்த அமைப்பை நடுங்க வைப்பவர்களாக இருப்பதுதான். நாங்கள் யார் என்று வெளியில் தெரி யாமல் செய்வதில் இந்த அரசு-அமைப்பானது மிகுநத அக்கறை கொண்டுள்ளது. ‘குற்றவாளிகள், பயங்கர வாதிகள்’ என்றெல்லாம் நாங்கள் அழைக்கப்படுவதும் இதனால்தான்.

**சூஸன் :** இப்போது களச்செயலில் ஈடுபடவிரும்பும் உங்களைப்போன்றவர்கள் கடந்த இருபது ஆண்டுகளின் எதிர்ப்பு பற்றிய வரலாற்றை (History of resistance) மீட்டெடுக்க வேண்டிய தேவையை உங்கள் கேள்வி சுட்டு கிறது. மேலும், பேசப்படுகிற விஷயங்களாக முக்கியத் துவம் பெறுவது எவைஎவை என்பதை அரசாங்கமும் வெகுஜன தொடர்பு சாதனங்களும் தீர்மானம் செய்து கொண்டிருக்கும் வரை, எங்களுடைய போராட்ட அனு பவங்கள் எல்லாமே தொலைந்து போய்விடுகிற அபாயம் இருந்து கொண்டுதான் இருக்கும்!

www.padippakam.com



எங்களை மக்கள் இன்னும் கேட்கிற நிலை உருவாக வில்லை. எங்கேயாவது செய்தித் தலைப்பு ஒன்றில் படித் திருப்பார்கள், அவ்வளவுதான்!... சிறையில் அடைக்கப் பட்ட புரட்சிவாதிகளைப் பற்றிய செய்திகள் வெளி வராமல் இருப்பதில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது; அரசாங்கத்தின் இந்தச் செயல்பாட்டை ஓர் எதிர்ப்புரட்சி உத்தியாகக் கொள்ளலாம். உதாரணமாக, ஆறுவருடங்களாக அவ்வப்போது சிறையில் தான் இருந் திருக்கிறேன். இதில் பாதி நாள் தனிமைச்சிறைதான். சிறைச்சாலைக்கு என்னுடைய உறவினர்களும் நண்பர் களும் அடிக்கடி வர முடியாது. அவர்கள் வசிக்கிற இடத்தி லிருந்து இச்சிறைச்சாலை ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் தூரத்தில் இருப்பதுதான் இதற்குக் காரணம். அமெரிக்காவிலுள்ள முக்கியஅரசியல் கைதிகளான 100-150 பேரின் அனுபவமும் இப்படித்தான். இப்படி அரசியல் கைதிகளைத் தனிமைப்படுத்தி அழிப்பது, இக்கைதிகள் சார்ந்துள்ள அரசியல் இயக்கங்களின் அடிப்படைகளையே கரைத்து விடுவது என்பதுதான்.

**கேள்வி :** உங்கள் குற்றங்களாகக் கூறப்படும் செயல் களில் நீங்கள் ஈடுபட்டீர்களா? ஆம் என்றால் அதற்கான காரணம் என்ன என்று கூறுவீர்களா?

**லிண்டா :** அமெரிக்காவில் புரட்சி ஒன்று தோன்று வதற்காகவும் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்காக வும் நான் என்றும் ஆதரவு அளிப்பேன். அவ்வித ஆதரவை அளிக்க விழைகிற ஆயுதரீதியான இயக்கத்தில் பங்குபெற் றேன் என்பதைச் சொல்லிக் கொள்வதில் நான் பெருமை யடைகிறேன். ஆனால் இந்த அரசாங்கம் எங்கள் செயல் பாடுகள் அத்தனையையும் தீர்த்துக்கட்டியது. அதற்காக எங்களைப் 'பயங்கரவாதிகள்' என்று பெயர் சூட்டி அழைத்தது; 'எங்கள் நோக்கமும் செயல்பாடுகளும் மக்களைக் கொல்வதுதான்' என்று பொய்ப் பிரச்சாரம்

www.padippakam.com



செய்தது; சமுதாயத்துக்கு நாங்கள் எதிரிகள் என்றும் சொல்லிப்பார்த்தது.

இதற்கெல்லாம் மாறாக, கடந்த இருபது ஆண்டுகளாக எங்கள் இயக்கங்களின் ஆயுத நடவடிக்கைகளைப் பார்த்தால் உங்களுக்கு ஒரு விஷயம் பிடிபடும். இந்தச் செயல்கள் அத்தனையுமே மனித உயிர்களைக் கொல்வதைக் கூடியவரையில் தவிர்த்தே வந்துள்ளன. ஆனால் இந்த அரசாங்கத்தின் செயல்பாடுகளைப் பாருங்கள். உலகெங்கும் கூலிப்படைகளையும் சாவுக்குழுக்களையும் ஊக்குவிப்பதுதான் இந்த பயங்கரவாத அரசாங்கத்தின் முக்கிய பணி, நிகரகுவாவில் காண்ட்ராக்கள், அங்கோலாவில் யுனிட்டா (UNITA) அமைப்பு, பாலஸ்தீனர்களை வதைக்கும் இஸ்ரேல் அரசாங்கம்... இப்படி எல்லோருக்கும் அமெரிக்க அரசாங்கம் உதவி செய்யவில்லையா! இதுதவிர இங்கேயுள்ள கறுப்பு இன மக்களின் மீதான, மூன்றாம் உலக நாட்டுமக்களின் மீதான தினசரி போலீஸ் ஒடுக்குமுறை நடக்கவில்லையா! 1985இல் (MOVE) என்ற ஃபிலடெல்ஃபியாவிலுள்ள கறுப்பு இன மக்களின் குடியிருப்பின்மீது இந்த அரசாங்கம் விமானத் தாக்குதல் நடத்தி அதில் 11 பேர் இறந்துபோனது நினைவில் இல்லையா!

**லாரா:** நாங்கள் செய்ததாக அரசாங்கம் அறிவித்த விஷயங்கள் கட்டுக்கதைதான். ஆனாலும் நிறவெறி, பாலியல்- ஒடுக்குமுறை, ஏகாதிபத்தியம் ஆகியவற்றை அதீதமான எனது இந்த உடலின் ஓவ்வொரு திசுவும் எதிர்த்துக்கொண்டுதான் இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'நீதி' என்பது அவர்களின் ஏகபோக விஷயமாகும்; புரட்சிகரச்செயல்பாடுகள் எல்லாமே அவர்களுக்கு 'பயங்கரவாத வன்முறை'யாகவே தெரியும்.

**சூஸன்:** இன்றைய பல பிரச்சினைகள் அமைப்பு ரீதியானவை என்று தான் கருதுகிறேன். இந்த சமுதாய

www.padippakam.com



அமைப்பை மாற்றி இதிலிருந்து மீள்வதற்கு நானும் சரி, பிறரும் சரி, பல்வேறுவகையான வழிமுறைகளைக் கையாண்டு பார்க்கிறோம். இங்கேதான் அரசு என்கிற அமைப்பை எதிர்க்க வேண்டிய தேவைக்கு உள்ளா கிறோம்.

என்னைப் பொறுத்தவரை 1960 களில் சமாதான ஆர்வலராகவும் (Peace activist) 1970களில் அரசியல் ஈடுபாட்டுடனும் 1980களில் வளர்ந்து கொண்டிருந்த தலைமறைவு எதிர்ப்பு இயக்கத்தில் பங்குபெற்றும் இருந் துள்ளேன். என் வாழ்க்கை பூராவுமே இப்படிப் புரட்சி வாதியாகவே கழித்திருக்கிறேன். ஆக, ஏகாதிபத்தியத்தை புரட்சிகர ரீதியில் எதிர்த்த குற்றத்தை எப்போதுமே நான் செய்து வந்துள்ளவன்தான்.

அரசாங்கம் எங்களைப் போன்றவர்களைப் பற்றிய பொய்யான பிரச்சாரத்தைச் செய்து வருகிறது. எங்க ளைப் 'பயங்கரவாதிகள்' என்று முத்திரைகுத்த முயல் கிறது. ஆனால் உண்மையில் நாங்கள் பயங்கரவாதிகள் அல்லர். 1950களில் அமெரிக்காவில் கம்யூனிஸ்ட் என்பது எப்படி ஒரு கெட்டவார்த்தையாக ஆக்கப்பட்டதோ அதைப்போல இன்று 1980, 90களில் 'பயங்கரவாதி' என்ற வார்த்தை வருகிறது. அமெரிக்க அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையான 'பயங்கரவாதி கள்' இருக்கிறார்கள்! இதெல்லாம் உண்மைதானா என்பதை நீங்கள் பரிசோதித்துக் கொள்ளலாம்.

உங்கள் கேள்விக்கான நேரடியான பதிலை நான் சொல்லவில்லை என்று நினைக்க வேண்டாம். சிறையில் அடைக்கப்பட்ட புரட்சிவாதி யாருமே தனது புரட்சிகரப் பணிகள் பற்றிய எல்லா விபரங்களையும் கூறமாட்டார் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா!

**கேள்வி:** நமது 'எஜமானர்களின் வீடாகிய' அரசு அமைப்பை, அதே 'எஜமானர்களின் கருவியாகிய'

படிப்பகம்

www.padippakam.com



வன்முறையால் தகர்க்கமுடியாது என்று கூறுகிறார்கள்! ஆக, வன்முறை என்பது பற்றிய உங்களுடைய நிலைபாடு தான் என்ன?

**லிண்டா:** வன்முறை தொடர்பான இக்கேள்வி அமைக்கப்பட்டுள்ள விதத்திலேயே பிரச்னை இருக்கிறது. இங்கே பிரச்னை வன்முறை பற்றியது மட்டுமல்ல; பிரச்னையானது இங்கே அரசியல் மற்றும் அதிகாரம் தொடர்பானது. உலகெங்கும் ஏகாதிபத்தியம் தனது இராணுவ பலத்தைக் காட்டியே தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது; எங்கெல்லாம் மக்கள் சமுதாய மாற்றத்துக்காகப் போராடுகிறார்களோ அங்கெல்லாம் வன்முறையைக் கிளப்பிவிட்டு ஏகாதிபத்தியம் மிரட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில் மக்களை ஒடுக்கிக் கொல்லுகிற அமைப்பைத் தோற்கடிக்க எல்லா வழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டாக வேண்டும். இங்கே போராட்டம் என்பதே தற்காப்புப் போராட்டம் தான்; மக்கள்-அதிகாரத்துக்காகவும் சுயநிர்ணய உரிமைக் கானதுமான போராட்டம்தான்.

ஆக, 'வன்முறை' என்பது வெறும் வழிமுறை குறித்த பிரச்னையல்ல. இப்படிப் பிரச்னையைக் குறுக் கினால் புரட்சிகர இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்பி விடுவதற்கான சாத்தியக் கூறுகளை நம்மால் பார்க்கவே முடியாது; மக்கள்-அமைப்புகளைக் கட்டி, ஒடுக்கப்பட்ட மனிதக்குழுக்களுக்கான அதிகாரத்துக்கான போராட் டத்தை நடத்துவதற்கான திட்டத்தை தயாரித்து, மக்களை அதற்கான பணியில் ஈடுபட வைப்பதிலுள்ள பிரச்சினைகளை நம்மால் பார்க்கவே முடியாது.

சீனப்புரட்சியின் முழக்கம் ஒன்றுதான் இங்கே நினைவுக்கு வருகிறது:

www.padippakam.com



''வெகுஜனப் போராட்டம் இல்லாமல் புரட்சி
என்பதில்லை.
ஆயுதப் போராட்டம் இல்லாமல் வெற்றி
என்பதில்லை.''

**லாரா:** 'வன்முறை' என்பதை ஒரே ஒரு வகையானது என்று கூறமுடியாது. எனவே அது 'எஜமானர்களுடைய கருவியாக' மட்டுமே கருதப்படமுடியாது. அதே சமயத்தில் அமெரிக்க அரசாங்கத்தைப் போலவே மனித உயிர்களைப் பற்றி புரட்சியாளர்களும் கவலைப் படாமலிருந்தால் அது தவறு என்பதையும் சொல்ல விரும்புவேன். ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைக்காக 'வன்முறை' உட்பட்ட பல வழிகளில் போராட முற்பட்டால் அதை ஆதரிப்பது நமது கடமையாகும்.

'வன்முறை' பற்றிக் கேட்கும் உங்களிடம் ஓர் எதிர்க் கேள்வி: அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட ஆப்ரிக்க அடிமைகள் தமது எஜமானர்களைக் கொன்றுபோட்டதை 'வன்முறை' என்று கூறி நீங்கள் எதிர்ப்பீர்களா? எனவே நமது விடுதலைக்காக நாம் எவ்வாறு மனிதாபிமானத்துடன் போராடுகிறோம் என்பது மட்டுமே இங்கே முக்கியம். நமது போராட்ட வழிமுறைகள் மற்றும் நமது இலக்கு விமர்சனரீதியாக இருக்க வேண்டியது மிக அவசியம். அதே சமயத்தில் வெற்றியைநோக்கி நமது போராட்டம் இருக்க வேண்டும் என்றால் அதிகாரத்தை நோக்கியதாக அது அமையவேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக ஆப்பிரிக்க அமெரிக்கப் பெண்களுக்கு எதிரான வன்முறைக்குச் சாட்சியாக நான் இருந்து வந்திருக்கிறேன் இந்தச் சூழ்நிலையை மாற்ற முடியாமல் போகுமேயானால் இந்த அமைப்பு ரீதியான வன்முறையை ஏற்றுக் கொண்டதாகிவிடும். இச்சூழ்நிலையை மாற்றுவதற்கு வெறும் அகிம்சாரீதியான போராட்டங்கள் போதாது என்பதில் எனக்குத் துளியும் சந்தேகமில்லை.

www.padippakam.com



**கேள்வி:** அரசியல் கைதிகள், சாதாரணக் கைதிகள் என்று பிரித்துப்போட்டுப் பார்ப்பது எதற்கு? எல்லாவிதக் கைதிகளைப் பற்றியும் நாம் கவலைப்பட்டாக வேண்டும் அல்லவா?

**லிண்டா:** உண்மைதான். இன்னும் சொல்லப் போனால் தன்புணர்ச்சியாளர்களான நாம் நம்மில் சிறைக்கைதிகளாக இருப்பவர்களைப் பற்றிக் கவலைப் பட்டாக வேண்டும். அதிலும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்ட கைதிகளுக்கு ஆதரவு காட்ட வேண்டும். இப்படி எல்லாவகைக் கைதிகளைப் பற்றியும் கவலைப்பட்டு அவர் களுடைய நிலைமைகளை அம்பலப்படுத்துவது உண்மை யில் நிறவெறிக்கு எதிரான செயல்பாடாகும். ஏனென் றால் பெரும்பாலான கைதிகள் வெள்ளை நிறத்தவர் அல்லர். இந்தச் சமுதாயம் அவர்களை மட்டும் அடைத்து வைக்காமல் அவர்களுடைய மனங்களையும் அடைத்து விடுகிறது. கைதிகளின் போராட்டங்களால் வெல்லப் பட்ட உரிமைகளும் பறிக்கப்பட்டு விடுகின்றன. சிறை களில் மனித உரிமைகள் என்பது சுத்தமாகக் கிடையாது. இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் தனது ஒடுக்குமுறையை இன்னும் அதிகப்படுத்த முடிகிறது. உதாரணமாக எயிட்ஸ் வியாதியால் பாதிக்கப்பட்டக் கைதிகளைக் கூறலாம். சிறைகளில் எய்ட்ஸ் பற்றிய அறிவு அவ்வள வாக இல்லாததால், எய்ட்ஸ் கைதிகளைப் பிற கைதிகள் மிகவும் கொடுமையாகவே நடத்துகின்றனர். இதற்குக் காரணம் மருத்துவ, சுகாதார வசதிகள் துளியும் இல்லா ததுதான்.

இதர கைதிகளைத் தவிர்த்து அரசியல் கைதிகளை மட்டும் ஆதரிக்க வேண்டியதே இல்லை! சிறை என்று வந்து விட்ட பிறகு அரசியல் கைதிகளுக்கும் இதர கைதிகளுக்கும் பெரிதாக வித்தியாசம் என்ன இருக்க முடியும்? சிறைச்சூழல்களில் மாற்றங்கள் ஏற்பட்டால்

www.padippakam.com



இருபிரிவினரையும் அது பாதிக்கத்தானே செய்யும்! அதே சமயத்தில் அரசியல் கைதிகள் குறிப்பிட்ட சில அரசியல் இயக்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால், அரசின் ஒடுக்கு முறைக்கு ஆட்படுத்தப்பட்ட அவ்வியக்கங்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் எங்களைப் பற்றிப் பேசியாக வேண்டியிருக்கிறது. இதற்காகத்தான் அரசியல் கைதிகளுக்கு வெளியிலிருந்து ஆதரவு கோருகிறோமே ஒழிய, இதர கைதிகளிலிருந்து வித்தியாசமான வர்க்கமாக நாங்கள் எங்களைக் கூறிக் கொள்ளவில்லை!

**லாரா :** அமெரிக்கச் சிறைகளில் அரசியல் கைதிகளாகிய நாங்கள் எங்களுக்கும் இதர கைதிகளுக்கும் தீர்க்க முடியாத முரண்பாடு எதையும் வளர்த்தோம் என்று நீங்கள் கூற முடியாது. எல்லாவிதமான கைதிகளைப் பற்றியும் நாம் கவலைப்பட்டாக வேண்டும். அதே சமயத்தில் முற்போக்கு இயக்கங்கள் சமுதாயத்தில் கொடுமையாக ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் அரசியல் கைதிகளின் பாதுகாப்பும் விடுதலையும் மிக முக்கியமாகின்றன. நிறவெறியை எதிர்க்கும் நீங்கள் அதனை எதிர்த்துச் சிறைக்குப்போன ஒருவரை நிச்சயம் ஆதரித்தாக வேண்டும். அப்படி ஆதரிப்பதன் மூலம் நிறவெறி-எதிர்ப்பு என்கிற கொள்கையை, செயல்பாட்டை நீங்கள் வளர்த்தெடுக்கிறீர்கள். அரசியல் கைதிகளை ஆதரிப்பதன் மூலம் சமுதாய நிலைமைகளை அம்பலப்படுத்த நீங்கள் ஒத்துழைக்கிறீர்கள். அரசியல் கைதிகள் என்று துவங்கி எல்லா கைதிகள் பற்றியும் கவலைப்படுவதாக நீங்கள் மாறிவிட முடிகிறது என்றால் அதற்கு அறிவு உற்பத்திதான் காரணம். சிறைகள் பற்றிய விழிப்புணர்ச்சி வெளியில் ஏற்பட நீங்கள் உதவுகிறீர்கள்.

**சூஸன் :** எல்லாக் கைதிகளுக்கும் ஆதரவு என்பது தேவைதான். இதன் மூலம் சிறை என்கிற இடம் போராட்டத்துக்கான களமாக மாறுகிறது. சிறை-

www.padippakam.com



அமைப்பு மூலமாக மனிதர்கள் கொடுமைப்படுத்தப்படுவதும் அம்பலப் படுத்தப்படுகிறது.

அரசியல் கைதிகளான எங்களுக்குக் குறிப்பிட்ட அரசியல்ரீதியான, சமுதாயரீதியான இலக்குகள் உண்டு என்பதால் எங்களுக்கு ஆதரவு அளிக்கப்படுவது முக்கியமாகிறது எங்களுக்குச் சுதந்திரம் கிடையாது என்பது உங்களுடைய சுதந்திரம், சுதந்திரமின்மைக்கு ஓர் அளவுகோலாகும். எங்களை இன்று அழிக்கிறார்கள்; நீங்கள் நாளை அழிக்கப்படலாம்.

**கேள்வி :** லெஸ்பியனாக நீங்கள் இருப்பது உங்கள் அரசியல் செயல்பாடுகளை எந்தெந்த விதத்தில் பாதிக்கிறது?

**லிண்டா :** ஒரு புரட்சிவாதியாக நான் இருப்பதற்கான பல காரணங்களில் நான் லெஸ்பியனாக இருப்பதும் ஒன்று. இதைப்பற்றி முன்பு அவ்வளவு பிரக்ஞையோடு நான் இருந்ததாகக் கூறமுடியாது. 'லெஸ்பியனாக இருப்பது' என்பதை என் வாழ்க்கையின் இதர விஷயங்களிலிருந்து நான் பிரித்துப் பார்க்கவில்லை. லெஸ்பியனாகவும் பெண்ணாகவும் நான் இருப்பதாலேயே, அவ்வாறு இருப்பதால் நான் அனுபவித்து வருகிற கொடுமைகளை, ஒடுக்குமுறைகளை உணர்வதாலேயே எல்லாப் பெண்களுக்கும் லெஸ்பியனுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் விடுதலை வேண்டும் என்று நிச்சயமாகக் கூறுவேன். இவ்வித ஒடுக்குமுறைகளற்ற எதிர்கால சமுதாயம் உருவாக வேண்டும் என்ற லட்சியம் எனக்குண்டு. மேலும் ஒரு லெஸ்பியனாக இருப்பதாலேயே ஒடுக்கப்பட்ட இதர மக்களின் அமைப்புகளுடன் இணக்கம் கொண்டு இயங்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்துள்ளேன். இவ்வாறு இணையும்போதும் இதற்கான கூட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும்போதும் நிறவெறி, பாலியல் ஒடுக்குமுறை மற்றும் எதர்பால்புணர்ச்சி

www.padippakam.com



மேலாதிக்கம் ((heterosexual hegemony) ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இருந்தாலும் இவ்விதக் கூட்டமைப்புக்கள் தேவை என்பதை நான் உணர்ந்துள்ளேன். ஏனென்றால், ஏகாதிபத்தியம் நமது பொது எதிரியாக இருக்கிறது அல்லவா! மேலும் இவ்விதக் கூட்டமைப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளும்போது நமது இயக்கங்களின் தனித்தன்மை பேணப்படவும் வேண்டும்.

**லாரா :** லெஸ்பியனாக இருப்பது என் வாழ்க்கையின் முக்கிய அம்சம். லெஸ்பியனாக இருப்பதாலேயே பாலியல்-ஒடுக்குமுறையை நான் கடுமையாக எதிர்க்க ஆரம்பித்தேன். மேலும் ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படும் இதர மக்கள் தொகுதியினரின் துன்பத்தையும் என்னால் உணர முடிவதற்கும் நான் லெஸ்பியனாக இருப்பதே காரணம்.

லெஸ்பியனான எனக்கு சிறை வாழ்க்கை என்பது மிகவும் சிரமமான காலகட்டமாக இருக்கிறது. ஆனால் லெஸ்பியனான நான் அதை வெளிப்படையாக அறிவித்திருப்பது எனக்கு அதிக மனோபலத்தை அளித்துள்ளது. தன்புணர்ச்சியாளர்கள் சிறையில் மேற்கொள்ளும் போராட்டங்களைக் கண்டும் கேட்டும் நான் பெருமையடைகிறேன்.

**சூஸன் :** லெஸ்பியனாக இருப்பதை அண்மையில் தான் நான் வெளியிட்டேன். இதற்குக் காரணம் தன் புணர்ச்சியாளர்களாகிய எங்களுக்குப் புரட்சிகர லட்சியங்கள் தேவை என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். பாலியல் ஒடுக்குமுறைக்கும் இதர ஒடுக்குமுறைகளுக்கும் உள்ள தொடர்புகளைப் பேணிக் கொணர்வதில் நாங்கள் இப்போது ஈடுபடுகிறோம்.

லெஸ்பியனாக இருப்பதை நான் வெளியிட்டதற்குக் காரணம், எனக்கு மிகவும் நெருங்கிய, முக்கியமான

படிப்பகம்

www.padippakam.com



தோழிகளாக இருப்பவர்கள் எல்லோருமே சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பமடைந்ததுதான். லாராவும் லிண்டாவும் எனக்கு முன்னே வெளியிட்டு விட்டார்கள். அவர்கள் லெஸ்பியன்களாக இருப்பதை அறிவித்து விட்டது என்னைப் போன்ற பலருக்கும் ஆதரவாக அமைந்துள்ளது.

**கேள்வி :** நீங்கள் பணியாற்றி வந்துள்ள குழுக்களி டையே உள்ள பாலியல்-ஒடுக்குமுறையையும் எதிர்பால் புணர்ச்சி மேலாதிக்கத்தையும் எவ்வாறு எதிர்த்துப் போராடி வந்துள்ளீர்கள் என்பதை விளக்க முடியுமா?

**லாரா :** தன்புணர்ச்சியாளர்களின் விடுதலை என்பது வார்த்தைகளிலன்றி உண்மையான லட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக நான் போராடி வந்திருக்கிறேன். பாலியல்-ஒடுக்குமுறை மற்றும் எதிர் பால்புணர்ச்சி மேலாதிக்கம் யாரிடம் தென்படுகிறதோ அவரை நேரடியாகக் கேள்வி கேட்டு மடக்குவதன் மூலமே இது சாத்தியமாகிறது. இந்த மாதிரிச் செய்யாமல் நான் பணியாற்றிய குழுக்களும் இருந்திருக்கின்றன. ஆனால் அதற்காக இப்போது வருத்தப்படுகிறேன்...

எனக்கென்னவோ போராடவேண்டிய விஷயங் களுக்கான பிரத்தியேகமான 'லிஸ்ட்' ஒன்றை வைத்துக் கொள்ளாமல் பல்வேறு விஷயங்களுக்காக ஒரே சமயத்தில் போராடுவதே சரி என்று தோன்றுகிறது. ஆக, பாலஸ்தீன விடுதலையையோ ப்யுர்ட்டோ ரிக்கோ இனவிடுதலை யையோ இலக்காக வைத்துப் போராடுகிற அமைப் புக்களுடன் இணைவதற்கு நான் எப்போதுமே தயாராக இருப்பேன். பெண்கள் மற்றும் லெஸ்பியன்களின் விடுதலை போல இவையும் முக்கியமானவை தானே! என்னுடைய விடுதலையை ஒவ்வொரு போராட்டத்தின் வேலைத்திட்டத்திலும் இருந்தாக வேண்டும் என்று நான்

www.padippakam.com



எப்போதுமே கூறிக்கொண்டிருக்க முடியாது. அதே சமயத்தில் என்னுடைய தனித்துவத்தையும் எனது சுயமரியாதையையும் லெஸ்பியன்கள், பெண்கள் விடுதலைக்கான உடனடித் தேவையையும் நான் வலியுறுத்திக் கொண்டே இருப்பேன்.

**சூஸன்:** கடந்த சில வருடங்களில் பெண்நிலை வாதம் பற்றிய தெளிவான பார்வை எனக்கு உண்டாகியிருக்கிறது. இக்காலக்கட்டத்திலேயே பெண்நிலைவாதியாக நான் மாறியதாக உணர்கிறேன். கடந்த காலகட்டத்தில் பெண்கள் மற்றும் தன்புணர்ச்சியாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக சரியாகப் போராட்டங்கள் நடத்தப்பெறவில்லை என்றே கூறுவேன். அரசியல் போராட்டங்களின் போது 'பெண்',' லெஸ்பியன்' என்று எனது ஆளுமையை, தனித்துவத்தை பல சமயங்களில் நான் விட்டுக் கொடுத்திருப்பதை உதாரணமாகக் கூற முடியும். நிகரகுவாவில் கூட சாண்டினிஸ்டா அமைப்பிலுள்ள பெண்கள் பலர் புரட்சியின் போது தமது இலட்சியங்களை 'சமூகதன்மைக்காக' விட்டுக் கொடுத்துவிட்டு இப்போது அதைப் பற்றி மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கின்றனர். இப்படி விட்டுக் கொடுத்ததால் இன்றைய நிகரகுவாவில் பெண்களுக்குப்புதிய பிரச்னைகள் கிளம்பியுள்ளன. இன்று அங்குள்ள புரட்சி-உணர்வற்ற சமுதாயத்தில் கருச்சிதைவைச் சட்டரீதியாக்கும் போராட்டம் பின்தள்ளப்பட்டுள்ளது. இந்தப் போக்கை எதிர்க்கும் அளவுக்குப் பெண்களுக்கு அங்கே விழிப்புணர்ச்சி ஏற்படவில்லை. ஆக, பெண்களின் கோரிக்கைகளையும் 'சமூக மாற்றத்துக்கான' போராட்டத்துக்காக விட்டுக் கொடுப்பது என்பது தவறு என்றே தெரிகிறது.

**கேள்வி:** ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றியது ஏன்?



படிப்பகம்

www.padippakam.com



**லிண்டா :** துவக்கத்தில் ஒரு சமாதானப் பிரியையாக போர்-எதிர்ப்பு இயக்கத்தில் இருந்தேன். அகிம்சாரீதியாகவே இந்தச் சமுதாயம் மாறும், மாறமுடியும் என்று பகற்கனவு கண்டு கொண்டிருந்தேன். பென்டகன் (Pentagan) அருகே நடத்தப் பெற்ற போராட்டத்தில் எனக்கு சரியான தடியடிவீச்சும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சும் கிடைத்தது. அப்போதுதான் இந்த சமுதாய அமைப்பு வன்முறையைக் கொண்டே ஒவ்வொரு தளத்திலும் தன்னை நிலை நிறுத்திக் கட்டமைத்துக் கொள்கிறது என்று எனக்குப் புரிய ஆரம்பித்தது போருக்கு எதிர்ப்புக் காட்டுபவர்கள் அடிக்கப்படுவதையும் வெள்ளையற்ற நிற-இன மக்கள் இங்கே ஒடுக்கப்படுவதையும் கொலை செய்யப்படுவதையும் வியட்நாமில் மக்களுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் நடத்திய போரையும் என்னால் இணைத்துப் பார்க்க முடிந்தது. இதற்கெல்லாம் எதிராக கறுப்புஇன, வியட்நாமியப் பெண்கள் நடத்திய போராட்டத்தின் மூலம் அவர்களுக்குக் கிடைத்த மனோபலம் என்னை ஆச்சர்யப்பட வைத்தது. அப்படித்தான் எனக்கு ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வந்தது. மால்கம் எக்ஸ், சேகுவாரா, ஹோசிமின் போன்றவர்களின் எழுத்துக்களும் செயல்களும் எனது ஆர்வத்தை இன்னும் தூண்டின. Black Panthers கட்சி அலுவலகத்தின் மீதும் அக்கட்சி உறுப்பினர்கள் மீதும் அமெரிக்க போலீசார் நடத்திய தாக்குதல்களைக் கண்டு இன்னும் ஆத்திரமடைந்தேன். இந்த அமைப்பை நிலைகுலையச் செய்கிற எந்த ஒரு போராட்டத்தின் மீதும் அமெரிக்க அரசாங்கம் கடுமையான அடக்கு முறையை ஏவிவிடுவதைப் பார்த்தேன்; புரிந்து கொண்டேன். இதன் மூலம் எங்களையும் எங்கள் தோழர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கான அவசியத்தைப் புரிந்து கொண்டேன்.

**லாரா :** 1970 களில் கறுப்பு இன மக்கள் மீது நடத்தப்பட்ட கடுமையான தாக்குதல்களைப் பார்த்த பின்பே

www.padippakam.com



நான் ஆயுதப் போராட்டத்தின் ஆதரவாளராக மாறினேன். Black Panther கட்சித் தலைவர் ஃப்ரெட் ஹாம்படன் கொலை செய்யப்பட்டதும் என்னை வெகுவாக பாதித்துவிட்டது. அமெரிக்க அரசாங்கம் இங்கே ஒடுக்கப்பட்டுள்ள இனங்களுக்கு மனித உரிமைகளை ஒரு போதும் வழங்காது என்பதை நான் இப்போது புரிந்து கொண்டேன். மேலும் போராட்டம் என்பது வெற்றியை இலக்காக வைத்து இயங்க வேண்டும் என்பதையும் அதற்கான வழிமுறைகள பல்வேறு வகைப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும் அப்போது புரிந்து கொண்டேன்.

**சூஸன் :** கறுப்புஇன மக்களின் மீது இந்த அமைப்பு தொடுத்துள்ள வன்முறையை, குறிப்பாக நியூயார்க் நகரத்திலுள்ள தெற்கு ப்ராங்க்ஸ் (South Bronx) பகுதியில் அரசாங்கம் செய்த இரசாயன இனக்கொலையை சாட்சியாக இருந்து பார்த்து வருகிறேன். அக்குபங்ச்சர் மருத்துவர் என்ற முறையில் சொல்கிறேன், இங்கே கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய நோய்களை எங்களால் எதிர்த்துப் போராட முடியாமல் போயிற்று. இதையெல்லாம் பார்த்த பின்புதான் ஆயுதப் போராட்டத்தின் தேவையை உணர்ந்து கொள்ள என்னால் முடிந்தது.

**கேள்வி :** சிறையில் உங்கள் தினசரி வாழ்க்கை எப்படி?

**லிண்டா :** உடற்பயிற்சி, வேலை, உடற்பயிற்சி, வேலை, உடற்பயிற்சி, வேலை...

**லாரா :** சிறைச் சூழ்நிலைகளை மாற்றுவதற்கான தினசரிப் போராட்டம் எப்போதும் இருக்கிறது. எனது அரசியல் மற்றும் சட்டரீதியான பணிகளும்உண்டு இவை தவிர எனது நண்பர்களுக்குக் கடிதம் எழுதுவேன். இதர கைதிகளுடன் பேசுவதும் பிரச்னைகளை விவாதிப்பதும் நிச்சயமாக உண்டு. எனது தோழர் ஆலன் பெர்க்மன் இப்போது

படிப்பகம்

www.padippakam.com



புற்றுநோயால் அவதிப்படுகிறார்; சங்கிலியால் படுக்கையுடன் கட்டிப்போடப்பட்டுள்ள அவரைப் பற்றிய செய்தியை சேகரிப்பேன். பிற பெண் கைதிகளுடன் எய்ட்ஸ் நோய் பற்றி விவாதிக்கிறேன். இங்குள்ள பெண் கைதிகளில் பாதிப் பேருக்கு HIV+ உள்ளதாக பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளது; இருந்தாலும் எய்ட்ஸ் பற்றி இங்கே எந்தவிதக் கல்வியும் மருத்துவ ஆலோசனையும் கிடையாது என்றால் இங்கே நிலைமை எவ்வளவு மோசம் என்று நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்.

**சூஸன் :** அக்குபங்ச்சர் மருத்துவர் என்ற முறையில் என்னிடம் மருத்துவ ஆலோசனை கேட்க ஏகப்பட்ட பேர் வருகிறார்கள். குறிப்பாக எய்ட்ஸ் பற்றிக் கேட்பார்கள். இந்தச் சிறை நிர்வாகத்தினர் எங்களை அடைத்தே வைத்திருக்கிறார்கள் என்பதால் மருத்துவ ஆலோசனையை முழுமையாக வழங்க முடியவில்லை.

**கேள்வி :** நீங்கள் வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் உங்களுக்குச் சிறையில் பிரத்தியேக உரிமைகள் இருக்கின்றனவா? இந்தப் பிரச்னையை எப்படி எதிர் கொள்கிறீர்கள்!

**லிண்டா :** வெள்ளை இனத்தவர் என்ற முறையில் எனக்குக் கிடைத்துள்ள கல்வி, அறிவு ஆகியவற்றை மற்ற கைதிகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய தேவையைப் புரிந்து கொண்டேன். குறிப்பாக, எய்ட்ஸ் பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. பிற இனக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் போராடுவதற்காகவும் எனது அறிவு பயன்படுகிறது. அவர்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவ ஆலோசனை, உடற்பயிற்சி, மனநலம் ஆகியவற்றுக்காக அடிக்கடி போராடுவதற்கு எனது கல்வியும் அறிவும் பயன்படுகின்றன.

www.padippakam.com



**லாரா :** நிறவெறியை எதிர்த்துப் போராடுவதில் தான் எல்லாமே அடங்கியிருக்கிறது. எய்ட்ஸ் நோய் பற்றிய அறிவு எனக்கிருப்பதால் அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்கிறேன்.

**சூஸன் :** நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் ஈடுபடுகிற வெள்ளை-இனத்தைச் சேர்ந்த நான் பிற இனத்தவர் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்பதை சிறையில் புரிந்து கொண்டேன். நிறையப் பொறுமை-கேட்பதில்தான்-எனக்கு வந்திருக்கிறது! □

படிப்பகம்

www.padippakam.com

# 7

# குடும்பமும் கம்யூன் வாழ்க்கையும்

***—கோ. ராஜாராம்***

> 'பெண்ணியம் பற்றி விவாதம் அலசலாகவும், முக்கியமான பார்வைகளை முன் வைக்காதது போலும் எனக்குத் தோன்றியது. தொகுப்பில் மிக முக்கியமான கருத்தாக அஸ்வகோஷின் பார்வை (5)-ஐச் சொல்ல வேண்டும். பாதிக்கப் பட்டவர்களின் பார்வையில் பிரச்சினையை அணுக வேண்டும் என்ற கருத்தின் நிராகரிப்பு என்கிற முக்கியம் வாய்ந்த கருத்து அதன் கனத் துடன் முழுவதும் விவாதிக்கப்பட்டிருக்க வேண் டும் 'பாதிக்கப்பட்டவர்களின் பார்வை' என்பது உணர்வு பூர்வமான நியாயப்படுத்தலுக்கு இட்டுச் செல்கிறதாகவும், விஞ்ஞான பூர்வமற்றும அமை வதைப் பற்றி இன்னமும் பேசியிருக்கலாம்.

மிக 'சுவாரஸ்யமான' கருத்து, 'எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது'' என்கிற பத்மாவின் குரல். தம்மை

படிப்பகம்

www.padippakam.com



யறியாமலே நமது மனம் எப்படிச் சில தேர்வுகளை நிராகரித்து ஒதுக்கிவைக்கிறது என்பதும், எப்படி மனத்தின் உட்கிரகிப்பு காலத்தாலும் சூழலாலும் ஒதுக்கப்படுகிறது என்பதற்கும் இது நல்ல உதாரணம். உடல் பற்றிய உணர்வுகளை நிராகரிப்பதன் மூலம், உண்மைகளை முன்வைத்துச் செயல்படாமல், உடல் பற்றிய ஒரு வெட்க உணர்வில் எழுப்பப்பட்ட 'கற்பு' என்ற கருத்தாக்கத்தின் ஒரு நீட்சியாகத்தான் இந்தப் பதில் எனக்குப் பட்டது. இந்தப் பதில் நம்முடைய விடுதலைப் பெண்களின், ஆதர்ச நிலைப்பாடு ஒரு விதத்தில் பழமை சார்ந்த தன்னை நிருபித்துக் கொள்கிற உந்துதலேயல்லாமல், உண்மையான மாறுபட்ட பெண்ணியம்—ஆண் மதிப்பீடுகளை நிராகரித்து புதிய மதிப்பீட்டு மண்டபத்தைக் கட்டி எழுப்புகிற பெண்நிலைச் சார்பு அல்ல. ஆண்களின் உலகத்தில், மதிப்பீட்டுக்குள் தனக்கு ஒரு 'கௌரவமான' இடத்தைத் தேடுகிற முயற்சியே என்று எனக்குத் தோன்றுகிறது. பெண்ணியக் குழுக்கள், பெண் உடம்பின் விளக்கங்களையும், உணர்வு விளக்கங்கள், பெண்கள் எழுதிய erotica-வையும் வெளியிடுவது பற்றி இவர்கள் என்ன கருதுவார்கள் என்று தெரியவில்லை. கருத்துக்கள் அமுக்கப்படுவது என்பது ஏற்றுக் கொண்ட ஒன்றாகி விட்டால் முக்கியமான பணிகளும்கூட 'எனக்கு வேறு வேலை இருக்கிறது' என்று ஒதுக்கப்பட்டு வருகின்றன.

விவாதத்தின் மிக அபத்தமான கருத்துகள் சாரு நிவேதிதாவிடம் வெளிப்பட்டதில் ஆச்சர்யமில்லை. ஆனால் நான் மிக மதிக்கிற சேடை (Sade) மேற்கோள் காண்பித்து, இக் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். சேடின் கருத்துகள் மிகப் புரட்சிகரமானவை. ஆண்-பெண் இடையே உள்ள உறவுகளைக் குடும்ப உறவுக்கு வெளியே முற்றுமாக மாற்றி அமைக்கிற முயற்சி சுலபமானதில்லை. மிக அசிங்கமான யுத்தம் Respectable activity யாகவும், மிக அழகான, இயல்பான கல்வி— ஒதுக்கமான அசிங்க

www.padippakam.com



மான தொன்றாய்ப் பிரசாரம் செய்யப்படுவதையும் எதிர்த்துத்தோன்றிய **Swinging Nude Club,** போன்ற இயக்கங்கள் 'காதலை' நிராகரிக்கவில்லை என்கிற உண்மை ஏன் விவாதிக்கப்படவில்லை?

காதலின் உளவியல் காரணங்களை ஆராயாமல் யந்திரத்துவமான காதல் - காமம் எல்லாம் ஒன்றுதான் என்கிற கருத்து மேலாண்மை பெறுவது ஒருவித அரசியல் தானா? இல்லை., வழக்கம் போல அறியாமையா? யோனிப் புணர்ச்சி தவிர்த்த மற்ற பாலுறவு பற்றிய அருவருப்பு உணர்வை அகற்றுவது என்கிற செயல்பாடு சரிதான். ஆனால் அவற்றுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பது எந்த விதத்திலும் பாலுறவுச் செயல்பாட்டின் அதிகார நிலையைப் பாதிப்பதில்லை— ஓரினக்காதலிலும் கூட 'பெண்கள்' **(Passive Partners)** இருக்கிறார்கள் என்பதும், ஓரினக்காதலில் பலாத்காரம், அதிகாரம் உள்ளன என்பதும் மறைக்கப்பட்டிருக்கின்றன. குடும்பத்தைச் சிதைப்பது என்கிற சரியான கருத்தை முன்வைத்து விட்டு, அதே நோக்கில் 'கம்யூன் வாழ்க்கை' என்கிற இறந்து போன— தோல்வியடைந்த **Utopian** கருத்துக்குத் தாவுவதும் எனக்குப் புரியவில்லை. குடும்பத்தைச் சிதைப்பது தனிமனித வெளிப்பாட்டிற்கு இட்டுச் செல்வதுதான் நிகழ்ந்திருக்கிறது. சரி, குடும்பம் சிதைந்து பட்ட ஸ்வீடன், அமெரிக்கா போன்ற நாடுகளில் என்ன நடந்திருக்கிறது? குடும்பம், பெண்ணை ஒற்றைப் பெற்றோராய்க் கொண்டு புது ஜனனம் கொண்டிருக்கிறது. ஆண்கள் தம் குழந்தைகளுக்குப் பணம் தருவதில்லை. பெண்கள் தம்முடைய குழந்தைகளை இழக்கத் தயாராய் இல்லை. இதனால் குடும்பத்தில் அம்மா மட்டும்- ஆனால் இது **Matrilinear** சமூகமாகவும் இல்லை. பெண்களுக்கு மேலும் சுமைகளாய் இவை முளைத்துள்ளன. வாழ்க்கைப் போராட்டத்தில் புதிய பரிணாமமாய் இவை உள்ளன. எப்படி குடும்பத்துக்கு உள்ளேயானாலும், வெளியே

www.padippakam.com



ஆனாலும், ஆண்களுக்குச் சாதகமாக சமூகம் செயல்படுகிறது என்பதிற்கு இது நல்ல உதாரணம். குடும்பச் சிதைவின் கூடவே பொருளாதார மாற்றம், பெண்களின் கையில் உண்மையான அதிகாரம் பகிரப்படுவது எவ்வளவு அவசியம், என்பதை உணர இது வழிவகுக்கும்.

ஆண்-பெண் உறவுக்கு மாற்று என்று சொல்லப்படுகிற வழிமுறைகளும் கூட ஆணையே மையப்படுத்தி- யோனிக்குப் பதிலியாக, வாயை—புட்டத்தை சிபாரிசு செய்வது வைப்ரேட்டர் பற்றி பேசாமல் இருப்பது சாரு நிவேதிதா போன்றவர்களின் ஆண் மையத் தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளன. நல்லவேளையாய், மனித உறவு தவிர்த்து மிருக உறவுகளை மேற்கொண்டு நாம் விடுதலை பெற வேண்டும் என்கிற கருத்து வெளிப்படவில்லை.

போர்னோகிராஃபி பற்றியும் இன்று பெண்ணியம் இரு எதிரெதிரான நிலைகளை மேற்கொண்டுள்ளது. போர்னோகிராஃபி பெண்ணை இழிவு படுத்துகிற, பெண்-ஆண் உறவுகளை Stereotype செய்கிற, ஆண்களுக்குக் கிளர்ச்சியளிக்கிற விதமாக உள்ளன. (உதாரணமாக, லெஸ்பியன் உறவுகள், ஆண்களின் ஓரின உறவுகள், ஆண்களுக்கு titillating ஆக இருப்பதில்லை என்பதும், இதில் பெரும்பான்மையாம்.)

இனப்பெருக்கத்திற்கான தேவை ஏற்படும்போது மட்டும்தான் யோனி உறவு கொள்ள வேண்டும் என்கிற கருத்தாக்கம்—எனக்கு காந்தியையும் கிறிஸ்தவப் பழமைவாதிகளையும் நினைவூட்டிச் சிரிப்பை வரவழைத்தது. கிடைக்குக் கூடிய கருத்தடைச் சாதனங்கள் பரவலாய் அறியப்படுவது என்பது முக்கியத்துவம் பெற்றாலே, கற்புச் சுமையிலிருந்து பெண்கள் விடுதலை பெறுவார்கள். அதில்லாமல், செக்ஸ் என்பது நல்ல, சந்தோஷம் தரக்கூடிய, ஒரு செயல்பாடு என்பதை வலியுறுத்திக் குற்ற உணர்வை நீக்குவதே நம் உடல் செயல்பாட்டின் ரசாயனங்களை முழுக்க அறியவும், அத்தகைய அறிவின் மூலமாகப் பெறுகிற விடுதலையைப் பேணுவதும்தான் உண்மையான வழி. □

www.padippakam.com

# 8

# குடும்பம், பெண்ணியம்

*—ராஜ்கௌதமன்*

ஆங்கிலத்தில் 'Subaltern' என்று கூறப்படும் இலத்தீன் மூலச் சொல்லுக்கு ஆளப்படுகிற/ கீழ்ப்பட்ட/ அதிகாரத்திற்குட்பட்ட... என்ற பொருள்கள் கூறப்படுகின்றன. மேலாதிக்கம் செலுத்தும் சாதி/ வர்க்கம்/குழுக்கள் மையப்பகுதியாகவும், மேலாதிக்கத்திற்கு உட்பட்ட சாதி/வர்க்கம்/ குழுக்கள் ஓரப்பகுதியாகவும் குறிப்பிடப்படுகின்றன.

மார்க்ஸ் இதனை வரலாற்றுரீதியில் ஆய்ந்து, உற்பத்தி உறவுகளில் 'Exploited Classes' என்று, சுரண்டப்படும் வர்க்கங்கள் அப்படியே நேரடியாக வருவதில்லை. அரசு, சட்டம், கல்வி, மதம், சாதி, குடும்பம், பொருளாதாரம், இராணுவம், கருத்தியல்... என்ற மூஞ்சிகளைக் காட்டித்தான் அல்லது லிங்கங்களைக் காட்டித்தான் சுரண்டுகின்றன.

www.padippakam.com



இப்படிச் சுரண்டப்படும் ஓரப்பகுதி மக்களைப் பொருளாதார மொழியில் பாட்டாளி வர்க்கம் என்றும்; சர்வதேச-பன்னாட்டு மூலதனம்— சந்தை மொழியில் மூன்றாம் உலக நாடுகள் என்றும்; இந்துச் சமய மொழியில் தலித்துகள் என்றும்; லிங்க/யோனி வேறுபாட்டு மொழியில் பெண்கள் என்றும் இன்று வர்ணிக்கப்படுகின்றனர். இந்த அடையாளங்களின் பெயர்கள் எல்லாம் நமக்குப் பண்பாட்டுத் தளத்தில் கருத்தியலின் கானல்நீர் மொழியில் மொழியின் குறிப்பீட்டில், தன்னிலை (Subjectivity) யின் பாத்திரவார்ப்புகளில் நமக்குப் பரிச்சயமாகின்றன. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் அடியில், அடிக்கட்டுமானமாகப் பொருளாதார உற்பத்திமுறை இருக்கின்றது. இந்த விசயத்தைப்பற்றி அதிகம் விவரிக்க வேண்டியதில்லை.

* * *

இந்த ஆதிக்க சக்திகளுக்குள் ஒடுக்கப்பட்ட ஓரப்பகுதி மக்களில் பெண்கள் அடங்குகின்றனர் இவர்களைப் பொருளாதார ரீதியில் 'வர்க்கம்' என்றோ, சாதி மத ரீதியில் 'தீண்டத்தகாதோர்' என்றோ, உழைப்பு ரீதியில் 'பாட்டாளிகள்' என்றோ குறிப்பிட்டு அடையாளம் காட்ட முடியாது. இவை எல்லாமும்தான் சம்பந்தப் பட்டிருந்தாலும், துண்டாக, உடல் அடிப்படையிலும், பண்பாட்டு கருத்துருவச் செயல்பாட்டு அடிப்படையிலும், பாலியல் உறவு அடிப்படையிலும் தான் 'பெண்' என்ற ஒடுக்குதலற்ற பால் (sex) என்பதைக் காரணமாகக் கூறவேண்டும். 'ஜீன்'என்ற மரபுக் கூறுகள், (X X குரோமசோம்) அதன் தொடர் விளைவுகளான உடலியல் நிகழ்வுகள், (ஆண்குறியில்லாத குறை, குறையுற்ற மனோபாவம் irrational predication, மாதவிடாய், தீட்டு, அதுபற்றிய, சாதி/மத சம்பிரதாயங்கள், etc...) அவற்றைச் சுற்றிய மத/மொழி/பண்பாட்டுப் புனைவுகள், தனிச் சொத்துடைமையோடு சம்பந்தப்பட்ட குடும்பம், கற்பு,

www.padippakam.com



தாய்மை, காதல் முதலான கருத்தாக்கங்கள் ஆகிய எல்லாவற்றைப் பற்றியும் கவனத்தைத் திருப்புகிறது, 'பெண்ணியம்'. பார்க்கப் போனால் பிரச்சினை உடல் என்பதில் போய் மையமிடுவதாக பெண்ணியம் அபாய ஒலி ஒலிக்கின்றது.

'பெண்ணியம்' பற்றி 'நிறப்பிரிகை' இதழில் வெளி வந்த விவாதங்களைப் பற்றிப் பேசுவதற்கு முன், இரண்டு விசயங்களைக் கூறிவிட வேண்டும். ஒன்று 'பெமினிசம்' என்ற பெண்ணியச் சிந்தனையும், அணிவகுப்பும் தோற்றம் எடுத்த மேற்கத்திய நாடுகளில், இன்று 'பெண் ணியம்' பற்றிப் பெண்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும். இரண்டு, பெண்ணியவாதிகள் ஒடுக்கப்பட்ட ஏனைய மக்கட் பிரிவினர் தத்தம் வரலாறுகளை de-code செய்வதைப் போலவே தாங்களும் செய்ய முனைந்துள்ளார்கள். ஏனென்றால், இவ்விரண்டு விசயங்களும், எதிரிகள்/ அல்லது எதிரிகளின் கருத்தியல்களைத் தங்களுடைய கருத்தாக உள்வாங்கியவர்கள் ஆகிய இருதரப்பாரின் நிலைபாடுகளை நமக்கு விளக்க உதவும்.

## A

1980களின் இறுதியில். அமெரிக்கா/ஐரோப்பா/மத்திய ஆசியா/கிழக்காசியாப் பகுதிப் பெண்களிடம் நேர்முகம் கண்டு ஏறத்தாழ 250 பேர்களுக்கு மேற்பட்ட பெண்கள் 'பெமினிசம்' பற்றிக் கூறியவை 'Women' என்ற நூலில் (ஆசிரியர் : நயிம் அட்டலாஹ்) தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றை முதலில் காணலாம். இந்தியாவில் பெண்ணியம் பற்றிய கருத்துக்கள் மிகவும் குறைவு. இடதுசாரிக் கட்சிகளின் ஒரு சிறு தொங்கு சதையாகத்தான் மகளிர் இயக்கம் உள்ளது. எனவே நாமெல்லாம் வியந்து நோக்கும் மேற்கத்திய மகளிர் தங்களுக்கான 'பெண்ணிய' இயக்கம் பற்றிப் பேசியுள்ளதைக் காணலாம்:

www.padippakam.com



''பெமினிஸ்டுகள் போக்கிரிகள், பொறுப்பற்றவர்கள்; பணக்காரிகள்; பூர்ஷ்வாக்கள். பெமினிசம் இவர்களுக்கு ஒரு luxary; பாட்டாளிப் பெண்கள் இதில் சேர மாட்டார்கள்.

பெமினிசத்துக்கு வெறுப்புணர்வே அடிப்படை; இவர்கள் அழகற்றவர்கள், இவர்கள் மேல் நாற்றமடிக்கும்; ஆம்பிளையைப் போன்றவர்கள், நளினமற்றவர்கள், தீவிரவாதிகள், இடதுசாரிகள்; தாய்மையைக் களங்கப்படுத்துபவர்கள்; குடும்ப நிம்மதியைக் குலைப்பவர்கள்; எல்லா விசயத்தையும் அரசியலாக்குபவர்கள்; கம்யூனிஸ்டுகள்; அருவருக்கத்தக்க லெஸ்பியன்கள்; போதை மருந்து பழக்கம் உள்ளவர்கள்; விடுதலை என்ற போர்வையில் யாரோடும் படுக்க விரும்புபவர்கள்; சின்ன வயதிலிருந்தே தந்தை அன்பைப் பெறாமல் இசைகேடாக நடந்தவர்கள்; பலருடன் படுப்பதே இவர்கள் இலட்சியம்; எப்போதும் சமத்துவம் வராது; எப்படியும் சமத்துவமின்மை தொடரும்; இதுதான் இயற்கைநியதி. ஆம்பளையும்தான் சுதந்திரமில்லாமல் இருக்கிறான். அப்படித்தான் பெண்ணும். இருக்கிற சுதந்திரமே போதும். பெண்கள் பேசாமல் உழைத்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அது போதும். மற்றதைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? அன்பான கணவன், அழகான வீடு, இனிய குழந்தைகள், சொன்னதைச் செய்யும் எடுபிடிகள், போய் வர கார்கள், தனிச் செயலாளர்கள் என்ற வாழ்க்கை அமைந்துவிட்டால் வேறு என்ன வேண்டும்? ஆணைச்சார்ந்து அவனுக்கு அடங்கி வாழ்வதே பூரண இன்பம். பெமினிசத்தால் மானிட இனமே அழியும், உலகமே அழிந்துவிடும்.''

என்று பேட்டி தந்த பெரும்பான்மை வெள்ளைக்காரிகள் கூறியிருக்கிறார்கள். மனு ஸ்மிருதியில் இந்துப் பெண்களுக்கு விதிக்கப்பட்ட விசயங்களை அறிந்துள்ள நமக்கு மேலே மேற்கோள் காட்டிய வெள்ளைப் பெண்

www.padippakam.com



களின் கருத்துக்கள் விபரீதமாகப் படவில்லை அல்லவா? அதுமட்டும் அல்ல. கம்யூனிஸ்டுகள்/சோசலிஸ்டுகள்/ஆயுதம் ஏந்திய ஆதிவாசிகள்/கறுப்பர்கள்/தலித்துக்கள் ஆகிய அனைவருக்கும் இந்தக் கூற்றுக்களைப் பொருத்திப் பார்க்கலாம். ஓரப்பகுதி மக்கள், மேலாதிக்க மையப் பகுதியினரின் ஒடுக்குமுறைக் கருத்துக்களை எந்த அளவிற்கு உருவாக்கித் தமக்கான கருத்துக்களாக பழகிப் போயிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம் தான்.

வரலாறு நம் வரலாறு; வரலாற்றில் எல்லாம் தேவை கருதித்தான் ஏற்பட்டன என்று நம்மில் பலர் பேசுவதற்குக் கூச்சப் படுவதில்லை. யாருடைய தேவை கருதி என்று இவர்கள் ஒரு போதும் யோசிப்பதில்லை.

B

இனி வரலாற்றில் பெண் பற்றிய சித்திரங்களைக் காணலாம். இங்கும் கூட இந்தியாவை விலக்கி, முன் கூறிய மேற்கத்திய வரலாற்றையே கவனப்படுத்தலாம். வெள்ளையர்களின் பைபிளில், பெண் ஆண் உடம்பிலிருந்துதான் படைக்கப்படுகிறாள். அவளால்தான் மானிட இனமே சாபமுற்றது; மாந்தர் அனைவரும் இந்த சாபத்தால் பிறந்தார்கள். ஆண்-பெண் புணர்ச்சியே பாவம்; பெண் இதற்குத் தண்டனையாக வலியெடுத்துப் பிரசவிக்க வேண்டும்; ஆண் வியர்வை சிந்தி உழைக்க வேண்டும். உழைப்பே சாபக்கேடு. பெண்ணை அளப்பதற்குப் பாலியல் ஒழுக்கமே ஒப்பற்ற ஒரே அளவுகோல்; பைபிளுக்குப் பின் 18/19-ஆம் நூற்றாண்டு உளவியலும் பெண் பிறப்பால், வளர்ப்பால் ஊனமுற்றவள் என்றே விஞ்ஞான பூர்வமாகப் பேசியது. எல்லா இயக்கங்களிலும் பெண்ணுக்கு தண்டனை தருவது அவளது யோனிச் செயல்பாட்டை வைத்தே ஆகும். பெண்களுக்கு இடுப்புக்குமேல் உள்ள உடம்பை தெய்வங்களும், அதற்குக்கீழ்

www.padippakam.com



உள்ள பகுதியைப் பேய்களும் தந்ததாக சேக்ஸ்பியர் குறிப்பார். மனித உடல் கூட சமூக மதிப்பீடுகளுக்கு ஏற்றபடி மேல்-கீழ் என்று மையமிடப்பட்டது. இந்து மரபில், பிரம்மாவின் உடலில் வாய்/பாதம் என்ற மேல்/கீழ் மதிப்பீடுகள் அமைத்து வருணங்கள் தோன்றியதாகக் கூறுவதை நாமறிவோம்.

18, 19-ஆம் நூற்றாண்டு விக்டோரிய கால இலக்கியங்களில், குடும்பம் மிகப் புனிதமிக்கதாக, கௌரவ அமைப்பாகப் போற்றப்பட்டது. பிறப்பால் அனைவரும் சமம் என்ற பூர்ஷ்வா கருத்து பெண்ணுக்கும் பொருத்தப் பட்டது. அப்போது தோன்றிய அறிவியலும் கூடப் பெண்ணை ஒடுக்கும் அதிகாரமாகத்தான் இருந்தது. டார்வின் கூறிய பரிணாம வளர்ச்சியின் பிரகாரம், தற்போது, பெண்ணின் மூளை ஆணைவிட ஐந்து அவுன்சு கம்மி என்று கூறப்பட்டது. இது நிவர்த்தியாவதற்குப் பல நூற்றாண்டுகள் பிடிக்கும் என்றார்கள். பூர்ஷ்வா உற்பத்தி முறையில், புதிய உற்பத்தி உறவுகளில் நடுத்தர வர்க்கப் பெண்களும், பாட்டாளி வர்க்கப் பெண்களும் சுரண்டப்படும் வர்க்கத்தினராகிய போது, பெண் கல்வி, வாக்குரிமை, சொத்துரிமை, சட்டவசதி என்று சீர்திருத்தங்கள் பெண் விடுதலைக் கருத்துக்களாகப் பேசப்பட்டன. அப்படிப் பேசிய போதும் கூட பெண் இயற்கை அமைப்பிலேயே மேற் படிப்பிற்குத் தகுதியற்றவள், மாதவிடாய் இரத்தப் போக்கு காரணமாக சக்தி செலவாகி விடுகிறது. மேற்படிப்பிற்குத் தேவையான உபரிசக்தி அவளுக்கு இல்லாமல் போகிறது. பெண்கள் தங்கள் உயிரியலின் கைதிகள் என்று முத்திரையிடப் பட்டனர்.

இக்கருத்துக்களை இன்றும் நம் நாட்டுப் பெண்களில் 90 சதவிகிதத்திற்கும் மேல் தங்கள் கருத்தாக ஏற்றுள்ளனர்.

www.padippakam.com



இதுவரை தொகுத்துரைக்கப்பட்ட விசயங்களி லிருந்து ஒன்றை நாம் தெளிவாக அறியலாம்.

ஆண் அல்லது தந்தையின் நலன்களைக் குவிமைய மாகக் கொண்டு உருவான சமூக அமைப்பின் கருத்துக் களே வரலாறு. இந்த வரலாற்றைத் தங்களுடைய வரலா றாகவே பெண்கள் உள்வாங்கியுள்ளார்கள்.

இனி 'நிறப்பிரிகை'யில் நிகழ்ந்த பெண்ணிய சர்ச்சை களைக் காணலாம். 'பெண்ணியம்' பற்றிய தனது நிலை பாட்டை 'நிறப்பிரிகை' தெளிவாக வைக்கவில்லை. இது குற்றச்சாட்டில்லை. யாராலுமே வைக்க முடியாது. இன்னின்ன தளங்களில் இப்படிப்பட்ட முறைகளில் பெண் அடிமைத்தனம் நடக்கிறது; இப்படிப்பட்ட தீர்வு களை வைக்கலாம் என்று தான் பேச முடியும். அடிமைத் தனத்திற்கு என்ன காரணங்களை காட்டுகிறோமோ அதன் கருத்தியல் வரையறைக்கு உட்பட்டே தீர்வுகளை யும் வைக்கிறோம். வைக்கப்பட்ட தீர்வுகள் ஒவ்வொன் றாக நிலை தடுமாறுகிறபோது சிக்கலின் கனத்தையும் ஆழத்தையும் புரிந்து கொள்கிறோம். நாம் இதுவரை நம்பி வந்த தீர்வு முறைகள் புதிய கோட்பாடு உருவாக் கங்கட்கு இட்டுச் செல்கின்றன. நாமும் நம் கருத்துலகமும் அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சிக்கு ஆளாகி உடைபட்டு மீண் டும் மீண்டும் புரட்சிகரமாக ஒருமுகப்படுத்தப்பட்டே வந் திருக்கிறோம். தாய்மை, காதல், சாதி, மதம், தலைவர், ஆசான், தகுதி, பட்டம்,........என்று ஒவ்வொன்றாக உடைபட்டு உடைபட்டு இப்போது 'ஆண்மை' 'பெண்மை' என்ற புனைவுகளும் உடைபடத் தொடங்கி யிருப்பதை நாமறிவோம். ஒவ்வொரு கட்டததிலும் நாம் பதைப்புகளுக்கு ஆளாகியிருக்கிறோம். சிலர் சீரழிந்திருக் கிறோம். மீண்டும் புதிதாக பிறந்திருக்கிறோம்; வேறு தளத்தில் திரளவும் செய்திருக்கிறோம். ஆனால் இப்போது நாம் பேசிக் கொண்டிருக்கிற 'பால்பேதம்' நம்மிடையே நொறுங்குகிறபோது சொல்ல முடியாத தவிப்புகளை

www.padippakam.com



எரிச்சல்களை அடைகிறோம். இப்படிப்பட்ட தவிப்பு எரிச்சல்களை 'நிறப்பிரிகை' விவாதங்களில் பலரும் வெளிப்படுத்தியுள்ளனர் :

குடும்பத்தை உடைப்பது தப்பு. அதற்கு மாற்று ஏது? ஆண்—பெண் வேறுபாடு அழியாது; குடும்பம் ஒரு சமூக வயப்படுத்தும் முதுமையான அமைப்பு; குடும்பத்தைச் சிதைத்தால் பாதுகாப்பு இல்லை. அரசு உதிரும் போது குடும்பமும் தானாகவே உதிரும். ஒட்டுமொத்தச் சமூக விடுதலை வரும்போது குடும்பமும் தேவையில்லாமல் போகும். இப்போதைக்கு அதை உடைக்க வேண்டாம். தேவை காரணமாகத்தான் ஆண்—பெண் வித்தியாசம் தோன்றியது. அது இயற்கை. குடும்பத்திலுள்ள பல அம்சங்களில் தாய்மை முக்கியமானது. அதை இழக்க முடியாது. பெண் விடுதலை தேவை. ஆனால் sexism கூடாது; யாருக்கும் சேதம் இல்லாமல் படிப்படியாகப் பெண் விடுதலை வரவேண்டும்; ஆண்கள் தான் பெண்களுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டும்; பாதிக்கப்பட்டவர்கள் தான் பிரச்சினையைப் பேசத் தகுதியுள்ளவர்கள் என்பது தப்பு. பாதிக்கப்படாத நாங்களும் வெளியிலிருந்து கை தூக்கிவிடுவோம்.

—என்று பெரும்பாலோர் பேசினார்கள். நான் சற்று முன் சொன்ன தவிப்பும்/பதட்டமும்/சங்கடமும் இவர்களின் கூற்றுகளிலிருந்து தெளிவாக வெளியிடப்படுகிறது. இந்த விதத்தில் 'நிறப்பிரிகை' விவாதம் எவ்விதத் தணிக்கை முறைகளும் இல்லாத வெளிப்படையான விவாதமாக அமைந்துள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதனை வேறு மாதிரி பார்க்கலாம். இந்தப் பதட்டங்கள், சம்பந்தப்பட்டவர்கள் தாங்கள் எதையோ இழக்கப்போகிறோம் என்ற பாதுகாப்பு உணர்வில் வெளிப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, தங்களுடைய

அ—10

படிப்பகம்

www.padippakam.com



நிலைபாட்டில் அசாத்தியமான தெளிவுடனும் இருக்கிறவர்களாகத் தெரிகிறது.

இந்தத் தெளிவும், பதட்டமும் தங்களின் தற்போதைய பாதுகாப்புணர்வின் வெளிப்பாடுகள்தாம். இத்தகைய தெளிவும், தீர்மானமும், பதட்டமும் 'நிறப்பிரிகை'யில் பெண்ணியம் பற்றித் தீவிரமான வரவேற்பை அளித்த ஒரு சிலரிடம் காணமுடியவில்லை.

ஆண்-பெண் உடல் அடையாளங்களை மறுத்து, மாற்றுப் புணர்ச்சி முறைகள், பாலியல் அரசியல் அதிகாரம், பெண்ணியச் சொல்லாடல், கொம்யூன் வாழ்க்கை முதலிய கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். பெண்ணியத்தின் சகல விசயங்களையும் இவர்கள் பரிசோதிக்கவில்லை என்பதை வலியுறுத்த விரும்பவில்லை. 'நிறப்பிரிகை'யில் 'பெண்ணியம்' விவாதம் பற்றிய துரதிர்ஷ்டவசமாக, பெண்ணியம் பற்றிக் கேள்விப்பட்டவர்களுக்கும், தீவிரப் பெண்ணியவாதம் பற்றிப் படித்தவர்கட்கும் இடையில் நிகழ்ந்திருக்கிறது. எனவேதான், கேள்விஞானம் உள்ளவர்கள் சிலரிடமிருந்து அவர்களுடைய நல்லெண்ணங்களுக்கும் மாறான கோபங்கள் எழுந்துள்ளன. மனித இயற்கை/ மனித நேயம்/ 'தான்' என்ற ego/ எல்லோரிடமும் இயற்கையாக அதிகாரம் உண்டு என்ற Biologism— கருத்துக்கள் பிறந்தமேனியாக வெளிப்பட்டுள்ளன நான் இங்குச் சொல்லிக் கொள்ளுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். சாதிபேதம் இல்லை; கடவுள் இல்லை; ஏழ்மைக்கு முற்பிறவி காரணம் இல்லை என்று நாம் முன்னர் கூறியபோது, இவற்றில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு எத்தனை கோபம் வந்தது? இப்போது நாம் கோபப்படுகிறோம். சுய பரிசீலனைகளை இப்போது நாம் மேற்கொள்ள வேண்டும்—சாகும்வரை...

இனி, பெண்ணியம் பற்றிய சிக்கல்களையும், விளக்கங்களையும், தாண்டமுடியாத எல்லைகளையும் பற்றிப்

படிப்பகம்

www.padippakam.com



பார்க்கலாம். இதைத் தொடங்குவதற்கு முன் இரு பெண்ணியச் சிந்தனையாளர்களின் பொதுவான எச்சரிக்கைகளைக் காணலாம்:

1. ''நமக்குக் கற்பிக்கப்பட்ட எல்லாவற்றிலிருந்தும் நாம் நம்மை விலக்கி வைத்து அணுகுகின்ற ஒரு முறையை நாம் மேற்கொள்ளவேண்டும். நமது வரலாற்றுக்கும், மரபுக்கும் அப்பாலும் நாம் காண முயலவேண்டும்.

(Anne Tristan/ Anne de Pisan)

2. ''பெண் தன் பங்கினைச் செயல்படுத்திக் காட்ட வேண்டுமானால், எதிர்மறைச் செயல்பாட்டைப் பாவித்துத்தான் செயல்படமுடியும். முடிந்த முடிபானது, நிச்சயமானது, அமைப்புற்றது, இருக்கின்ற சமூக அர்த்தங்களை இவை இவை தாங்கியுள்ளன— என்று கூறப்படும் அனைத்தையும் மறுத்துவிடு! ஒதுக்கிவிடு.''

(ஜூலியா கிறிஸ்தெவா)

இந்த அபாயக் குரல்கள் நமக்குச் சொல்லுவது என்ன? பெண்ணிய சிந்தனைக்கு அடிப்படை, மூடிய சிந்தனை முறையை அகற்றுவதுதான். ஒடுக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் இது பொருந்தக்கூடியதுதான். அதாவது கருத்தியல் ரீதியில் முதலில் நாம் நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

ஏங்கல்ஸ் தம்முடைய 'குடும்பம், தனிச்சொத்து, அரசு-தோற்றம்' பற்றிய நூலில், தனிச் சொத்துடைமை உருவான கட்டத்தில் தோற்றம் கொண்டதுதான் குடும்பம் என்ற அமைப்பு என்றார். அதாவது வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையின்போது தோன்றியதாக இதற்கு அர்த்தம். தனிச்சொத்துடைமை முறை நீங்குகிறபோது, குடும்பமும் நீங்கும் என்பது இதன்

www.padippakam.com



தர்க்க நீட்சி. இதன் விளைவாக, ஆணுடைய வாரிசை அப்புழுக்கில்லாமல் பெற்றுத்தரத்தக்க விதத்தில் பெண்ணின் பாலியல் வேட்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து ஆணை, தந்தையை அதிகார மையமாகக் கொண்ட குடும்பம், அதிலுள்ள சார்பு நிலைகள், கற்பு, தாய்மை, பணிவு ஆகிய மதிப்பீடுகள் புனிதம் பெற்றன. இந்த தந்தை வழிச் சமூகக் கருத்துக்களே இன்று அரசு நிறுவனங்கள், சட்டங்கள் ஆகியவற்றில் பதிவாகியுள்ளன.

ஏங்கெல்ஸ் கூறியபடி, பெண், முதலாளியச் சமூக உற்பத்தி முறையில் நுழைகிறபோது அவளுடைய விடுதலை சாத்தியமாகும் என்பதும் பொய்த்துள்ளது; அதே போல, தனிச்சொத்து உடைமை நீங்குவதாகக் கூறும் சோசலிச உற்பத்திமுறையிலும், அவளுடைய விடுதலை கிட்டவில்லை. பார்க்கப் போனால் சோவியத் ரஷ்யாவிலும், சீனத்திலும் மணஉறவுக்கு வெளியிலுள்ள பால்புணர்ச்சிகள், தன் பால் புணர்ச்சிகள் போன்றவை பூர்ஷ்வா நச்சுக் கலாச்சார வெளிப்பாடுகள், சீரழிவுகள் என்று ஒழுக்கவியல் கருத்தாக்கமாகப்பட்டன. சுருக்கமாகச் சொன்னால் சோசலிஸ்டுகளின் சிந்தனைப் போக்கில் தந்தைவழிச் சமூக மதிப்பீடுகளே பொதிந்திருக்கக் காணலாம்.

ஆண்-பெண் வேறுபாட்டிற்கான மூல முதற்காரணமாக ஏங்கல்ஸ், பாலியல் வேலைப் பாகுபாட்டைச் சுட்டிக் காட்டினார். இந்த வேலைப்பாகுபாடு 'புராதனமானது,' இயற்கையானது என்றுதான் பார்த்தாரே தவிர, சமூகவயமானதாகப் பார்க்கவில்லை என்பது பெண்ணியவாதிகளின் முக்கிய குற்றச்சாட்டு. உடல் அமைப்பிலேயே, இயற்கையாகவே ஆணும் பெண்ணும் வேறு வேறு வேலைப் பிரிவுக்கு லாயக்கானவர்கள் என்ற 'Naturalistic' கருத்தை ஏங்கல்ஸ் முன்வைத்தார். இந்தப் பாலியல் அடிப்படையிலான வேலைப்பிரிவு என்பது

www.padippakam.com



இயற்கையானதல்ல, சமூகரீதியில் கட்டமைக்கப்பட்டதே யாகும் என்கிறது பெண்ணியம்.

சரி, அப்படியென்றால், பெண், தனது லௌகீக வாழ்வுக்குரிய பொருளாதார தற்சுதந்திரத்தைப் பெற்று விட்டால், ஆணைச் சார்ந்து வாழ்கின்ற சார்பு வாழ்வு அகலுமல்லவா? ஆனால் அப்படி நடக்கவில்லை பூர்ஷ்வா சமூக அமைப்பிலும் சரி, சோசலிச சமூக அமைப்பிலும் சரி சம்பாதிக்கிற பெண்களுக்கு இன்னும் விடுதலை கிட்ட வில்லை என்றுதான் கூறுகிறார்கள். அப்படியென்றால், பெண் விடுதலைக்கு வேறு தளங்களையும், மூலங்களையும், மார்க்கங்களையும் தேட வேண்டியது உள்ளது. ஆண்-பெண் வேறுபாடு பண்பாட்டு வகைப்பட்டதா? அல்லது உயிரியல் வகைப்பட்டதா? கேள்விகள் உளப்பகுப்பாய் வியலுக்கு இட்டுச் செல்கின்றன.

முதலாளியத்தைத் தூக்கி எறிவதால் பொதுவாக, ஒடுக்குமுறை பற்றிய சிக்கலைத் தீர்த்து விட்டதாக அர்த்தமில்லை. ஒடுக்குமுறையின் வேர்கள் இன்னும் ஆழச் செல்லுகின்றன. மாந்தரின் நினைவிலி மனத்தின் பின்னி ருந்து இயக்கும் அடிப்படைச் சக்தி 'பாலியல்' என்றார் வில்கெம் ரீச். இந்தப் பாலியல் உள் உணர்வுதான் மனித நடத்தைக்கும். மனிதர்க்குள் எழும் முரணுக்கும் மூலா தாரம். சமூகத்தின் பொருளாதார அடித்தளமானது, தனிநபர்களின் வாழ்வை ஆட்டிப்படைக்கிற நினைவிலி நம்பிக்கைகள் மற்றும் ஆவல்களாக உள்வாங்கப்படுகிறது. அதாவது பொருள் இங்கு மனித தன்னிலையுடன் கருத்துக் களாக உள்வாங்கப்படுகிறது. இப்படி ஆக்குகின்ற மெக் கானிசம் எது என்பதை அறிய முயல்கிறது உளப்பகுப் பாய்வியல்.

பொருளாதார அடிக்கட்டுமானத்திற்கும், கருத்து வகை மேற்கட்டுமானத்திற்கும் இடையில் அப்படியே நேரடியாக, சரிக்குச் சரியான, எளிய சுருங்கிய தொடர்பு

www.padippakam.com



கள் இல்லை. அப்படி இல்லாதபடி இருப்பதற்குக் காரணம் இரு கட்டுமானத்திற்கும் இடையில் 'பிளவு'/ 'விரிசல்' (leavage) உள்ளது. இன்னும் சொல்லப்போனால் இவ்விரண்டிற்கும் இடையில் எளிய நேரடி உறவு இல்லாதபடி குறுக்கீடு செய்வது தனி நபர்களின் உளவியல் இயக்கமே என்பார் ரீச்.

வேறுவிதமாகக் கூறினால், அடிக்கட்டுமான ரீதியில் ஒருவன் எந்த வர்க்கத்தானோ, அந்தப் பொருளாதார நிலைமைக்கு ஏற்ற வர்க்க ஓர்மை உள்ளவனாக மேற்கட்டுமானத்தில் வெளிப்பட வேண்டும். ஆனால் அப்படி நடைமுறையில் இல்லை. இதைத்தான் மார்க்ஸ் பொய்யான ஓர்மை என்றார். அல்துசர் கற்பனையான ஓர்மை என்றார். இதைத்தான் அரசியல்/பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு அடுத்த மாபெரும் கருத்தியல் செயல்பாடு என்பார்கள்.

ரீச் கூறுவதை மேலும் கவனிக்கலாம். தனி நபர்களின் இயல்புணர்வுகளின் ஊக்கத்திற்கும் சமூக நிலைகளுக்கும் இடையில் இயல்பாக இருக்கவேண்டிய சம்மதம் இல்லாமல் போய்விட்டது. தனிநபர்களின் செயல்பாடு இதனால் Irrational ஆகவே அமைகின்றது. Rational-ஆக அவன் செயல்பட்டிருந்தான் எனில், இயல்பாக வர்க்க உணர்வைப் பெற்றிருப்பான். தனிநபர்கள் தங்கள் விருப்புகளுக்கு இயையச் செயல்படாமல் irrational ஆகச் செயல்படவைத்த ஒடுக்குமுறைகளிலிருந்து அவர்கள் விடுபட 'பாலியல் புரட்சி'யால் தான் முடியும். இந்த ஒடுக்குமுறைகள் குடும்பத்தில் குழந்தைப் பருவம் தொட்டே ஆரம்பமாகின்றன. இக்குடும்பம்தான் அரசமைப்பும் கருத்தியலும் வார்க்கப்படுகின்ற தொழிற்சாலை என்பார் ரீச். பொருளாதாரப் புரட்சிக்குமுன் பாலியல் புரட்சி நடக்க வேண்டும் என்றார். ஆனால் ரீச் இங்கு பாலியல் உந்துதல்களை மட்டும் மனித அடிப்படை சாரமாக கொண்டிருப்பது தெரிகிறது. இந்த உந்துதல்கள் வரலாற்றைக் கடந்து

படிப்பகம்

www.padippakam.com



மாறாமல் உயிரியல் அமைப்பிற்குள் ஏற்கெனவே கட்டப் பட்டிருப்பதாக இவர் மதிப்பீடுகளை, உடல்/உயிர்/சமூகம் ஆகியவற்றின் மீது சுமத்துகிறார். அதனால்தான் இறுதியில் எல்லா மாந்தரின் பாலியல் உந்துதல் எப்போது தடையேதுமின்றி பூர்த்தியாகின்றனவோ அப்போதுதான் முழு விடுதலை கிட்டும்; இது இறுதியில் பிரபஞ்ச உயிரியல் தழுவல் என்ற மிஸ்டிக் கருத்து முதல் வாதத்தில் போய் முடிகிறது. மனித ஆகிருதியில் ரீச் ஏதோ அடிப் படையானதும், ஆரோக்கியமானதும் இருப்பதாகக் கருதியதுதான் சிக்கல். இப்படி உயிரியல் வாதத்தில் வீழ்ந்துவிட்டால், அது ஏதாவது ஒரு வழியில் இருக்கின்ற சிக்கல்களை உண்மைத் தகவல்களை வைத்து விளக்கு வதை விடுத்துச் சமூகத்திற்கு அப்பாற்பட்ட (Extra social) விளக்கங்களை முன் வைப்பதே வழக்கம். ரீச் இப்படி இறுதியில் சமூக-பௌதிக அரசியலுக்கு அப்பாற் சென்று பிரபஞ்ச அளவில் இணைவதில் போய் நிற்கிறார். எல்லா வித குறுக்கீடுகளும், தடை அதிகாரங்களின் அழுத்தங் களும் இன்றிச் சுதந்திரமாக இயல்புணர்வுகள் வெளிப்பட வேண்டும் என்பதைப் பாலியல்-உயிரியல் அடிப்படையில் பார்த்தார்கள் ரீச்/மார்க்யுஸ் போன்றவர்கள்.

பொதுவாக முதலாளியத்தின் கீழ் நடக்கும் திரிபு களும், அந்நியமாதல்களும், மக்களைத் தங்கள் 'உண்மை' இயல்பைத் தேடும் Romantic வேட்டையில் ஆழ்த்திவிடு கின்ற அபாயம் உண்டு என்பார்கள். ரீச் போன்றவர் களின் Romantic காட்சியானது பெமினிஸ்டுகளுக்குப் புத்துணர்வும், ஊக்கமும் தரலாம்; ஆனால் பெண்விடு தலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லுகிற ஓர்மை மிக்க போர் முறைக்கு இது பயனற்றது.

பொருளாதாரம், உயிரியல் ஆகியவற்றைக் கொண்டு பால் வேறுபாட்டின் காரணங்களையும் அவற்றை அகற்றும் வழிமுறைகளையும் முழுமையாக அறிய முடிவ தில்லை. எனவே உளப்பகுப்பாய்வியலின் தன்னிலை

படிப்பகம்

www.padippakam.com



உருவாக்கம் அதில் மொழியின் பிரதான பங்குபற்றி ஆய்ந்தனர். இதில் லக்கான் சிந்தனை முக்கிய பங்கு வகித்தது. பிறந்த குழந்தை மொழி அமைப்பில் நுழைகிற போதுதான் அது தனக்கான subject-ஐப் பெறுகிறது. அது, தான் பிறந்த சமூகத்துடன் உறவு கொள்ள வேண்டு மானால், பண்பாட்டுக் குறிப்பீட்டு முறையில் ஒரு symbolic order இல் அதாவது மொழியில் நுழைய வேண்டும். இவ்வாறு தன்னிலை என்பது மொழி ரீதியில் கட்டமைக்கப்படுகிறபோது, ஊடகங்களால் அல்லாமல் வேறு விதத்தில் யாராலும் அனுபவம் பெற முடியாது. அதாவது unmediated exprience என்பது இருக்க முடியாது. இந்த மொழி என்ற symbolic ஒழுங்கு, செயல் பாட்டில் கருத்தியலுடன் நெருங்கிய உறவு பூண்டுள்ளது. இதுவும் தனிநபர்களை தன்னிலைகளாக கட்டமைக் கின்றது. தந்தைவழிச் சமூகங்களில், பெண்கள், தங்கள் மீது செலுத்திய ஒடுக்குமுறைக் கருத்தியலைத் தாமே முன்வந்து தங்களுடையவையாக ஏற்றிருப்பது, தன்னிலை ஆக்கத்தில் கருத்தியலுக்குள்ள பொறுப்பு தெரியும்.

லக்கான் கருத்துப்படி இங்கு, உயிரியல் ரீதியில் ஒன்றும் பதியவில்லை. உயிரியல் ரீதியில் பால் உருவாக்கத் தைக் காண்பது மறுக்கப்படுகிறது. ஒருவரின் இயல்பு/ இயற்கை பற்றிய உண்மையைக் கண்டறியும் எல்லாவிதப் பார்வைகளும் வெளியிலிருந்தே வருகின்றன. ஒருவரின் தன்னிலை என்பது சங்கிலித் தொடரான பண்பாட்டுக் குறிப்பான்களில் 'நிலை' நிறுத்தப்படுகிறது. அப்போது தான் குறிப்பிட்ட வகையான அர்த்தத்தை அதனால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஆண் ஆதிக்க அமைப்பியற் சக்தியானது தனி நபரின் தன்னிலையை நேரடியாக அழுத்துகிறது. பிறந்த குழந் தைகளில் இது காயடிப்புச் சிக்கல் மூலம் பால் பிளவை ஏற்படுத்துகிறது. ஒவ்வொருவரையும் ஆண் அல்லது

www.padippakam.com



பெண் என்ற நிலைப்பாட்டை மேற்கொள்ளுமாறு செய்கிறது. பெண் குழந்தைக்கு 'லிங்கம்' இல்லாத குறையும், சிறுவனுக்கு, தாயுடன் ஓடிபஸ் உறவு கொள்ள முடியாத குறையும் ஏற்படுவதையே இங்குக் காயடிப்புச் சிக்கல் என்கிறார். ஆண்மை-பெண்மை என்று அறிவது ஒரு மாயை. இரண்டும் முழுமொத்த வகை மாதிரிகளாக இல்லை; இரண்டு ஒருவித fantacies தான். இரண்டிலும் பிளவுற்ற/அலைபாய்கிற தனிமனித தன்னிலை விருப்பம் கொண்டுள்ளது.

லக்கான் மீது பெண்ணியவாதிகள் வைக்கும் குற்றச்சாட்டுகள் இரண்டு.

ஒன்று: தனிமனித தன்னிலை வெறும் பூஜ்யம்தான். வெளிச்சக்திகளால் தான் இது அமைப்புறுகிறது என்பது தவறு.

இரண்டு: ஆண்-பெண் வேறுபாட்டிற்குரிய ஒரே 'mark' லிங்கம் என்று கூறியது தவறு. இது 'லிங்கமையவாதம்' என்றனர்.

மேலே விவரித்த உளப்பகுப்பாய்வு வாதமும் சரி, உயிரியல் வாதமும் சரி, கருத்து முதல் வாதத்தில் சரியும் போக்குள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளனர் (Christine Delphy). கருத்தியல் மேற்கட்டுமானத்தை முதற் காரணமாகவே இவை பார்க்கின்றன. இவை சமூக கட்டமைப்பின் விளைவு என்று பார்க்கிறதில்லை. எப்போதுமே 'மதிப்பீடுகளைப்' பொருள் மற்றும் சமூக அமைப்புடன் உறவு படுத்தியே பார்க்க வேண்டும். அவ்வாறு உறவு படுத்தவில்லையென்றால், அப்பார்வை கருத்து முதல் வாதப் பார்வையாகிவிடும்.

இனி இன்றைய இரண்டும்கெட்டான் தன்மை கொண்ட இந்தியச் சூழலில் ஆண்-பெண் உறவினைக் காணலாம். இன்றைய சராசரி இந்திய ஆணுக்கும்

www.padippakam.com



பாலியல் என்பது தப்பித்து அடைக்கலமாகும் பகுதியாக உள்ளது. இப்படித் தப்பிக்க வரும்போது, ஒன்று பாலியலுக்குப் புறமுதுகு காட்டுகிறான்; அல்லது அதற்குள் தப்பித்து ஒளிந்துகொள்ளப் பார்க்கிறான். இவ்வாறு ஒளிந்து கொள்ளப் பார்க்கிறபோது பாலியல் நடத்தை பழிதீர்க்கும் விசயமாகிறது என்பார் S. N ராம்பால். ஏனெனில் அவனுக்கு வேறுவிதமாகப் பதிலியாக்கம் (Sublimation) செய்கிற ஆற்றல் மட்டுப்பட்டதாக இருக்கிறது. பெண்ணுக்குப் பதிலியாக்கம் செய்கிற ஆற்றல் அதிகம். அதற்குரிய Irrational பண்பு அவளிடம் மிகுதி. ஆணுக்கு நிஜஉலகில் பெறும் எரிச்சல்களுக்கு ஒரே போக்கிடம், புகலிடம் பால்தான். இந்நிலையில் பெண் அவனுக்குச் சரிநிகராக இன்றி, அவனுக்குரிய போகப் பொருளாகிறாள். ஆண், பொருளாதார-சமூக எதார்த்த தளத்தில் ஏமாற்றப்பட்டு எரிச்சலடைந்ததை பாலியல் சாதனையாக உருமாற்ற முனைகிறான். பெண் ஒரு புறப்பொருளாக மட்டுமே இயங்குகிறாள். இதனால் ஏற்கெனவே சமூக பாலியல் ரீதியல் ஓரவஞ்சனைக்கு உள்ளாகித் துன்புறும் பெண் ஆணின் இயல்பற்ற/erratic நடத்தையால் மேலும் கூடுதலான எரிச்சலுக்கு ஆட்படுகிறாள். ஆணின் எரிச்சல் பெண்ணையும் தொற்றுகிறது. இருவருமே அந்நியப்பட்ட நபர்களாகவே உறவாடுகிறார்கள்.

இந்துச் சமய/சாதி விதிகளால் ஏற்கெனவே தியாகி என்று condition செய்யப்பட்டுள்ள இந்தியப் பெண், ஆணுக்கு ஏற்படும் சமூகவகை தோல்விகளையும் போதாமைகளையும் தானும் ஏற்க வேண்டியவளாகிறாள். எனவேதான் இவளுடைய இயல்பு irrational நடத்தை விதிகளால் இயங்குவதாகிறது. நிர்வாண உலகில் அவள் மட்டும் கோமணம் உடுத்தமுடியாதபடி இருக்கிறாள். அப்படி அவள் உடுத்த முன் வந்தால், பெரும்பான்மை நிர்வாண உலகம் அவளை உரித்துவிடத் தயாராக இருக்

www.padippakam.com



கிறது. லிங்கத்தை அதிகாரக் குறியீடாகக் கொண்ட தந்தைவழிச் சமூக ஆடவரும், இதன் மதிப்பீடுகளால் கட்டுண்ட பெண்டிரும் விடுதலைபெற முயலும், மரபிலி ருந்து சற்று விலகும் பெண்களை தாசி, தேவடியாள், அவிசாரி, முண்டை, வேசி, விபச்சாரி என்று பாலியல் ரீதியில் ஒடுக்க வருகிறது. அவளைத் திமிர் பிடித்தவள் என்றும், அவளை அடக்க வேண்டும் என்றும், அவளைப் பலரும் புணர்ந்துதான் ஒடுக்க வேண்டும் என்றும், அவளை யோனி வழியாக மட்டுமின்றி வாய்/குதம் வழியா கவும் புணர்ந்து ஒடுக்கவேண்டும் என்றும் அதிகாரக் குரலிடுகிறது.

இதையே தீவிர பெமினிஸ்டுகள் ஆணைச் சார்ந்து பாலியல் வாழ்க்கை வாழ மறுத்து, யோனி மைய வாதத்தை மறுத்து பெண்-பெண், ஆடவர்-பெண்டிர், சுய இன்பம் முதலான பாலுறவுகளை மாற்று வழியாகக் கொள்ளுகின்றனர். ஆண் உடலில் லிங்கத்தைச் சுற்றியே பாலுணர்வு மையம் இருக்க, பெண்ணுக்கு உடல் எங்கும் Erotic மையங்கள் இருப்பதைச் சாதகமாகக் கொள்ளு கின்றனர்.

இவ்விடத்தில் பெண் உடலியல் ரீதியில் ஆடவரைச் சார்ந்தே வாழவேண்டிய கட்டாயத்தில் இருப்பதற்கு அவளது மாதவிடாய், அதை ஒட்டிய உளவியல் உடலியல் வதைகளையும், கருவுற்றுச் சுமந்து குழந்தை பெற்று வளர்ப்பது தொடர்பான இச்செறிப்பையும் காட்டுவார் கள். இவற்றால் தற்காலிகமாகவோ, நீண்ட கால மாகவோ ஆணைச் சார்ந்து இச்செறிப்பிற்கு ஆளாகி றாள். இது அவளுடைய சமூக உறவுகட்கு முட்டுக்கட்டை யிடுகிறது. இவ்விசயங்களில், ஆண் அவளுக்குரிய தவிர்க்க வியலாச் சூழலிலிருந்து விடுவிக்க முன்வராமல், இந்த உடலியல் செயல்பாடுகளையே அவளுடைய பலவீனமாக ஆக்கியுள்ளான். இவற்றைத் தீட்டு, தாய்மை, புனிதம்,

படிப்பகம்

www.padippakam.com



கற்பு......போன்ற மூடநம்பிக்கை மலிந்த மத/சமூக நியதிகளை ஏற்படுத்தித் தனது உயர்வினை உறுதிப் படுத்திக் கொண்டிருக்கிறான், இப்படித்தான் இயற்கையிலேயே பெண் ஆணைச் சார்ந்து வாழவேண்டியவள் என்று பெண்களே ஏற்று மதிக்குமாறு கருத்தியல் நடவடிக்கை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பெண் உடலில், அதன் செயல்பாட்டில் சில குறிப்பிட்ட பௌதிக, சமூகமல்லாத கூறுகள் இருப்பது உண்மைதான் என்றாலும், இவற்றில் சமூகக் கூறும் இருக்கிறது என்பார் டெல்பி. மாதவிடாயும், தாய்மையும் பௌதிக உடலியல் நிகழ்வுதான். அந்தந்தச் சமூகங்களின் பண்பாடானது இந்த neutral நிகழ்வுகளை, நிஜமான தடைகளாக (handicaps) உருமாற்றியுள்ளது. மாதவிடாயும், மகப் பேறும் ஒவ்வொரு பண்பாட்டிலும் துணைப் பண்பாட்டிலும் வேறு வேறு விதத்தில் எடுக்கப்பட்டுள்ளன. இப்படிச் சமூக ரீதியில் இந்த உடலியல் நிகழ்வுகள் 'natural' போல, இயற்கையானதுபோல ஆக்கப்பட்டுள்ளன. இயல்பான ரத்தப்போக்கு, பண்பாட்டுக் கட்டமைப்பால், அசிங்கம், தீட்டு, அவமானம் என்று கருத்தியல் விளக்கம் பெற்று, அதுவே natural என்று பெண்ணிடம் உள்வாங்கப்பட்டுள்ளது. சமூக பண்பாட்டு விளக்கங்களால் தான் இந்த உடலியல் செயல்பாடுகள் தீட்டு/தடை என்றாகியுள்ளன. இதுவே' natural ஆனது என்று நிலைநாட்டவும் பட்டுள்ளது, பெண்கள் பலரும், சமூகம் போதித்துள்ள 'தடைகளை' தங்களுக்குரிய உயர் குணங்களாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் விடுதலையை விட, சமூகத் தடைகளையே ஆபரணமாக ஏற்பதால் மரியாதை, கௌரவம் கிடைப்பதாக எண்ணவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

மகப்பேறு காலகட்டம், மாதவிடாய் நாட்கள் ஆகிய கட்டங்களில், வீட்டு வேலைகள், குழந்தை பராமரிப்பு

www.padippakam.com



ஆகியவற்றில் ஆணும் பொறுப்பைப் பகிர்வது ஒரு மாற்று ஏற்பாடாகச் சிலர் கூறியுள்ளார்கள்.

இந்திய நடுத்தரவர்க்கத்தில் மற்றொரு பண்பை பார்க்க வேண்டும். இன்று பெண்கள் படிப்பது, பணம் சம்பாதிப்பது, ஆணுடன் சமமாகக் கைகோர்த்து நடப்பது எல்லாமே, 'விடுதலை' போலத் தெரிந்தாலும், இவை பெரிதும் ஆணாகப் பார்த்து, அவன் சௌகரியம்-கௌரவம் ஆகியவற்றிற்காகப் பெண்ணுக்கு வழங்கப் பட்ட சலுகைகள்தாம் இவை. இது ஆணாகப் பார்த்துப் பெண்ணுக்கு வழங்கிய 'சுதந்திரம்'. ஆதிக்க சாதிகள், அடிநிலைச் சாதிகளுக்குத் தருகிற சில 'சலுகைகள்' போல இவை.

இதனைத் தொடர்ந்து பெண்ணுக்கு 'sex appeal' என்பது அவளுடைய இதர பண்புகளிலும் மிக முக்கிய மானதாக அவளுக்குப்படுகிறது அவள் மனைவி,அரசியல் வாதி, அதிகாரி...என்று எந்த நிலையிலும் அடிப்படை யில் அளுக்கு sex appeal எதிர்பார்க்கப்படுகிறது. சில பெண்கள் இதையே தங்களின் சுய நலனுக்குப் பயன்படுத் தவும் செய்கின்றனர். ஆணைக் குஷிப்படுத்தி அவ்வப் போதைய காரியங்களைச் சாதித்துக் கொள்கிற அடிமை யின் நிலைக்குத்தான் தள்ளப்படுகின்றாள். இந்துமதச் சட்டமும்கூடப் பெண்ணைக் கணவனிடம் தாசி மாதிரி நடந்துகொள்ளச் சொல்லியிருக்கிறது.

இந்த sex appeal- ஆல் பெண்ணுக்கு அற்ப சுகங்கள் வரலாம். ஆனால் ஆணுக்கு இணையான சமத்துவம் ஏற்படாது. இந்த sex appeal-க்கும் எல்லை உண்டு. அதன் பிறகு மருந்து, வசியம் வைத்தாலும் நீடிக்காது. கணவனைக் கைக்குள் போடவேண்டும் என்று மகளைப் பெற்ற குடும்பத்தார் அறிவுறுத்துவது sex appeal-ன் பாற் பட்டதுதான்.

www.padippakam.com



இனி, பெண்ணியம் பற்றிய சிக்கல்களைக் கவனிக்கலாம். ஒரப்பகுதி மக்களின் போராட்டங்களில் பொதுத் தன்மைகள் இருந்தாலும், பல இடிபாடுகளும் இருக்கின்றன. விடுதலை பெறும் அடிமைக்கு மாற்றுவழி உண்டு. தலித்துகளுக்குச் சோசலிச நிர்மாண வழியோ அல்லது இன்றுள்ள முதலாளியப் பாதையோ திறந்திருக்கின்றன. பாட்டாளி மக்கட்குப் பொதுவுடைமை மார்க்கம் ஒரு இலட்சியமாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் விடுதலை பெறுகிற பெண்ணுக்கு மாற்றுவழி என்ன? ஆடவர்கள் வகுத்துவைத்துள்ள 'roles'தான் இருக்கின்றது.

அடுத்து, பெண் விடுதலையை ஏனைய விடுதலைக்கான போராட்டங்களில் இணைப்பதா? அல்லது தனித்து எடுத்துச் செல்லுவதா? முந்திய செயல்பாடு 'mass action' எனப்படும் வெகுசன மக்கள் இயக்கமாகத்தான் வடிவம் பெறும். இப்படிப்பட்ட மக்கள் இயக்கத்தின் போர் முறையில் பெண்ணிய விடுதலையைக் கரைத்து விடுவதால் இலக்கை அடையமுடியாதென்று, சோசலிச நாடுகளை உதாரணமாகப் பெமினிஸ்டுகள் காட்டுகிறார்கள்.

இன்று இந்திய மகளிர் அமைப்புக்கள் பெரிதும் பொருளாதார நலன்கள், பாலியல் வன்முறை எதிர்ப்பு, சட்ட நலன்கள், ஆகிய கோரிக்கைகளுக்காகவே சிறுசிறு அமைப்புக்களாக இயங்குகின்றன. வேறு நாடுகளின் படிப்பினைகள் இவைகளைப் பாதிக்காமல் இருக்காது.

சாதி, மத விதிகள், சட்டங்கள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் முதலான கருத்தியலாலும், வேலைப் பாகுபாட்டாலும் பல ஆயிரம் ஆண்டுகளாக முடக்கப்பட்டு, அதையே ஆபரணமாக ஏற்ற பெண், இவற்றை உதறி எழுந்து வருவது இலேசான விசயமல்ல. இதை அவர்களாகத்தான் செய்ய வேண்டும். அவர்கள் இதைச்செய்தால் ஆணுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும். எல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



இயல்பாக இருக்கிறது என நினைத்துக்கொண்டிருக்கிற வனுக்கு அது அப்படி இல்லை என்று கூறப்பட்டால் பேரதிர்ச்சிதான் ஏற்படும். தாய், மனைவி சுகங்களை ஆண் அத்தனை சுலபத்தில் இழக்க முன்வரமாட்டான். குடும்பத்தை எளிதில் கலைந்துபோக விடமாட்டான். அதில் பாதுகாப்பு உண்டு என நம்புகிறான். தன்னுடைய சமூக எரிச்சலுக்குக் குடும்பம் வடிகால், பெண் வடிகால் என்பது அவனுக்குத் தெரியும்.

உண்மையில் பாட்டாளிகளைவிடவும், தலித்துகளை விடவும், பெண்தான் தோல்விகளையே நீண்டகாலப் போராட்ட அனுபவங்களாகப் பெறப் போகிறவள். இந்நிலையில் பொறுப்பில் பங்கு போட்டுத் தாமே முன் வந்து பரிகார உணர்வோடு (பரிதாபத்தால் அல்ல) விழிப் புணர்ச்சி பெற்ற ஆடவர் முன் வரும்போது, சிறு குழு/ கொம்யூன் எனத் தொடங்கி, வெகுசன அமைப்புக் களிலும், இறுதியில் சமூக வாழ்விலும் விடுதலையுற்ற பெண்-ஆண் வாழ்க்கை வளர்ந்து நிதர்சனமாகலாம். தொலைதூர நிலைமை பற்றி இன்று நம்மால் நிச்சயத் தொனியுடன் கூறமுடியாது. இன்றைய நிலவரத்தைப் பற்றித்தான் நம்மால் பேசமுடியும். சிறு குழுக்களுக்குள் ளாக ஏறத்தாழ பெரும் பகுதி **விடுதலையைத்** தங்களுக்குள் சாதித்துக் கொள்ளலாம். மேற்கில் இது நடந்துள்ளது. ஆனால் இறுதி வெற்றி, சமூக ஒட்டுமொத்த விடுதலை யுடன் இடையறாத தொடர்புற்று இயங்கும் போதுதான். இதை நினைவிற்கொள்ளுதல் சிறுகுழு/ வெகுசன இயக்கம் ஆகிய இரண்டு போர்முறைகளை எப்படி அணுக வேண்டும் என்பதற்கு அவசியமானதாகும். □

www.padippakam.com

9

# எங்கெல்சும் பெண் விடுதலையும்

*— ப்ரவாஹன்*

**நிறப்பிரிகை 5-இல்** வெளியான பெண்ணியம் குறித்த விஷயங்கள் அனைத்தும் படித்தேன். அவை குறித்த என் கருத்துக்களை முன் வைக்கிறேன்.

முதலில் பெண் விடுதலைக்கான அடுத்தகட்ட நிகழ்ச்சியாக நாம் என்ன செய்யவேண்டும்? என்ன செய்யப்போகிறோம்? என்பதற்கான வழிமுறை பற்றி சிந்தித்ததாகத் தெரியவில்லை. பெண்ணியம் பற்றிய விவாதங்கள் எதிர்வினை 1-ன் மூலம், ஆண்-பெண் உறவு முறைக்கான ஓர் மாற்றை நோக்கிய தேடலாய் அறிகிறேன். இது போன்று மையப் படுத்தப்படும் விவாதமானது பாலுறவின் அடிப்படையிலேயே சமூகம் இயங்குவதாகவும், பெண்ணடிமைத்தனம் இங்குதான் தோன்றுவது போன்ற கற்பனையில் இருந்து

www.padippakam.com



உதிக்கக் கூடியதாகும், சமூகத்தில் இன்றைக்கு அனைத்து முரண்பாடுகளும் நீங்கி ஆண்-பெண் இடையிலான உறவு- பெண் இடையிலான உறவு- (பெண் விடுதலை எனும் போர்வையில்)— மற்றும் வேலைப் பிரிவினை கேள்விக்குள்ளாக்கப்பட்டிருத்தல் ஒரு Utopian நிலையே.

அடுத்து உடலுறவு இன்பம் ஏதோ ஆணுக்கு மட்டுமானது, அதில் பெண்களுக்கு சிறிதும் சம்மந்தமில்லை; ஆண்களுக்கான போகப் பொருளாக—தன்னுடைய காம இச்சையை தீர்த்துக் கொள்வதற்கான ஒரு கருவியாக—பெண்கள் உள்ளனர்; எனவே இதற்கு ஒரு மாற்று முறை தேர்வு செய்யப்படவேண்டும்; அதிலும் குறிப்பாக யோனிப்புணர்ச்சி என்பதிலிருந்து விடுபடுதல் என்பதாக பெண்ணிய விவாதங்களின் ஒட்டுமொத்த கருத்தாக்கம் அமைந்துள்ளது.

'ஆணுக்குப் பெண் ஒரு போகப்பொருள்' என்பதன் மீதான விவாதமே இம் முதலாளித்துவ கருத்துருவாக்கத்தின் மாயைக்குள் நாம் சிக்கியுள்ளதை வெளிப்படுத்துகிறது. இது ஆண் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாகும். ஆகவே ஆண் பெண் புணர்ச்சிக்கு—யோனிப் புணர்விற்கு— பதிலியாக வைக்கப்படும் மாற்று—வாய், குதம், வைப்ரேட்டர் போன்ற ஆலோசனைகள், மனித உடலியல் இன்பத்திற்கு எதிரானதாகவும், இன விருத்திக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதுமாகும். மேலும் யோனிப் புணர்ச்சிக்கு மாற்று என்பது— மனித சமூகத்தின் இருத்தலுக்கான அடிப்படை புணர்ச்சி என்பதாகவும், பெண்ணடிமைத் தனத்திற்கும் அதுவே காரணம் போலவும் சித்தரிக்கப்படுதல்— மனித நேயத்தையே கேவலப்படுத்துவதாகும்— மனிதர்களுக்கிடையிலான உறவை ஒரு இயந்திர கதிக்கும், ஆண்—பெண்ணுக்கு இடையில் Sexual Relation என்பதையே பெண்களின் மீதான ஒரு ஒடுக்கு முறைக்கருவி என்பதான வர்ணிப்பு



படிப்பகம்

www.padippakam.com



இதன் Logical extension ஆக மனிதர்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றிடம் அவர்களை இட்டுச் செல்லுவதாக உள்ளது. உடனடியாக சிலர் இப்படிக் கேட்கலாம், பெண்கள் இனவிருத்தி செய்வதற்கான கருவியா? என்று. இன உற்பத்தி என்பது ஆண், பெண் இருவரும் சம்மந்தப் பட்டதே. குழந்தை பெறுகிறார்கள் என்பதனால் அதை பெண் சம்மந்தப்பட்ட விஷயமாகப் பார்ப்பதும், ஆணுக்கு இன்பம் மட்டும்தான் என்று பார்ப்பதும்—இயற்கையின் வேலைப் பிரிவினைக்கு எதிராக-குழந்தை பெறுதல் என்பது மிக இழிவான செயல் போல கருதுவது போலுள்ளது. இது ஆண் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாகும். இது முதலாளித்துவச் சமூகத்தின் (ஆணாதிக்கச் சமூகத்தின்) கருத்துருவாக்கமே.

பெண்ணியம் விவாதம், எதிர்வினை-2
**ராஜ்கௌதமன்:** 76ம் பக்கத்தில்

> ''பெண், முதலாளியச் சமூக உற்பத்தி முறையில் நுழையும் போது அவருடைய விடுதலை சாத்திய மாகும்'' என **'எங்கல்ஸ்'** கூறியுள்ளதாகவும் அது பொய்த்து விட்டதாகவும் கூறுகிறார்.

'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' எனும் நூலில் பெண் விடுதலைக்கான முன் தேவையை **'எங்கல்ஸ்'** பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> ''பெண்ணினம் **முழுவதையும்** சமூக உற்பத்தியில் **மீண்டும்** புகுத்துவதுதான் பெண்களின் விடுதலைக் குரிய **முதல்** நிபந்தனை என்பது அப்பொழுதுதான் தெளிவாகும். தனிப்பட்ட குடும்பம் சமூகத்தின் பொருளாதார அலகு எனும் தன்மையை ஒழிக்க வேண்டும் என்பதை இது **மீண்டும்** கோருகிறது.''

முதலாவதாக **'எங்கல்ஸ்'** முதலாளியச் சமூகம் என்று கூறவில்லை என்பதை நாம் தெளிவ படுத்திக் கொள்ள

www.padippakam.com



வேண்டும், பெண்களை **மீண்டும்** முழுவதுமாகச் சமூக உற்பத்தியில் ஈடுபடுத்துவது என்பது முதலாளியச் சமூகத்தில் சாத்தியமில்லை. இது பாட்டாளிவர்க்கப் புரட்சிக்குப் பின்னரே சாத்தியம். ஆண்-பெண இடையிலேயான **உண்மையான சமத்துவத்தின் அடிப்படை** தெளிவாக புலனாவதற்கு **சட்டத்தின் முன்பு இருவருக்கும் சமநிலை** கிட்ட வேண்டும் எனக் கூறுகிறார்கள். அதாவது பொருளாதாரக் காரணி பற்றி **'எங்கல்ஸ்'** கூறுகிறார்:

> 'பெண் தனது ஸௌகிக வாழ்விற்குரிய பொருளாதார தற் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டால், ஆணைச் சார்ந்து வாழும் சார்பு வாழ்வு அகலுமல்லவா? என்றும்; ஆயின் அப்படி நடக்கவில்லை என்பதையும், பூர்ஷ்வா மற்றும் சோசலிச சமூக அமைப்பையும்- **'நேற்றுவரை நிலவியதை'**— பார்த்துவிட்டு ராஜ் கௌதமன் கேட்கிறார்.

'எங்கல்ஸ்' கூறியபடி **மீண்டும் பெண்கள் முழுவதுமாக சமூக உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுதல்'** என்பதுமுதலாளியச் சமூகத்தில் சாத்தியமில்லை. மேலும் பூர்ஷ்வா சமூகம் குடும்பம் என்பதை சமூகத்தின் தனிப்பட்ட பொருளாதார அலகாகப் பார்க்கிறது. குடும்பம் என்பது ஒரு கட்டுமானத்தைக் கொண்டுள்ளது. அதற்கென்று சில தளர்த்தப்படாத விதிமுறைகள் இன்றுவரை நிலவுகிறது. சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய ஒருதார மணம் மற்றும் குடும்பம் என்பது கணவனுக்கு ஆதிக்கம் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்துகிறது. அதாவது குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படும்போது அவன் அங்கே மேலாண்மை பெறுகிறான்— குடும்பத்தின் **'முதலாளி', எனும் நிலைக்கு வருகிறான்.**

**இதையே 'எங்கல்ஸ்' பின்வருமாறு கூறுகிறார்:**

படிப்பகம்

www.padippakam.com



'.........மிகப் பெரும்பாலான சமயங்களில் ஆண் குடும்பத்திற்கு சம்பாதிப்பவனாக, உணவளிப்பவனாக இருக்க வேண்டியுள்ளது .........இது அவனுக்கு ஆதிக்க நிலையைத் தருகிறது. இதற்குச் சட்ட ரீதியான சலுகைகள் அவசியமில்லை. குடும்பத்தில் அவன் தான் முதலாளி; அவன் **மனைவி பாட்டாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம்** செய்கிறாள்.'

எனவேதான் பெண் விடுதலை, பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பின்னால் சாத்தியம் என்றும் பாட்டாளிகளின் விடுதலையுடன் சம்பந்தப்பட்டுள்ளது எனவும் கூறுகிறோம்.

அடுத்ததாக சோஷலிச சமூக அமைப்பிலும் முற்றுமான பெண் விடுதலை ஏற்படவில்லை? சோசலிச சமூகம் என்பதற்கு உதாரணமாக ரஷ்யா மற்றும் சீனாவை நாம் பார்க்கிறோம். ரஷ்யாவிலும், சீனத்திலும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பின்னர் பெண்களின் நிலையில்-மற்ற நாடுகளைக் காட்டிலும் - கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது நிச்சயம் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். ருஷ்யாவிலோ அல்லது சீனத்திலோ. முற்றூடான சோசலிசம் நிலவியதா எனில், இல்லை. சோசலிசப் பொருளாதார மாற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது - அல்லது சோசலிசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது என்பதே பொருத்தமானதாக இருக்கும். அந்நாடுகளில் ஏற்பட்டுக் கொண்டிருந்த பொருளாதார மாற்றமானது தன் மேற்கட்டுமான பண்பாட்டின் மீது ஒரு தீர்மானகரமான தாக்குதலை ஏற்படுத்துமளவிற்கு இல்லை. மேலும், அந்நாடுகளில் மக்களை கருத்தியல் ரீதியான மாற்றத்திற்கு idealogical change தயார்படுத்த அரசு தவறிவிட்டது என்பது மிகமுக்கியமான ஒருவிஷயமாகும். ஆகவே இந்நாடுகளை உதாரணமாகக் கொண்டு நாம் முடிவுகள் செய்வது சரியானதாக இருக்காது.

படிப்பகம்

www.padippakam.com



சோசலிச சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்று 'எங்கல்ஸ்' மிகத் தெளிவாக விளக்குகிறார்:

''...எல்லாப் பெண்களின் நிலைமை முக்கியமான மாற்றங்களுக்கு உள்ளாகிறது. உற்பத்திச் சாதனங்கள் பொதுச்சொத்தாக மாற்றப்படும்பொழுது தனிப்பட்ட குடும்பம் சமூகத்தின் பொருளாதார அலகாக இருப்பதும் முடிவடைகிறது. தனிப்பட்ட வீட்டு நிர்வாகம் சமூகத் தொழிலாக மாற்றப்படுகிறது. குழந்தைகளின் பராமரிப்பும் கல்வியும் பொது விவகாரம் ஆகி விடுகின்றன. எல்லாக் குழந்தைகளையும்-அவர்கள் மண உறவில் பிறந்தவர்கள் ஆயினும் சரி, மண உறவிற்கு வெளியே பிறந்தவர்களாயினும் சரி - சமுதாயம் சமமாக கவனித்துக்கொள்கிறது. எனவே 'விளைவுகளைப்' பற்றிய கவலை - இதுவே பெண் தான் காதலிக்கின்ற ஒருவனுக்கு தன்னைச் சுதந்திரமாகக் கொடுப்பதைத் தடுக்கின்ற தார்மீக பொருளாதார ரீதியான மிகவும் முக்கியமான சமூகக் காரணியாகும் - மறைந்து விடும்...''

எனவே தற்போது நமக்கு முன்னால் உள்ள பிரச்சினை என்பது குழந்தைப் பெற்றுக் கொள்வதுதான்.

''ஆண் பெண் வேறுபாட்டிற்கான மூல முதற்காரணமாக 'எங்கல்ஸ்' பாலியல் வேலைப் பாகுபாட்டை சுட்டிக் காட்டினார். இவ்வேலைப் பாகுபாடு 'புராதனமானது' இயற்கையானது என்று பார்த்தாரே தவிர சமூக வயமானதாகப் பார்க்கவில்லை என்பது பெண்ணியவாதிகளின் முக்கிய குற்றச்சாட்டு. உடல் அமைப்பிலேயே இயற்கையாகவே ஆணும் பெண்ணும் வேறு வேறு வேலைப் பிரிவுக்கு லாயக்கானவர்கள் என்ற naturalistic கருத்தை 'எங்கல்ஸ்' முன்வைத்தார். இந்தப் பாலியல் அடிப்படையிலான வேலைப்பிரிவு என்பது இயற்கையானது அல்ல,

www.padippakam.com



சமூகரீதியில் கட்டமைக்கப்பட்டதே ஆகும் என்கிறது பெண்ணியம் - என ராஜ்கௌதமன் கூறுகிறார். இயற்கை யிலேயே அமைந்துள்ள வேறுபாட்டை இயற்கையான தாக மட்டுமே பார்க்கமுடியும். இவ் வேலைப்பாகு பாட்டை சமூகம் கட்டமைத்துள்ளதாகப் பார்ப்பது ஒரு **முரணான பார்வையாகும்**. எப்படி தற்போதைய சமூகத்தில் மூளை உழைப்பிற்கும், உடலுழைப்பிற்கும் இடையில் பெரியதொரு பள்ளம் நிலவுகிறதோ, அதுபோன்றே குழந்தை பெறுதல் என்பது இழிவான ஒன்றாகக் கருதப் பட்டு - அதாவது இப்படி உழைப்பு தரம் பிரிக்கப்படுவத னால் மட்டுமே அது சமூக ரீதியில் கட்டமைக்கப்பட்ட ஒரு பாலியல் அடிப்படையில் ஆன வேலைப்பிரிவு என்ப தாகத் தோன்றுகிறது. எந்தவித உழைப்பிற்கு இடையி லான தரப்பாகுபாடும் நம்மை முதலாளியாகக் கருத்திய லுக்குள் ஆழ்த்தவே செய்யும். மேலும் இவ்வேலைப் பாகு பாடு சமூகரீதியில் கட்டமைக்கப்பட்டுள்ளது எனக் கூறுபவர்கள் முடிந்தால், ஆண்களை குழந்தைப் பெற வைக்கட்டும். அதிலும் நமக்கு மகிழ்ச்சியே. மாதவிடாய் குழந்தை பெறுவதற்கான ஒரு முன் தேவை; குழந்தை பெறுவது சமூக ரீதியில் ஒரு அத்தியாவசமான பணி; அது மற்ற எந்தவகை உழைப்பையும்விட குறைந்ததல்ல என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

''மாதவிடாயும், தாய்மையும் neutral நிகழ்வுகள் எனவும் இவற்றை சமூகத்தின் பண்பாடு நிஜமான தடைகளாக (handicaps) மாற்றியுள்ளது. சமூக ரீதி யில் இவைகள் natural ஆக்கப்பட்டுள்ளது. இயல்பான ரத்தப்போக்கு, பண்பாட்டுக் கட்டமைப்பினால் அசிங்கம், தீட்டு, அவமானம் என கருத்தியல் விளக்கம் பெற்று அதுவே natural என பெண்ணிடம் உள்வாங்கப்பட்டுள்ளது. இது இயற்கை ஆனது என பெண்கள் அவற்றை ஏற்று தனது விடுதலையைவிட சமூகம் போதித்துள்ள தடைகளை ஆபரணமாக்

www.padippakam.com



ஏற்பதால் மரியாதை, கௌரவம் என்றும் இதுவே தனக்குரிய உயர்குணமாகவும் பெண்கள் எண்ண வைக்கப்பட்டுள்ளார்கள்'' - என ராஜ்கௌதமன் கூறுகிறார்.

சமூகத்தில் எந்தப் பெண்ணும் இதுபோன்ற தடைகளை உயர்குணமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை முதலில் கூறிக்கொள்கிறேன். மாதவிடாய் மற்றும் தாய்மையை neutral என்று எப்படி குறிப்பிடுகிறீர்களோ தெரியவில்லை? அவை natural- லானவையே. ஆனால் அதன் காரணமாக பெண்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவளில்லை. புராதன சமூக வரலாறு தெரிந்தவர்களுக்கு அவர்களின் உடல் ரீதியிலான seebelow ஆதிக்கத்தை ஆண் கொண்டுள்ளதனால் மேற்கூறிய தடைகளை அவர்கள் ஏற்றுள்ளது போல சிலருக்குத் தோன்றலாம். இது அவர்களின் அகவயமான கருத்தேயன்றி புறவயப்பட்டதில்லை.

மேலும் இதற்காக சிலரால் கூறப்பட்டுள்ள மாற்று ஏற்பாடு என்பது அவர்களின் ஆண் மையத் தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. எல்லாக் காலங்களிலுமே ஆண் பெண் இருவரும் தனது பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதே சரியான வேலைப் பிரிவினையாகும்.

Sex appeal பெண்களுக்கு மட்டுமல்ல. அது ஆண்களுக்கும்தான். ஆணாதிக்கச் சமூகமாக உள்ள காரணத்தினால் அது பெண்களுக்கு மட்டுமானதாகத் தெரிகிறது. இதுபோன்ற ஆணாதிக்க மனோபாவத்தில் இருந்து விடுபட்டவர்கள் மட்டுமே உண்மையில் பெண் விடுதலைக்கான அடுத்த கட்ட பணிகளில் இறங்க முடியும்.

மற்றும் மனரீதியிலான வலிமை புரியும். பொருளாதார ரீதியிலான,

www.padippakam.com



''ஆண் உடலில் லிங்கத்தைச் சுற்றி பாலுணர்வு மையம் இருப்பதாகவும் பெண்ணுக்கு உடலெங்கும் erotic மையங்கள் உள்ளதைச் சாதகமாக தீவிர பெமினிஸ்டுகள் ஆக்கிக் கொள்வதாக'' ராஜ் கௌதமன் கூறுகிறார்.

இது போன்ற ஒரு கருத்து அப்பட்டமான ஆண் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாகும். ஆண் ஆதிக்க சமூகத்தில் பெண்ணுடைய ஒவ்வொரு அங்கங்களும் வர்ணிக்கப்படுவது அவர்களை இழிவுபடுத்துவதாகும். அதிலும் குறிப்பாக mammallian gland ஒரு erotic மையமாக பெரும்பாலான ஆண்களால் நினைக்கப்படுவது மிகக் கேவலமானதாகும். ஆண் பெண்ணைப் பார்த்து கவரப்படுவதும் பெண் ஆணைப் பார்த்து கவரப்படுவதும் இயற்கை ஆனது. ஆணைப் பொறுத்தவரையில் எப்படி பெண்ணுடைய ஒவ்வொரு அங்கமும் erotic மையமாகப் பார்க்கப்படுகிறதோ அதுபோன்றே பெண்களுக்கும். இவை இருப்பினும் கூட idealogical unity என்பதற்கும் ஒரு முக்கியமான பங்கு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. மேற் கூறியது போன்ற ஒரு அப்பட்டமான ஆணாதிக்கக் கருத்துள்ளவர்களை எப்படித் தீவிர பெமினிஸ்டுகள் என்று வரையறுக்க முடிகிறதோ?

'இரு பாலரிடையேயும் உழைப்புப் பிரிவினையை நிர்ணயிப்பதற்குரிய காரணங்கள் வேறு, சமுதாயத்தில் இரு பாலருடைய அந்தஸ்தை நிர்ணயிப்பதற்கு உரிய காரணங்கள் வேறு''

என 'எங்கல்ஸ்' கூறியுள்ளதை முற்றுமாகப் புரிந்து கொள்ளும் எவருக்கும் பெண் விடுதலை என்பது தீர்க்க முடியாத சிக்கலாக இருக்க முடியாது. □

படிப்பகம்

www.padippakam.com

# 10

# பெண்ணியம்: அரசியல் செயல்பாட்டின் அவசியம்

*'பாரதி சுட்டும் விழிச்சுடர்'*

நிறப்பிரிகை பத்திரிகை பற்றியோ, அதில் வெளிவந்த பெண்ணியம் கட்டுரை பற்றியோ அறியாத வாசகர்களுக்கு ஒரு சிறு அறிமுகம்........ இக் கட்டுரை தமிழ் நாட்டிலுள்ள சிந்தனையாளர்கள் 64 பேரின் கூட்டு முயற்சியாக வெளிவந்தது. பெண் விடுதலை பற்றி புதிய கோணத்தில் அணுக முயற்சித்திருந்த இந்தக் கட்டுரையைப் பற்றி பெண்கள் பேசவேண்டியது அவசியம் என்று கருதினோம். தமிழ்ப் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் சில உறுப்பினர்களைச் சந்தித்தபோது, இக்கட்டுரைகள் பதில் கூட்டுக்கட்டுரையாக இருப்பதே பொருத்தம் என்றுமுடிவு செய்தோம். இதன்படி பல்வேறுதுறையிலுள்ள 15

www.padippakam.com



பெண்கள் கலந்துகொண்ட உரையாடலின் தொகுப்பாக கீழ்க்கண்ட கட்டுரை வெளிவருகிறது. (ஆ—ர்)

பெண்ணியம் என்றால் வரதட்சிணைக் கொடுமை/சிசுக் கொலை/ஆபாச எதிர்ப்பு என்று எண்ணி செயல்படும் பெண்ணிலைவாதிகளுக்கு (எங்களுக்கு) சில 'அறிவுரை' களைக் கூற முன் வந்துள்ளது நிறப்பிரிகை. வரதட்சிணை-சிசுக்கொலை-ஆபாச எதிர்ப்பு என்று எங்களது போராட்டங்களை அலட்சியத்துடனும் வெகு எளிதாகவும், அ. மார்க்ஸும் அவரது தோழர்களும் நிராகரித்துவிட்டு, நாங்களும் எங்களைப் போன்றவர்களும் 'சொல்லத்தவறிய' வற்றை தாங்கள் கூற வந்துள்ளனர்; மேலும், ஒருவித அதிகார தொனியில். எங்களுக்கு செயல் திட்டங்களை வேறு வகுத்தளிக்க முற்பட்டுள்ளனர்.

வரலாறுதோறும் ஆண்களின் அதட்டும் குரலையும் ஆண் போதகர்களின் அறிவுரைகளையும் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன எங்களுக்கு நிறப்பிரிகையின் முயற்சியில் புதுமைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. பெண்கள் தங்களுக்கான அறிவைத் தாங்களே உற்பத்தி செய்யவேண்டும். தங்களை அடிமைப்படுத்தும் சித்தாந்தங்களைத் தகர்த்தெறிய வேண்டும். பெண்மை குறித்தான மரபான வரையறைகளை மீற வேண்டும்... என்று நாங்கள் இனி மேற்கொள்ள வேண்டிய கடமைகளை பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர் நிறப்பிரிகை கட்டுரையாசிரியர்கள். இவர்களுக்கும் காலங் காலமாக எங்களது வாழ்வு, சிந்தனை, சித்தம் ஆகிய அனைத்தையும் குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கச் செய்து, அவற்றைத் தங்களது வரையறைகளின் அடிப்படையில் செயல்படுத்திவரும் ஆணாதிக்க சிந்தனையாளர்களுக்கும் உண்மையில் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

www.padippakam.com



பெண்ணியம் கட்டுரையில் எங்களால் எங்கள் முகத்தை அடையாளங் கண்டு கொள்ள முடியாததை உணர்ந்த நாங்கள், எங்களது வரலாறு, அனுபவங்கள், நாங்கள் கூறுபவை, வெளிப்படுத்தியவை ஆகியவற்றுக்கும் இக்கட்டுரையில் இடம் இல்லை என்பதையும் உணர்ந்தோம். பெண்ணடிமைத்தனத்தைப் பற்றிய கட்டுரை ஆசிரியர்களின் அடிப்படை புரிதலையே நாங்கள் கேள்விக்கு உட்படுத்த விரும்புகிறோம். பெண்ணை ஒடுக்கும் அமைப்புகளான குடும்பம், மதம், பொருளாதார கட்டமைப்பு, சாதி, இந்த ஒடுக்குமுறையை நியாயப்படுத்தி செயல்படும் சித்தாந்தங்கள் ஆகியன ஆண்களையும் அடிமைப்படுத்துகின்றன என்ற கருத்து இங்கு சொல்லப்படுகிறது. பொதுவாக எந்தவொரு கட்டமைப்பும் சித்தாந்தமும் ஆண், பெண் ஆகிய இருபாலாரின் அடையாளத்தையும் குறிப்பிட்ட வகையில் வார்த்தெடுக்கக் கூடியவைதான். என்றாலும் கூட்டமைப்புகளும் சித்தாந்தங்களும் குறிப்பிட்ட வரலாற்று காலகட்டத்திலேயே உருப்பெறுகின்றன. அவ்வரலாறு என்பது பெரும்பாலும் ஆண்களால் புனையப்பட்ட ஆண்களின் சிந்தனை, செயல்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்ட வரலாறாகவே இது வரையிலும் இருந்து வந்துள்ளது. நிலைமை இதுவாக இருக்க ''வரலாறும் சமூகமும் எங்களையும் கட்டுப்படுத்துகின்றன எங்களது வாழ்வையும் குறிப்பிட்ட வடிகால்களிலேயே செலுத்துகின்றன'' என்று ஆண்கள் அழுகுரலிடுவதில் எவ்வித நியாயமும் இருக்க முடியாது. ஆணாதிக்கம் என்பது சமுதாயம் முழுவதையும் ஆட்கொண்டுள்ள சித்தாந்தம்தான். ஆனால் இச்சித்தாந்தத்தை குறிப்பிட்ட ஆண்கள்தான் செயல்படுத்துகின்றனர். குடும்பம் என்ற அமைப்பு ஆண், பெண் ஆகிய இருவருக்கும் வரையறுக்கப்பட்ட பாத்திரங்களையும் அடையாளங்களையும் வழங்குகிறது. ஆனாலும் ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாத்திரம் அவர்களது ஆதிக்கத்தை உறுதிசெய்து அவ்வாதிக்கத்தின் அடிப்படையில் ஆண்களின் பொருளாதார

www.padippakam.com



அதிகாரம், சமூக மேலாண்மை, பண்பாட்டு மேலாதிக்கம் முதலியவற்றை சாத்தியப்படுத்துகிறது. பெண்ணடிமைத் தனத்திற்கு தார்மீக பொறுப்பு ஏற்க மறுக்கும் ஆண்கள், அவ்வடிமைத்தனத்தைப் பற்றி அருவமான வகையிலும் 'அறிவார்ந்த' மேதாவித்தனத்துடனும் பேசினாலே புரட்சிகர பெண் நிலைவாத அரசியலை உருவாக்கிவிட லாம் என்று நினைக்கின்றனர் போலும்! பெண்ணடிமைத் தனத்தின் வரலாற்றிலிருந்து விலகி நின்று, பொதுப்படை யாகவும், நமது வரலாற்று-சமூகச் சூழலுக்கு சிறிதும் பொருந்திப் போகாத ஒருசில மேற்கத்திய சிந்தனை களைக் கொண்டும் பெண்ணியம் பேசும் ஆண்கள் தங்க ளது நிலைப்பாட்டில் இருக்கக்கூடிய பார்வைக் கோளாறு களையும் காழ்ப்புணர்வுகளையும் காணத் தவறுகின்றனர், காண மறுக்கின்றனர். இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் தெளிவற்றவையாகவும் கோர்வையற்ற நிலை யிலும் காணப்படுகின்றன. இக்கருத்துகளில் ஒரு சில வற்றை நாங்கள் சிரமப்பட்டு அடையாளங்கண்டுள்ள தால் அவற்றை விமர்சிக்கத் தலைப்படுகிறோம்.

1. பாலுறவு முறைகள் மாறியமைந்தாலே ஆண் பெண் உளவியல் வேறுபாடுகள் மறைந்து விடும்; மரபான பாலுறவு செயல்பாடுகளில் பெண் ஒடுக்கப்படுவது போல மரபு மீறிய பாலுறவு செயல்பாடுகளில் அவள் ஒடுக்கப்பட மாட்டாள்; மாறாக அவள் தன்னைத்தானே அறியவும் தனது சுயத்தை உறுதிப்படுத்தவும் இம்மரபு மீறிய முறைகள் அனுமதிக்கும் என்ற கருத்துக்கள் இங்கு கூறப்பட்டுள்ளன.

எல்லாச் சமுதாயங்களிலும் எல்லா காலகட்டங் களிலும் ஆண்-பெண் உறவினை வடிவமைப்பது பெண்ணை அடிமைப்படுத்தும் வன்முறைச் செயல்தான். இவ்வன்முறைச்செயல் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இறுக்கமான, திட்டவட்டமான உழைப்பின்

www.padippakam.com



பிரிவினையை புகுத்தியும், பெண்ணை போகப்பொருளாக வும் பயன்பாட்டுப் பொருளாகவும் ஆக்கியும் செயல்படு கிறது. இவ்வன்முறைச் செயலின் வக்கிரமான வெளிப் பாடுகள் ஆண்-பெண் பாலுறவினூடாகவும், பாலுறவில் நிலைநிறுத்தப்படும் ஆணின் அதிகாரத்தினூடாகவும் தம்மைக் காட்டிக்கொள்கின்றன. பாலுறவு முறைகளை மாற்றியமைப்பதன் மூலம்அடிப்படையான வன்முறையை எதிர்கொள்ள முடியுமா, என்ற கேள்வி எங்களிடையே எழுகிறது. ஏனெனில் இப்புதிய மரபு மீறிய பாலுறவு முறைகளை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தமது ஆளுமையை உறுதிப்படுத்த அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள ஆண்கள் தயங்க மாட்டார்கள்.

ஓரினப் புணர்ச்சியைப் பற்றியும் இங்கு சில கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன. ஓரினப் புணர்ச்சி என்பதை நபர்களின் பாலியல் தன்மை, விருப்பு வெறுப்புகள் ஆகிய வற்றுடன் தொடர்புடைய ஒன்றாகவும். ஓரினப் புணர்ச் சியை நாடுவோரின் அடிப்படை உரிமைகளுடன் சம்பந்தப் பட்ட விஷயமாகவும் நாங்கள் காண்கிறோம். பெண் விடு தலைக்கும் ஓரினப் புணர்ச்சிக்கும் இடையே உள்ள உற வைப் பற்றி நமது பெண்களிடையே ஒரு உரையாடலின் சாயலே இன்று காணப்படுகிறது. இந்த உரையாடல் தொடர்ந்து நடைபெறும் என்றே நாங்கள் நினைக்கின் றோம். ஆனால் இவ்வுரையாடலில் ஆண்கள் குறுக்கிட்டு அறிவுரை கூறுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடி யாது.

பாலுறவு பற்றிய விவாதத்தில் பாலுறவு என்ற பதம் ஒரு சில தனிப்பட்ட உடலுறுப்புகள் இணைவதைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. தங்களது பாலியல் அடையாளத்தை உடலின் ஒரு உறுப்பின் மூலம் மட்டும் உறுதிபபடுத்தி வநதுள்ள ஆண்கள் பெண்களின் உடலை கூறுபடுத்தி, அவ்வுடலை பொருளாகப் பாவித்து வந்துள் ளனர். நிறப்பிரிகையினர் மட்டும் இதற்கு விதிவிலக்காக

www.padippakam.com



இருக்கக்கூடும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சராசரி ஆணைக்காட்டிலும் பெண்ணியம் பேசும் ஆணை நாங்கள் அதிகமாக சந்தேகிக்கிறோம்.

2. ஓரினப்புணர்ச்சி,சல்லாபம் பற்றியெல்லாம் ஒரு பெண் ஆவேசத்துடன் பேசியுள்ளார். ஆனால் அவரது சிந்தனையில்தான் எத்தனை முரண்பாடுகள்! ஒருபுறம் ஆணிடமிருந்து சுகத்தைப் பெறும் நிலையை பெண்கள் ஒழிக்க வேண்டும் என்கிறார். ஆனால் மறுபுறமோ இனப் பெருக்கத்தின் பொருட்டு ஆண்களுடன் உறவு கொள்ள லாம் என்கிறார். ஆணை ஒரு பயன்பாட்டுப் பொருளா க்கான விழையும் இவர் ஒரு அருவமான 'தேவை'யின் பொருட்டு (இனப் பெருக்கம் என்பது ஆணாதிக்க அகராதியில் ஒரு 'தேவை'யாக வரையறுக்கப் பட்டுள் ளது) தானும் ஒரு பொருளாக சரிந்துவிடக்கூடிய அபா யத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இதுநாள் வரை யிலும் 'இனப்பெருக்க'த்தின் பொருட்டுத்தானே நம்மை ஆண்கள் அடிமைப்படுத்தி வந்துள்ளனர். இனப்பெருக்கச் செயல்பாடுகளிலிருந்து விடுதலை யடையாமல் வேறு சில விடுதலைகளை நாம் பெற்றுதான் என்ன பயன்!

அடுத்து, பெண்ணின் சுயம், இருப்பு ஆகியவற்றைப் பற்றி மேலதிக கவலையும் அக்கறையும் கொண்டுள்ள இவர் 'கருக்கலைப்பை'ச் சாதாரண நிகழ்வாகக் காண் பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. குழந்தை பெற்றுக் கொள்வதும் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதும் பெண்களுக்குரிய அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பதை நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் இந்நாட்டு ஏழைப் பெண்கள் மீது திணிக்கப்படும் கருக் கலைப்பை எங்களால் ஏற்றுக் கொள்ளவும் முடியாது; சகித்துக்கொள்ளவும் முடியாது

மேலும், கருக்கலைப்பு வழிமுறைகள், கருத்தடைச் சாதனங்கள்—இவை ஆண்களால் உருவாக்கப்பட்ட

www.padippakam.com



மருத்துவத்தின் விளைவுகள்; பெண்ணின் உடலை சோதனைக் களமாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாக வும் காணும் ஆண் நோக்கின் வெளிப்பாடுகளே. தனது உடலுடன் ஒவ்வொரு பெண்ணும் கொண்டுள்ள உறவு, தனது உடலை ஒரு முழுமையாக உணரும் மனோநிலை களை பக்கம் பக்கமாக எழுதியுள்ள போதிலும், ஆண் நோக்கிலிருந்து பெண்ணியம் பேசும் போக்கு இங்கு வெளிப்பட்டுள்ளது மிகவும் வருந்துவதற்குரிய விஷயம் தான்.

3. குடும்பம் அழிய வேண்டும், சிதறடிக்கப்பட வேண்டும்...ஆண்களின் இநத ஆவேசத்தைக் கண்டு எங்க ளால் முறுவலிக்காமல் இருக்க முடியவில்லை. குடும்பம் என்ற அதிகார மையத்தின் ஒடுக்குமுறையை எங்களை விட வேறு யாரும் அதிகமாக அறிந்திருக்க, உணர்ந் திருக்க முடியாது. நான்கு சுவர்களுக்குள் நாள்தோறும் அச்சுறுத்தப்படுகிறோம். பலாத்காரப் படுத்தப்படு கிறோம். 'குடும்ப விளக்கு', 'தாய்', 'மனைவி' போன்ற பட்டங்களை சுமக்க இயலாது மீண்டும் மீண்டும் இறக்கி றோம். இன்று நாங்கள் குடும்ப எல்லைகளைக் கடந்து வெளியே வந்து ஓரளவிற்கு சமமாக சிந்திக்கவும் செயல் படவும் தொடங்கியுள்ள இந்த காலக்கட்டத்தில், எங்களை மீண்டும் அடிமைப்படுத்த, 'குடும்ப அழிப்பு' என்ற பதாகையை சுமந்து கொண்டு ஆண்கள் முன்வந் துள்ளதை நாங்கள் எப்படிப் புரிந்து கொள்வது?பெண்கள் போராடிப் பெற்றுள்ள சுதந்திரத்தை விலைபேச ஆண்கள் இன்று தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதைப் பார்க்கை யில், உண்மையில், இவர்கள் என்ன நினைத்து, எதன் அடிப்படையில் செயல்படுகின்றனர் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. ''ஆண்-பெண் உறவுகள் தற்காலிக மானவை...இன்று இங்கே, நாளை அங்கே...'' என்று சிறிதும் பொறுப்பின்றி பேசும் ஆண்கள் தங்களது வரலாற்று ரீதியான இச்சைக்கு, புதிய தத்துவ நியாயங்

படிப்பகம்

www.padippakam.com



களை கற்பிக்கத் தொடங்கியுள்ளனர் என்பது மட்டும் எங்களுக்குத் தெளிவாகப் புரிகிறது.

குடும்பத்தை 'அழக்க' வேண்டுமானால் ஆண்கள் முதலில் வீட்டிலும் வீட்டிற்கு வெளியேயும் தாங்கள் வகித்துவரும் பாத்திரங்களை விமர்சனத்திற்குட்படுத்த தயாராக இருக்க வேண்டும்; தங்களது ஒவ்வொரு அன்றாட செயலையும் விமர்சனம் செய்ய முன்வர வேண்டும். 'வீட்டுப் பணிகளை சமூகமயப்படுத்தலாம்' என்று கூறி தப்பித்துக் கொள்ளாது, இந்த ' சமூகமயப் படுத்தலின்'' முதல் கட்டமாக வீட்டுப் பணிகளை பகிர்ந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆணும் தனது தாய், மனைவி, தங்கை, தமக்கை, காதலி ஆகியோருடன் சமமாக உரையாடவும், அப்பெண்களது கருத்துக்களை அறியவும் முற்பட வேண்டுமேயன்றி பெண்களின் 'ரட்சகர்களாக' (தத்துவ ரட்சகர்களாகக் கூட) தங்களைக் காட்டிக் கொள்ளக் கூடாது.

கம்யூன்கள், கூட்டுவாழ்வு முறைகள்-இவற்றில் ஆண்-பெண் பாத்திரங்கள் மாற்றியமைந்திருந்தனவா என்று பேசும் ஆண்கள் எதற்கும் ரோஸ்மண்ட் கான்டோரின் ''கம்யூன்ஸ்'' என்ற நூலை படித்து அந்நூலில் தரப்பட்டுள்ள செய்திகளை அறிந்து கொள்வது நல்லது.

4. பெண்கள்தான் தங்களைப்பற்றி சரியான சித்தாந்தங்களை உருவாக்கிக் கொள்ள முன்வர வேண்டும். ஆண்கள் உதவலாம் (உதவக் கூடாது என்பது சரியாகாது, ஆனால் பெண்கள் தான் முன் முயற்சி எடுக்க வேண்டும்...)

வரலாறுதோறும் ஆணாதிக்கத்தை எதிர்த்துப் பெண்கள் பேசியும், தங்களது ஆளுமை, சிந்தனைத்திறன், உணர்ச்சிகளின் அழுத்தம் ஆகியவற்றை வெளிப்

www.padippakam.com



படுத்தியும் வந்துள்ளனர். பெண்களின் வெளிப்பாடுகளும், குமுறல்களும். அவர்களுக்கு இன்பம் அளித்தலையும் அவர்களது (எங்களது) அனுபவங்களை-மகப்பேறு, தனிமை, வெறுமை, அடிமைப் படுத்தப்படல்,பலாத்காரப் படுத்தப்படல் என்பன போன்ற தனிச்சிறப்பான அலுவல்களை சார்ந்தவையாகவே இருந்து வருகின்றன. 'பெண் நிலை நோக்கு' ஆண் வாசகர் கூட்டத்தை மனத்தில்கொண்டு தனது நிலைபாடுகளை வெளிப்படுத்துவதில்லை. ஆண்களின் தேவைகள், கட்டளைகள் மதிப்பீடுகள் முதலிய வற்றால் (அவை 'முற்போக்கு'த் தனமானதாக இருந்தாலும் கூட) பெண்நிலை நோக்கு என்பது தீர்மானிக்கப் படுவதில்லை. நிறப்பிரிகை கட்டுரையாசிரியர்கள் இந்த எளிய உண்மையை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. எரிக்கா யோங்...ஜெர்மேன் க்ரீயர்...என்ற 'பெண் நிலை வாத' எழுத்தாளர்களின் பெயர்களைக் காட்டி பெண்களை அச்சுறுத்த முயலும் போக்கே இங்கு காணப்படுகிறது. எரிக்கா யோங் என்றுமே மேற்கத்திய பெண் நிலை வாதிகளால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் இன்று தாய்மையின் அருமை பெருமைகளை பெண்நிலைவாத சித்தாந்தமாக வரையறுக்கும் ஜெர்மேன் க்ரீயரின் சிந்தனையை கடந்து பெண் நிலைவாத சிந்தனை முன்னேறியுள்ளதையும் நிறப்பிரிகைக்கு நாங்கள் நினைவுபடுத்த விரும்புகிறோம். பெண்கள், நாங்கள் எங்கள் போராட்டத்தின் தன்மையை, படைப்புகளின் உள்ளடக்கத்தை எங்களது அன்றாட போராட்ட அனுபவங்கள், நாங்கள் கடும் முயற்சிக்குப்பிறகு உருவாக்கியுள்ள சிந்தனை மரபு முதலியவற்றினைக் கொண்டு, எங்களது வாழ்வுக்கும் சித்தத்திற்கும் உகந்த வகையில், வடிவமைப்போம்.

முடிவாக, பெண்ணியம் கூட்டுக் கட்டுரையில் பெண்களின் குரல் மழுங்கடிக்கப்பட்டுள்ளதை நாங்கள் சுட்டிக்



படிப்பகம்

www.padippakam.com



காட்ட விரும்புகிறோம். கூட்டத்தில் பங்கேற்ற பெண்களில் பலர் இந்நாட்டின் பெண் விடுதலை இயக்கங்களின் செயல்பாட்டிலிருந்து விலகி நிற்பவர்களாகவே எங்களுக்குப் படுகிறது. 'பெண்ணியம்' என்றவொரு அறிவு வகையே பெண் விடுதலை செயல்பாட்டுடன் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட நிலையில்தான் இங்கும் சரி, உலகின் பிற பகுதிகளிலும் சரி, தன்னை சிந்தனை உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டது. பெண்ணியம் பற்றிய நமது புரிதலை ஆழப்படுத்த நமது அரசியல் செயல்பாடும் அச்செயல்பாட்டிலுமாகவும், அதைச் சார்ந்தும் நாம் உருவாக்கிக் கொள்ளும் அறிவுமே உதவக் கூடியவை. ஏனைய 'கருத்துக்கள்' பிரச்சனையை குழப்பவும் ஆணாதிக்க சிந்தனையை வலுப்படுத்தவுமே உதவும்.

—இதழ் 8, மே, ஜுன் 92

**ஒரு இடையீடு...**

'எதிர்வினை' பகுதியில் முன்வைக்கப்படும் மாற்றுக் கருத்துக்கள் மீது உடனடியாக 'எங்கள் நிலைபாட்டை'ச் சொல்லி 'முடித்துவிடும்' வழக்கம் நிறப்பிரிகைக்குக் கிடையாது என்பதைத் தொடர்ந்து வாசித்துவரும் தோழர்கள் அறிவர். கூட்டுக்கட்டுரை போலவே பல்வேறு கருத்துக்களும் மோதும் களமாக எதிர்வினை பகுதி அமைகிறது. இறுதியாக Sum up செய்வது கூடக் கிடையாது. எனினும் மேற்கண்ட 'பாரதி சுட்டும் விழிச் சுடர்' இதழைச் சேர்ந்த பதினைந்து பெண்விடுதலைக் 'களப்பணியாளர்களின்' கூட்டுக் கட்டுரை எழுதப்பட்டுள்ள தொனி, செய்திகளைத் திரித்தல் ஆகியவை குறித்து ஒரு சிலவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

1. பெண் விடுதலை கூட்டுக் கட்டுரை விவாதத்தில் பங்கேற்றவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் நேரடியாக

படிப்பகம்

www.padippakam.com



அன்றாட அரசியல்/சமூகக் களப்பணிகளில் ஈடுபட்டுள்ளோர். நிறப்பிரிகைக்கும் மற்ற சிறு பத்திரிகைகளுக்குமுள்ள முக்கியமான வேறுபாடுகளில் ஒன்று அதன் வாசகர்களில் பெரும்பாலோர் களப்பணியாளர்கள் என்பதுதான். '64 சிந்தனையாளர்' 'அறிவார்ந்த மேதாவித்தனம்' என்றெல்லாம் அடிக்கடி அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் இதைச் சொல்ல வேண்டியுள்ளது.

2. கூட்டு விவாதத்தில் யார் வேண்டுமானாலும் கலந்து கொண்டு தம் கருத்துக்களை முன் வைக்கலாம் என்பது நடைமுறை. நி.பி.யில் வெளியிட்ட அழைப்பு தவிர சுட்டும் விழிச்சுடர் ஆசிரியர் குழுவிற்கும் கூட கூட்டு விவாத அமைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. இந்தக் கூட்டு விவாதத்தில் நிறப்பிரிகையின் பங்கு என்பது கருத்துக்களைத் தொகுப்பது மட்டுந்தான். (இதையும் கூட யார் வேண்டுமானாலும் செய்யலாம் என அறிவித்துள்ளோம். பெண்ணியம் கட்டுரையை பாண்டி பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ராமசாமி தொகுத்தார்.) இது தவிர விவாதத்திற்கு வந்துள்ள யார் ஒருவரையும் போல நிறப்பிரிகை தனது கருத்துக்களையும் முன் வைக்கிறது அவ்வளவுதான். மற்றபடி யாரையும் அதட்டிக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்யும் நோக்கம் நி.பி.க்குக் கிடையாது.

3. 'வரதட்சிணை எதிர்ப்பு' போன்ற உடனடி நடவடிக்கைகளை நி.பி. ஆசிரியர் குழுவோ விவாத முடிவில் ஒலித்த கூட்டுக் குரலோ மறுக்கவில்லை. விவாதத்தை அடுத்த தளத்திற்கு உயர்த்துவதென்பது 'இதர ஒடுக்குமுறைகளுக் கெதிரான நடவடிக்கையிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கு வாய்ப்பாகிவிடக் கூடாது' என்கிற கருத்தை நி.பி. ஆசிரியர்களே விவாதத்தில் முன் வைத்துள்ளனர்.

4. சுட்டும் விழிச்சுடரின் 15 களப்பணியாளர்களின் மிகப் பெரிய மோசடி, கூட்டுக் கட்டுரையில் ஒலித்த பல

www.padippakam.com



குரல்களை ஒற்றைக் குரல் போல முன்வைத்து அதற்குப் 'பதிலளிக்க' முனைந்திருப்பதுதான். பெண்கள் தான் குழந்தைகளை வளர்க்க முடியும் என்கிற கருத்து முதல், ஓரினப்புணர்ச்சி வரை பல்வேறு விதமான கருத்துக்கள் அங்கே முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சில வற்றைத் தேர்வு செய்து அதனை நி.பி.யைச் சேர்ந்த ஆண்களின் கருத்தாக முன் வைத்திருப்பது என்ன நியாயம்? ஒன்று கூட்டுக் குரலாக ஒலித்த கருத்துக்களை எடுத்துக் கொண்டிருக்கலாம். அல்லது கருத்துரைத்தவரின் பெயரை குறிப்பிட்டு மறுத்திருக்கலாம். மாறாக என்ன காரணத்திற்காக எல்லாக் கருத்துக்களையும் நி.பி. கருத் தாக முன் வைத்துள்ளீர்கள்?

5. மறுப்பதற்காக எடுத்துக்கொண்ட கருத்துக்களை யும் கூட நீங்கள் முழுமையாக மறுக்கவில்லை. 'இந்தக் கேள்வி எங்களிடையேயும் எழுகிறது' 'ஓரினப் புணர்ச் சியை அடிப்படை உரிமை சம்பந்தமான பிரச்சினையாகக் கருதுகிறோம்' 'குடும்பத்தின் ஒடுக்குமுறையை எங்களை விட யாரும் உணர்ந்திருக்க முடியாது'—என்கிற ரீதியில் தான் 'மறுப்புகள்' சொல்லப்பட்டுள்ளன. பின் சு. வி. சு. காரர்கள் என்னதான் சொல்கின்றனர்? 'இவற்றையெல் லாம் நாங்கள் பேசிக்கொள்கிறோம். நீங்கள் யார் இதைப் பேச?' என்பதுதான். ஆக பெண்ணியம் தொடர்பான கருத்துக்களை ஆண்கள் பேச முடியுமா, முடியாதா என்கிற ஒரு உருப்படியான கேளவியை மட்டுமே சு.வி.சு. வின் பதில் கூட்டுக் கட்டுரை முன் வைத்துள்ளது. இத்த கைய விவாதங்கள் வரவேற்கப்பட வேண்டியவையே. நி.பி. கூட்டு விவாதத்திலேயே கூட அஸ்வகோஷ் இதனைத் தொட்டுள்ளார். கோ. ராஜாராமும் (நி.பி.5) இது குறித்துப் பேசுகிறார். இந்த விவாதம் தொடர்வதை நாங்கள் வரவேற்கிறோம்.

6. நாங்களும் தான் இந்தக் கருத்துக்களையெல்லாம் வைத்திருக்கிறோம் எனச் சொல்கிறீர்கள். இவற்றை

www.padippakam.com



விவாதமாகவாவது கொண்டு வந்திருக்கலாமே. களப்பணி என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளக் கூடாது. நாங்கள் விசாரித்தவரை அப்படி ஒன்றும் பெரிய களப்பணிகளில் நீங்கள் ஆழ்ந்து போனதாய்த் தெரியவில்லை. ஒருவேளை இத்தகைய கருத்துக்கள் உடனடிக் களப்பணிகளைப் பாதிக்கும் என நீங்கள் அனுபவ பூர்வமாய் அறிந்திருந் தால். அவற்றையெல்லாம் நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது முக்கியம் எனத் தோன்றவில்லையா? அந்த நோக்கில் உங்கள் கட்டுரை இருந்திருந்தால் எவ்வளவு பயனுடையதாய் இருந்திருக்கும்?

7. 'எரிகாயோங்' என்றெல்லாம் பெயர்களைக் காட்டி அச்சுறுத்த வேண்டாம் என எங்களைச் சொல்லி விட்டு 'ரோஸ்மண்ட் காண்டோரை'த் தெரியுமா என மிரட்டி களப்பணிக்கும் மேலான உங்கள் அறிவுஜீவித் தன்மையையும் நிரூபித்து விட்டீர்கள். போகட்டும் 'கம்யூன்' பற்றிய அவரின் அல்லது உங்களின் விமர்சனங் களை நீங்கள் நி.பி.யில் எழுதாவிட்டாலும் சு.வி.சு. விலா வது எழுத வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

8. சில விசயங்களை நீங்கள் விளக்கி எழுதலாம்—(நீ யார் ஆண் எனக்கு அறிவுரை சொல்வது எனச் சீறா நீர்கள். சும்மா வேண்டுகோள்தான்) —அவற்றில் ஒன்று "சராசரி ஆணைக் காட்டிலும் பெண்ணியம் பேசும் ஆணை நாங்கள் அதிகமாக சந்தேகிக்கிறோம்" என்பது. நீங்கள் எல்லோரையும் சந்தேகிப்பது மட்டும்தான் புரிகிறது அதற்கு மேல் புரியவில்லை.

9. கடைசியாக ஒன்று. சரி, சு.வி.சுவின் 15 களப்பணி யாளர் Cum அறிவு ஜீவிகளின் பெயர்களை வெளியிட்டி ருக்கலாமே. ஒரு வேளை 15 பேருக்காகக் கட்டுரை எழுதிய வர் (விவாதித்துதான்) தனது பெயர் வருவதை விரும்ப வில்லையா? இந்த ஆணாதிக்கச் சமூகம்தான் பெண்களை முகமற்றவர்களாகவும் பெயர்களில்லாதவர்களாகவும் ஆக்கிவிடுகிறது நீங்களுமா இப்படி? □

—நிறப்பிரிகை

# 11

# பெரியார் - பூலே வழியில் பெண்ணுரிமை

— விஜி

மக்கள் தொகையில் சரிபாதி உறுப்பினர்களாகிய பெண்களை ஏங்கல்ஸ் தொழிலாளி வர்க்கத்தின்தொழிலாளி என்று குறிப்பிட்டுள்ளார். ஆம் அவர்கள் சுரண்டப்படுபவர்களாலும் சுரண்டப் படுபவர்கள். பெண்களின் உரிமைகள் மீட்கப்பட்டால்தான் இச்சமூகம் சமத்துவ சனநாயக சமூகமாகக் கொள்ளப்படும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இதனை எவ்வாறு நடைமுறையில் சாத்தியப் படுத்தப் போகிறோம். என்பதுதான் இன்று நமக்கு முன்னுள்ள பிரச்சினை. மாமேதை லெனின் தலைமையிலான சோவியத் யூனியனிலும், மாமேதை மாவோவின் தலைமையிலான சீனத்திலும் உருவான புரட்சிக்குப் பிந்திய

www.padippakam.com



சமுதாயங்களிலும் கூட பெண்ணுரிமை என்பது தோல்வி கண்ட பிரச்சினை. நாளை நாம் உருவாக்கப்போகும் வாழ்வுரிமை பெற்ற தமிழ்ச் சமூகம் தீண்டாமைக் கொடுமை, சாதிக் கொடுமை மற்றும்பாலியல் ஒடுக்கு முறைகளற்ற ஒரு சமூகமாக மலர வேண்டுமென்றால் இன்றுவரை உலகில் கற்றுக் கொண்ட அனைத்துப் படிப்பினைகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டு செய லில் இறங்கவேண்டும். தீண்டாமைக் கொடுமைகளும் பெண்ணடிமைத் தனமும் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போல இப்போது இல்லாவிட்டாலும், புதிய வடிவங்களில் நிலவத்தான் செய்கின்றன. சமூகத்தின் சரிபாதி உறுப்பினர்களாகிய பெண்களையும், ஆறில் ஒரு பங்கு தாழ்த்தப்பட்டவர்களையும், சிறுபான்மை யினரையும் உள்ளடக்கிய ஒரு தேசிய விடுதலைதான் சரியான சமத்துவ சனநாயக அமைப்பை உருவாக்க முடியும்.

## பூர்ப்பனீயத்தின் பரிசு!

மனுதர்ம விதிப்படி மனைவியைக் கணவன் அடிக்க லாம். அவனுக்கு அதற்கு உரிமை உண்டு. மீறி உச்சரித்து விட்டாலோ அந்த நாக்கை அறுக்க வேண்டும். கேட்டு விட்டாலோ காதை அறுத்துவிட வேண்டும். தந்தை அல்லது சகோதரன் யாரிடம் ஒப்படைக்கிறார்களோ சாகும்வரை அவனுக்குக் கீழ்ப்படிந்து களங்கம் கற்பிக் காமல் கற்போடு வாழவேண்டும். வீட்டு வேலைகள் செய்யும் போது மகிழ்ச்சியோடும், பாத்திரங்களைச் சுத்தம் செய்யும்போது கவனத்துடனும் செலவினங்களைச் சிக்கனமாகவும் செய்ய வேண்டும். இதுவே பெண்களின் உன்னத லட்சியங்களாக உருவாக்கப்பட்டுள்ளது. பெண் களைச் சிந்திக்கவே விடக்கூடாது. சிந்திக்க நேரமின்றி வீட்டு வேலைகள் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று கூட இச்சமூகத்தில் பேசப்படுகிறது. இதனடிப்படையில்

படிப்பகம்

www.padippakam.com



உருவான இந்தியச் சமூகத்தில் தான் பெண்ணின் மீது எத்தனை விதமான பாலியல் ஒடுக்குமுறைகள்! வரதட்சணைக் கொடுமை, கருவிலேயே கல்லறைக் கட்டப்படுதல், தப்பிழைத்தால் சிசுவிலேயே கொன்றுவிடுதல், அப்படியும் பிழைத்து வளர்ந்தால் ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டாம் தனமான வாழ்க்கை முறை! குடும்பத்திற்குள், சமூகத்தில், பள்ளிக் கூடத்திற்குள், அலுவலகத்திற்குள் ஏன் படுக்கையறையிலும் கூட பெண் இரண்டாம் தரமானவள். அவள் உணர்வுகள் மதிக்கப்படுவதில்லை.

அவள் தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதில்லை. அவள் உழைப்பு தந்தை, கணவன், சகோதரன் மற்றும் சமூகத்தால் சுரண்டப்படும். அவள் உடல் வணிகச் சந்தையில் விற்கப்படும். வாய்ப்புக் கிடைத்தாலும், வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு பாலியல் ரீதியாக பலாத்காரம் செய்யலாம். இதனை இச் சமூகம் மற்றும் அரசு கண்டுகொள்ளாது. விழித்துக் கொண்ட பெண்கள் தங்களது சக்தியை திரட்டி அதை ஒரு பிரச்சினையாக்கினாலும் கூட பாதகம் செய்தவர்கள் மீது நடவக்கை எடுக்காது. தொடர்ந்து போராடினால் நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்யும். உச்சநீதி மன்ற நீதிபதி ரெத்தினவேல் பாண்டியன், சுமன் ராணி என்கிற பெண் காவல் துறையால் கற்பழிக்கப்பட்ட வழக்கில் 'ஒரு மாதிரியானவள், ஒழுக்கக் கேடானவள்' எனச் சொல்லி கற்பழித்தவர்களின் தண்டனையைக் குறைத்தார். இதைத்தான் இன்று காவல்துறை அதிகாரிகள் அண்ணாமலை நகர் பத்மினி வழக்கிலும் சொல்லுகின்றனர்.

**காங்கிரஸ் ஆட்சியிலே...**

முன்னாள் உள்துறை அமைச்சர் சுபோத்காந் சகாய் பாராளுமன்றத்தில் ஒரு புள்ளி விபரம் சமர்ப்பித்தார்—

www.padippakam.com



அதில் 1987 ஆம் ஆண்டிலிருந்து கற்பழிப்புகள் பாலியல் பலாத்காரங்கள் மற்றும் வரதட்சணை சாவுகள் ஒவ்வொரு வருடமும் அதிகமாகிக் கொண்டே வருவதாய் கூறியுள்ளார். வேறு எந்தத் துறையில் முன்னேற்றம் காணப்படுகிறதோ இல்லையோ மேற்கூறிய கொடுமைகளில் எத்தனை முன்னேற்றம் பாருங்கள்! தஞ்சை மருத்துவக் கல்லூரி விடுதி மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி விடுதியிலும் மாணவியர்கள் கொல்லப்பட்டார்களே

குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்களா? ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளை துருவித்துருவி கண்டு பிடித்த காவல் துறையின் திறமை இந்த விஷயத்தில் எங்கே போனது? அமைச்சரே ஒரு புள்ளி விபரம் கொடுக்கிறார். 10 சதவிகித வழக்குகளில்தான் குற்றவாளிகள் தண்டிக்கப் படுகின்றனராம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு பாக்பாட்டில் **மாயாதியாகி** என்ற பெண்ணின் கணவரைக் கொன்று அவளைத் தெருவில் நிர்வாணமாக அழைத்துச் சென்றார்களே! அதற்குக் காரணமான காவல்துறை ரவுடிகளுக்கு உரிய தண்டனை ஏன் வழங்கப்படவில்லை? சட்டமும் சட்டத்தை விளக்குபவர்களும் ஆணாதிக்கச் சமூகப் பிரதிநிதிகளாக அமைந்து விட்டது தானே இதற்கெல்லாம் காரணம்.

## நீதித்துறை என்ன சொல்கிறது?

பாலியல் வன்முறைகள் என்பது பொது இடங்களைக் காட்டிலும் அந்தரங்கமான சூழல்களிலும், அலுவலக அறைகளிலும், மற்றும் லாக்கப் ரூம்களிலும் தான் அதிகம் நடைபெறுகின்றன. இதனை நிரூபிப்பதற்கு சாட்சிகள் கொண்டுவர பாதிக்கப்பட்ட பெண் எங்கே போவாள்? பாதிக்கப்பட்ட பெண்ணின் கடந்த கால வாழ்க்கையில் தனியாக இருந்தாளா? இல்லை, திருமணத்திற்கு அப்பால் உறவுகொண்டவளாக இருந்தாளா?

www.padippakam.com



என்பதை எல்லாம் தீவிரமாக ஆராய்ச்சி செய்து இவர்களின் ஒழுக்க மதிப்பீடுகளின்படி அவள் ‘ஒரு மாதிரியானவள்’ என்றால் கற்பழிப்பது நியாயம்தான் என்று சொல்லும் சமூகம் இது. இவர்கள் செய்யும் இன்னொரு ஆராய்ச்சி; கற்பழிக்கும் போது இணங்கினாளா? இல்லையா? இதெல்லாம் எவ்வளவு ஆபாசமான மனிதத் தன்மையற்ற ஆராய்ச்சி! நான்கு பேர்கள் சேர்ந்து கொண்டு கற்பழிக்க வரும்போது, உடலையும் உயிரையும் காப்பாற்றிக் கொள்ள ‘இணங்கிப் போ’ என்கின்றனர் மருத்துவர்களும் காவல்துறை அதிகாரிகளும். ஆனால் வேலியே பயிரை மேயும் போதும் குற்றவாளிகளைக் காக்கத் துடிக்கும் போதும் இணங்கினாளா? இல்லையா? என ஆராய்ச்சி செய்கிறது காவல்துறை.

மாயாதியாகி விஷயத்திலும் சரி, சுமன்ராணி விஷயத்திலும் சரி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகள் இல்லாமல் போய் விட்டது. ஆனால் ஐதராபாத்தில் **ரமீரா பீவி** என்கிற பெண் காவல்துறையால் கற்பழிக்கப்பட்டு கணவரும் கொல்லப்பட்டபோது குற்றவாளிகள் தப்ப முடியவில்லை. இதற்குக் காரணம் **ஸ்திரீ சக்தி** சங்காதனா (பெண்கள் சக்தி சங்கம்) என்கிற சுயேச்சையான பெண்கள் அமைப்பு இப்பிரச்சினையை எடுத்துப் போராடியும் வழக்காடியும் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தந்தது.

**அமைப்பு!**

மற்றொரு அமைப்பான **ஷேக்தாரி சங்காதனா** என்ற பெண்கள் அமைப்பு மராட்டியத்தில் செயல்பட்டு வருகிறது. இரண்டாண்டுகளுக்கு முன் 2000 பெண் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடு ஒன்றை அது நடத்தியது. கிராமப் புறங்களில் பெண் அடிமை எதிர்ப்பு மற்றும் பெண்களுக்கான சொத்துரிமைகளுக்காகப் போராடுவது

www.padippakam.com



என்பது அவர்களின் தீர்மானம். இவர்கள் செயல்படக்கூடிய கிராமங்களில் பெண் பற்றிப் பொய்யான நம்பிக்கைகளை (புனைவுகளை) விளக்கி, அவர்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கூறி குடும்பச் சுரண்டல், கணவன் அதிகாரம், மனைவியை அடித்தல் மற்றும் சொத்துரிமையை மறுத்தல் ஆகியவற்றிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாதிரி கிராமங்களை உருவாக்குகின்றனர். இதற்கு **'ஜோதிபா கிராமம்'** எனப் பெயரிடுகின்றனர். மக்கள் நம்பிக்கையைப் பெற்று மூன்றாவது அணி ஒன்று தமிழகத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் செல்வாக்காக இருக்கும் பகுதிகளிலேனும் இத்தகைய மாதிரி கிராமங்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இதற்கு அடிப்படை தேவைகள் இரண்டு.

**ஒன்று :** பெண் விடுதலையின் முக்கியத்துவத்தைக் கட்சி அங்கீகரிக்க வேண்டும். பெண்ணுரிமைக்காக உருவாக்கக் கூடிய அமைப்பு முற்றும் முழுதாக பெண்களின் அமைப்பாக சுயேச்சையுடன் செயல்படக் கூடியதாக அமைய வேண்டும். அவை ஷேக்தாரி சங்காதனா, ஸ்திரீ சக்தி சங்காதனா போலச் சுயேச்சையாக செயல்பட வேண்டும். மற்ற கட்சிகளின் மாதர் அமைப்புகள்போல கட்சிகளின் தொங்குசதையாக, கட்சிக்காரர்களின் மனை விமார்களின் மனமகிழ் மன்றங்களாக இல்லாமல் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துப் போராடக்கூடிய போர்க்குணமிக்க, முற்றிலும் சுயேச்சையாக செயல்படக் கூடிய நிறுவனமாக இருக்க வேண்டும்.

**இரண்டு :** பெண் விடுதலை பற்றி சரியான கருத்துக்கள், பார்வைகள் குறித்த தெளிவுகள் வேண்டும். இது மிகவும் அவசியம். ஏனெனில் பெண் விடுதலை என்றால் வரதட்சணைக் கொடுமை பெண் சிசுக்கொலை, ஆபாச சுவரொட்டி மற்றும் லாக்கப் கற்பழிப்புகள் ஆகியவை

படிப்பகம்

www.padippakam.com



களைப் பற்றிப் பேசுவது என்பதாக மட்டுமே தமிழ்ச் சூழலில் இயங்கி வரும் மாதர் அமைப்புகள் பார்க்கின்றன. இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் அடிப்படையான தந்தைவழி ஆணாதிக்கச் சமூக மதிப்பீடுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்த பார்வைத் தெளிவு கிடையாது. நல்ல வேளையாக சமீபகால தமிழ்ச் சூழலில் பல வரவேற்கத்தக்க மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழ் சிந்தனைச் சூழலில் முக்கிய தடம் பதித்துள்ள 'நிறப்பிரிகை' என்னும் சிற்றிதழில் நடைபெறும் விவாதங்கள் இதற்கு ஒரு சாட்சி. இந்த இரண்டாவது அம்சத்தைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

## பெண் விடுதலை இயக்கம்

வளர்ச்சியடைந்த ஐரோப்பாவில் உள்ளது போல தொழில் புரட்சி, சனநாயகமாதல், பெண் விடுதலை போன்றவை இந்தியாவில் இல்லை என்பது நாமறிந்த ஒன்று. இது தவிரவும் வேறு எங்கைக் காட்டிலும் பார்ப்பனியமும் இந்துமதமும் பெண்களை அதிகமாக இழிவு செய்து அடிமைப்படுத்தி குடும்பச் சிறைக்குள் இங்கு பூட்டிவைத்துள்ளன. இந்தியாவிற்கே உரியதான சாதியத்திற்கும் பெண்ணடிமைத் தனத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. பெண்களுக்கே உரிய உடல் நிகழ்வான மாதவிடாய்ப் பிரச்சினையை தீண்டப்படாதப் பிரச்சினையாக்கி ஒதுக்கி வைக்கும் மரபு உலகில் வேறு எங்கும் இல்லை. மாதவிடாய்க்கு தீட்டு என்ற சொல் நாம் பெருமை கொள்ளும் தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை. இத்தகைய சூழலில் இங்கு பெண் விடுதலைக் கருத்துக்கள் ஆங்கிலேயர்களின் இந்திய வருகைக்குப்பிறகு கல்வி பெறும் வாய்ப்பை பலரும் அடைந்தவுடன் தான் தோன்றியது. பெண் விடுதலைக் கருத்துக்கள் தோன்றிய இவ்வரலாற்றை இரு போக்குகளாகப் பிரிக்கலாம்.

www.padippakam.com



**முதல் போக்கு :** ராஜாராம் மோகன்ராயர், வித்து யாசாகர், ரனடே போன்றோர் பேசிய கருத்துக்களையும், கொண்டு வந்த சீர்திருத்தங்களையும் இந்த வகையில் அடக்கலாம் இவர்கள் அனைவரும் உயர்சாதிக் கல்வி யாளர்கள். இன்னும் வெளிப்படையாகக் கூறினால் பார்ப்பனர்கள். உடன்கட்டை ஏறுதல் எதிர்ப்பு, விதவைத் திருமணம், இளமைத் திருமணத்தடை, பெண் கல்வி, சொத்துரிமை ஆகியவை தொடர்பாக பல இடர்ப் பாடுகளுக்கு இடையில் போராடி முற்போக்கான சட்டத் திருத்தங்களையும், மன மாற்றங்களையும் இவர்கள் கொண்டு வந்தனர். இவர்கள் அனைவரும் இந்தியச் சமூகம், பார்ப்பனீயம் மற்றும் இந்து மதம் ஆகியவை குறித்து உயர்வான கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. இந்து மதத்தைச் சீர்த்திருத்தி மீண்டும் புனிதமாக்க வேண்டுமென பாடுபட்டவர்கள்; ஆரிய சமாஜம், பிரும்ம சமாஜம் போன்ற அமைப்புகளை உருவாக்கியவர்கள். ‘மாறிவரும் சமூகச்சூழலில் இளமைத் திருமணம், விதவை மறுமணத் தடை ஆகியவை இந்து சமூக அமைப்பையும் குடும்ப நிறுவன அமைப்பையும் சிதைத்து விடக் கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம்’ என வெளிப்படையாகக் கூறியவர்கள். உயர்சாதிப் பெண்கள் விதவை மறுமணத் தடையால் தாசிகள் ஆகி விடக் கூடாது. அதனால் குடும்ப நிறுவனம் சீர்குலைந்து விடக்கூடாது என்பதுதான் அவர்கள் கவலை.

**இரண்டாவது போக்கு :** மராட்டியத்தில் **ஜோதிபா பூலேயும்** தமிழகத்தில் **தந்தை** பெரியாரும் பெண் விடு தலைப்பற்றி தீவிரமாகப் பேசினார்கள். இவர்கள் இரு வரும் பார்ப்பனர்கள் அல்லாதவர்கள் மட்டுமல்ல, சாதீயம் மற்றும் தீண்டாமையைக் கடுமையாக எதிர்த்த தவர்கள். பூலேதான் முதன் முதலில் சாதியத்திற்கும் பெண்ணடிமைத் தனத்திற்கும் உள்ள உறவை வெளிப் படுத்தியவர். இன்று நிறப்பிரிகை விவாதங்கள் போன்ற

www.padippakam.com



வற்றில் வெளிப்படும் தீவிரமான கருத்துக்கள் எல்லாம் மிகச் சாதாரணமாகவே மகாத்மா பூலேயிடமும் தந்தை பெரியாரிடமும் காணப்பட்டுள்ளது. சாதியத்திற்கும் பெண்ணடிமை தனத்திற்கும் மட்டுமல்ல பெண்ணடிமைத் தனத்திற்கும் குடும்ப அமைப்பிற்கும், பெண்ணடிமைத் தனத்திற்கும் கற்புக்கும், பெண்ணடிமைத் தனத்திற்கும் ஒழுக்க மதிப்பீடுகளுக்கும் உள்ள உறவுகளை முதல்முதலில் இவர்கள் வெளிப்படுத்தினர். பாரதி கூட கற்பை ஆண்/ பெண் இருவருக்குமாய் ஆக்கினான். ஆனால் இவர் களோ கற்பெனும் கருத்தாக்கத்தையே முற்றிலுமாக தகர்த்தெறிந்தனர். பூலே தனது இறுதிக்கால எழுத்துக் களில் பாலாதிக்கம் சார்ந்த மொழியைத் தவிர்த்தார் என வும் 'சர்வஜனிக் சத்திய தர்மா' என்ற புத்தகத்தில் பால் சாரா மொழி நடையைப் (அவன், அவள் என்கிற பால் வித்தியாசமின்றி) பயன்படுத்தினார் எனவும் **கெயில் ஓம்வெத்** குறிப்பிடுகின்றார்.

இன்று தமிழ்ச் சூழலில் பேசப்படும் பெண் விடுதலை தொடர்பான கருத்துக்களை இந்த இரு போக்கிற்குள் உட்படுத்தலாம்.

**ஒன்று**: ஒழுக்க மதிப்பீடுகள், குடும்பம், கற்பு போன்ற நிறுவனங்கள்தான் பெண்ணடிமைத் தனத்திற்கு மூலாதாரமாய் இருக்கிறது என்பதைக் கண்டு கொள் ளாமல் வரதட்சணைக் கொடுமை, பெண் சிசுக்கொலை மற்றும் ஆபாச சுவரொட்டி ஆகியவற்றை மட்டும் எதிர்க்கும் போக்கு.

**இரண்டு**: பெண்ணடிமைத்தனத்திற்கு மூலாதார மான ஒழுக்க மதிப்பீடுகள், மற்றும் அவற்றின் குறியியல் செயல்பாடுகளை (புடவை கட்டுதல், தாலி அணிதல், தாய்மை) ஆகியவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய் வதோடு மேற்கூறிய உடனடிக் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடுதல், குறிப்பாக நிலவும் தந்தை வழிச்

படிப்பகம்

www.padippakam.com



சமூக ஒழுக்க மதிப்பீடுகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தல் மற்றும் போராடுதல்.

பெண் விடுதலையைச் சரியாக பெரியார், பூலே வழியில் முன்னெடுக்கும் போது அதனைச் சனாதனிகள் 'அதிதீவிரம் அராஜகம், ஒழுக்கக்கேடு' என்றெல்லாம் பிரச்சாரம் செய்யலாம். வாழ்வுரிமை பேசினால் 'வன்முறையாளர்கள், பிரிவினைச் சக்திகள்' என காழ்ப்பைக் கக்குகிறார்கள் அல்லவா? அப்படித்தான் இதுவும். எனவே உண்மையில் தந்தை பெரியார், மகாத்மா பூலே வழியான இரண்டாவது போக்கே நாம் உயர்த்திப்பிடிக்க வேண்டிய போக்கு. இரத்தின வேல் பாண்டியன் போன்ற நீதிபதிகளிடமும், காவல் துறை அதிகாரிகளிடமும் ஆழ்ந்துகிடக்கும் ஆணாதிக்க தந்தைவழிச் சமூக கருத்துக்களைக் கண்டறிந்து தோலுரிப் பதோடு நம் தோழியர்கள் பத்மினிக்கும், சுமன் ராணிக் கும் நீதி கிடைக்க வழி செய்யும் முயற்சிகளை இணைக்க வேண்டும். வலிமைமிக்க மூன்றாவது அணியாய் வளர்ந்து வரும் இயக்கம் பெண் விடுதலைக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதிலும், பெண்களின் பிரச்சினைகளுக்காக சுயேச் சையான அமைப்புக்களைக் கட்டமைப்பதிலும் பழைய படிப்பினைகளை கணக்கிலெடுத்துக் கொண்டு பெரியார், பூலே வழியில் பெண் விடுதலைச் சிந்தனைகளை முன் னெடுத்துச் செல்ல வேண்டும்.

பார்ப்பனீய சீர்த்திருத்த பெண் உரிமை வாதத்தைத் தூக்கி எறிந்து பெரியார், பூலே வழி புரட்சிகர பெண்ணுரி மையைப் பேசுவோம். பாலியல் வன்முறைகளுக்கு எதிராகப் போராடும் சுயேச்சையான பெண்ணுரிமை இயக்கங்கள் அமைப்போம். பெண்ணுரிமைப் போராட் டங்களை அரசியல் போராட்டங்களோடு இணைப்போம்.

□

www.padippakam.com

# 12

# நமது உதடுகள் ஒன்றாகப் பேசும்போது...

*—லூஸி எரிகாரே*

பேசு, அதுபோலவே. ஏனென்றால் உன்னுடைய மொழி ஒரேயொரு சரடைத் தொடருவதல்ல. ஒருவகைப்பட்டதோ ஒரே மாதிரியானதோ அல்ல, நாம் அதிர்ஷ்டசாலிகள். நீ ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலுமிருந்தும் பேசுகிறாய். நீ ஒரே நேரத்தில் என்னை முழுமையாகத் தீண்டுகிறாய். எல்லா புலன்களிலும், ஏன் ஒரேயொரு பாடல்? ஒரு சொல்லாடல்? ஒரு சமயத்தில் ஒரு பிரதி? என்னை மயக்கவா? திருப்திப்படுத்தவா? எனது துளைகளில் ஏதேனுமொன்றை நிரப்பவா? எனக்கு எதுவுமில்லை, உன்னோடு. நாம் வெறுமைகளல்ல, பிறரிடமிருந்து நிரப்புதலை, முழுமையை, உதவியை எதிர்பார்க்கும் பற்றாக்

படிப்பகம்

www.padippakam.com



குறைகளல்ல. நமது உதடுகள் நம்மைப் பெண்களாக்கு கின்றன என்றால், உள்வாங்குதலும், நிறைவாக்கிக் கொள்ளுதலும், நிரப்பிக் கொள்ளுதலும் தான் நமக்கான பிரச்னைகள் என்று பொருளல்ல.

என்னை முத்தமிடு. இரண்டு உதடுகள் இரண்டு உதடு களை முத்தமிடட்டும். வெளிப்படையாயிருப்பதே, மீண்டும் நமதாகட்டும், நமது உலகமாகட்டும், நமக் கிடையில் உட்புறத்திலிருந்து வெளிப்புறம் நோக்கிய இயக்கமும், வெளிப் புறத்திலிருந்து உட்புறம் நோக்கிய இயக்கமும், அறிந்திருக்கவில்லை. எந்த எல்லைகளையும், அது முடிவுஇல்லாதது இவை எந்த அளவும், எந்த வாயும் நிறுத்தமுடியாத பரிமாற்றங்கள், நமக்கிடையே வீட்டுக்கு சுவர் களில்லை. காலியிடத்தைச் சுற்றி மதில்களில்லை. மொழிக்கு சுழற்சியில்லை. நீ என்னை முத்தமிடு. இந்த உலகம் விரியட்டும்-அடிவானம் கரைந்து மறைந்து போகும்வரை நாம் திருப்தியுறாதவர்களா, ஆமாம்! என்று சொல்லலாம். எப்போதுமே நாம் தீர்ந்துபோகாத வர்கள் என்ற அர்த்தத்தில் அது இருக்குமானால், நமது இன்பம் என்பது முடிவற்று இயங்குவதாகவும் ஒருவரை யொருவர் இயக்குவது என்பதாகவும் அர்த்தப்படுத்தப் பட்டால் நாம் ஆமாம் என்று சொல்லலாம். எப்போதும் இயக்கத்திலிருக்கும் இந்த வெளிப்படையான குணம் தீர்வதுமில்லை. தெவிட்டுவதுமில்லை.

அவர்கள் நமது பன்முகத்தன்மையைப் பேசுவதற்கு நம்மைப் பயிற்றுவிக்கவோ அனுமதிக்கவோ இல்லை. அப்படிப் பேசினால் அது முறையற்ற பேச்சாகிவிடும். நாம் அனுமதிக்கபட்டோம். ஒரு உண்மையை வெளிக் காட்ட இன்னொன்றை நாம் உணர்ந்திருந்த போதிலும் அதனை தெரிந்துகொண்டு மறைத்து விட்டு- ஒரு, உண் மையை மட்டும் வெளிக்காட்ட அனுமதிக்கப்பட்டோம்.



படிப்பகம்

www.padippakam.com



உண்மையின் மறுபக்கம் அதனை முழுமையாக்கும் நிரப்புக் கூறா? அதன் எச்சம்? மறைந்தே கிடக்கும் ரகசியம். உள்ளேயும் வெளியேயும் நாம் ஒரே விதமாக இருப்பதில்லை. அது அவர்களின் இன்பத்துக்குப் பொருத்தமானதாயில்லை. மூடுவது திறப்பது அதுதானே அவர்களுக்கு முக்கியம், அதுதானே அவர்களுக்கு ஆர்வமூட்டுவது? ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு பெண்மீதும் அதே செயல்பாட்டை மறுபடி மறுபடி நிகழ்த்துவதுதானே?

நீ/நான் அவர்களை சந்தோஷப்படுத்த நாம் இரண்டாகி விடுகிறோம். நாம் இரண்டாகப் பிளக்கப்பட்டு விட்டால் உட்புறம் வெளிப்புறம் என இரண்டாக-நீ உன்னையோ என்னையோ தழுவிக்கொள்ளவே முடியாமல் போய்விடும். வெளியே நீ உனக்கு அன்னியமானதொரு ஒழுங்கமைப்போடு ஒத்திசைய முயல்கிறாய். உன்னிலிருந்தே வெளியேற்றப்பட்ட நீ எதிர்ப்படுகிற எல்லாவற்றோடும் கலந்துவிட பார்க்கிறாய். உனதருகில் வரும் எல்லாவற்றையும் நீ அபிநயத்துப் பார்க்கிறாய். நீ தீண்டுகிற எல்லாமாகவும் மாறிவிடுகிறாய். உன்னைக் கண்டடையும் பசியில் நீ உன்னிலிருந்தும் என்னிலிருந்தும் முடிவற்று விலகிப் போகிறாய். ஒரு தோற்றத்திலிருந்து இன்னொன்றை, ஒரு எஜமானனிலிருந்து இன்னொருவரை வரித்துக் கொள்கிறாய். உனது முகத்தை, அமைப்பை, மொழியை உன்னை ஆளும் அதிகாரத்தின் ஆதிக்கத்துக்கு ஏற்றபடி மாற்றிக் கொள்கிறாய். கூறுபடுகிறாய். உன்னை இழிவுபடுத்த அனுமதித்துக் கொள்வதன் மூலம் உணர்ச்சியற்ற கேலிப் பொருளாக மாறிவிடுகிறாய். வேறுபட்ட ஒன்றாக நீ திரும்பிவருவதில்லை. நீ மூடுண்டவளாக, யாரும் ஊடுருவ முடியாதவளாகத் திரும்புகிறாய்.

**என்னிடம் பேசு, முடியாதா? நீ அதை விரும்பவில்லையா? உனக்குள்ளேயே வைத்திருக்க நினைக்கி**

www.padippakam.com



றாயா? மௌனமாக, வெறுப்பாக, கன்னித்தன்மையோடு இருக்க விரும்புகிறாயா? உனது உள்மனத்தை பொத்தி வைத்துத் கொள்ள வேண்டுமா? ஆனால் மற்றவையில் லாமல் அது இருக்க முடியாது. உன்மீது திணிக்கப்படும் தெளிவுகளால் உன்னை நீ கிழித்துப் பிளந்துகொள் ளாதே நமக்கிடையில் கன்னித் தன்மைக்கும் அது அல்லா ததற்கும் இடையே முரண்பாடு கிடையாது. நம்மைப் பெண்களாக்கும் நிகழ்வு என எதுவும் கிடையாது நீ பிறப்பதற்கு முன்பே கள்ளங்கபடின்றி நீ உன்னைத் தீண் டிக் கொண்டாய். உனது எனது உடல் ஏதோ ஒரு உறுப் பால், இயக்கத்தால், வினையால், ஏதோவொரு சக்தி யின் செயல்பாட்டால் பால் அடையாளத்தைப் பெறு வதில்லை. நீ ஏற்கெனவே ஒரு பெண்தான். உன்னைப் பெண்ணாக ஆக்க விசேசமான மாற்றமோ, தலையீடோ தேவையில்லை. ஒரு வெளிப்புறத்தைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் உனக்கில்லை - அந்த மறுபக்கம் ஏற்கெனவே உன்னில் தாக்கம் உண்டாக்கிபிருக்கும்போது, உன்னிலி ருந்து பிரிக்க முடியாத ஒன்றாக இருக்கின்றபோது நீ எப்போதும் எங்கேயும் மாற்றி மாற்றி வடிவமைக்கப் படுகிறாய். அவர்களது உடமைக் காதலை நீ தொந்தரவு செய்கிறாய். இதுதான் உனது குற்றம், நீ செய்யாத குற்றம்.

உனது பாலின்பம் எந்த வகையிலும் கேடானது அல்ல என்பதை எப்படி நான் உனக்கு சொல்வது? நீ பொருட்களை அறியாதவளா? உனது வெளிப்படையான தன்மையைத் திருடி உன்னை மூடுண்டவளாக மாற்றி, அவர்களது உடைமையாக ஆக்கி, உன் மீது அவர்கள் தமது சட்டவரம்புகளை, வரம்புமீறல்களை, இன்னும் கட்டத்தோடான பல்வேறு விளையாட்டுகளை நடத்தாத வரைக்கும் தப்பில்லை தான். ஆனால் அவர்கள் எப்போது அதைச்செய்வார்கள்? நீ எப்போது?உனது கபடற்ற குணத் தால் கணித்துப் பார். நாம் இந்த விளையாட்டை வி ளை

www.padippakam.com



யாடினால், நம்மைக் கேவலப்படுத்தும்படி, சிதைக்கும்படி அனுமதித்ததாக ஆகும். அவர்களது நோக்கம் நிறைவேற ஒத்துழைப்பதற்காக நாம் நம்மிடமிருந்து அன்னியர்களானோம். அதுவே நாம் நடிக்கவேண்டிய பாத்திரம். அவர்களது காரண அறிவுக்கு நாம் பணிந்து போனால் நாம் குற்றவாளிகள். அவர்களது தந்திரம் நம்மைக் குற்றவாளியாக்குவதுதான்.

நீ திரும்பி வந்தாய், பிளவுபட்டு. நாம் என்பது இனி இல்லை. நீ சிவப்பு/வெள்ளை, கருப்பு/வெள்ளை என பிளவுபட்டாய். மீண்டும் நாம் ஒருவரையொருவர் கண்டறிவது எப்படி? ஒருவரையொருவர் தீண்டிக் கொள்வது எப்படி?நாம் துண்டு துண்டாக வெட்டப்பட்டோம். தீர்த்துக் கட்டப்பட்டோம். நமது இன்பம் அவர்களது அமைப்பில் அதாவது கன்னித்தன்மை என்பது அவர்களால் குறியிடப்படாதது. அவர்களுக்கே உரித்தானது என அர்த்தம் கற்பிக்கப்பட்டே அவர்களது அமைப்பில்-சிக்கிக் கொண்டது. இன்னும் பெண்ணாக மாறவில்லையென்று அவர்கள் சொன்னால், அவர்களது பாலால், அவர்களது மொழியால் முத்திரையிடப்படாதவள் என்று அர்த்தம்; இன்னும் அவர்களால் ஊடுருவப்படாதவள், உடமையாக்கப்படாதவள் என்று அர்த்தம். கன்னிமை என்பது அவர்களது வாணிபத்துக்காக, பரிமாற்றத்துக்காக, போக்குவரத்துக்காக காத்திருக்கும் ஒரு எதிர்காலம்; அவர்கள் கண்டுபிடிப்பதற்கும் உடமையாக்கிக் கொள்வதற்கும், சுரண்டுவதற்குமான ஒரு கையிருப்பு- அவர்களது வருங்கால இன்பம். ஆனால், நம்முடையது அல்ல.

தொடக்கத்திலிருந்தே நாம் பெண்கள்தான் என எப்படி நான் சொல்கிறேன்? அவர்கள் நம்மை உற்பத்தி செய்யவோ நமக்குப் பெயரிடவோ, நம்மை புனிதமாக, திட்டாக மாற்றவோ தேவையில்லையென எப்படிச்

www.padippakam.com



சொல்கிறேன்? இது எல்லா காலத்திலும் முன்பிருந்தே நடந்து கொண்டிருப்பதுதான். அவர்களது உழைப்பு இல்லாமலேயே, அவர்களது வரலாறு நமது புகலிடத்தை நிர்ணயித்துள்ளது. இதன் பொருள், நமக்கு எல்லைகள் இருக்கின்றன என்பது அல்ல. அவர்களுடைய தேசம், குடும்பம், சொல்லாடல் முதலியவை நம்மை நகரமுடியாதபடி மதிற் சுவர்களுக்குள் சிறைப்படுத்தியுள்ளன என்பதே இதன் அர்த்தம். அவர்களது உடைமையே நமது புகலிடம். நமது அன்பின் மரணமே அவர்களது மதிற்சுவர்கள், அவர்களது வார்த்தைகள் நமது உதடுகளின் மீது பூட்டப்பட்டுள்ள கடிவாளங்கள்.

(...............)

சரியான வார்த்தை எது என்பது பற்றிப் பதட்டப்படவேண்டாம். அப்படி எதுவும் கிடையாது. உண்மை, நம் உதடுகளுக்கிடையில் இல்லை. எல்லாவற்றுக்குமே உயிர்வாழ உரிமையிருக்கிறது. எல்லாமே விருப்பு வெறுப்பின்றி பரிமாறிக் கொள்ள உகந்தவைதான். பரிமாற்றம்? எதுவுமே வாங்கப்பட முடியாதது என்னும்போது எல்லாமே பரிமாறிக்கொள்ள தக்கவைதான். நமக்கிடையில் உரிமையாளர்களும் இல்லை. வாங்குபவர்களும் இல்லை. நிர்ணயிக்கப்பட்ட பொருட்களும் இல்லை. விலைகளும் இல்லை. நமது உடல்கள் நமது பரஸ்பர இன்பத்தில் செழுமையாக்கப்படுகின்றன. நமது வளம் தீர்ந்து போவதல்ல, பற்றாக்குறை, நிறைவு இவற்றை அது அறியாது. நாம் நம்முடைய 'எல்லாவற்றையும்' வழங்கி விடும்போது நமது பரிமாற்றங்களுக்கு நிபந்தனைகள் ஏதுமில்லை. எப்படி இவ்வாறு சொல்வது? நாம் அறிந்திருக்கும் மொழியோ மிகவும் குறைவானது...

ஏன் பேசவேண்டும்? நீ கேட்பாய், நாம் ஒரே நேரத்தில் ஒரே விசயத்தை உணர்கிறோம். எனது கைகள், எனது கண்கள், எனது வாய். எனது உதடுகள், எனது

www.padippakam.com



உடல் உனக்குப் போதாதா? போதும் என்று அவை சொல்வதில்லையா? நான் 'ஆமாம்' என்று சொல்லி விடலாம், அது மிகவும் எளிதானது. இப்படித்தான் நம் மிடம்/உன்னிடம் அடிக்கடி சொல்லப்பட்டது.

நாம் ஒரு மொழியைக் கண்டுபிடிக்காவிட்டால், நாம் நமது உடலின் மொழியை கண்டுபிடிக்கா விட்டால் அதன் ஒரு சில அசைவுகள் மட்டுமே நமது கதையோடு கூட வரும். நாம் அந்த ஒரு சில கூறுகளை மட்டுமே பார்த்து அலுப்படைந்து விடும்போது, நமது விழைவு களை ரகசியமாக வெளித்தெரியாமல் மறைத்து விடுகி றோம். திருப்தியின்றி தூக்கத்தில் ஆழ்ந்துவிடும்போது வெகுகாலமாக தங்களுக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்று சொல்லிக் கொள்கிற ஆண்களுடைய வார்த்தை களின் பக்கம் திரும்பிவிடுகிறோம். ஆனால், நம் உடல் கள் அப்படி ஆவதில்லை. இவ்வாறு, மயக்கப்பட்டு, லயப் படுத்தப்பட்டு, ஈர்க்கப்பட்டு நமது இணக்கம் பற்றிய பரவசத்தில் நாம் செயலற்றுப் போகிறோம். நமது இயக் கங்கள் மறுதலிக்கப்படுகின்றன. உறைந்து கிடந்தாலும், நாம் முடிவற்ற மாற்றங்களுக்கு ஆட்படுத்தப்படுகிறோம். வீழ்ச்சியோ, பாய்ச்சலோ இல்லாமல், செய்ததையே திரும்பச் செய்வதும் கூட இல்லாமல்.

தொடர்ந்து செய், களைத்துவிடாதே. உனது உடல் நேற்று இருந்த அதே உடல் அல்ல. உனது உடல் நினைவுப் படுத்திப் பார்க்கிறது. நீ நினைவுப்படுத்திப் பார்க்கத் தேவையில்லை. நேற்றின் நினைவுகளை மூலதனத்தைப் போல உனது மண்டைக்குள் சேர்த்து வைக்கத்தேவை யில்லை உனது நினைவாற்றல்? உனது உடல் இன்று அது என்ன விரும்புகிறது என்பதனூடாக நேற்றை வெளிப் படுத்துகிறது. நீ, நேற்று அப்படி இருந்தேன், நாளை இப்படி இருப்பேன் என நினைக்கும் போது கொஞ்சம் செத்துவிட்டதாகவும் நினைத்துக் கொள்கிறாய். எப்படி

www.padippakam.com



ஆக விரும்புகிறாயோ அப்படி இரு. எப்படியிருக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டிருப்பதைப் பொருட்படுத் தாதே. அமைதியடையாதே. தீர்மானகரமான தன்மையை முடிவெடுக்க முடியாதவர்களுக்கு விட்டுவிடுவோம், நமக்கு அது வேண்டாம். இங்கே, இப்போது, நமது உடல் நமக்கு வித்தியாசமானதொரு உறுதியைத் தருகிறது. தனது உடலிலிருந்து விலகிப் போனவர்களுக்குதான் உண்மை தேவைப்படும். அவர்கள் தான் அதை மறந்து விட்டார்கள். ஆனால், அவர்களின் 'உண்மை' நகரமுடி யாதபடி செய்கிறது, சிலைகளைப்போல; நாம் அவற்றி லிருந்து நம்மைக் களைந்து கொள்ள முடியாதபோது, இங்கே, இப்போது, இந்த கணத்திலேயே நாம் எப்படி நிலைமாறினோம் என்பதைக் கூற முயற்சிப்பதன் மூலம் அதன் அதிகாரத்தைத் துடைத்தெறிய முயற்சிக்காத போது அவர்களின் 'உண்மை' நம்மை நகர முடியாமல் பண்ணுகிறது, சிலைகளைப் போல. □

'WHEN OUR LIPS SPEAK TOGETHER' என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரை, எரிகாரே எழுதியதன் சுருக்கப்பட்ட வடிவம். கட்டுரை கண்டெடுக்கப்பட்டது.

FEMINISMS—A READER
Edited and Introduced by MAGGIE HUMM.
–HARVESTER WHEA SHEAF, LONDON, 1992

**தமிழ் ஆக்கம் ரவிக்குமார்.**

○

www.padippakam.com



## குறிப்புகளுக்காக

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# அரசு - குடும்பம் - பெண்ணியம்

படிப்பகம்